* துரகதப்பால் செய்யுந் தொழில்.....[* துரகதம்-குதிரை.]

( ஒட்டைப் பாற்குணம். )

ஒட்டைப்பா லுக்குமந்த மூர்வாத சூலையொடும்...............*
அட்ட குணக்கரப்பா னூர்வதன்றி - மட்டிடாக்...............*
காதிரைச்சன் மந்தமதி காசஞ்சு வாசமுமா....................*
மா * தரைக்கு ளனும் வருத்து......[* தரை-பூமி ]...(௩௬)

( கழுதைப் பாற்குணம். )

கழுதைப்பால் வாதங் கரப்பான் விரணந்........................*
தழுதளையுள் * வித்திரதி தானே - எழுகின்ற ...................*
ஒட்டிய புண்சீழ்மேக மோடுசொறிசிரங்கு...[ஒருவகைக்கட்டி.
கட்டியிவை போக்குங் கழறு.[* வித்திரதி-நரம்பிலுண்டாகும்

(இதுவுமது.)

* கத்தவத்தின் பாற்குக் கரிய கிரந்தியறுஞ்..................*
சித்தப் பிரமைபித்தந் தீருங்காண் - தத்திவரும்..................*
ஐய மொழியு மதிக மதுரமுமாஞ்.................................*
செய்ய மடமயிலே செப்பு...[* கத்தவம்-கழுதை.].....(௱அ)

(பாத்திர பேதத்தி லுண்டாகிய பாற்குணம்.)

செம்பிலட்டும் பால்வாத சீதமொழிக் கும்பொன்மண்......*
கும்பத் தடுபால்போக் கும்பித்தை - யம்புவியுள்..............*
வெள்ளி * யுறையிரும்பில் விட்டுக்காய்ச் சும்பாலால்.........*
துள்ளியுறை யையமறுஞ் சொல்...[* உறை-வெண்கலம்.]..()

(ஆடையெடுத்த பாற்குணம்.)

ஆடையெடுக் கும்பாலா லக்கினிமந் தப்படுமே.................*
வாடைநல்லாய் சீரணமாம் வாதமறுங் - கோடையிடி..... ...*
போலு மெழுந்தபித்தம் போகுமைய மேகுமயில்...............*
வேலனைய கண்ணாய் விதி.......................................(௱௯)

(காய்ச்சும்பாலுக்கு- நீரளவைகூறல்.)

* ஆடுபசும் பால்காய்ச்சி லஷ்டபாக ம்புனலாம்..............*
நீடெருமை செம்மறிக்கு நேர்நேராந் -தேடரிய ..............*
சுக்குசிறு காஞ்சொறிவேர் கூட்டிச் சுவறியபால்...............*
ஒக்கும்வெள்ளாட் டுப்பாற்கென் றோது........................*

(இ-ள்) வெள்ளாடு- பசு- இவைகளின்பாற்கு- எட்டிலொருபங் குசலமும், எருமை-செம்மறியாடு- இவைகளின்பாற்குச்-சரிபங் குசலமும் விட்டுக் - காய்ச்சவேண்டும்.

(பாலேட்டின்குணம்.)

பாலேட்டாற் பித்தமறும் பாழ்த்தகொடுஞ் * சர்த்தியும்போம்
மாலாட்டு மூர்ச்சையும்போம் வன்பலமா - மேலாலே........*
தாதுமிகுந் தீபனமாந் தானே யிளைத்தவர்க்குக்.....[குற்றம்.
* கோதுமறு மாமயிலே கூறு ..[* சர்த்தி-வாந்தி. * கோது-

(தேங்காய்ப் பாற்குணம்.)

வாதமாம் பித்தமுறும் வன்கரப்ப னும்படருந்.................*
தாதுமிக விர்த்தியாந் தாழ்குழலே - போதநல்ல..............*
அன்ன மிறங்கு மதியுரிசை யுண்டாகுந்.........................*
தென்னங்காய்ப் பாலாற் றெளி.................(௱௰௧)

(ஆலம்பாற்குணம்.)

ஆலம்பால் மேக மறுத்தசையும் பல்லிறுக்குங்...........*
கோல முடிக்குக் குளிர்ச்சிதரும் - ஞாலமதின்..........*
மெத்தவுமே சுக்கிலத்தை விர்த்திசெய்யுந் தப்பாமற்........*
சுத்த மதிமுகத்தாய் சொல்...............................(௱௰௪)

(அத்திப் பாற்குணம்.)

காரமோ டொட்டினமாங் காதுகின்ற பித்தத்தை...............*
நீரிழிவைச் சூலைகளை நீடிரத்தஞ் - சேருங்...................*
கிரிச்சரத்தைப் போக்குங் கிளர் * கோளி யென்னும்.........*
மரச்சரும்ப பாலதனை வாங்கு...[கோளி-அத்திமரம்.] (௱௰௫)

(மட்டுப் பாற்குணம்.)

தூலவலிநீ ரோற்றந் தனித்தவடல் வாதம்.......................*
அலைவுறுமேல் வாந்தி யரோசி - நிலைகுலையும்..................*
வட்டுப்பால் வஞ்சம்வைத்த மாமுலைமா தேமணக்கு.............*
மட்டுப்பா லுக்கு மருண்டு...................................(௱௰௬)

(காட்டுப்பிராய் -ஈழத்தலரி- இவைகளின் பாற்குணம்.)

காட்டுப்பி ராய்ப்பாலோ காணுகின்ற பல்வலியை.........*
நாட்டில்வைக்கா தோட்டிவிடு நங்கையே - கோட்டாரும்....*
ஈழத் தலரிப்பா லேறுபுரைப் புண்டொடையின்..............*
வாழைப்புற் றும்போக்கு மால்..............................(௱௰௭)

(சங்கஞ்செடி-புங்கமரம்- இவைகளின் பாற்குணம்.)

சங்கம்பால் வீக்கமதைத் தான்போக்கு நீர்வடிக்கும்.........*
அங்குசுர வெப்பகற்று மையமிலை - கொங்குலவு ............*
புங்கம்பால் புண்ணாற்றும் பொல்லாத வாய்வகற்றுந்.........*
தங்கம்போன் மெய்யளிக்குந் தான்............................(௱௰௮)

(தில்லைமரத்தின் பாற்குணம்.)

பாரிசவா தஞ்சந்நி பாதஞ்சூ லங்குஷ்டஞ்....................*
சேருமுட. வாதம்வலி சில்விஷம்போம் - பேருணாக்க..........*
இல்லையில்லை யென்றோடு மெண்பது வாதமுமே.............*
தில்லைமரப் பாலாற்றெளி.....................................(௱௰௯)

(திருகுக்கள்ளிப் பாற்குணம்.)

வாத முடக்ககலும் வன்கிரந்தி குட்டம்போஞ்..................*
சீதமொழி யுங்கிருமி சேருமோ - மாதே........................*

பருகுபக்க நோயுடனே பாழ்ங்கரப்பான் றீருந்
திருகுகள்ளிப் பாலாற் றெளி.....(௱௨௰)

( சதிரக்கள்ளிப் பாற்குணம் )

குட்டங் கடிசூலை குன்மமே கம்வாயு
துட்டக் கிருமியொடு தூறுபுண்ணு - முட்ட
மூதிரக் கரப்பனும்போ மொய்குழலே நாளுஞ்
சதிரக்கள் ளிப்பாற்குத் தான்.....(௱௨௧)

( மான்செவிக்கள்ளிப் பாற்குணம். )

மான்செவிக்கள் ளிப்பாற்கு மாறு விரணங்கள்
ஈன்கிளைக்கு நன்மலமி றங்குங்காண் - ஊன்சேர்
வரிகிரந்தி நீங்கா வறட்சிசொறி யோடு
பொரிகிரந்தி யும்போம் பொரிந்து.....(௱௨௨)

( இலைக்கள்ளிப் பாற்குணம். )

செய்ய கரப்பான் செவிநோய்வா தம்போக்கும்
பையவருஞ் சூலதனைப் பாழாக்கு - மெய்யின்மிக
ஊது கிரந்தியோ டிட்புண்ணை யாற்றிவிடும்
ஓதுமிலைக் கள்ளிப்பா லோரு.....(௱௨௩)

( கொடிக்கள்ளிப் பாற்குணம். )

தூய்ய கரப்பான் சொறிசிரங்கும் புண்ணும்போஞ்
செய்யகடி குஷ்டநோய் சேருமோ - மெய்யில்
அடிக்கடிசேர் குன்மவலி யத்தனையுந் தீருங்
கொடிக்கள்ளிப் பாலுக்குக் கூறு.....(௱௨௪)

( எருக்கம் பாற்குணம். )

எருக்கம்பால் கட்டிகளை யேகளைக்கும் வாய்வைத்
திருக்கறவே கொன்றுவிடுந் தீராச் - செருக்கான
சந்நி வலிதீர்க்குஞ் சார்ந்தபல சிந்தூரம்
உன்ன முடிக்குமென வோது.....(௱௨௫)

( வெள்ளெருக்கம் பாற்குணம். )

வலியின் வலிசுளுக்கு மாவாத சந்நி
யெலியின் விஷஞ்சுரங்க ளெல்லாம் . வலியற்றுக்
காலைத் தொழுதே கடற்சேரும் வெள்ளெருக்கம்
பாலைத் தொடுவார்க்குப் பார்.....(௱௨௬)

தே—( காட்டாமணக்கின் பாற்குணம். )

விழுமேக வெள்ளைகுன்மம் மேல்விரணந் தோலில்.........*
எழுமேருக் கட்டியிவை யெல்லாந் - தொழுதோடுங்........*
கூட்டா மணக்குழம்பைக் கொண்டவனக் கொங்கையின்னே*
காட்டா மணக்கம்பால் கண்டு.........................(௱௨௭)

( எலியாமணக்கின் பாற்குணம். )

எலியா மணக்கோ வெலிவிடம் * வித் துப்பற்...............*
பலவிடமு நீக்கிவிடும் பாரில் - வலுபேதி..................*
யுண்டாகச் செய்யு முயர்பிலீ கங்குன்மம்...................*
அண்டாம லோட்டுமிதை யாய்.[* வித்துப்பல்-விதைவீக்கம்]

தே—( பிரமதண்டுப் பாற்குணம். )

கண்கூசல் கண்ணருகல் கண்ணொழுகல் கண்ணோதல்..........*
கண்சிவத்த லெல்லாங் கடிதேகுந் - திண்ணச்..................*
* சரமதண்ட னைப்பிளக்குஞ் சாயகக்கண் மாதே...... .....*
பிரமதண்ட னற்பாற்குப்பேர்ந்து[* சரமதண்டன்-இயமன்]

பால்வகைமுற்றிற்று.

---

## தயிர்வகை.

( பசுவின் தயிர்க்குணம். )

பசுவின் றயிராற் பசிமிகவுண் டாகும்.....................*
இசிவுறும சீரணநோ யேகும் - பசையகன்ற...................*
தாகமி ளைப்பிருமல் தாங்கொணு மெய்யெரிவும்..............*
வகு மூலகி லியம்பு..........................................(௱௩௰)

( ஆடையெடுத்த தயிர்க்குணம். )

ஆடையெ டுத்ததயி ரையமி ளைப்பறுக்கும்.....................*
நாடுகி ரிச்சரத்தை நாடவொட்டா - *தாடொலியால்............*
உண்டாங் கிராணி யுறைமேகம் போக்கிவிடுந்.................*
தண்டார் குழலணங்கே சாற்று..[*ஆடல்-அசைதல்-ஒலி-வாயு.]

( எருமைத் தயிர்க்குணம். )

எருமைத் தயிருக் கெரிவுபித்தம் போகும்.....................*
வருமைக் கரப்பனொடு வாதம் - பெருமிதஞ்சேர்..............*
தூல வுடலமுமாந் தாயறிவு மந்தமுறுங்.......................*
கோல விழிகுளிருங் கூறு......................................(௱௩௨)

(வெள்ளாட்டின்-தயிர்-மோர்-இவைகளின்குணம்.)

வெள்ளாட்டின் வெண்டயிரோ மிக்கநல மாகும்அதற்.......*
குள்ளாடை யான்மந்த மூண்டென்பார் - வெள்ளாட்டின்....*
மோரோமே கத்தை முதிரா தடித்துவிடும்.....................*
பாரோ ரறியப் பகர்..........................................(ஙகங)

(செம்மறியாட்டுத் தயிர்க்குணம்.)

செம்மறியின் றன்றயிரைத் தின்ன மதுரமிகுங்.................*
கொம்மைமுலை மாதரசே கூறக்கேள் - அம்ம .................*
கரப்பான் சொறியுங் கடுப்பிரத்த வாய்வும் ..................*
உரப்பா முடல்கெடுமென் றோது................................(ஙகச)

(ஒட்டைத் தயிர்க்குணம்.)

தீபனமு முண்டாஞ் சிறுகரப்பான் புண்ணுமாம்..............*
பூபதிபோன் மேனி புளகிக்குந் - தாபதமாம்...................*
ஒட்டைத் தயிர்நிதமு முண்ணவதி தாகம்போந் ...............*
துட்டக் கிருமியறுஞ் சொல்...................................(ஙகரு)

தயிர்வகைமுற்றியது.

---

மோர்வகை.

(பசுமோர்க்குணம்)

வீக்க மகோதரமுள் வீறுகுன்மம் பாண்டுபித்தந்.................*
தாக்கு * மருந் திட்டததி சாரமொடு - கூக்குரலே..............*
மாறுந் திரிதோஷ மந்தமனற் றுகம்போம்......................*
வீறுவின் மோருக்கு மெய்.... [* மருந்திட்டது-அதிசாரம்.]

(எருமை மோர்க்குணம்.)

தாகங் * கிராணி சலக்கழிச்சல் காமாலை.........................*
ஆகங் குடைபுழுவு மற்றுப்போ - மோகமில்லாத்...............*
தேவா மிர்தமுமாஞ் சீர்மா னிடர்தமக்கு........................*
மூவாமருந்தெருமைமோர். [*கிரகணி-கிராணியெனமருவியது

(ஒட்டைமோர்- நெய் - இவைகளின்குணம்.)

ஒட்டைமோர் மெத்தவன லோங்கியவா தந்தணிக்குங்..........*
கிட்டுமந்த நெய்பெருமை கேட்டீரோல் - நெட்டுலகின்........*

மந்தஞ்செய் தானும் * வலிவிந்து வைப்பெருக்கும்........*
அந்தஞ்சேர் கண்ணு யறி ..........[ * வலி-பலம் ]...(௱கூஅ)

மோர்வகை முற்றியது.

---

## வெண்ணெய்வகை.

தே—( முலைப்பால் வெண்ணெய்க்குணம். )

கண்ணெரிவுங் கையெரிவுங் காலெரிவு நாசிகளில்..........*
* அண்ணெரிவு மண்ணி லகன்றிடுங்காண் - தண்ணார்..........*
அலைப்பால்வண் மாதுக் கணிசெய்யு மாதர்..............*
முலைப்பால்வெண் ணெய்க்குமுறிந்து.[*அண்ணுதல்-சார்தல்.]

( பசு-வெண்ணெய்க்குணம். )

கண்ணி லெழுநோயுங் கண்ணெரிவும் பீளையும்போம்........*
எண்ணும் பசியு மெழும்புங்காண் - நண்ணரிய...............*
* ஆவினறும் வெண்ணெய்க்ககலும்வன் மேகமெல்லாம்...*
பூவி * னரர்க் கெல்லாம் புகல்.......[* ஆ-பசு- நரர்-மனிதர்.]

( எருமை-வெண்ணெய்க்குணம். )

எருமைவெண் ணெய்க் * கில் லெரிநீ ரிழிவு ...............*
பருவமயி லேகேளிப் பாரிற் - கிருமியுறும்...............*
மந்தமாம் வாதமிகு மாருக் கபங்கரப்பான்..................*
தொந்தமா நோயடருஞ் சொல்......[* இல்-இல்லை] ..(௱சக)

( வெள்ளாட்டு- வெண்ணெய்க்குணம். )

வெள்ளாட்டு வெண்ணெய்யது வீறுசுரந் தான்போக்கும்.....*
தள்ளாடு பித்தந் தணிக்குங்காண் - தெள்ளுமொழி..........*
மானே பசியெழுப்பும் வன்கரப்ப னைக்கடற்குள்.... ........*
தானே துரத்திவிடுஞ் சாற்று..................................(௱சஉ)

( ஒட்டை- வெண்ணெய்க்குணம். )

கட்டழகு செய்யுநற் காரிகையீர் கேண்மின்கள்.................*
ஒட்டைவெண்ணெய் மந்த மொடுவாதங் - கிட்டவைக்கும்......*
நீரிழிவுக் கேற்கு நிறைபித்தம் போக்கிவிடும்....................*
பாரறியச் சொன்னோம் பகுத்து...................................(௱சங)

வெண்ணெய்வகை- முற்றியது.

## நெய்வகை.

### ( பசு-நெய்க்குணம். )

தாகமுழலைசுட்கஞ் சர்த்திபித்தம் வாயுபிர.........*
மேகம் வயிற்றெரிவு விக்கலழல் - மாகாசங்.........*
குன்மம் வறட்சி குடற்புரட்ட லஸ்திசுட்கஞ்.........[ன்னெய்.
சொன்மூலம் போக்கு * நிறைத்துப்பு.[* நிறைத்துப்பு-பசுவி

### ( காராம்பசு நெய்க்குணம். )

காராம் பசுவினெய்யாற் கண்ணுக் கொளியுண்டாம்.........*
நீரார்விழி புருவநெற்றி சிரச் - * சூறொழியும்.........*
மெய்யிற் குழைவு மிளிர்பொன் னிறமும்வரும்.........*
நெய்யிலிது மேலா நிகழ்த்து.....[* சூர்-வியாதி.]...(௱௪௫)

### ( எருமை-நெய்க்குணம். )

புத்திகெடு மெய்யழகு போதக் கெடு * நயனம்.........*
மெத்தவொளி மாறிவிடு மேதினியிற் - சத்தியமாம்.........*
வாதமொடு பித்தமுறு மாறாக் கரப்பானுங்.........*
கோதெருமை நெய்யருந்திற் கூறு.[ * நயனம்-கண்]. (௱௪௬)

### ( வெள்ளாட்டு-நெய்க்குணம். )

ஐயைப்போக் கும்வாதத் தாண்மையைக்கெ டுத்துவிடும்.....*
மெய்யைவ ளர்க்கும்விழி யைத்துலக்கும் - வையகத்திற்.....*
பத்தியத்திற் காகும் பயமில்லைவெள் ளாட்டின்னெய்.........*
நித்தியங்கொண் டாலுங்கொண் ணீ.........(௱௪௭)

### ( செம்மறியாடு-பள்ளையாடு- இவைகளின்நெய்க்குணம். )

செம்மறியி னெய்யதனைத் தின்ன மதுரமுமாங்.........*
கொம்மைமுலை மாதரசே கூறக்கே - ளம்மவுறும்.........*
பள்ளையின்னெய் பித்தொழிக்கும் பாருலகி லெல்லவர்க்குங்..*
கொள்ளத்தான் மந்தமுறுங் கூறு.........(௱௪௮)

{ஒட்டை நெய்க்குணம்- ௨௫ -வது - பக்கத்தில் ஷை}
{மோர்க்குணத்தைச்சொல்லியவெண்பாவில்-காண்க.}

### ( கலப்பு-நெய்க்குணம். )

நெய்புட் பலநெய்க்கு நீள்சுக்கி லம்பெருகும்.........*
வெய்யபசி யுண்டாம் விடும்பித்தம் - மெய்யனலால்.........*

உள்ளபித்த வெக்கைபோ மோங்குயிருந் தானிலக்குங்.......*
கொள்ளத்தெரியுங் குணம்............................(௱சகூ)

( பன்றி-உடும்பு-காக்கை- இவைகளின் நெய்க்குணம். )

பன்றிநெய் நீர்க்கடுப்பு பாயு * மூலத் திரத்தங்...............*
கன்றிய வாதக் கடுப்புமுதற் - றுன்றியநோய்...................*
போக்கு முடும்பின்னெய்போமிரத்தம் போக்கிவிடுங்........*
காக்கைநெய்கா மாலைக்காங் காண்...[* பாயு-ஆசனம்.].(௱ருய)

(ஆமை- ஓணான்-கரடி - இவைகளின் நெய்க்குணம்.)

ஊறுமை நெய்மூல மோட்டும் ஓணனெய்க்குக்...............*
காணுப் பிறவலிநோய் காணுது - பூணுர்......................*
மூலையாய் கரடிநெய்க்கு முன்வாத மோடு.....................*
புலையாருங் கால்வெடிப்பும் போம்............................(௱ருக)

( ஆமணக்கு-நெய்க்குணம். )

ஆமணக்கு நெய்யா * லனலமுண்டா மியாவர்க்கும்...........*
பூமணக்கு மேனி புரிகுழலே - வாய்மணக்கக்...................*
கொள்ளில் வயிறுவிடுங் கோரமுள்ள வாயுவறும்........... . *
உள்ளில்வரு குன்மம்போ மோது[* அனலம்-அக்கினி].(௱ருஉ)

( இதுவுமது. )

அம்பொ னிறமும்விந்து மாங்குடலி னேற்றமறும்...........*
* ஐம்பொறிச் சூடெரிவு மாறுங்காண் - அம்புவியிற்.........*
பாமணக்குமின்பமொழிப்பாவாய்நலஞ்செறிந்த[மூக்கு-காது
ஆமணக்கினெய்யையருந்து...[* ஐம்பொறி-உடல்-வாய்-கண்

தே ---( சிற்றுமணக்கு நெய்க்குணம். )

மருந்தி னழலும் வளியான்மூ லத்துள்......................*
பொருந்து மழலுமறப் போக்கும் - * குருந்திற்கு.........*
நற்று யெனவளர்க்கு நாளும் அழலுந்தணிக்குஞ்............*
சிற்றுமணக்கினெய்தான் றேர்.......[* குருந்து-குழந்தை. ]

( எள்ளு-நெய்க்குணம். )

புத்திநய னக்குளிர்ச்சி பூரிப்பு மெய்ப்புளகஞ்...............*
சத்துவங் காந்தி தனியிள்மை - மெத்தவுண்டாங்..............*
கண்ணேய் செவிநோய் கபாலஅழல் காசநோய்.............*
புண்ணேய்போ * மெண்ணெய்யாற் போற்று[*எண்-எள்ளு.]

(வாதுமை-நெய்க்குணம்.)

அழலெல்லா மாற்று மரிய வுடம்பில்..........................*
அழலோடு விந்துவையுண் டாக்கும் - வழுவழுப்பைப்.......*
பூண்டகபம் போக்கும் பொறிகட் கொளிவுசெய்யு...........*
நீண்ட * அடப்பம்விதை நெய் [* அடப்பம்-வாதுமைமரம்]

(வேப்ப நெய்க் குணம்.)

வாதம்போம் பித்தமிகு மாருக்கி ரந்தியொடு...................*
மோதுகரப் பான்சிரங்கு முன்னிசிவும் - ஓதுடலின்.........*
* நாப்ப ணுறுசுரமு நாடுசந்நி யுந்தொலையும் ..................*
வேப்பநெய் யென்றொருக்கால் விள்ளு....[* நாப்பண்-நடு.]

(இலுப்பை நெய்க்குணம்.)

கரப்பா னடருங் கடிசிரங்கு புண்ணும் ..........................*
உரப்பா மிடுப்புவலி யோடுங் - கரப்பான.........................*
பாகுமொழி மாதே பலமுண்டாந் * துற்பலம.....[ம்போம்
தேகு மிலுப்பையினெய்க் கே...[* துற்பலம்-ஏகும். துற்பல

(புன்னை - நெய்க்குணம்.)

புன்னையிலுண் டாநெய்யாற் பொங்குசந்நி பாதமுதன்......*
மன்னியலைக் குங்கொடிய வாய்வுமுன் - பின்னிசிவும்..... ..*
பொல்லா வலியினமும் புண்கிருமி யுந்தொலையும்.............*
அல்லார் குழலே யறி.............................................(ஙஙகூ)

(புங்கின்-நெய்க்குணம்.)

அங்க மழகிடும் * வெற் பாம்புங்கி னெய்தனக்குத்.............*
தங்கம்போற் காந்தியதூ தானுண்டாந் - திங்கண்முக ........*
மானே கரப்பான்போம் வந்தசொறி யுஞ்சிரங்குந்... .......*
தானே விலகுமெனச் சாற்று.[வெற்பாம்-மலையில்உண்டாகிய]

(தேங்காயின் -நெய்க்குணம்.)

தேங்காயி னெய்யதனாற் தீயால் வருபுண்போம்................*
பாங்காகக் * கூந்தற் படர்ந்தேறு - நீங்காத...................*
பல்லடியின் னோயும் படர்தா மரைசிரங்கும்...................*
அல்லலறப் போமென் றறி...[* கூந்தல்-தலைமயிர்]...(ஙஙச)

தே—(முக்கூட்டு-நெய்க்குணம்.)

* நாவுநெய்க் கைய நுவலாநெய்க் குப்பித்தம் ...... .......*
மேவுமுத்து நெய்க் * கனிலம் வீறுவாம் - பூவுலகின்.. ......*

மூன்றுமளா வாய்க்காய்ச்சி மூழ்கிவர் முப்பிணியால்.........*
ஊன்றுநோய்போமேயெர் தூங்கி.[* நூவு-எள்.அனிலம்-வாயு]

தே—(முக்கூட்டு நெய்சேர்க்கும்விதி.)

ஆவெண்ணே ரண்டமெண்முத் தாமுத்தா வெண் *ணேய...*
மூவெண்கா லாதி முறையேகேள் - மேவுநெறி..............*
யொன்றிரண்டு மூன்ருகு மொன்றிரண்டு மூன்ருகு........*
மொன்றிரண்டு மூன்ருகு மூற்று[* நேயம்-நெய்.]...(௱௬௩)

(இ-ள்.) வாதமுதலாகிய தேகிகளுக்குக் கூட்டவேண்டிய முறைமை-வாததேகிகளுக்கு- பசுவின்னெய் ஒருபங்கு- எண்ணெய் இரண்டுபங்கு- ஆமணக்குநெய் -மூன்றுபங்கு] பித்ததேகிகளுக்கு - எண்ணெய் ஒருபங்கு - ஆமணக்கு நெய் இரண்டு பங்கு-பசுவின்னெய்மூன்றுபங்கு] சிலேஷ்மதேகிகளுக்கு- ஆமணக்கு நெய் ஒருபங்கு-பசுவின்னெய் இரண்டுபங்கு -எண்ணெய் மூன்றுபங்கு]- இவ்வாறு கூட்டவேண்டும்.

(ஐங்கூட்டு- நெய்க்குணம்.)

அஞ்செண்ணெய் யைக்காணில் * ஆலித்த பின்னிசிவுந்........*
தஞ்சமெனவாய்வுந் தணியுங்காண் - பஞ்சாய்ப்............*
பறக்குமே சந்நிசுரம் பாரிலையச் சேஷ்டை................*
யிறக்குமே நன்ரு யியம்பு ..[* ஆலித்தல்-மகிட்சி]...(௱௬௪)

(கடுகு-நெய்க்குணம்.)

* கோஷ்டநோய் பித்தரத்தங் குஷ்ட மடல்வாதம்..............*
வீட்டுகப மூல விரணமறும் - பூட்டின்.......................*
மூடுகியெழு சூலையொடு மொய்த்தநோ யேகுங்..............*
கடுகின்னெய் யாலனலாங் காண்.[* கோஷ்டம்-வயிறு].(௱௬௫)

நெய்வகை-முற்றியது.

---

சாணவகை.

(பசுவினது சாணியின் குணம்.)

ஆவினது சாணம் அடிபடுவீக் கம்உதிரந்.....................*
தாவி வருகிருமி சார்ந்தகப- மேவுசுரந்.....................*
தங்குந்தா கம்போக்குஞ் சாற்றின்மெய்ச் சுத்தியப்பால்.......*
தெங்கின்பா லுக்கொக்குஞ் செப்பு...........................(௱௬௬)

(எருமைச் சாணியின்குணம்.)

வயிற்றுப் பிசமிரத்த வாந்திகா மாலை...........*
தியத்தபெரும் பாடுபுண் நீங்கும் - வியத்த.........*
கருமைச்சா ரங்கவிழிக் காரிகையே நாளும்...........*
எருமைச்சா ணத்தி னியல்பு.............(௱௯௭)

(வெள்ளாட்டுப் புழுக்கையின் குணம்.)

* உருக்கைநீ ருக்கு மூதரநோய் போக்குந்...........*
* திருக்கான வாதநோய் தீர்க்கு - நெருக்கான...........*
தோட்டுக் குழையணங்கே தொல்புவியோர் சொல்லிடுவெள்...*
ளாட்டுப் புழுக்கை யது. [* உருக்கு-எஃகு. * திருக்கு-குற்றம்.]

சாணவகைமுற்றியது.

மூத்திரவகை.

(சிறுநீரின் குணம்.)

காணுக் கடிபோங் கதித்தெழுந்த வீக்கமது...........*
காணுது காயசித்தி கைக்குளாம் - பூணே...........*
பதித்தகொங்கை மாதே பகர்மாந்த ருக்குள்...........*
உதித்தசிறு நீருக்கென் றோது...........(௱௯௮)

தே—(இதுவுமது- வி-ம்.)

* அங்கியுவ * ருறை சிறுநீர் வாதம்போக்கும்...........*
அதைப்பருகி லிருமலிளைப் பசித்தநோயும்...........*
பொங்கிவரு மேகவிகா ரங்கிரந்திப்...........*
புண்களும்போம் அதைநசியம் புரியிற் * சூடுந்...........*
தங்கியதோர் * அபஸ்மாரஞ் * சந்நியாசஞ்...........*
சருவவிஷம் விஷசுரமுந் தவறுண்டோடும்...........*
இங்கதனைத் தொட்டலம்பிற் கண்முகங்கா...........*
திவ்விடத்து ளெழும் * விரண * மிரியுங்காணே...(௱௯௯)

[* அங்கியுவர்- உதராக்கினியின் உப்பு. * உறை -இடம். * சூடு-சுரம். * அபஸ்மாரம்- அபஸ்மாரரோகம். * சந்நியாசம்-சந்நியாசரோகம். * விரணம் -புண். * இரிதல்-ஓடல்.]

தே—(பசு - மூத்திரகுணம்-வெ-பா.)

விடபாண்டு சோபைபல வீக்கஞ் சகல...........*
விட * மூதிர * மாலையென மெத்தப் - புடவிதனிற்...........*
பேசலக்க ணேடுதந்தப் பீடையும கன்றிடுமே...........*
கோசலத்தாலாரணங்கேகூறு [* உதிரம்-ரத்தம்-மாலை-காமாலை]

(எருமை - மூத்திரகுணம்.)

உதரநோய் பாண்டோ டிரத்தகா மாலை.........................*
விதிர வருசோபை மேகம் - முதிர்கிருமி.........................*
யாதியநோ யேகு மடவொருமை மூத்திரத்தால்.........................*
மீதிலன வுண்டாகு மே.........................(௱எஉ)

(வெள்ளாட்டு-மூத்திரகுணம்.)

சோபையொடு பாண்டுவைத்தூ ரத்தும் பலவீக்க.........................*
தாபமகற் றும்மூதிரத் தைப்போக்கும் - கோபமுடன்.........................*
உள்ளாட்டுந் துற்சதையோ டோங்குதர நோயகற்றும்.........................*
வெள்ளாட்டு மூத்திரம்வி ளைந்து.........................(௱எங)

(யானை- மூத்திரகுணம்.)

அதிதூலஞ் சோபை யனிலங் கிருமி.........................*
யெதிர்விஷங் கருங்கரப்பா னேகும் - அதிராத.........................*
யானை யெனப்பலமும் அங்கபுஷ்டி யுங்கொடுக்கும்.........................*
யானை விடுமூத்தி ரம்.........................(௱எச)

(குதிரை- மூத்திரகுணம்.)

*பாதவன் மீகம் படர்தடிப்பு நீள்கிருமி.........................*
வாத மொடுகபமு மாறுங்காண் - ஓதரிய.........................*
பொற்குவட்டை யொத்தமுலைப் பூவையரோ சூடுமுண்டாம்..*
நற்குதிரை மூத்திரத்தி னால்...[*பாதவன்மீகம்-கால்வீக்கம்]

(ஒட்டை- மூத்திரகுணம்.)

மேலையூ ருந்தடிப்பு வீசியெழுஞ் சந்தி.........................*
சூலை *யுதா வர்த்தந் தொடர்குன்மஞ் - சீலநனே.........................*
மண்டலகுஷ்டேகும்வரும்ஒட்டைமூத்திரத்தால்....[ஒருவகை.
உண்டனல மாதேயுரை[* உதாவர்த்தம்(அம) வாதரோகங்களில்

(கழுதை -மூத்திரகுணம்.)

வேசரிநீ ரால்வெப்பம் வீரியநஷ்டி டங்குஷ்டங்.........................*
காச மிளைப்புவிஷங் காற்கிருமி - வீசிடுபுண்.........................*
மேகமபஸ் மாரம் வெடியக்க ரங்கிரந்தி.........................*
போகுமின்னுஞ் *சேய்ப்பிணியும் போம்[*சேய்-குழந்தை.]

---

மூத்திரவகை - முற்றியது.

## மதுரவகை.

{ செங்கரும்பு-ரசதாளிக்கரும்பு- புல்லக்கண்டங் கரும்பு - இவைகளின்குணம் — விருத்தம். }

செங்கரும் பதனற்சாறு தீர்த்திடும் பித்தமெல்லாம்............*
அங்குறு மிரசதாளிக் ககன்றிடுந் தாகம்வேகம்...............*
மங்குறுப் புல்லகண்டம் வாதகோ பத்தைப்போக்குங்.........*
கங்குல்வார் குழலினாளே காரிய மறிந்துகூறே..........(௱எஅ)

( நாணற் கரும்பின்குணம்—வெ-பா. )

வாயுபித்தம் வாந்திநீர் மாறும் அதிதூல..........................*
நோயு ளெழும்வயிற்றி னோய்கலங்கும் -ஓயாத...............*
ஊளையொடு பாண்டு மெதிரா தடங்கிநிற்கும்.......................*
நாளுநா ணற்கரும்பி னால்....................................(௱எகூ)

(கரும்பின்சாறு-வெல்லம்- இவைகளின் மிதாமிதகுணம்.)

* கரும்பிரத மெத்தவுண்டாற் காணுங் கபநோய்.............*
விரும்பிவெல்ல மெத்தவுண்டால்மேகந் - திருமதுநீர்.......*
உண்டா மதைமிதமா யுண்டால்மே கம்பித்தம்.................*
மிண்டாமற்சாந்தமுறும்விள் [*கரும்பு-இரதம்-கருப்பஞ்சாறு

## பாகின்வகை.

( தேன் பாகின்குணம். )

அனலா லெழுந்த வருசி சர்த்தி தாழும்.............................*
புனலாருங் கோழையது பொங்குங் - கனலாருந்..............*
தேன்பாகுக் கென்றுமதைச் சேர்ஔஷதி யதனாற்........ [கும்
* கான்பாவு நோய்க்கூட்டங் காண் [*கான்பாவும்-காட்டிற்பேர்

( மணப் பாகின்குணம். )

பித்த வருசிகெடும் பேசிலற்ப வாதமறுந்.............................*
தத்தனலும் மெள்ளவுள்ளே தாவிவரும்- மெத்த................*
வணப்பாகை யொத்தமொழி மாதே முறுகா.......................*
மணப்பாகுக் கென்றே மதி.............................................(௱அ௦)

(முதிர்ந்தபாகு-பழயவெல்லப்பாகு-இவைகளின் குணம்.)

முதிர்பாகுக் குள்ளெரிவு மூத்திரக்கட் டோடே...............*
அதிர்வாத மாதியநோ யாகுந் - துதிபழய.........................*

வெல்லப்பா குக்கருசி வீறுபித்தம் பேதிவாய்.................*
வில்லைப்பார் மாதே யிவி ..(பாகின்வகை முற்றியது.)(௱அ௩)

## வெல்லத்தின் வகை.

### ( நல்லவெல்லத்தின் குணம். )

குன்மபித்தம் போக்குமதி கோழைதனை யுண்டாக்குந்.......*
துன்மலத்துட் கிடத்தைத் தோன்றுவிக்கும் - நன்மைபோல்..*
மெல்லமது நீரை விளைவிக்கு மாமதுர..............................*
வெல்லமென நாளும் விளம்பு...............................(௱அ௪)

### ( தெங்கின்வெல்லம்-பனைவெல்லம்-இவைகளின் குணம். )

* தெங்கின்வெல் லத்தாற் செரியாக் குணஞ்சோபை........*
யங்கமுறு நீரு மதிகரிக்குந் - தங்குபனை........................*
வெல்லத்தால் வாதபித்தம் வீறுகபஞ் சுந்நிநோய்..............*
வல்லருசி குன்மமறு மால்.[* தெங்கு-தென்னமரம்]..(௱அ௫)

## சருக்கரைவகை.

### ( சருக்கரையின் குணம். )

அருந்து மருந்திற் கனுபான மாகப்..................................*
பொருந்து *மடல் வாந்திபித்தம் போக்கும் - வருந்தருசி..*
நீக்கு மதிகபத்தை நீற்று மகிழ்ச்சியை யுண்.....................*
டாக்கு நறுஞ்சர்க்க ரை..........[* அடல்-பலம்.]......(௱அ௬)

### ( சீனிச்சருக்கரையின் குணம். )

சீனிச் சருக்கரைக்குத் தீராத வன்சுரமுங் ........................*
கூனிக்கும் வாதத்தின் கூட்டுறவும் - ஏனிற்கும்...................*
வாந்தி யொடுகிருமி மாறுத விக்கலுமே ...........................*
போந்திசையை விட்டுப் புரண்டு .................................(௱அ௭)

## கற்கண்டின்வகை.

### ( கற்கண்டின் குணம். )

* ஈறின் தடிப்பு மிருமலும்பல் வாந்திகளுஞ்..........................*
சீறுகப முட்டினமுஞ் சேராதே - தேறியநற்..........................*
சொற்கண் டிளங்குயில்கள் சூழு மடவனமே .......................*
கற்கண் டெனவுரைக்குங் கால்...[* ஈறின்தடிப்பு-பல்லரணை.]

### ( பனங்கற்கண்டின் குணம். )

மேக வனலுமிக வீசு * ம சூரிகையால்.................................*
ஆக முறுகனலு மாறுங்காண் - * மேகனத்தில்.......................*

தங்கிவரு நீர்ச்சுறுக்குந் தாகவெப்ப மூந்தணியும் ............*
இங்குயனங் கற்கண்டுக் கே..................................(௱அக௯)

[* மசூரிகை-அம்மைக்கொப்பிளம். * மேகனம்-ஆண்குறி]

தே—(தேனில் உண்டாகுங் கற்கண்டின்குணம்.)

தேனிற் பிறந்த செழுங்கண்டாற் கண்விழிக்குள்..............*
ஊனிற் படர்படல மோடிடுங்காண் - * கானத்திற்..........*
காகுஞ் * சுரமாகு மண்டும் பசிகபங்கால்.................[னி
லகுஞ் சுரமேகு மெண்.[* கானம்-சங்கீதம்.சுரம்-குரலின்தொ

மதுரவகை முற்றியது.

மதுவின்வகை.

(தெங்கின் மதுக்குணம்.)

நாதவிந் தாறு நளிர்பாண் டொடுசோபை.....................*
வாதபித் தங்கிராணி வன்கரப்பன் - பேதியிவை..............*
பொங்கி யதிகரிக்கும் புத்திகெடு மேகமுண்டாந்..............*
தெங்கின்மது விற்கென்றே செப்பு.........................(௱௯௧)

(பனையின்- மதுக்குணம்.)

விந்துதிர மூறுமதி வெப்புடனே தாகம்போம்...............*
பந்தமாந் தாதுவுமோ பாரிக்கும் - உந்துபித்தந் .............*
தோன்றும்பா ஷாணங்கள் சுத்தியுமாந் தோகைமின்னே.....*
யேன்ற பனைமதுவிற் கே.....................................(௱௯௨)

(ஈச்ச மதுக்குணம்.)

வெப்பகலு மெய்குளிரு மேகங் கிரிச்சரம்போஞ் ...........*
செப்பருசி போம்பித்தஞ் சேருங்காண் - எப்படியும்...........*
* பூச்சு திமிருண்டாம் பொங்கறிவுங் கெட்டிடுமே..............*
ஈச்ச மதுவதற் கே ...............[* பூச்சு-வீக்கம்.] ..(௱௯௩)

(முந்திரிகையின் மதுக்குணம்.)

முந்திரிகைக் கள்ளுக்கு மூடுதிரி தோஷம்போம்............*
விந்துறுமி ரத்தமுறும் வெப்பகலும் - இந்தவகைக்.........*
கள்ளெல்லாங் காமமுறுங் காமமற்று றுண்டக்கால்..............*
விள்ளரிய தோஷமில்லை மெய்.................................(௱௯௪)

(அரிசி-வேலம்பட்டை- தெங்கு இவைகளின்-மதுக்குணம்)

* சாலி மதுவாதத் தாற்சளிநீ ருண்டாக்கும் ....................*
வேலின்மது பித்தமழைக்கும் வேண்டாவாஞ் - சாலவுயர்......*

தெங்கின்மது சீதந் திரிதோஷ முண்டாக்கும்..................*
அங்குவிடுகள்குலையேயாம்[* சாலி-நெல்.வேல்-வேலம்பட்டை.

( அத்தி மதுக்குணம். )

* அத்திமே கஞ்சூ டதிமயக்கந் தாகமும்போம் ..............*
அத்திமர வேரிலுண் டாமதுவில் - நித்தியமுஞ் ........ .....*
சீனியே னும்பயன் செங்கனியே னுங்கலந்தே .......... ..*
* பானுவுதயங்குடித்துப்பார்[* அத்தி-யானை.பானு-சூரியன்]

மதுவின்வகை - முற்றியது.

தேன்வகை.

( மலைத் தேனின்குணம். )

ஐயிரும லிளைவிக்க லக்கிப்புண் வெப்புடல்நோய் ..............*
பைய வொழியும் பசியுமுறும் - வையகத்தில்......... .... ... ..*
எண்ணு*மிசை யாமருந்திற் கேற்ற வனுபானம்[ீரம்உண்டாம்
நண்ணுமலைத்தேனென் றிறல் [* இசையாம்-சங்கீதம்பாடச்சா

( கொம்புத் தேனின்குணம். )

வாதபித்த ஐயத்தை மாற்றுமுள மாந்தைதனைக்................*
காதமென ஓடக் கடியுங்காண் - பூதரமாம் ...... ..............*
வம்புமுலை மாதே வருமருசி நீக்கிவிடுந்......................*
கொம்புத்தே னன்றாகுங் கூறு... ......................(௱௯௮)

( புற்றுத் தேனின்குணம். )

கொப்பணியு மாதே குவலயத்து ளெல்லார்க்கும் ............*
ஒப்பநின்ற ஐய மொழிக்குங்காண் - கொப்பளிக்குங்.... ...*
காசசுவா சம்வாந்தி கண்ணிலெழு நோய்களறும்....... .......*
வீசுபுற்றுத் தேனுக்கு மெய்..........................(௱௯௯)

( மனைத் தேனின்குணம். )

புண்ணும் புரையும்போம் போகாக் கரப்பனறும்..............*
எண்ணரிய தீபனமா மேந்திழையே - கண்ணுகளிற் .........*
பூச்சிபுழு வெட்டுகபம் பொல்லா விருமலறும்..................*
பேச்சின்மனைத் தேனுக்குப் பேசு.............. ......... ...(௨௱)

தேன்வகை- முற்றியது.

## மரவகை.

### (சந்தன மரத்தின்குணம்.)

நற்சந் தனமரத்தா னல்லறிவு மின்புமெழிற்......... *
பொற்செந் திருவருளும் பூதலத்து ணண் - மெச்சுஞ்......... *
* சரும வழகுந் தனிம்மா கழுமாம்......... *
பிரமநோ யேகும் பிறழ்ந்து....[* சருமம்-தோல்.] ..(௨௱௧)

### (தேவதார மரத்தின்குணம்.)

தேவதா ரக்குணந்தான் சேர்ந்துவளர் பீநசத்தைக்......... *
காவகத்தி லோட்டுங் * கரப்பலவே - மாவலவர்......... *
சொல்லும்பு ராண சுரமொடுநீ ரோற்றத்தை......... *
வெல்லு மனற்றணிக்கு மெய்...[* கரப்பு-ஒளிப்பு.]...(௨௱௨)

### (அகில் மரத்தின்குணம்.)

தளர்ந்தவி ருத்தருக்காந் தக்க மணத்தால்......... *
உளைந்த சுரமனைத்து மோடும் - வளர்ந்திகழு......... *
மானே யகிற்புகைக்கு வாந்திய ரோசகம்போந்......... *
தானே தளர்ச்சியறுஞ் சாற்று.........(௨௱௩)

### (சரக்கொன்றை மரத்தின்குணம்.)

குட்டங் கிருமி கொடுஞ்சூலை வாதமையந்......... *
துட்ட மலம்அருசி தூரப்போந் - தட்டிச்......... *
சுரக்கின்ற பேதியுண்டாந் * துய்க்கத் துவர்க்குஞ்......... *
சரக்கொன்றைக் காரணங்கே சாற்று...[* துய்த்தல் உண்டல்.]

### (சிறுகொன்றை மரத்தின்குணம்.)

சிறுகொன்றை நற்கசப்பாஞ் சென்னி யனலால்......... *
உறுகின்ற கண்களினோ யோடே - பெறுமுடலின்......... *
உட்டினமுண் மூலமிவை யோடு மறிபலனுங்......... *
கட்டழகு முண்டதனுற் காண்.........(௨௱௫)

### (நரிக்கொன்றை மரத்தின்குணம்.)

பையவே யூறிப் படருமியா னைச்சொறியும்......... *
நொய்ய கிருமிகொண்ட நுண்புடையு - மெய்யில்......... *
அரிக்கின்ற வன்புடையு * மாழிபுகு மாதே......... *
நரிக்கொன்றை தன்னை நவில்....[* ஆழி-கடல்.]..(௨௱௬)

(மைக்கொன்றை மரத்தின்குணம்.)

குடல்வாதஞ் சூலை கொடுமேக மெல்லாம்......................*
அடைவாகப் போக்க வலைந்தே - படிமீதில்......................*
எக்கொன்றைத் தேடிநெஞ்சி லெண்ண மிடுவானேன்..........*
மைக்கொன்றை யிங்கிருந்த மால்........................(உ௱எ)

( மருத மரத்தின்குணம். )

ஓதமெனு நீரிழிவை யோட்டும் பிரமேகங்......................*
காதமென வோடக் கடத்துங்காண் - போத......................*
மயக்க மொடுதாக மாறுச் சுரத்தின்......................*
தயக்கமறுக் கும்மருதஞ் சாற்று........................(உ௱அ)

(இதுவுமது.)

குட்டரோ கங்கிருமி கோர வயிற்றுவலி......................*
துட்டவறட் சூலை தொலையுங்காண் - கிட்டிப்......................*
பொருதம்பா மென்னும்விழிப் பூவையரே நாளு......................*
மருதம்பா ரொன்றளவில் மாய்ந்து........................(உ௱கூ)

( வேங்கை மரத்தின்குணம். )

குத்திருமல் வெட்டையொடு கூறுமுள மாந்தையிவை.........*
யெத்திசையும் வாரா திடையுங்காண் - சத்தியமாய்ப் .........*
புண்ணிருமல் சீழொழுகற் போகு மலமிறங்குங் ..........*
கண்ணொளிரும் வேங்கைக்குக் காண்........................(உ௱ய)

( வன்னி மரத்தின்குணம். )

வாதசந்நி தோஷமறு மாறுத் தழலுளதென்..................*
றோதுவரிவ் வன்னிக் குவமையுண்டோ - பூதலத்திற் ..........*
* கானுர் விஷமுங் கபமுஞ் சொறியும்போந்.................*
தேனே யிதையறிந்து செப்பு .....[* கான்-காடு.]....(உ௱யக)

( புரச மரத்தின்குணம், )

புரசுவா தம்பித்தம் பொங்குகபங் குன்மங்..................*
கிருமி யுடனே கிராணி - பெருவலிநோய் ..................*
ஓட்டுமதி தீபனத்தை யுண்டாக்கு மப்பொழுதே ..........*
நீட்டியமேவற் கண்ணாய் தெளி........................(உ௱யஉ)

(இருவாட்சி மரத்தின்குணம்.)

கண்ணொளிவு மெய்யிற் கமழ்மணமு நீடழகும்..................*
* நண்ணும் வலிமூர்ச்சை நாசமாம் - பண்ணளியுங்..........*

கங்குலும்வாழ் வார்குழலே காரமொடு வெப்புமிகத்.........*
தங்குமிரு வாட்சிமரத் தால்...[* நண்ணல்-கிட்டல்]..(௨௱௰௫)

( காட்டாத்தி மரத்தின்குணம். )

அதிசார மந்தமிக வாலித்த காசம்........................*
விதிராம் விஷமும் விலகும் - எதிரொருவர்.................*
மூட்டாத்தி யென்னுமதி மோகந் தருமணங்கே..............*
காட்டாத்திக் கென்றுளத்திற் காண்.....................(௨௱௰௬)

( பெருங்குமிழ மரத்தின்குணம். )

பெரியகுமி ழின்பேரைப் பேசின்மே கத்தின்....................*
எரிவுசுக்கி லக்கடுப்பு மேகும் - பிரியாத....................*
வல்ல வனற்சுரமும் வாதசுர முந்தணியும் ....................*
மெல்லெனமுத் தோஷம்போம் விண்டு.................(௨௱௰௭)

( மாவுலிங்க மரத்தின்குணம். )

சுரங்கடியின் ரேஷந் தொலையாத வாதம்......................*
உரம்பெறு விஷங்க ளொழியும் -அரமுங்.......................*
கருமா வடுவயிலுங் கண்டஞ்சுங் கண்ணுப்........................*
ஒருமாவி லிங்குக் குணா....................................(௨௱௰௮)

( அழிஞ்சில் மரக்குணம். )

அழிஞ்சிலது * மாருதத்தை யையத்தைத் தாழ்த்தும்..........*
ஒழிஞ்சபித் தத்தை யுயர்த்தும் - விழுஞ்சீழாங்................*
குட்டமெனு நோயகற்றுங் கூறுமருந் தெய்திடில...........*
திட்ட மெனவறிந்து தேர்.....[ * மாருதம்-வாயு.]...(௨௱௰௯)

( கடலழிஞ்சில் மரத்தின்குணம். )

தீதிற் கடலழிஞ்சில் செய்யுங் குணங்களாய்.................*
ஓதுமது மேகமொ ழிப்பதல்லால் - வாதத்தில்..................*
வந்த * சலம் பித்தசல மாகபச்ச லந்தாகத்........ ..........*
தொந்தசல மும்போக்குஞ் சொல்[* சலம்-மேகநீர்](௨௱௰அ)

(இதுவுமது.)

கமல விரணங் கசிநீ ரகற்றும்..................................*
நிமல சுரம்விலக்கு நேமோ - கமலமுக........... ..........*
மாதே கடலழிஞ்சில் வன்பட்டை பேதிகட்டுஞ்.......... .....*
* சீதாமே கம்போக்குந் தேர்.........................(௨௱௰௯)

[* சீதமேகம்-என்பது-சீதாவென-எதுகைநோக்கி-திரிந்தது.]

( பூத மரத்தின்குணம். )

பூதவி ருட்சமது போக்கும் பலவிஷத்தை................... *
வாதமென்ற நோயனைத்து மாற்றுங்காண் - தீதுபுரி.........*
சந்திகளைத் தப்பாது சண்ணிவிடும் பூதலத்துள்...............*
உன்னி மகிழ்வா யுநா ...........................................(உஉ)

(வாகை மரத்தின்குணம்.)

வாகைகா ரங்கசப்பை வைத்திருக்கு முள்ளபடி...............*
* யோகையு றப்பசியை யுண்டாக்குந்- தோகையரோ ....... *
தீரா விஷத்தோடு சில்விஷத்தை யுந்தீர்க்கும்... .. ..... .....*
ஆராயத் தோன்று மது .... ...[* ஓகை- மகிட்சி].......(உஉக)

(இதுவுமது.)

வாகை யனல்விரணம் வாத வறட்சியுடன்.......................*
தாக சுர்முந் தணிக்குங்காண் - ஆகமதில்................ ........*
* அக்கர மெல்லா மகற்றிவிடும் பூவனமே ..... .....[சரமாம்.
யக்கணத்தி லென்றே யறி[* அக்கரம்-நாக்கில் பிறக்கின்ற அட்

( கருவாகை மரத்தின்குணம். )

விரணமோ * டுட்டினமும் வீறுகின்ற வாய்வுந்..................*
திரண் மெனுங்கிருமிச் சேர்வு - மரணமுறச்........................*
செய்யுங் கபத்தின் செயலுங் குடிவிலகும்..........................*
வெய்யகரு வாகைக்கு விள்......[* உட்டினம்-சுரம்.]..(உஉ௩)

( இலவ மரத்தின்குணம். )

நீர்க்கடுப்பு நீரொரிவு நீண்டொழுகு மேகமும்போம் ........*
ஆர்க்கும்விந்து வோ * டைக்கு மாண்மையுறும் - பார்க்குள்*
நிலவு மதிவதன நேரிழையே வெப்பாம்... ......... ........*
இலவு மரத்தா லியம்பு ..........[ * ஐ-சிலேஷ்மம்.]...(உஉச)

( விளா மரத்தின்குணம். )

காச சுவாசங் கதித்த வருசிமுதற் .. ......... ......... ....*
பேசரிய தாகமிவை பேருங்காண் - வீசு...........................*
தபித்தலைச்செய் பித்தந் தரிக்குமோ - * பூவிற்..............*
* கபித்த மரமிருக்குங் கால்.[* பூ-பூமி. கபித்தம்-விளாமரம்.]

தே—( கருநெல்லி மரத்தின்குணம். )

பதினெந் தெனுஞ்சந்நி பாதந் தயக்கம்.............................*
மதிநைந்தி டச்செய்வினை மாறும் - பதியிற் ,......................*

சநித்த கருவுருவந் தானும்வே ரூகுந்..........................*
தனித்தகரு நெல்லிமரத் தால்..................................(உ௨௬)

( அருள் மரத்தின் குணம். )

வாத மகலும் வளருகின்ற மந்தமறுஞ்..............................*
சீதரத்தஞ் சோயசுரந் தீருங்காண் - ஓதும்..........................*
இருளாருங் கூந்த லெழிலணங் கே ழூத்த.................. [ளாமரம்.
* அருள்என்னும் நன்மரத்தா லாய். [ * அருள்-மூதிர்ந்தமாது

( வேப்ப மரத்தின்குணம். )

ஓதரிய வேம்பை யுரைக்கிற் சுரமுடனே...........................*
வாதமறு மூலகண்ண மந்தம்போந் - தீதாய்.........................*
உதிருமெரி பூச்சிகுன்ம மோதா தொழியுஞ்........................*
சிதறுமலம் போகுமெனத் தேர்...................................(உ௨அ)

( மலைவேப்ப மரத்தின்குணம். )

மலட்டுப் புழுவும் வயிற்றின் வலியும்............................*
அலட்டுவாய் வும்போ மடங்கிக் - கொலட்டும்........................*
உலைவேஞ் சினவேற்கண் ஓதிமமே கேளாய்.........................*
மலைவேம்பின் பேரா வழுத்து.....................................(உ௨௯)

தே-( சருக்கரைவேப்ப மரத்தின்குணம். )

காயசித்தி யாகுங் கடியசி லேஷ்மமறுந்...........................*
தூயவிந்து நாதமிவை சுத்தியுமாந் - தூயவருக்....................*
கெத்திக்குங் கிட்டும் இலையருந்தில் வாயெல்லாந்...................*
தித்திக்கும் வேம்பதற்குத் தேர்...................................(உ௩௰)

( பாலை மரத்தின்குணம். )

வாதப் பெருக்குபித்த மாமூச்சு வாசமுதல்.........................*
ஓதுசர்வ தோஷமும்விட் டோடுங்காண் - தீதுபுரி....................*
வேலைப் பொருவுவிழி மெல்லியலே காட்டிலுறை.....................*
பாலைக்கென வுன்னிப் பார்.......................................(உ௩௧)

தே-( வெட்பாலை மரத்தின்குணம். )

அக்கினியை வைத்திருக்கு மார்ந்த வாதம்போக்குந்.................*
திக்குள்திரி தோஷத்தைத் தீர்த்துவிடுஞ் - சொக்கவிரு...............*
கட்பாலைக் கூற்றைவைத்த கான மடமயிலே........................*
வெட்பாலை நன்மருந்தாம் விள்.....................................(உ௩௨)

(தீம்பாலை மரத்தின்குணம்.)

மேகவெட்டை சந்நி * விஷபாகம் நேத்திரநோய்............*
தாகமுத்தோ ஷஞ்சர்த்தி சாரனலம் - வேகமோ..............*
டேறுசலம் பீநசமி ரத்தமூந்தீம் பாலையெனுந்...............*
* தாறுவா திக்ககலுஞ் சொல்.................................(உருங)

[* விஷபாகம்-விஷபாகரோகம்' * தாறுவாதி-தீம்பாலைமரம்]

(மலைப்பாலை மரத்தின்குணம்.)

விக்கல்வலி வாந்திகுன்ம டீறுபக்கச் சூலையொடு...............*
* மைக்கரப்பான் மந்தமிவை மாறுங்காண் - மைக்கண்......*
நிரைப்பாலை யொத்தமொழி நேரிழையே கேளாய்..........[ன்
வரைப்பாலையையுண் டவர்க்கு[ *மைக்கரப்பான்-கருங்கரப்பா

(குடசப்பாலை மரத்தின்குணம்.)

வாதமறும் பேதிகட்டு மாருத நீரிழிவுங் ..........................*
காதம்போ மேகங் கடக்குங்காண் - தீதடரப்..........................*
பொங்கு கரப்பானும் போகா விரணமும்போம்..........................*
இங்குகுட சப்பாலைக் கே......................................(உருசு)

(குளப்பாலை மரத்தின்குணம்.)

சுவாச காசம்பக்கச் சூலையதி சாரம்..............................*
* அவாச வியர்ப்போ டனலந் - தவாத..............................*
கரப்பா னிவைவிலகுங் காரிகையே நாளும்........................[ர்வை
உரப்பாங் குளப்பாலை யுண்.[* அவாசவியர்ப்பு-நிலையற்றவிய

(முள்முருக்க மரத்தின்குணம்.)

மூள்ளு முருக்கதுதான் மோதுகின்ற சர்த்திகுன்மங்..............*
கள்ளமறத் தீர்க்குங் கனற்சுரமும் - விள்ளரிய..............*
அக்கரமும் போக்கு மனல்வாய்வேக் காடகற்றும்..............*
* மிக்க வலிகொடுக்கும் விள் [*மிக்கவலி-அதிகபலம்].(உருஎ)

(வெள்வேல் மரத்தின்குணம்.)

பித்தம யக்கமறும் பேருலகின் மானிடருக்..............*
குற்ற சுரவாத மோடுங்காண் - குத்துகின்ற..............*
சந்துக்கு டைச்சல்விடுஞ் சரவாங்க வாதம்போங்..............*
கொந்துலவும் வெள்வேலுக் கு..............................(உருஅ)

( மூங்கில் மரத்தின்குணம். )

மூதக வாய்வினது சோணிதந்தங் காதுவரு......................*
மாதே சுரந்தணியும் வாதம்போம் - * பூதரமேல்..............*
ஓங்கி வளர்ந்திழைபு மோங்கலெனு மூங்கிலுக்கு..............*
வாங்குஞ்சு வாசம்போம் வாழ்த்து...[* பூதரம்-மலை.]..(உ௱கக)

மரவகை முற்றியது.

---

செடிவகை.

தே-( ஆவாரையின் குணம். )

சொல்லுதற்கு மட்டோ தொலையாத மேகநீர்.....................*
எல்லா மொழிக்கு மெரிவகற்று - மெல்லவச.....................*
மாவாரைப் பம்பரம்போ லாட்டுந் தொழிலணங்கே..........*
யாவாரை மூலி யது.........................................(உசய)

தே—( பொன்னாவரையின் குணம். )

வெடிப்பு * துவக்குதிரல் மேகப் புடைகள்.......................*
தடிப்பு தினவுகடி தங்கா - அடிக்கடியிங் ........................*
கென்று வரைய விசையா வெழிலணங்கே........[ள்சிந்தூதல்.
பொன்னு வரையதனைப் போற்று...[*துவக்குதிரல்-சருமத்து

( நீர்ப்பூலாவின் குணம். )

மாந்தங்க ணம்பொருமல் மாருச் சலத்துடனே....................*
சேர்ந்த சொறிசிரங்குந் தீருங்காண் -எந்தெழிலைச்...........*
சேர்ப்பாகக் கொண்ட செழுந்திருவே பூவிலுறை...........*
நீர்ப்பூலாப் பூண்டை நினை.....................................(உசஉ)

(பேய்மிரட்டியின்குணம்-இதுவே வெதுப்படக்கி)

மாந்தக ணங்கழிச்சல் மாரு வயிற்றுவலி........................*
சேர்ந்து வருகரப்பான் தீச்சுரமும் - பேர்ந்துவிடும்.........*
வேய்மிரட்டுந் தோளுடைய மெல்லியலே * ராசியமாய்ப்...*
பேய்மிரட்டி யென்றொருக்காற் பேசு...[* ராசியம்-ரகசியம்]

( குன்மக்குடோரியின் குணம். )

சூலையோ டூளை தொலையாக்கா சங்கயநோய்...................*
காலமினன்ற குன்மங்க லங்குங்காண் - ஞாலமிசை...........*
நன்மைக் குரியகுண நல்குவமென் றூற்றிலுறுங்............*
குன்மக்கு டோரிதனைக் கு....................................(உசச)

(விடத்தேரின் குணம்.)

மூளையைவரு விக்கின்ற மூலரோ கத்தை.......*
யளையுமுதி ரத்தை யடங்கா - துளைதாக.......*
வேகத்தைப் போக்கிவிடும் வெய்யவிடத் தேர்சக்கிர.......*
வாகத்தைக் காய்முலையாய் வாழ்த்து.......(௨௪௫)

(தகரையின் குணம்.)

தகரை படர்தா மரையைச் சொறியைத்.......*
தகரவ டிக்குமந்தந் தன்னே - டிகலான.......*
அத்திசு ரத்தையும தஞ்செய்யு மிம்மூலி.......*
யுத்தமமா மென்றே யுரை.......(௨௪௬)

(நின்றுற்சிணுங்கி- நிலப்புறண்டி-இவைகளின் குணம்.)

நின்றுற் சிணுங்கியது நீலவிஷம் போக்குமினுங்.......*
குன்றுந் தனத்தியரைக் கூட்டுவிக்கும் - என்றும்.......*
அலம்புரண்ட நோயகற்று மாள்வசிய மாக்கும்.......*
நிலம்புறண்டி மூலி நினை.......(௨௪௭)

(உரலாமணக்கின் குணம்.)

உரலா மணக்குக் குரத்தவல்லி சூலை.......*
விரைவான குன்மமும்போம் விள்ளப் -பிரிவாம்.......*
மூளைமூல மோடிரத்தம் முன்கால் விரணங்.......*
கொளுமேக மெல்லாம்போங் கூறு.......(௨௪௮)

(இதுவுமது.)

எலியா மணக்கோ எலிவிஷமுஞ் சேர்ந்த.......*
பலவிஷமு மோட்டிவிடும் பாரில் - வலுபேதி.......*
யுண்டாக்கு விக்கு முரத்தகுன் மம்பிலிகம்.......*
அண்டாம லோட்டிவிடு மால்.......(௨௪௯)

(சணப்பின் குணம்.)

கைப்பும் உறைப்புங் கலந்திருக்குந் தின்றக்கால்.......*
மெய்ப்புள்ள பித்தம் விலகுங்காண் - நெய்ப்பாங்.......*
கருப்பங்க ளெல்லாங் கரைந்து விழுமே.......*
* உருப்பங்க மாஞ்சணப்புக் கோர்...[* உரு-நோய்]. (௨௫௰)

(மாமாலையின் குணம்.)

பாண்டுடனே மெய்யிற் படர்சோபை யைத்துரத்துந்.......*
தூண்டுநீ ராம்பலெனுந் துன்பொழிக்கும் - பூண்டதோர்...*

நீரா யிறக்கு நெடுந்துயர மாற்றிவிடும்..........................*
நாரியரே மாமாலை நன்று..........................(உருக)

( கோடகசாலையின் குணம். )

கோடகசா லைக்குக் கொடியஅனல் மேகமொடு..........................*
* போடகங்கி ரந்திகுஷ்டம் புண்ணூறும் - நாடகஞ்செய்....*
யப்பித்த வாய்வு மலர்வாய் விரணமும்போம்..........................*
பொற்புற்ற பொன்னே புகல்...[ * போடகம்-கொப்பிளம்.]

( வட்டக்கிலுகிலுப்பையின் குணம். )

வட்டக் கிலுகிலுப்பை மாறுச் சொறிகிரந்தி..........................*
துட்டகண்ட மாலைபல சோபைநோய் - வட்டமுலை..........*
மானே விரணவகை மாந்தமுத ஞேயெல்லாந்..........................*
தானேய கற்றுமெனச் சாற்று..........................(உருரு)

( வெள்ளைக்கிலு கிலுப்பையின் குணம். )

* விடவினங்க ளைப்பிடித்து விண்ணேற்றும் வந்த..........*
விடசந்நி நோயை விரட்டுந் - * தடமாரும்..........................*
வெள்ளைக் கிலுகிலுப்பை மென்பூண் டதுபுவிக்குட்..........*
கிள்ளைக் குதலைமின்னே கேள்.[* விடம்-விஷம். * தடம்-மலை]

(சந்திரகாந்தி- சூரியகாந்தி-இவைகளின் குணம்.)

சந்திரகாந் திக்குத் தழலெரிச்சல் நீர்க்கடுப்பும்..........................*
உந்திவலி யாவுமொ டுங்குங்காண் - சந்திலுறும்..........................*
பாரிய வாதம் பருகுநீ ரேற்றமும்போஞ்..........................*
சூரிய காந்திக்குச் சொல்..........................(உருசு)

( ஈச்சுரமூலியின் குணம். )

பலபலவிக் கஞ்சந்நி பாதங்க ளோடு..........................*
நலமகல்வி ஷங்கள் நடுங்கும் - கலகலெனப்..........................*
பேச்சுரமுண் டாகுமலர்ப் பெண்ணனமே நீகேளா..........*
யீச்சுர மூலிதனக் கின்று..........................(உருசு)

( நிலவிளாவின் குணம். )

அழன்றகண வேக மதிதாகந் தீருஞ்..........................*
சுழன்றுவரு பித்தந் தொலையும் - உழன்று..........................*
பொருநிலமே கத்துடனே புண்சுரமும் போகும்..........*
அருநிலவி ளாவுக் கயர்ந்து..........................(உருஎ)

## ( சங்கங்குப்பியின் குணம். )

கரப்பான் கிரந்தி கருங்குட்ட ரோகம் .......................*
உரப்பானமேகம் ஒழியும் - * கருவாம்...........................*
கருங்கிரந்தி செவ்வாப்புக் கட்டிகளு மேகும்......................*
அருஞ்சங்கங் குப்பிக் கறி.[*கருவாம்-கருப்பத்திலுண்டாகிய]
(இதுவுமது.)
வெட்டை சொறிசிரங்கு வீறிவருஞ்சூலை.........................*
துட்டவாதங்கபந்து ணுக்கிருமல் - கெட்டவிஷம்....................*
அங்கங்கொள் பூச்சியிவை யாவும்போம் பித்தமுறுஞ்...... *
சங்கங்குப் பிக்கெனவே சாற்று...............................(௨௫௯)

## ( கறிமுள்ளியின் குணம். )

களை யிருமவிளைப்புச்சுவாசமறும் ...........................*
வாளைவென்ற கண்ணாய் வழுத்தக்கேள் - நாளையினி..............*
யில்லைக் கடலுலக மெங்குங்க பச்சுரநங்........................*
கொல்லைக் கறிமுள்ளி கொள் ...............................(௨௬௰)

## ( செம்முள்ளியின் குணம். )

செம்முள்ளி யென்றுற்சி லேஷ்மந டுங்கிவிடும்......................*
விம்முமுலை மாதேவி ளம்பக்கேள் - கம்முகின்ற.................*
மாந்தகணம் ஐயமிவை மாறுஞ் சிறுவருக்குச்......................*
சேர்ந்தசுர தோஷமும்போஞ் செப்பு ...........................(௨௬௧)

## (கண்டங்கத்திரியின் குணம்.)

காசசுவாசங்க தித்தக்ஷய மந்தமனல்.............................*
வீசுசுரஞ் சந்நி விளைதோஷம் - * ஆசுறுங் * கால்..............*
இத்தரையு ணிற்கா எரிகாரஞ் சேர்கண்டங்........................*
கத்தரியுண் டாமாகிற் காண்...[* ஆசு-குற்றம். * கால்-வாய்வு.]

## ( தேட்கொடுக்கின் குணம். )

தேட்கொடுக்குண் டாயிற் றினவடங்குந் தப்பாது .................*
நாட்பட்ட புண்கரப்பான் நாசமாங் - கீட்பட்ட ..................*
மாந்த கணமுமறு மானிலத்துட் சில்விஷம்போம் ..................*
போந்தமருந் தாகும் புகல்.......................................(௨௬௩)

## ( பெருந்தேட்கொடுக்கின் குணம். )

சுடுகாடு முட்டா னெனப்பெரியோர் சொல்லும்.......................*
நெடியபெருந் தேட்கொடுக்கால் நீரார் - பொடிக்கிருமி.....*

புண்கிரந்தி மேகப்புண் பொல்லாக் கருங்கிரந்தி.............*
வின் * கரந்து போகாதோ விள்[* கரத்தல்-ஒளித்தல்](உகூச)

( சிறுதேட்கொடுக்கின் குணம். )

சிறுதேட் கொடுக்கதனுற் சேயிழையே கேளாய்...............*
சொறிசிரங்கு புண்கரப்பான் சூலை - கொறுமாந்தை..........*
மேகவெட்டை பித்தவெட்டை யீளா வெலும்புருக்கி..........*
* ஆகம்விடுத் தோடு மறி.........[* ஆகம்-சரீரம்] ..(உகூரு)

( நிலவேம்பின் குணம். )

வாதசுர நீரோற்ற மாற்றுஞ் சுரதோஷந்.....................*
காதமென வோடக் கடியுங்காண் - மாதரசே..................*
பித்த மயக்கறுக்கும் பின்புதெளி வைக்கொடுக்குஞ்...........*
சுத்தநில வேம்பின் றொழில்............................(உகூசு)

தே—( சிவனார்வேம்பின் குணம். )

சாய்க்குமிடிப் புண்பழம்புண் * சர்மகுட் டம்பிளவை......*
தீக்கடிகால் வன்பெருநோய் சிந்துமா - * நோய்க்கு........*
விதையாதி வேம் * பிறுமெய்ப்பக்கழகு * காலை..............*
யுதையாதி வேம்பினு லுன்னு..............................(உகூஎ)

[ * சர்மகுட்டம்-சர்மதளகுஷ்டம். நோய்க்கு விதையாதி வேம், வியாதிக்கு வித்தாகிறமந்தநோய் கெடும். பிறுமெய்க்கழகு, பின்பு உடலுக்கு அழகுண்டாகும். காலை யுதையாதி, யமனையுதைத்த சிவன்.]

( நீர்முள்ளியின் குணம். )

பாண்டுகுளுய்பையறும் பாரில்வரு நீரோற்றம்..............*
மாண்டுவிடும் நீர்க்கட்டு மாறுங்காண்- பூண்டதொரு..........*
வீக்கமெல்லா நீராய் விடுமேநீர் முள்ளிக்குத்.............*
தாக்கு மயில்விழியாய் சாற்று..............................(உகூஅ)

( பெருமருந்தின் குணம். )

திரிதோஷம் வெப்பு சிரங்கு சொறி நஞ்சோ.................*
*டரிதேமல் வன்புடையு மண்டா- தொருவான்...............*
அருமருந்தை யொத்த வணங்கே யுலகிற்.....................*
பெருமருந்தை நீயெடுத்த பின்பு..[* அரி-தினவு] ..(உகூகூ)

( ஊமத்தையின் குணம். )

நாய்க்கடியால் வந்து நலிசெய் விரணமும்போம்...........*
வாய்க்குழிப்புண் கட்டிகளு மாறுங்காண் - தீக்குணத்தைச்....*

சேமத்தில் வைத்தவிஷந் தீருமூத்தோ ஷங்களறும்...........*
ஊமத்தை யின்குணத்தை யுன்னு.......................(௨௭௰)

( கருவூமத்தையின் குணம். )

* விந் * திரதங்கட்டுமெழின் மேனிதருங் குஷ்டமொடு......*
வந்த வியர்ப்பரிப்பு மாற்றுங்காண் - மூந்தப்..................*
பெருமத்தஞ் செய்சுரத்தைப் பேர்க்குங் கயப்பாங்.........*
கருமத்தம்நன்மூலிகாண் [* விந்து-சுக்கிலம். இரதம்-பாதரசம்.

( பொன்னூமத்தையின் குணம். )

பொன் * மத்தம் உண்டாகிற் பூவையரோ புண்கிரந்தி.........*
தொன்மைக் கிராணிவரு சூசிகா - வன்பேதி.....................*
பித்த சுரத்துடனே பேரா விஷசுரமுஞ்.........................*
சுத்தவழி சாரமும்போஞ் சொல்......[ * மத்தம்-ஊமத்தை.]

(மருளூமத்தையின் குணம். )

சீதசுரம் நீரேற்றஞ் சில்விஷங்கள் மந்தத்தோ..................*
* டூதையிவை யெல்லாம் ஒழியுங்காண் - போத..............*
இருளூருங் கூந்த லெழின்மாதே கான...........................*
மருளூமத் தைக்கறிந்து வை....[ * ஊதை - வாயு.]...(௨௭௩)

( நிலக்குமிழின் குணம். )

பேதியொடு கண்சொருகற் பேராத சீதளமும் ..................*
வாதவலி கொட்டாவி மாந்தமும்போம் - ஓதச்..............*
சலக்குமிழை யொத்தத னக்கருங்கண் மாதே.................*
நிலக்குமிழைக் கையிலெடு நீ...........................(௨௭௪)

( பெரும்பீளையின் குணம். )

* பாடாண * பேதியெனப் பன்னுபெரும் பீளைக்கு.......*
மேடான வீக்கம் விலகுங்காண் - நாடறிய....................*
பேய்பூத மும்போகும் பேசிற் பலபிணிபோந்........[ளத்தல்.
தூயோ ரறிவரிதைச் சொல்..[* பாடாணம்-கல். பேதித்தல்-பி

( சிறுபீளையின் குணம். )

பாண்டுபெரும் பாடு பகர்மூத்தி ரக்கிரிச்சம்.................*
பூண்டதிரி தோஷமிவை போகுங்காண் - தாண்டிப்............*
பழியவே ளைத்துரத்தும் பார்வையிற்கண் மாதே..............*
சிறிய பீளைக்குச் சிதைந்து.................................(௨௭௫)

(இதுவுமது.)

நீர்ச்சுடைப்பு கல்லடைப்பு நீங்காக் குடற்சூலை.................*
போரடரி ரத்தகணம் போக்குங்காண் - வாரிறுக்கும்..........*
பூண்மூலையே கேளாய் பொருந்துஞ் சிறுமிளை..................*
யாமிதுகற் பேதி யறி...........................................(உளஎ)

( பல்லிப் பூண்டின் குணம். )

வல்விஷந் தோஷசுரம் வாயுபித் தங்களொடு....................*
பல்வலியும் பஞ்சாய்ப் பறக்குங்காண் - நல்லோர்பால்........*
சொல்லிப்பார் பாஷாண தாளகமுஞ் சுத்தியதாம்..............*
பல்லிப்பூண் டுண்டாயிற் பார்...................................(உளஅ)

(தாணிப்பூண்டு-பொரிபூண்டு- இவைகளின் குணம்.)

தாணிப்பூண் டேயிருந்தால் தாவிவரு மேகத்தை...............*
நாணிப்போ கச்செய்யும் நானிலத்துள்-வீணில்..................*
ஊரிகிரந்தி மேக மிருக்குமோ ஆமிற்........................*
பொரிபூண்டின் பேராப் புகல்....................................(உளகூ)

( குருவிச்சிப்பூண்டின் குணம். )

குருவிச்சிப் பூண்டெனவே கூப்பிட்டாற் போதும்.............*
வருவிச்ச குஷ்டமும் மலமும் - ஒருமிச்ச........................*
மேகக் கரப்பான் விஷமாந்தஞ் சீதரத்தம்........................*
பேதமறப் போமொருக்காற் பேசு.................................(உஅய)

( தலைச்சுருளியின் குணம். )

பாண்டகற்று மெய்யிற் படர்குஷ்ட நோய்விலக்கும்...........*
நீண்ட * விருதயநோய் நீக்குங்காண் - தாண் * டதப்பை...*
முன்னே யொழித்துவிடு மூவாத் தலைச்சுருளி..................*
யென்னேபுலகிலிசை [* இருதயம்-மார்பு. * அதப்பு-வீக்கம்.]

( கறுப்புமணத்தக்காளியின் குணம். )

வெவ்வழலு மாறும் விரிகுரநக்கம் மற்போகும்................*
ஒவ்வுசிசு வுக்காம் * உலவைவிடுஞ் - செவ்வி..............*
அருமணிக் கச்சுமுலை யாயிழையே கேளாய்...................*
கருமணத்தக் காளிதனைக் கண்டு... [* உலவை-வாயு.](உஅஉ)

(சிவப்புமணத்தக்காளியின்குணம்.)

கந்ததா ளிப்புண்ணுங் காங்கையினுல் உள்ளூக்குள்..........*
வந்தவேக் காடுமிக மாற்றுங்காண் - முந்தனில..............*
ஐப வினையும் அகற்றிவிடும் நற்புலத்துச்......................*
* செய்ய மணத்தக்காளிச் சீர் ..[* செய்-சிவப்பு.]...(உஅ௩)

( நல்வேளையின் குணம். )

சிரநோய் வலிகுடைச்சல் தீராச் சயித்தியம்..................*
* உரநோ யிவைக ளொழியும் - உரமேவும்.....................*
வில்வேளைக் காயும் விழியாய் பசிகொடுக்கும்................*
நல்வேளை தன்னை நவில்...........[* உரம்-மார்பு]...(உஅ௪)

( இதுவுமது. )

நல்லவே ளைப்பூண்டை நாடுங்கால் வாதமும்போகு.........*
சொல்லும்ஐ யத்துடனே சோபையறும் -மெல்லமெல்லத்...*
தூக்கவன லும்பித்துந் தானெழும்புஞ் சாந்தமின்றி...........*
யக்கரநோய் மிஞ்சு மறி...............................(உஅ௫)

( நாய்வேளையின் குணம். )

வாதம் உடற்கடுப்பு வன்சூலை காதிரைச்சல்......................*
ஓதமிகு பீநசமும் ஓடுங்காண்- போதெறிந்து....................*
காய்வேளைக் காயும்விழிக் காரிகையே வையமதில்.............*
நாய்வேளை யுண்ண நவில்...................................(உஅ௬)

( கல்லுருவிப்பூண்டின் குணம். )

கல்லுருவிப் பூண்டுபல கட்டிகளை யுங்கரைக்கும்...........*
வல்லுதிரக் கட்டறுக்கும் வந்தபுண்ணை - வெல்லரிய.........*
மேகத்தை வல்விஷத்தை மீளாத கற்றிடும்உ.....................*
லோகத்தைச் சுத்திசெய்யு மோது.............................(உஅ௭)

(எரிசாலை-குதிரைக்குளம்படி- இவைகளின் குணம்.)

பூவில் எரிசாலைப் பூண்டுக் கிழுப்புவலி........................*
கூவியழுஞ் சூலைஅனி லங்குறையுந் - தாவு.......................*
குதிரைநடை வாயுசந்நி கூறுதின வும்போங்......................*
குதிரைக் குளம்படியைக் கூறு.................................(உஅஅ)

( சுளுக்குநாயகத்தின் குணம்—வி-ம். )

சுளுக்கு நாயகந் தோஷஞ் சுரமொடு..................................*
சுளுக்கும் வாங்குந் தொடுத்தகை கால்களின்.....................*

சுளுக்கு மேற்கறடுங் கரைக்குஞ் சொனேனுஞ்......................*
சுளுக்கு மேல்வீழ் பிரதத்தந் துடைக்குமே..........................(உ அ௯)

( கிரந்திநாயகத்தின் குணம்—வெ-பா. )

சீதமறு மாவிஷமுந் தீரும்விழி நோயகலும்..........................*
பூத மொடுமருளும் போகுங்காண் - மேதினியுள்.......................*
ஆ * யகத்துப் புண்கிரந்தி யாறுமயி லேகிரந்தி........................*
நாயகத்தி னுமேல நவில்...[* அகத்து-உடலினிடத்தில்].(உ௯0)

( பிளவைகொல்லிப்பூண்டின் குணம். )

பிளவைகொல்லிப் பூண்டிருந்தாற் புண்விரணம் பேரும்...*
அளவையுறு மேக மடங்கும்- உளமாந்தை..............................*
யாருப் பிளவைகட்டி யெல்லா முலர்ந்திடுமே ............................*
மாருக் கவினணங்கே வாழ்த்து............................(உ௯க)

( மலைதாங்கிப்பூண்டின் குணம். )

வாதம்எண்ப துஞ்சுரமும் வாத சயித்தியமுங்............................*
காதுவலி * பாரங்க ரந்திடுங்காண் - போதச்.............................*
சிலைதாங்கி நின்றநுதற் செந்திருவே நீயும் ......[விற்கணத்தல்
மலைதாங்கிப் பூண்டை வழுத்து.[*பாரம்-சிரசுமுதலிய இடங்க

( குடியோட்டிப்பூண்டின் குணம். )

புண்ணொடுகரப்பான் பொடிசிரங்கு சில்விஷங்கள்.........*
சுண்ணிருமல் மேகவளி தண்மேகம் - அண்ணிற்.........*
படியோட்டு மாவிஷமும் பல்நோயுந் தீருங்..............................*
குடியோட்டிப் பூண்டாற் குலைந்து...................................(உ௯௩)

( ஆடுதீண்டாப்பாளையின் குணம். )

ஆடுதொடாப் பாளைக் * ககக்கிருமி வன்சிலந்தி.......................*
நீடுகருங் குஷ்டம் நிறைகரப்பான் - ஆடிடச்செய்.......................*
யெண்பதுவாய்வும் இகல்குஷ்ட முந்தீருந்..................................*
திண்பெறுநற் றுதுவுமாஞ் செப்பு...[ * அகம்-உள்]..(உ௯௪)

( குழிமீட்டான் குணம். )

கணத்திலெழு மாந்தத்தைக் காணவுட் சூட்டைக்.........*
* கணத்திலே வேரைக் களையும் - மணத்தமுலைப்.........*
பாலைச் சுரப்பிக்கும் பாரிற் குழிமீட்டான்.................................*
காலைத் தொழுதுண் ணுங் கால்.[* கணம்-காலநுட்பம்](உ௯௫)

(செருப்படையின் குணம்.)

செருப்படைக்கு வாதமந்தஞ் சேர்வான மேகம்...........*
இருப்படிகொள் பொல்லா இசுவும் - விருப்படிக்குஞ்......*
சூலையொடு வாதகுன்மந் தோற்றூ தொருநாளும்..........*
வேலையொத்த கண்ணாய் விளம்பு..........................(உகூசா)

(கல்தாமரையின் குணம்.)

வீரிய விர்த்திதரு மெய்க்குப் பலங்கொடுக்குங்..............*
கூரிய குஷ்டிதனைக் கோபிக்குங் - காரீயத்தை..............*
நற் * றூம் பரமாக்கு நங்கா * யடுக்கலுறை...................*
கற்று மறையதனைக் காண் [* தாம்பரம்-செம்பு. அடுக்கல்-மலை.]

(கஞ்சாங்கோரையின் குணம்.)

மாந்தக் கழிச்சலறும் மாந்தஞ்சு ரங்கணம்போஞ்...........*
சேர்ந்தமூ லத்தின் தினவடங்கும்- பூந்தடக்கை ..............*
யன்னமே மேகம் அறுங்கஞ்சாங் கோரையினை ..............*
* யுன்ன இருமலிலை யோது... [* உன்ன-நினைக்க.]...(உகூஅ)

(கீழ்வாய்நெல்லியின் குணம்.)

சீதம்அதி பித்தவிஷஞ் செவ்விழியின்னோய்க் கூட்டம்......*
பூதமொடு பேயிரத்தப் போக்குகளும் - பூதலத்துள்.........*
தாழ்வாய்ப் பணிந்தேகுந் தப்பாது பொய்யலவே............*
கீழ்வா யெனுநெல்லிக் கே...................................(உகூகூ)

(இதுவுமது.)

கீழாநெல் லிக்குணந்தான் கேளாய் மதுமேகந்...............*
தாழாக்கா மாலைகளைச் சண்ணுந் * தா - தேழனலுந்.........*
தொக்கினன லுந்தொலைக்குந் தொன்மேகம் போக்கிவிடுந்...*
துக்கவிர ணங்கெடுக்குந் தான்...............................(௩௱)

[* தாதேழனலும் - சப்ததாதுக்களின்சுரமும்.]

(மயிர்மாணிக்கத்தின் குணம்.)

மயிர்மாணிக் கத்தால் வளர்மேகம் போகுஞ்.................*
* செயிரான மேகவெட்டை தீருங் -சுயரோகம்...............*
மாவிரணம் போக்கஇதில் வல்விரதஞ் சேர்த்தநாத்துத்......*
தாவியுண்பா ருண்டறிந்தோர் தாம் .....[* செயிர்-குற்றம்.]

(துளசியின் குணம்.)

ஐயம் வயிறுளைச்சல் அஸ்திசுரந் தாகமும்போம் ............*
பையசுர மாந்தம் பறக்குங்காண் - மெய்யாக..................*

வாயின் அரோசகம்போம் வன்காரஞ் சூடுள்ள ................*
தூய துளசிதனைச் சொல்....................................(௬௱உ)

(செந்துளசியின் குணம்.)

செய்ய துளசிவிஷந் தீர்க்குங் கபமறுக்கும்...........................*
வெய்ய கடிவிஷத்தை விண்ணேற்றுந் - தையலரே.................*
முத்தோஷத் துண்டா * முரணோட்டும் அவ்வழிசேர் .........*
எத்தோஷ மும்போக்கு மென்...[* முரண்-கோபம்.] (௬௱௩)

(கருந்துளசியின் குணம்.)

இருமலொடு நெஞ்சி விழுப்புச்சு வாசங் .. ..... .............*
கிருமி சலதோஷங் கேவல் - * மருமச்.......................*
சளிருட்சை சூலைவிஷஞ் சந்நியிவை போக்குந் ..............*
* தளிரார் கருந்துளசி தான்[* மருமம்-மார்பு.* தளிர்-துளிர்]

(நிலத்துளசியின் குணம்.)

நிலத்துளசி மாதர்தரு நீண்முலைப்பால் மந்தம்...... .........*
வலுத்தசுரம் பித்தகண மாற்றும் - அலத்துகண.................*
மாந்தசுரம் பித்தசுரம் மாபெரிய சீதசுரஞ் .. ...... ........*
சேர்ந் தோடச்செய்யுந் தெளி........ ..................(௬௱௫)

(நாய்த்துளசியின் குணம்.)

கபத்தோடு குத்திருமல் காணு தொழியுஞ் ...... ...............*
சபத்தைச்செப் முத்தோஷஞ் சாடும் - விபத்தழலேச்..........*
சாய்த்துடலைப் போஷிக்குந் தாரணியி லுள்ளோர்க்கு...... *
நாய்த்துளசி தன்னை நவில்...... ............................(௬௱௬)

(கல்துளசியின் குணம்.)

தாபச் சுரமுந் தனிவித் திரதிகளுஞ்...............................*
சோபச் சிலவிஷமுந் தோற்றுதே - கோபிச்சங்..................*
குற்றுளசி லேட்டுமத்தால் ஊன்று * கா சம்பறக்குங்.........*
கற்றுளசிப் பேருரைக்குங் கால்...[* காசம்-இருமல்.]...(௬௱௭)

(முள்துளசியின் குணம்.)

எலிவிஷம்போம் வெட்டுண் டிருக்கும் விரணக்....................*
கிலிவிடும்வி ஷங்கள் கிளைக்கா - உலவிவரு.....................*
மட்டுறைச்சி வந்தமலர் மண்டபத்துள் வாழனமே................*
முட்டுளசிப் பேரா மொழி.......................................(௬௱௮)

( கழுதைத்தும்பையின் குணம். )

அரையாப்புக் கட்டி யனிலம் உதிரம்........................*
பிரியாச்சி தக்கடுப்பும் பேருந் - தரையிற்......................*
பழுதைக்கொள் ளாச்செப்ப பங்கயப்பெண் ணேகேள்......*
கழுதைத்தும் பைச்செடியைக் கண்டு...........................(௬௱௬௯)

( நெய்ச்சட்டியின் குணம் )

நெய்ச்சட்டி யென்றால் நிறையுமெய்யுட் சுக்கிலமூங்..........*
பொய்ச்சிட்ட கண்ணொளியாம் பூவையரே - வெய்ச்சிட்ட.....*
மேகமறுந் தீபனமாம் வெட்டையழ லுந்தணியுந்.............*
தாகமறும் பித்தமும்போந் தான்...................................(௬௱௭௰)

தே-( இதுவுமது. )

தூயபழகு றப்புரியுஞ் சூதகந்த மாதிகளால்...........................*
வாயழுகி நாறுபுண்ணை மாற்றிவிடுந் - தீயழலை...................*
நீக்கிவிடு நிம்பநெய்யை நெய்யாக் கிடும் * வமனம்..........*
போக்கிவிடு நெய்ச்சட்டிப் பூண்டு.....[ * வமனம்-வாந்தி.]

( எழுத்தாணிப்பூண்டின் குணம். )

பழமலங்கள் சாறும்ப ருங்குடற்சீ தம்போம்........................*
எழுமலச்சீ தக்கடுப்பு மேகும் - ஒழியாக்.............................*
கரப்பான் சொறிசிரங்குங் காணு தகலும்..............................*
உரப்பாம் எழுத்தாணிக் கோது.........................................(௬௱௭௰௧)

( கொட்டைக்கரந்தையின் குணம். )

கொட்டைக்க ரந்தைதனைக் கூசாம லுண்டவர்க்கு..................*
வெட்டை தணியும்அதி மேகம்போந் - துட்டச்........................*
சொறிசிரங்கு வன்கரப்பான் றூற்றுநா ளும்............................*
மறிமலமூந் தானிறங்கு மால்...............................................(௬௱௭௰௨)

( சிவகரந்தையின் குணம். )

வாந்தி அரோசகத்தை மாற்றும் பசிகொடுக்குஞ்...................*
சாய்ந்தவிந்து வைக்கட்டுந் தப்பாதே - ஏந்தழகைத்.........*
* தண்டா துறச்சேர்க்குஞ் சாந்த பரிமளத்தைத்...................*
தண்டாச் சிவகரந்தை தான்.....[ * தண்டா-நீங்கா].(௬௱௭௰௩)

தே-( இதுவுமது-வி-ம். )

கந்தநாறு கரந்தை யதின்குணம்...........................................*
மந்தவாதங் கரப்பனை மாற்றிடுந்..........................................*

சொந்தரோகந் துடைக்கு மிருமலா.............................*
மந்தநோயுந் தணிக்குநம் மாணையே...................(ருாயரு)

( வெள்ளறுகின் குணம்-வெ-பா. )

குன்மமொடு வாய்வு குடல்வாதஞ் சூலையிவை...................*
சென்மம்விடுத் தோடிச் சிதையுங்காண் - வன்மூலையாய்.......*
உள்ளூறுகி ரத்திசொறி யொட்டியசி ரங்குமறும்...............*
வெள்ளறுகு தன்னை விரும்பு...............................(ருாயசு)

( ஓரிலைத்தாமரையின் குணம். )

ஓரிலைத் தாமரையின் உற்றகுணத் தைக்கேளாய்....................*
மார்பிற்பால் இல்லாத மங்கையர்க்கு -மோரில்..................*
குடிக்கப்பால் உண்டாகுங் கோரமே கத்தைப்....................*
* படிக்குளிருக் காதொழிக்கும் பார்...[* படி-பூமி](ருாயஎ)

( ஓரிதழ்த்தாமரையின் குணம். )

தாதுவையுண் டாக்குந் தனிமேகத் தைத்தொலைக்கும்..........*
ஆதரவா மேனிக் கழகுதருஞ் - சீதம்போஞ்.......................*
சீரிதழ்த் தாமரைவாழ் செய்ய மடவனமே........................*
ஓரிதழ்த் தாமரையை யுண்.......................................(ருாயஅ)

( அந்தரத்தாமரையின் குணம். )

அழுகிரந்தி குஷ்டம் அடர்ந்த கரப்பான்...........................*
புழுவுறுமக் கூடிமுதற் போகும் - அழகாரும்.......................*
இந்திரநீ லக்கருங்கண் ஏந்திழையே யெப்போதும்...............*
அந்தரத் தாமரையா லாய்.......................................(ருாயகூ)

( பற்பாடகத்தின் குணம். )

சீதவா தச்சுரமுந் தீராத தாகமும்போம்...........................*
போதவிரு கண்குளிரும் பொய்யலவே - பூதலத்துள்...............*
வற்பார் * பயித்தியமு மாபித்த முந்தொலையும்..................*
பற்பாட கத்தையுன்னிப் பார்[* பயித்தியம்-உன்மாதரோகம்]

( திருநீற்றுப்பச்சை-உருத்திரச்சடை- இவைகளின்குணம். )

திருநீற்றுப் பச்சைசி லேஷ்மசர்த்தி தன்னை....................*
விரிநீற்றைப் போலாக்கு மெய்யே - பெரிய......................*
* சுரத்திரத்த வாந்தி சுரம்அருசி நில்லா.......................*
வுருத்திரச்சடைக்கேயுணா[* சுரத்தால்-பிறக்கின்றரத்தவாந்தி]

(மாசிப்பத்திரியின் குணம்)

புளிப்புந் துவர்ப்பும் பொருந்தியிருந் தாலுந் ..............*
துளிர்த்த வாய்வைக்கனலைச் சாடும் - தெளித்த் ..............*
வலிதனைவிட் டோட்டுமட மாதேநீ கேளாய்..............*
* வலிமாசிப் பத்திரிதான் வாழ்த்து[* வலி-பலம்பொருந்திய]

(மரு-கொழுந்து-இவைகளின் குணம்)

கண்ணிலுறு தோஷங் கபஞ்சூ டிவைபோக்கும் ..............*
ஒண்அனல்கைப் புக்காரம் உள்ளமரும் - மண்ணிற் ..............*
கொழுந்தம் மருக்குணத்தைக் கொண்டிருந்த போதுந் ......*
தழைந்தபசி வன்மைதருஞ் சாற்று...(செடிவகை-முற்றியது)

கொடிவகை.

(ஆதொண்டையின் குணம்.)

மண்டைக்கு டைச்சலறும் வாதத்தின் பீநசம்போந் ..........*
தொண்டைக் கபமுந் தொலையுங்காண் - மீண்டுசெய்யும்.......*
வாதக்க டுப்பகலு மாதே ஆதொண்டைக்குப்..............*
போதப்பல பிணிபோம் போம்..............(௱௨௪)

(பெருங்கட்டுக்கொடி-சிறுகட்டுக்கொடி-இவைகளின்குணம்)

பெரியகட் டுக்கொடிக்குப் பேசுபெரும் பாடும்..............*
அரியமல பேதியும்போம் அப்பால் - உரிய..............*
சிறுத்தகட் டுக்கொடிதான் சீதரத்தம் நீக்கும்..............*
இறுத்த * புனலைக்கட்டு மெண்.....[* புனல்-நீர்]...(௱௨௫)

(சிறுகுறிஞ்சாக்கொடிக் குணம்.)

சிறுகுறிஞ்சா வாதமொடு சீதத்தை நீக்கும்..............*
மறுவுதிரம் இல்லாத மாதர்க் - குறுமுலகில் ..............*
அத்தி சுரமும் அகலாக் கடிவிஷமுந் ..............*
தத்தியக லத்தகர்க்குந் தான்..............(௱௨௬)

(இதுவுமது.)

வாதசுரஞ் சந்நிசுரம் மாறுக்க பச்சுரமும்..............*
பூதலம்விட் டோடப் புரியுங்காண் - மாதேகேள்..............*
அக்கரங்கள் தீர்க்கும் அதிசுரந்தா கந்தொலைக்குந்..............*
தக்க சிறுகுறிஞ்சா தான்..............(௱௨௭)

(இண்டின் குணம்.)

ஸ்ரீநசத்தைப் போக்கும் பெருகியதோர் நீரோற்றந்.........*
தா * னசிக்கச் செய்யுமிது சத்தியங்காண் - வானசைக்கும்...*
மண்டைக்கு டைச்சல் மருவுமுக சந்நியும்போம்..........*
பண்டையுற்ற இண்டினுக்குப் பார் [* நசித்தல்-நாசமடைதல்]

(இதுவுமது)

கட்டுவா தங்களநுங் காரிகைமேய மேகம்போம் ................*
முட்டுவா தங்களெல்லா முன்பொழியுங் - கிட்டும்..............*
புனலினறுந் தண்டிக்குப் * போரிளை சூலை.......[வாசரோகம்
யனலிலெழு புண்ணு மறும் [* போரிளை-யுத்தஞ்செய்கின்றகூ

( கர்ப்பூரவள்ளியின் குணம். )

காசம் இருமல் கதித்தம சூரிஜயம்................................*
பேசுபுற நீர்க்கோவை பேருங்காண் - வீசுசுரந்..............*
கற்பாறை யொத்துநெஞ்சிற் கட்டுகபம் வாதமும்போங்.....*
கர்ப்பூர வள்ளிதனைக் கண்டு .....................................(ருருய)

( மூசுமல்லிகையின் குணம். )

வீக்கமறுங் காமாலை விட்டோடுஞ் சோபைவிடும்...........*
நீக்கமற விம்முமுலை நேரிழைமேய - ஏய்க்கும் ...............*
விடபாகம் மேகமும்போம் வீரியமுண் டாகும்.................*
படர்மூசு மல்லிகைக்குப் பார் ....................................(ருருக)

( ஊசிமல்லிகையின் குணம்.)

மாந்தக ணம்பொருமல் வாராது மைந்தர்களுந்...................*
கூர்ந்தேயி ரத்தகணம் ஒடுங்காண் - கூந்தன்முடி...............*
மானே சுரந்தணியும் வாங்காத வீக்கம்போங் ..................*
* கானூசி மல்லிகைக்குக் காண்.....[* கான்-காடு.]...(ருருஉ)

( மிளகரணையின் குணம். )

ஐயம கற்றும் அசிரணவா தம்போக்குஞ் ...........................*
செய்யபித்த சூலைகளைத் தீர்க்குங்காண் - பையவரும்.........*
*ளை யிரும லிளைப்புப்பி சந்தொலைக்கும்.........................*
நாளுந் மிளகரணை நன்று .............................................(ருருரு)

( நாய்ப்பாகலின் குணம். )

நாய்ப்பாக லின்குணத்தை நன்று யுரைக்கக்கேள்..............*
வாய்ப்பான ஸ்ரீநசத்தை மாற்றுங்காண் - மாய்ப்பாக...........*

*லிங்கமதைச் சுத்திசெய்யும் நேரிற்பா ஷாணத்தைப் ......*
பங்கமறச் சுத்திசெய்யும் பார். [* லிங்கம்-சாதிலிங்கம்]. (௲௲௪)

(பிரண்டையின் குணம்.)

பிரண்டையைநெய் யால்வறுத்துப் பின்பணாத்து மாதே.....*
* வெருண்டிடா தேற்று விழுங்கில் - அரண்டுவரும்.........*
மூலத் தினவடங்கும் மூலவி ரத்தமறும் .................. [த்து.
ஞாலத்தி னுள்ளே நவில் [* வெருண்டிடாதேற்று-அச்சமறஎடு

(இதுவுமது.)

நாந்தம் வயிற்றுவலி வாயுஅதி சாரமுனே......................*
சேர்ந்தமூ லங்கபம்உட் * செம்புனற்போக் - கோய்ந்தநடை*
யெல்லா மகலும் எழும்பும் அதிகபசி..............................*
மல்லார் பிரண்டையுண்டு வா. [* செம்புனல்-இரத்தம்]. (௲௲௲)

(களிப்பிரண்டையின் குணம்.)

ஐயமறும் பித்தம் அணுகாம லோடிவிடுந்..........................*
தையலார் போகமிகச் சாருங்காண் - பையக்.......................*
கரப்பான் விலகுங் கடிசிலந்தி யும்போம்..........................*
உரப்பாங்க ளிப்பிரண்டை யுண்.................................(௲௲எ)

(தீம்பிரண்டை-புளிப்பிரண்டை-இவைகளின் குணம்.)

* தீம்பிரண்டை தன்னுற் செரியாமந் தம் * ஆமந்...........*
தேம்பிளாப்பு விக்கல்ஐயந் தின்வாதம் - போம்பலரும் ...*
பார்க்கும் புளிப்பிரண்டை பாண்டுரநோய் குன்மகயம் .....*
போக்குமது சூடாம் புகல் [* தீம்-இனிப்பு. ஆமம்-சீதக்கட்டு.]

(பேய்ப்பால்சொரியின் குணம்.)

பேய்ப்பாற் சொரியதுதான் பேதிமுதல் வெப்பகற்றும்...*
வாய்ப்பார் கடுப்புதிரம் மாற்றுங்காண் - போய்ப்பாயந்......*
துருவாம லுள்ளலைக்கும் ஓங்கயிற் கண்மாதே...................*
பொருவார்ப யித்தியம்போக் கும்.................................(௲௲அ)

(குதிரைவாலியின் குணம்--இதுவே-மிரியார்கூந்தல்.)

கடுப்பு கழிச்சல் கனன்றசுர தாகம்................................*
இடுப்புவலி வாதம் இவற்றோ - டடுப்ப..........................*
* விதிரைவா வென்றழைக்கும் மேகமும் போகுங்..............*
குதிரைவா லிக்குக் குலைந்து...... [* விதிர்-நடுக்கம்.] ...(௲௪௰)

(இதுவுமது.)

காசம் பருப்படுவன் கண்மயக்கம் ஈளையொடு.....................*
வாசங் கமழ்குழலாய் மாந்தமும்போம் - பேசத்...........*
தரியாது வாதகபந் தானே சொறிபோம்......................*
பிரியார்கூந் தற்கு விரைந்து ........................... ......(௩௪௧)

(பவளக்குன்றிக்கொடியின் குணம்.)

பவளக்குன் றிக்கொடிக்குப் பற்றிநின்ற மேகங்...............*
கவிழ்ரத்த பித்த கயமும் - * நவமாஞ்...................... ..*
சொறிகரப்பன் புண்கிரந்தி தோலார் கடுவன்... ..........[கிய.
மறுகரப்பன் போமே மலைந்து[* நவமாம்-நூதனஆரம்பமா

(முசுட்டையின் குணம்.)

மாதே முசுட்டையது வாதமொடு ஐயத்தைத்...................*
தீதே புரிநீரைத் தீர்க்குங்காண் - வேதனைசெய்..............*
வன்மலத்தைத் தள்ளும் வறட்சி சொறிசிரங்கைச்............*
சன்மமறப் போக்கிவிடுஞ் சாற்று..............................(௩௪௩)

(பொன்முசுட்டையின் குணம்.)

வாதமொடு பித்தத்தை மாற்றுமே மாநிலத்திற் ..............*
சீத மகற்றுந் தினவடக்கும் - மாதேகேள்......... ..........*
உண்டிக்கும் வாசனையாம் ஓங்கி வளரனலைக்........ ..........*
கண்டிக்கும் பொன்முசுட்டை காண்............................(௩௪௪)

(முடக்கற்றான் குணம்.)

சூலைப் பிடிப்பு சொறிசிரங்கு வன்கரப்பான்...... ..........*
காலைத் தொடுவாய்வுங் கன்மலமுஞ் - சாலக்..... .. ...........*
கடக்கத்தான் ஓடிவிடுங் * காசினியை விட்டு...................*
முடக்கற்றான் றன்னை மொழி .....[* காசினி-பூமி]...(௩௪௫)

(கொல்லங்கோவையின் குணம்.)

சூலைபாண் டுதைதிரி தோஷம் * அக்கி வெப்புகண்டு..........*
மாலை குடலின்வலி மாகுஷ்டம் - ஆலவிஷம் ...............*
உட்கரப்பான் மெய்யரிப்பும் உண்டோகொல் லங்கோவை ..*
கைக்குளிருக்கவின் னுங்காண்[* அக்கி-கொப்பிளப்புடையாம்]

(நரிப்பயற்றங்கொடியின் குணம்.)

நரிப்பயற் றங்கொடிக்கு நாடாது பித்தந்........... ..........*
தரிப்புற்ற ஐயமெல்லாந் தாழும் - இருப்பொழிக்கும்.........*

மேகவெட்டை பித்தவெட்டை மீளாக் கரப்பனிவை..........*
* யாகம்விடுத் தோடு மறி........[ * ஆகம் உடல்.]....(௯௪௭)

( மூக்குறட்டையின் குணம். )

சீதம கற்றுந் தினவடக்குங் காந்திதரும்..........*
வாத வினையை மடிக்குங்காண் - பேதி..........*
கொடுக்குமதை யுண்டாக்காற் கோமளமே பித்தம்..........*
அடுக்குமே மூக்குறட்டை யாய்..........(௯௪௮)

தே--( பொன்னாங்காணியின் குணம். )

காசம்பு கைச்சல் கருவிழிநோய் வாதமனல்..........*
கூசும்பி லீகங்கு தாங்குரநோய் - பேசிலவையால்..........*
என்னாங்கா ணிப் * படிவ மேமமாஞ் செப்பலென்னைப்.....*
பொன்னாங்கா ணிக்கொடியைப் போற்று...[* படிவம்-சரீரம்]

( அம்மான்பச்சரிசியின் குணம். )

காந்தல் விரணமலக் கட்டுமே கந்தடிப்புச்..........*
சேர்ந்த தினவிவைகள் தேசம்விட்டுப் -பேர்ந்தோன்றாய்.....*
ஓடுமம்மான் பச்சரிசிக் குண்மை யினத்துடனே..........*
கூடுமம்மா னைத்தகண்ணைப் கூறு..........(௯௫௰)

( பொடுதலையின் குணம். )

பொடுதலையின் பேருரைத்தால் போராமப் போக்கும்..........*
அடுதலைச்செய் காசமும் அடங்கும் - கடுகிவரு..........*
பேதியொடு சூலைநோய் பேசரிய வெண்மேகம்..........*
வாதமும்போ மெய்யுரக்கும் வாழ்த்து..........(௯௫௧)

( கொத்தான் குணம். )

சித்த ரறிவார் செறிகுழலே நீகேளாய்..........*
கொத்தான் மிகக்குளிர்ச்சி கொண்டக்காற் - சுத்தப்..........*
பிறமேகம் உட்கிரிச்சம் பித்தம் இளைப்பும்..........*
அறுமே தவரா தறி..........(௯௫௨)

( நல்லநெருஞ்சிலின் குணம். )

நல்ல நெருஞ்சிலது நாளுங்கி ரிச்சரத்தை..........*
வல்ல சுரம்அனலை மாற்றுங்காண் - மெல்லியலே..........*
மாநிலத்தில் கல்லடைப்பும் வாங்காத நீர்க்கட்டுங்..........*
கூனுறுமெய் வாதமும்போக் கும்..........(௯௫௩)

(இதுவுமது.)

மேகவெட்டை நீர்ச்சுருக்கு வீறுதிரி தோஷம்புண் *
வேகசுர தாகவெப்பும் விட்டொழியும் - போகந்
தருஞ்சின் மதலையொழித் தைபமேல நல்ல *
நெருஞ்சிலதனை நினை (௬௨௪)

(யானைநெருஞ்சிலின் குணம்.)

மேகத்தைப் போக்கிவிடும் வெண்குஷ்டந் தானொழிக்குந் *
தேகத்திற் கல்லடைப்பைத் தீர்க்குங்காண் - நாகத்தாந் *
தேனையரும் பாகைத் திருத்துங் கிளிமொழியே *
யானை நெருஞ்சிலது (௬௨௫)

(இதுவுமது.)

யானைநெருஞ்சி லதுசீ தளமாகும் *
மானே யெலும்புருக்கி மாற்றுங்காண் - மேனிதனில் *
உள்ள எரிச்சல் உழலையுள் தாகமொடு *
தள்ளுபித்த மும்போக்குந் தான் (௬௨௬)

(செப்புநெருஞ்சிலின் குணம்.)

செப்புநெ ருஞ்சில் திரிதோஷம் போக்கிவிடும் *
வெப்பு முதலனைத்தும் * வீட்டுங்காண் - செப்பரிய *
சுக்கில்மே கம்போக்குந் தொல்லை யனல்மாற்றும் *
மிக்கு மருந்துநீ விள் [* வீட்டல்-கொல்லல்.] (௬௨௭)

தே-(பேய்ப்புடலின் குணம்.)

பித்தசுரஞ் சீதசுரம் பீரிக்குங் காமாலை *
யுற்றம சூரி * யுழற்றாக - நித்தியமுந் *
* காய்ப்புடலை யுண்ணக் கவிழ்க்கின்ற பித்தமும்போம் *
பேய்ப்புடலை யுண்பாரைப் பேணு (௬௨௮)

[* உழல்-தாகம்-நாவை-உழலச்செய்கின்றதாகம். * உடலிற் காய்ப்புப் பொருந்த அடிக்கடி கீழே தள்ளுகின்ற பித்தம்.]

தே-(வல்லாரையின் குணம்.)

அக்கரநோய் மாறு மகலும் வயிற்றிழிவு *
தக்கவிரத் தக்கடுப்புத் தானேகும் - பக்கத்தில் *
வல்லாரை யும் * அருந்தென் றேயுரைத்து நன்மனையுள் *
வல்லாரை யைவளர்த்து வை. [* அருந்தல்-உண்ணல்] (௬௨௯)

(கையாந்தகரையின் குணம்.)

சுரத்கம்மற் காமாலை குட்டமொடு சோபை..................*
யுரற்பாண்டு பன்மேறு யொழியு - நிரற்சொன்ன... ............*
மெய்யாந் * தகரையொத்த * பீளியண்ணு நற்புலத்துக்.....*
கையாந்த கரையொத்தக் கால்...[ * தகர்-ஆளி. * பீளி-பலம்.]

(பொற்றலைக்கையாந்தகரையின் குணம்.)

பொற்றலைக்கை யாந்தகரை பொன்னிறமாக் கும்முடலை......*
சுத்தமுறக் * கட்குச்சு கங்கொடுக்குஞ் - சித்திடையாய் .....*
சிந்தூரங் கட்காகுஞ் சிந்தை தனைத்துலக்கும் ... . ..........*
உந்திவளர் குன்மமொழிக் கும்.[ * கட்கு-கண்ணுக்கு] (௩௬௩)

(விஷ்ணுகிராந்தியின் குணம்.)

செய்ய * மா லின்கிராந்தி தீராத வல்லசுரத்...............*
தைய மறுக்கும் அனல்தணிக்கும் - வெய்யகப............*
காச இருமலையுங் கட்டறுக்கும் வாதத்தால். ..............[சல்.
* ஊசலா டும்பிணிபோக் கும்.[* மால்-விஷ்ணு. ஊசல்-ஊஞ்

(கொட்டைப்பாசியின் குணம்.)

மேகமறுந் தீபனமாம் வெஞ்சுரமும் ஏகிவிடுந்..............*
தேகமதில் தேமலினஞ் சேரும்மா - பாகுமொழி ..........*
பின்னே வெகுகுணஞ்செய் மென்கொட்டைப் பாசியினால்...*
துன்னுகரப் பானும்போஞ் சொல்.........................(௩௬௩)

(இதுவுமது.)

மிக்குகக்கு வானகலும் வெய்ய கிரந்தியறுந்.................*
தக்கஐய வாதந் தணியுங்காண் - மிக்ககிலின் ........*
மட்டைப்பாய்ச் சுங்கூந்தன் மாதே யுலகத்திற்..............*
கொட்டைப்பா சிப்பெயராக் கூறு ......................(௩௬௪)

(காணும்வாழையின் குணம்.)

காணும்வா ழைக்குமூலைக் கண்குழிப்புண் ஆறிவிடும்........ *
ஆணும் போகம் அதிகரிக்கும் - மானேகேள்..............*
ஐயம் விளையும் அனல்தணியும் நீங்காத...............[திமாறும்
* பையுதிர மாறுமுன்னிப் பார்[ * பையுதிரமாறும்-ரத்தபே

(சிறுபுள்ளடியின் குணம்.)

மாந்தகணம் போராமம் வன்மந்தம் நீங்கிவிடும்...............*
ஓய்ந்தமூலைப் பாலும் ஒழுகுங்காண் - மோந்தே ..........*

சிறுபுள் ளடிதுதையாத் தேமலர்ப்பூங் கோதாய்..............*
சிறுபுள் ளடியைநிதஞ் சேர்.(கொடிவகை-முற்றியது.)(௫௬௬)

புல்வகை.

(சதுரக்கள்ளியின் குணம்.)

கரப்பான் சொறியுங் கடியுங் கபமும் ..........................*
உரப்பான குன்மம் ஒழிக்கும் - நிரைப்பான....................*
பேதிதருஞ் சீதமென்ற பேச்சகற்றும் பூவுலகிற்..................*
சாதுசது ரக்கள்ளி தான்.......................................(௫௬௭)

(நாகதாளிக்கள்ளியின் குணம்.)

செந்துவி ஷங்கள் செடிவிஷங்க ளைத்தொலைக்கும்...........*
நொந்திடர்செய் வாதத்தை * நூறுங்காண் - முந்தவெகு....*
வேகமா விக்கும்வடி வேல்விழிமா தேயணைத்த..............*
நாகதா ளிக்குணத்தை நாடு .....[* நூறல்-அழித்தல்] (௫௬௮)

(பேய்க்கற்றாழை-செங்கற்றாழை-இவைகளின் குணம்.)

பேய்க்கற்றா ழைக்குப் பெருமேகம் மெய்யெரிச்சல்........*
ஏய்க்கக்கூ டாஅழலும் ஏகுங்காண் - தாய்க்குநிக..............*
ராஞ்சிவந்த கற்றாழை யங்கங் குளிர்விக்கும்...............[மை
பாய்ஞ் * சயத்தைப் பொன்னாக்கும் பார்.[* அயத்தை-இரும்
தே-(கற்றாழையின் குணம்.)

பொல்லாமே கங்கபம்பு மூச்சூலை குஷ்டி * டரசம்..............*
அல்லார்மத் தம்பகந்த ரங்குன்மம் - எல்லாம்விட்...............*
டேகு மரிக்கு மெரிச்சற் கிரிச்சரமு..................................*
மா * குமரிக்குமருண்டு...[* அரசம்-மூலம்.குமரி-கற்றாழை.]

(கள்ளிமுளையான் குணம்.)

வாய்க்குப் புளித்திருக்கு மன்பசியை யுண்டாக்கும்...........*
ஏய்க்குமுடல் வாதத்தை யேறுபித்தஞ் - சாய்க்குந்..............*
தெள்ளிய வின்பமொழித் தெய்வ மடவனமே......................*
கள்ளிமுளை யானருந்திக் காண்.................................(௫௭௧)

(அறுகம்புல்லின் குணம்.)

அறுகம்புல் வாதபித்த ஐயமோ டூளை............................*
சிறுக அறுக்கும் இன்னுஞ்செப்ப - அறிவுதருங்...................*
கண்ணோ யொடுதலைநோய் கண்புகைபி ரத்தபித்தம் ..........*
உண்ணோ யொழிக்கு மூணா.......................................(௫௭௨)

(சோதிப்புல்லின் குணம்.)

காசம் படலங் கருவிழித்தோ ஷம்பில்லம்
பூசாந்தி ரஞ்சதைவெண் பூசுக்கிரன் - கூசலென
ஓதியவிந் நோய்முழுதும் ஒண்விழியை விட்டகலுஞ்
சோதியெனும் புல்லுக்குச் சொல் (௱௭௩)

(தருப்பைப்புல்லின் குணம்.)

தோடஞ் சிறியவிஷஞ் சோராக்க பப்பெருக்கஞ்
சாடுஞ் சகலசுரந் தாகமிவை - யோடும்
அரிப்பு மகலும் அடல்வெள்வி கட்காந்
தருப்பையெனும் புல்லுக்குத் தான் (௱௭௪)

(மாந்தப்புல்-காவட்டம்புல்-இவைகளின் குணம்.)

மாந்தப்புற் பேதிகட்டு மந்தம் அசீரணத்தைச்
சாந்திசெய்யும் வந்தசுரத் தைப்போக்கும் - ஏந்திழையே
காவட்டம் புற்குக் கணமாந்தம் பேதியறும்
நாவொட்டிக் காய்ச்சலும்போ நாடு (௱௭௫)

(பீநசப்புல்லின் குணம்.)

பீநசப்புல் லுண்டாயிற் பேர்ந்துவிடு மாந்தமெலாம்
பீநசமுந் தீரும் பெருமூலந் - தானொழியும்
ஐய மகன்றுவிடும் அக்கரநோய் நிற்காதே
மெய்யா யிதனை விளம்பு (௱௭௬)

(வாசனைப்புல்லின் குணம்.)

வாசனைப்புல் வாதபித்த மாற்றுவது மல்லாமற்
சூசனையாய் வந்த சுரம்போக்கும் - பேசரிய
ஐயம றுக்கும ரோசகத்தை விண்ணேற்றுந்
துய்யபசி யைக்கொடுக்குஞ் சொல் (௱௭௭)

(பேய்ப்புல்லின் குணம்.)

* இறுத்துரோ கம்போம் எலிவிஷம்போம் மெய்யில்
உறுத்துகின்ற சூலை யொழியுங் - கறுத்தஅளி
யேய்ப்புற்ற கண்ணு யெழில்வளைவா யுண்டான
பேய்ப்புல்லைக் கண்டறிந்த பேர்க்கு [* இறுத்து-மார்பு] ()

புல்வகை - முற்றியது.

## மரத்தின் சமூலவர்க்க.

### ( அரசமரத்தின் சமூலகுணம். )

அரசம்வேர் மேல்விரணம் ஆற்றுமவ் வித்து..........................*
* வெருவவருஞ் சுக்கிலநோய் வீட்டுங் - குரல்வறள்வி........*
தாகமொழிக் குங்கொழுந்து தாதுதரும் வெப்பகற்றும்......*
வேகமுத்தோ ஷம்போக்கும் மெய்[ * வெருவுதல்-அஞ்சுதல்]

### ( ஆலமரத்தின் சமூலகுணம். )

சொல்லுகின்ற மேகத்தைத் துஷ்ட அகக்கடுப்பைக்............*
கொல்லுகின்ற நீரிழிவைக் கொலலுங்காண் - நல்ஆலின்.......*
பாலும் விழுதும் பழமும் விதையும் பூவும்..................*
மேலும் இலையுமென விள்..................................(௬அய)

### ( பூவரசமரத்தின் சமூலகுணம். )

நூறுண்டு சென்றதொரு நுண்பூ வரசம்வேர்...................*
தூறுண்ட குஷ்டத்தொ லைக்குங்காண் - வீறிப்...............*
பழுத்த இலை விதை பூ பட்டை யிவைகண்டாற்...................*
புழுத்தபுண் * விரேசனமும் போம்[ * விரேசனம் - பேதி]

### ( இதுவுமது. )

குட்டங் கடிசூலை கொல்லும் விஷபாகந்..........................*
துட்டம கோதரமுஞ் சோபையொடு - கிட்டிமெய்யில்.......*
தாவுகரப் பான்கிரந்தி தண்மேகம் போக்கிவிடும்...............*
பூவரசங் காய் பட்டை பூ......................................(௬அஉ)

### ( இலந்தைமரத்தின் சமூலகுணம். )

வேருக்கா யாசம் விலகும் பசியுண்டாஞ்.........................*
சீரொத் திடுஇலைக்குச் சீழ்மூலஞ் - * சோரிவிழல்..............*
மேவெரிச்ச லுங்கடுப்பு மேகபித்த மும்போகுந்...............*
* தாவமதில் வாழுமிலந் தை..[* தாவம்-காடு. * சோரி-ரத்தம்]

### ( நறுவலிமரத்தின் சமூலகுணம். )

நறுவலியி லைக்கிரைப்பு நாசமவ் வேர்க்கு.....................*
மறுவில் எலும்புருக்கி மாறும் - நறுவலியின்...................*
தன்பழமி ரத்தபித்தஞ் சார்மேக முந்தீர்க்கும்....................*
இன்புறயா வர்க்கு மிசை,.........................................(௬அச)

( நுணாமரத்தின் சமூலகுணம். )

பட்டை கரப்பனொடு பாரச்சி லேஷ்மசுரம்.................*
ஓட்டிநின்ற புண்கிரந்தி யோட்டுங்காண் - மட்டலரா.........*
எந்துநு ணாவின் இலைமந்தந் தீர்த்துநல்ல.......................*
* காந்திதரு மேகமடுங் காண்...[ * காந்தி-ஒளிவு.].....(௫௮௫)

( முருங்கைமரத்தின் சமூலகுணம். )

பிஞ்சால் திரிதோஷம் பெரும்பூ வால்போகம்...................*
உஞ்சுவிழிக் குக்குளிர்ச்சி யுஞ்சேரும் - விஞ்சிலைவெப்.......*
பாற்றுந்தோல் நஞ்சறுக்கும் அவ்வேர்வா தச் * சினத்தை....*
யாற்று முருங்கையி னது...[* சினத்தை-கோபத்தை] (௫௮௬)

( காட்டுமுருங்கைமரத்தின் சமூலகுணம். )

தின்றூற் கசப்பாகுந் தீயாங் கொடுவிஷத்தைக்..................*
கொன்றுவிடுங் கட்குங் குளிர்ச்சிதரும் - என்றும்ஐயம்.......*
ஓட்டும் வேர் பூ இலைகாய் உற்றபிசினும்பிஞ்சுங்...............*
காட்டுப் புனமுருங்கை காண்.......................................(௫௮௭)

( பசுமுன்னைமரத்தின் சமூலகுணம். )

முன்னைவேர் வாதம் முதிரேப்பந் தான்போக்கும்..............*
அன்னமிறக்கும் அதன்இலைதான் - சொன்ன.....................*
இயல்வாதம் எண்பதையும் இல்லையெனச் செய்யுங் ........ *
கயல்பொருவுங் கண்ணாய் கருது ...................................(௫௮௮)

( மாதுளைமரத்தின் சமூலகுணம். )

மாதுளைவேர் பிஞ்சிவைக்கு வாந்திஅதி சாரம்போந்..........*
தாதுவுமாம் அக்கனிக்குத் தாகம்போஞ் - சூதைநிகர்.........*
வன்னமுலை யாய்இலைகாய் மாமலர்க ளுக்குமுனஞ்..........*
சொன்னவையெ லாம்போகுஞ் சொல்.............................(௫௮௯)

( வாழைமரத்தின் சமூலகுணம். )

நற்கதலிக் * கந்தம்அனல் நல்குந்தண் டோகுடலிற்..........*
சிக்கு மயிர்தோல் நஞ்சுந் தீர்த்திடுங்காண் - தொக்குறுபூ....*
மேகமொழிக் கும்பிஞ்சால் வெங்கடுப்பேகுங் காயால் .... ...*
தேகமுழுக் கக் * காலாந் தேர்.[ * கந்தம்-கிழங்கு. கால்-வாயு]

( நாட்டுவாழை- கருவாழை- இவைகளின் சமூலகுணம். )

நாட்டுக் கதலியது நாளுந்து வர்ப்பதனால்.......................*
தீட்டுபித்தம் ஐயஞ் செருக்குங்காண் - நாட்டுகரு...........*

வாழை திரிதோஷ மாற்றும் அதன்கிழங்கால்.................*
ஆழுஞ் சுரங்குருத்து வம்... மரத்தின்சமூலவகை-முற்றியது)

## செடியின் சமூலவகை.

(ஆவாரைப்பஞ்சாங்கத்தின்குணம்.)

மேகத்தி னாலே விளைந்தசலம் வெட்டையனல்...............*
ஆகத்தின் புண்ணோ டருங்கிரணி - போகத்தான்..............*
ஆவாரைப் பஞ்சகங்கொள் அஸ்திசுரந் தாகமும்போம் .....*
ஏவாரைக் கண்மடமா தே.....................................(௩௬௨)

(சங்கஞ்செடியின் சமூலகுணம்.)

வீக்கங் கரப்பான் விதாகங் கிரந்திகுன்மம்...................*
ஊக்கமிகு சூலைவாய் வோடுபித்தந் - தாக்குவிஷம்............*
வீறுமோ கண்துலங்கும் வீசுபசி ரத்தம்உண்டாங்..............*
கூறுசங்கம் வேர் இலை கட்கு.....................................(௩௬௩)

(கண்டங்கத்தரியின் சமூலகுணம்.)

வேர் இலை பூ காய் பழம் அவ் வித்தும்அதன் பட்டையுமிவ்....*
வூரி லிருக்க வுடற்கனப்பும் - நீராய்..............................*
வரும்பீந சங்கயஞ்சு வாசமுந்தங் காதே..........................*
அருங்கண்டங் கத்தரியு ளார்......................................(௩௬௪)

மே-(நாயுருவியின்சமூலகுணம்-இதுவே-அபமார்க்கி-வி-ம்)

மலிகாரங்கைப்புள்ளஅபமார்க்கியின்வேரால்வசியமுண்டாம்*
இலைமூல உதிரமந்தம் பேதிகபம் வியர்வுதந்தி யிறங்குமேகம்
மலையேறும் படிபுரியு முள்ளரிசி பசிமாற்றும் வன்சமூலம்...*
பலமாதர்க்குள்ளமூக்கைநீக்கும்வங்கசிந்தூரம்பண்ணுமாதோ.

(செந்நாயுருவியின் சமூலகுணம்—வெ-பா.)

ஓதமுறு சோபை யுயர்பாண்டு வைப்போக்குந் ...............*
தீதுறுகா மாலைநோய் தீர்க்கு * மினார் - சூதகநீர்...........*
பொய்ப்புறுகா லத்ததனைப் பொங்குவிக்குங் காரமொழி.......*
கைப்புறுசெந் நாயுருவி காண்[* மின்னார்-பெண்கள்](௩௬௫)

(மணத்தக்காளியின் சமூலகுணம்.)

காய்க்குக்கபந்திருங் காரிகையே யவ்விலைக்கு...............*
வாய்க்கிரந்தி வேக்காடு மாறுங்காண் - தீக்குள்.............*
உணக்கிடு வற்றல் உறுபிணியோர்க் காகும்.....................*
மணத்தக்கா ளிக்குள்ள வாறு.செடியின்சமூலவகை-முற்றியது.

### கொடியின் சமூலவகை.

(தூதுளையின் சமூலகுணம்—வி-ம்.)

தூது பத்திரி யூன்சுவை யாக்கும் பூ ............*
தாது வைத்தழைப் பித்திடிங் காயது............*
வாத பித்தகபத்தையு மாற்றும் வேர்............*
ஓதும் * வல்லியன் னேயுமொழிக்குமே...[* வல்லி-கொடி.]

(சுரையின் சமூலகுணம்-வெ-பா.)

சுரையிலையோ சோறையொடு தோன்றுநீர்க் கட்டைத்........*
தரையிலையோ வைக்காமற் சண்ணுஞ் - சுரையினது..........*
தண்டோபித் தத்தைத் தரிக்கவொட் டாதடிக்குங்...............*
கண்டோ ருரைப்பார்கள் காண்..........................(ருசுகூ)

(நரளையின் சமூலகுணம்.)

நரளையிலை தன்குணங்கேள் நாரியர்வ யிற்றில்....................*
உருளிரத்தக் குன்மம் ஒழிக்கும் - நரளைக்....................*
கிழங்குக்கு மேகமொடு கிறுக ரப்பான்.............[றியது.
புழுங்குபுண் மூலமிவை போம்...கொடியின் சமூலவகை-முற்

---

### மரத்தின் கிழங்குவகை.

(பனங்கிழங்கு-ஒடிகிழங்கு-இவைகளின் குணம்.)

பனங்கிழங்கால் அத்திவெப்பும் பன்மேக மும்போம்........*
இனுங்குளிர்ச்சி யோடழகு மெய்தரும் - தினநமையும்.........*
புண்ணுங் கரப்பானும் பூரிக்கு மெய்யில் * உரம்...........*
நண்ணும் ஒடிகிழங்கி னால்..........[* உரம்-பலம்]...(சாக)

(நிலப்பனங் கிழங்கின்குணம்.)

மேக வனல்தணியும் வெண்குஷ்டந் தான்விலகும்..............*
போக மிகவுமுறும் பொற்கொடியே - போகாத...............*
சூலைமே கங்களொடு துன்னுகரும் புள்ளியும்போஞ்...........*
சாலநி லப்பனைக்குத் தான்.............................(சாஉ)

(மரவள்ளிக் கிழங்கின்குணம்.)

பித்தங் கலந்த பெருவாய்வை யுண்டாக்கும்.................*
மெத்தஅனல் மந்தத்தை மேலெழுப்புஞ் - சுத்த...............*
இரவள்ளிக் கொண்டகுழ லேந்திழையே யிந்த................*
மரவள்ளிக் கந்தமென வை.(மரத்தின்கிழங்குவகை-முற்றியது)

## செடியின் கிழங்குவகை.

(மெருகன் கிழங்கின்குணம்.)

மெருகன் கிழங்கதுதான் மேகத்தைப் போக்குந்...............*
* துருவுகுன்மம் மூலந் துடைக்கும் - பெரும் ஈளை...............*
அஸ்திசுரம் ஐயறுக்கும் அங்கந் குளிர்விக்கும்...............*
அத்திமூலை மாதே யறி......[* துருவல்-துளைத்தல்]...(௬௪)

(அமுக்கிராக் கிழங்கின்குணம்- இதுவே-அசுவகந்தி.)

கொஞ்சந் துவர்ப்பாங் கொடியகயஞ் சூலை * யரி...............*
மிஞ்சுகரப் பான்பாண்டு வெப்பதப்பு - விஞ்சி...............*
* முசுவுறு தோஷமும்போ மோகம்அன லுண்டாம்...............*
அசுவகந் திக்கென் றறி.[* அரி-வாயு முசுவு-ஆயாசம்].(௬௫)

(பேதிக் கிழங்கின்குணம்- இதுவே-ரேவல்சின்னி.)

பேதிதனை யுண்டாக்கும் பித்தந் தனையெழுப்புந்...............*
தோதக் குடலதனைச் சுத்திசெய்யும் - ஓதியகால்...............*
பேதிக்குந் தாதுவைப்பெ ருக்கிவிடும் எப்போதும்...............*
பேதிக்கி ழங்கதனைப் பேசு...............(௬௬)

(சேவகனார் கிழங்கின்குணம்.)

கபரோகந் தன்னைக் கடலில்விழச் செய்யும்...............*
அபமிருத்து வாம்விஷத்தை யாற்றும் - இபமுலவுங்...............*
காவக நாடாக் கருங்குயிலே கண்டுரைத்த...............*
சேவக னார்கிழங்க தே...............(௬௭)

(பூமிச்சருக்கரைக் கிழங்கின்குணம்.)

மேகமறும் உள்ளுருக்கு வெட்டை அனல்தணியும்...............*
போகுமே மூலம் புகலக்கேள் - பாகுமொழிப்...............*
பொன்னனையாய் பூமிச்ச ருக்கரைக்கி ழங்குக்கு...............*
வன்ன வுடல்பருக்கும் வாழ்த்து...............(௬௮)

(முள்ளங்கிக் கிழங்கின்குணம்.)

வாதங் கரப்பான் வயிற்றெரிவு சூலைகுடல்...............*
வாதங்கா சம்ஐயம் வன்தலைநோய் - மோதுநீர்க்...............*
கோவைபன்னோய் பல்சிலந்தி குன்மம்இரைப் புக்கடுப்புஞ்..*
சாவுமுள்ளங் கிக்கந்தத் தால்...............(௬௯)

(மஞ்சட் கிழங்கின்குணம்.)

பொன்னிறமாம் மேனிப் புலால்நாற்ற மும்போகும்...............*
மன்னு புருஷ வசியமாம் - பின்னியெழும்...............*

வாந்திபித்த தோஷம்ஐயம் வாதம்போந் தீபனமாங்.........*
கூர்ந்தமஞ்ச ளின்கிழங்குக் கு...............................(சாய)

( இதுவுமது. )

தலைவலிநீ ரேற்றஞ் சளியாத மேகம்..................................*
உலைவுதரு பீநசத்தி னூடே - வலி * சுரப்பு...............................*
விஞ்சு கடிவிஷமும் வீறுவிர ணங்களும்போம்.....................*
மஞ்சட் கிழங்குக்கு மால்......[ * சுரப்பு-வீக்கம்.]...(சாயக)

( கஸ்தூரிமஞ்சட் கிழங்கின் குணம். )

புண்ணுங் கரப்பானும் போகாக் கிருமிகளும்.....................*
நண்ணுமந் தாக்கினியும் நாசமாம்- வண்ணமலரீத்.....................*
தொத்தே றளகமின்னே சுக்கிலமும் * புத்தியுமாங்.....................*
கஸ்தூரிமஞ்சளுக்குக்காண்[* புத்தியுமாம்-அறிவும்உண்டாம்.]

( மரமஞ்சட் கிழங்கின் குணம். )

அழன்றகண மூலம் அருசியுடனே...................................*
யுழன்ற கணச்சுரமும் ஓடுஞ் - சுழன்றுள்ளே.........................*
வீறுசுர முத்தணியும் வீசுமர மஞ்சளுக்குத்.........................*
தேறு மொழியனமே செப்பு...............................(சாயங)

( இஞ்சிக் கிழங்கின் குணம். )

இஞ்சிக் கிழங்குக் கிருமல்ஐயம் ஓக்காளம்...........................*
வஞ்சிக்குஞ் சந்நிசுரம் வன்பேதி - விஞ்சுகின்ற...................*
சூலையறும் வாதம்போந் தூண்டாத தீபனமாம்......................*
மேலையுறுங் கண்ணாய் விளம்பு...........................(சாயச)

( காறுகருணைக் கிழங்கின் குணம். )

கரப்பான்சி ரங்குசொறி காணுக்கிரந்தி...........................*
யுரப்பாக்கும் மூலநோ யோட்டும் - நிரைப்பான.....................*
மந்தமொடு கோழைதரும் மாமுத் தினவுநல்கும்......................*
அந்தமிகுங் காறுகருணை...............................(சாயரு)

( காருக்கருணைக்கிழங்கின் குணம். )

ஞால மதிற்கபநோய் நாடாது வாதமறும்...........................*
மூல முளையிரத்தம் முன்பொழியும் - ஓலமிட்டு.....................*
மாமுக் கனல்மந்த மாறும்அதி தீபனமாங்.........................*
காருக் கருணைதனைக் காண்...............................(சாயசு)

( காட்டுக்கருணைக் கிழங்கின்குணம்.

மேகமணு காது வெகுதி பனமாகுந்……………………………*
தேகமதில் மூலமுளை சேராதே -போகாச்……………………*
சுரதோஷம் போங்கரப்பான் றேன்றும் வனத்திற்…………*
பரவுகரு ணைக்கிழங்காற் பார்…………………………(சாயஎ)

( சேம்புக் கிழங்கின்குணம். )

வாதக பத்தையுள்ளே வைத்திருக்குந் தின்றக்கால் …………*
கோதிலாத் தொண்டைதனிற் கோழைகட்டும் - மாதரசே…. *
யுண்மருந்தின் நற்குணத்தை யோட்டுஞ்சேம் புக்கிழங்கு…*
தண்மேகசாந்தியென்பர்தாம். செடியின்கிழங்குவகை-முற்றிய
[ ஷு.

கொடியின் கிழங்குவகை.

( பிரப்பங் கிழங்கின்குணம். )

தந்தரோ கத்தைத் தணியாத வாதத்தை…………………………*
புந்தருலைப்பிடிப்பை யோட்டுங்காண் -வந்து………………*
கரப்புந் திறப்புமெனக் காட்டுநகை மாதே……………………*
பிரப்பங்கி ழங்கதனைப் பேணு……………………………(சாயகூ)

( சாறடைக் கிழங்கின்குணம். )

சீதஞ் சலதோஷந் தேமல்த ழும்புகுன்மம்…………… ……*
வாதஞ் சிறுசிரங்கு வன்மேகம் - ஓதரிய……………………*
காசமுதல் நோயெல்லாங் கான்சா றடைக்கிழங்கால்… ……*
தாசமுறு மென்றே நவில்……………………………………(சாஉ௰)

( கோவைக் கிழங்கின்குணம். )

மூத்தோஷஞ் சூலைபித்தம் மூடுகுஷ்டஞ் * சிக்குவைநோய்..*
எத்துசுவா சங்கபம்இ ளிப்புநீர் - இத்தனையும் ……………*
கூட்டோ டகற்றுங்கு ளிர்ச்சியொடு காரத்தைக்…………………*
காட்டியகோ வைக்கிழங்கு காண்…[ * சிக்குவை-நா.]…(சாஉக)

( கொல்லன்கோவைக் கிழங்கின்குணம். )

துட்டவிஷம் பாண்டுவெப்பு சூலைவா தங்கிரந்தி ……………*
குட்டம் அரிப்பக்கி கோணகுடல்நோய் - கெட்டகண்டு……*
மாலைபோங் கொல்லன்கோ வைக்கிழங்கால் மூத்தோஷ……*
* வேலைபோம் பாரில் விளம்பு…[ * வேலை-தொழில்].(சாஉஉ)

( சீந்திற் கிழங்கின் குணம். )

சீந்திற் கிழங்கருந்தத் தீபனமா மேகவகை ............*
போந்தவுதி ரப்பித்தம் பொங்குசுர - மாந்தம் ............*
அதிசாரம் வெப்பகணம் ஆம்பலநோ யோடே ............*
* கதிவிஷமுங் கெட்டுவிடுங் காண் ...[ * கதி-வேகம்] ..(௪௨௩)

( பொற்சீந்திற் கிழங்கின் குணம். )

பொற்சீந்தி லின்கிழங்கு பொங்கு மதுமேகம் ............*
எச்சுகய ரோகம் இளைப்புவிஷம் - பச்சையாய் ............*
ஓடிரத்த பித்தம் உயர்சுரங்க ளைக்களையுந் ............*
தேடரிய மேனிதருஞ் சேர் ............(௪௨௪)

( கருடன் கிழங்கின் குணம்-இதுவேபேய்ச்சீந்தில். )

அளையாப்பு வெள்ளை யகலாக் கொறுக்கை ............*
களையாத கட்டியிவை காணுர் - வளையில் ............*
திருடரெனச் செல்லும்விஷஞ் சேர்பாம்பும் அஞ்சுங் ............*
கருடன் கிழங்கதனைக் கண்டு, ............(௪௨௫)

( கூகைக் கிழங்கின் குணம். )

மேனியிடும் வாய்க்கு மிருதுவாம் ஆக்கியுண்ணத் ............*
தானிருமல் வெப்பதிக தாகமிவை - ஏனிருக்கும் ............*
* அம்பே திளங்கிழங்கி தியாவர்க்கு மாமணப்பூங் ............*
கொம்பேகூ கைக்கிழங்கைக் கூறு ...[ * அம்பு-நீர்] ...(௪௨௬)

( புளிநரளைக் கிழங்கின் குணம். )

புளிநரளை யின்கிழங்கோ பொன்போலச் செம்பைத் ............*
தெளிவாகச் சுத்தியது செய்யும் - வெளியான ............*
மூல முளையறுக்கு முந்துசுவைக் கேதுவுமாங் ............*
கோல மடமயிலே கூறு ............(௪௨௭)

( மாவலிக் கிழங்கின் குணம்-இதுவே-பருநன்னாரி. )

அனலையதி பித்தத்தை யாற்றும் பசியாம் ............*
அனலையெழூப் புங்கபம றுக்கும் - அனிலத்தாம் ............*
வேகாளத் தைத்தணிக்கு மென்கொடியே காட்டில்வளர் ............*
*மாகாளிக்கந்தமிதுவாம். [*மாகாளிக்கந்தம்-மாவலிக்கிழங்காம்

( தண்ணீர்விட்டான் கிழங்கின் குணம். )

நீரிழிவைப் போக்கும் நெடுநாட்சு ரத்தையெலாம் ............*
ஊராவிடுத் தோடவு ளாக்குங்காண் -நாரியரோ ............*

* வெண்ணீர்பெய் சோமநோய் வெட்டை யனல்தணிக்குந்...*
தண்ணீர்விட் டான்கிழங்கு தான்..[* வெளுத்தநீர்]....(சஉகூ)

( தாமரைக் கிழங்கின்குணம். )

கண்ணுக் கொளிகொடுக்குங் காசபித் தம்போக்கும்.........*
எண்ணுங் குளிர்ச்சிதரும் எந்திழையே - புண்ணுகளில்.......*
* தூ * மரைப்புண் ணும்போக்குந் தொந்திக்க டுப்பகற்றுந்.
தாமரைக்கந்தமது தான்[*தூ-ஊன்-மரைப்புண்-தவளைப்புண்]

( சிவந்தஅல்லிக் கிழங்கின்குணம் )

செம்பைக்க ளிம்பகற்றிச் சிந்தூரம் ஆக்கிவிடும்............*
வெம்புபித்த மேகம் விலக்குங்காண் - அம்புவியில்.........*
அல்லிற் கறுத்தகுழ லாரணங்கே நற்சிவப்பாம்............*
அல்லிக்கி ழங்கென்ப து ..........................................(சா௲க)

(நெய்தற் கிழங்கின்குணம்.)

கண்ணுங் குளிரும்அக்கி காணா காந்துபித்தம்...............*
எண்ணுந்தோ ஷம்மேகம் ஏகுங்காண் - பெண்ணே.........*
வயிற்றுக் கடுப்பிரத்த மாறுநெய்த லுக்குப்....................*
பயித்தியம்போம் விந்தூறும் பார்..............................(சா௲உ)

( செங்கழுநீர்க் கிழங்கின்குணம். )

கண்ணுங் குளிர்ந்திருக்குங் காசம்போம் பித்தமறும்..........*
எண்ணரிய மேகம் இடையுங்காண் - பெண்ணேகேள்........*
பொங்கமொடு மாதைப்பு ணர்ந்தவழ லுந்தணியுஞ்..........*
செங்கழு நீர்க்கிழங்காற் றேர்...................................(சா௲௩)

( கொட்டிக் கிழங்கின்குணம். )

கொட்டிக் கிழங்கு குளிர்ச்சியென்பார் தேமலுடன்..........*
ஓட்டி நின்ற மேகம் ஒழிக்குங்காண் - வட்டமுலை..............*
மானே யகக்கடுப்பும் வந்தஅழ லுந்தணிக்குந்.................*
தானே யிதையறிந்து சாற்று.......................................(சா௲௪)

( கிட்டிக் கிழங்கின்குணம். )

கிட்டிக் கிழங்கால் கிளர்தீ பனமுண்டாம்.....................*
எட்டிக் கிழமேகம் ஏகுங்காண் - துட்டஞ்செய்..................*
பித்த சமனமுமாம் பேசில்கய நாசமுமாம்.......................*
நிர்த்த மயிலே நிகழ்த்து.........................................(சா௲௫)

( சின்னிக் கிழங்கின்குணம். )

சின்னிக் கிழங்கு சிறுசிரங்கு புண்வளர்க்கும் .............*
* உன்னிலது வூர்ப்பன்றிக் கொவ்வுங்காண் - அன்னமே......*
மூலமதுக் கும்அது மோதுரத்தஞ் சீழ்மாற்றுந்.............*
* தாலமறியுநிசந் தான்...[*உன்னல்-நினைத்தல்-தாலம்-பூமி]()

( பெருவள்ளிக் கிழங்கின்குணம்- இதுவே-ஆள்வள்ளி. )

வாதகபம் பித்தமொடு மாமூலம் வாதகுன்மம்..............*
ஓதுபல நோய்மந்தம் உண்டாகும் - மீபாதின் ..............*
மருவள்ளிக் கொண்டகுழன் மாதே யுலகிற்..................*
பெருவள்ளியின்கிழங்காற் பேசு ..(இதனை-ஈயாமிச்சி-என்பர்)

( சிறுவள்ளிக் கிழங்கின்குணம். )

மந்தமிகுந் தீபனம்போம் மாறாக் கரப்பானுஞ் ..............*
சிந்த மிருகயமுஞ் சேருங்காண் - தொந்தமாய் ..............*
மூல முளைவளரும் முட்டைச் சிறுகிழங்கால்...............*
ஏல வளகமின்னே யெண்...................................(சுளஅ)

(காய்வள்ளிக்கிழங்கின்குணம்-இதுவே-வெற்றிலைவள்ளியாம்)

அக்கினி வெப்பை யடக்குமென்பார் வாதமொடு...........*
தொக்கில்அதி புண்சிரங்கைத் தூண்டிவிடும் - மிக்குபசும் ..*
வேயையுடை தோளணங்கே வெற்றிலையாம் வள்ளியெனுங்...*
காயையுடை வள்ளியது காண்...............................(சுளகூ)

( சருக்கரைவள்ளிக் கிழங்கின்குணம். )

உள்ளிற் கொள்நன்மருந்தை யும்முறிக்குஞ் சர்க்கரையாம்...*
வள்ளிக் கிழங்கதிக மந்தத்தால் - உள்ளில்முளை...........*
மூலம் விளையுநிதம் * மோடிரைச்ச லுண்டாகுங்.............*
கோலவயி றுங்கடுக்குங் கூறு...[ * மோடு-வயிறு.]....(சுசய)

கொடியின் கிழங்குவகை- முற்றியது.

---

புல்லின் கிழங்குவகை.

( அறுகங் கிழங்கின்குணம். )

ஆறு அழலெல்லா மாறுமுத் தோஷமது...................*
வீறு திருக்குநல்ல மேனிதரும் - மாறுக்...................*
கடியமர லங்கலணி காரளக மின்னே......................*
கொடியறுகம் புற்கிழங்கைக் கூறு.........................(சுசக)

( கோரைக்கிழங்கின்குணம்- இதுவே-முத்தக்காசு. )

சீத சுரந்தீர்க்குஞ் * செம்புனல்பித் தம்போக்கும்.........*
வாத சுரந்தணிக்கும் வையகத்தில் - வேதைசெய்ய ........*
வந்த பிணியையெல்லாம் வாட்டும்முத் தக்காசு.........*
கொந்துலவும் வார்குழலே கூறு[* செம்புனல்-ரத்தம்.](௪௪௨)

( இதுவுமது. )

அதிசாரம் பித்தம் அனற்றுகம் ஐயங்..........................*
குதிவாதஞ் சோபங் கொடிய - முதிர்வாந்தி..................*
யாரைத் தொடர்ந்தாலும் அவ்வவர்க்கெ லாங்குளத்துக்........*
கோரைக் கிழங்கைக் கொடு..................................(௪௪௩)

( மருட் கிழங்கின்குணம். )

தொண்டைக்கட் * டையந் தொலையும் மகோதரமும் ........*
பண்டைப்பல் லீக்கம் பறக்குங்காண் - கெண்டைவிழி......*
மானே மருட்கிழங்கால் மாறுமூ லங்களெலாந்............*
தானே பசியெழும்புந் தான்.. [ * ஐயம்-கோழை.]...(௪௪௪)

( வெங்காயக் கிழங்கின்குணம். )

வெப்பமூ லங்கிரந்தி வீறுரத்த பித்தமுடன்.................*
செப்புநா அக்கரந்தி ராத்தாகம் - வெப்புக்....................*
கடுப்பறும்மந் தஞ்சந்நி காசம்வயிற் றுப்பல் ...............*
*தடிப்பேறும்வெங்காயத்தால்[* தடிப்பேறும்-அதிகரிக்கும்]

( நரிவெங்காயக் கிழங்கின்குணம்— இதுவே -காட்டுருள்ளி.)

நஞ்சோடு சீதகபம் நாடாதி ரைப்பும்அறும்..................*
பஞ்சாக மூல பகந்தரம்போம் - பஞ்சணைசேர் ..............*
வீட்டுள் ளிருக்கும் விநோத மடமயிலே ......................*
காட் டுள்ளியின்கிழங்கைக் கண்டு..........................(௪௪௫)

தே— (சகல கிழங்குகளின்குணம்.)

கிழங்குவகை யின்பேரைக் கேட்கின் மூலத்துண்..............*
முழங்கும்வா தத்தின் முரசம் - வழங்குகின்ற ..............*
சூரணக்கி ழங்குகளைத் துய்த்தார்பேர் சொல்லிற்* ச .......*
மீரணக்கு டும்பமெங்கே விள்...[* சமீரணம்-வாயு]...(௪௪௬)

புல்லின் கிழங்குவகை- முற்றியது.

## மரத்தின் வேர்வகை.

### (வில்வமரத்தின் வேர்க்குணம்.)

வில்லுவத்தின் வேருக்கு வீறுகுன்ம வாயுகபஞ்.........*
சொல்லவொணுப் பித்தந் தொடர்சோபை - வல்லகப........*
தாகசுரம் நீரேற்றஞ் சந்நியொடு * மெய்வலியும்...........*
வேக மொடுநீங்கு மே..............[* மெய்-உடல்]...(சசஅ)

### (இதுவுமது.)

அக்கினி மந்தம் அரோசியதி சாரம்விக்கல்.................*
நிற்கரிய பித்தசுரம் நீள்வாந்தி - சுட்கரோ................*
யாதியரோ யேகும் அழகோடு புஷ்டியுண்டாங் ..............*
கோதில்வில்வ வேரதனைக் கொள்..........................(சசகூ)

### (பாதிரிமரத்தின் வேர்க்குணம்.)

பாதிரியின் வேர்க்குணந்தான் பார்க்கில்மது மேகம்போம்..*
ஓதுகரப் பான்உழலை யோடிவிடும் - மாதேகேள்............*
கண்ணெரிவு காதெரிவு கையெரிவு காலெரிவும்..............*
நிர்ணயமாய்ப் போகு நிசம்..................................(சருய)

### (இதுவுமது.)

மேகத்தால் வந்த மிகுபிளவை மாவிரணம் ...................*
போகத்தால் வந்து பொருமூலம் - ஆகத்தில்..................*
வந்தசொறி யோடுகப வாதமந்த மும்போகுங்..................*
கொந்தடரும் * பாடலத்தாற் கூறு [* பாடலம்-பாதிரிமரம்]

### (சண்பகமரத்தின் வேர்க்குணம்.)

தீராத வுட்டினத்தைத் தீர்க்குஞ் சுரம்போக்கும் ..............*
நேரோ பசியெழுப்பும் நிச்சயமே - ஒருங்கால்...............*
பண்புறுகண் தோஷத்தைப் பற்றறுக்கும் வாசமுள்ள........*
சண்பக மரத்தின்வேர் தான்.................................(சருஉ)

### (மாமரத்தின் வேர்க்குணம்.)

சீதரத் தப்போக்கைச் சிக்கெனவே தான்பிடிக்கும்.............*
போதவயிற் றுக்கடுப்பைப் போக்குங்காண் - ஓதுகின்ற....*
வாந்தியையுந் தீர்க்கும்வெளி மாமரத்தின் வேர்ப்பட்டை....*
பூந்துகின் மாதே புகல் ........................................(சருங)

### (இலுப்பைமரத்தின் வேர்க்குணம்.)

புண்ணும் புரையும்அறும் போதத் துவர்ப்பாகும்..............*
எண்ணும் அகக்கடுப்பி ருக்குமோ - பெண்ணேகேள்...........*

நீரிழிவும் ஏகும் நெடு * மோமை * மூலத்தாற்..................*
போரடர்கழிப்புரத்தம்போம்(*ஓமை-இலுப்பை.மூலம்-வேர்)

(இதுவுமது.)

மந்தம் அரோசிம காசூலை சர்வசுரம்.......................*
விந்துநஷ்டந் தாகமொடு மெய்யிளைப்பும் - முந்த........*
அலுப்பைப்பெற் றேகும் * அளகத்திற் காகா.........*
இலுப்பைக்குச் சூடதிக மெண்...[* தலைமயிருக்கு-ஆகாது.]

(மருதோன்றிமரத்தின் வேர்க்குணம்.)

சோணித தோஷமெலாஞ் சொல்லாம லேகிவிடும்..............*
பேணுவர்க்கி ரத்தமொடு பித்தம்போங் - காண..............*
ஒருமீதான்ற லென்னுமத ளேதுமெழின் மாதே..............*
மருதோன்றி வேரால் மறைந்து............................(சுருவ)

(வெண்காலிமரத்தின் வேர்க்குணம்.)

விம்மு மகோதரமும் மேல்நோக்கு பித்தமொடு..............*
* ஜிம்மகி ருஷ்ணதோஷமும்உட் சேருமோ - கம்முகின்ற..*
கள்ளைப் பொருநீருங் காணு கைப்பையுறும் ..........[ஷிம்
வெள்ளைக் கருங்காலி வேர்க்கு[* நாக்கைக்கறுக்கச்செய்யுந்தோ

(கருங்காலிமரத்தின் வேர்க்குணம்.)

கைப்புற் றிருக்குங் கருங்காலி வேருக்கு ....................*
மைப்பழுவும் பாகாம் மதுநீரும் - மெய்க்குளெழு..........*
குஷ்டம்உதி ரப்போக்குங் கூவி யழுதகலும் ...............*
மட்டுறுபூங் கோதாய் வழுத்து ..............................(சுருஅ)

(எட்டிமரத்தின் வேர்க்குணம்.)

ஆலவிஷம் ஒக்கும் அருந்தக் கடிதீரும்......................*
ஞாலமதிற் பித்தகுண நாசமாம் - ஆலக்கோல்.................*
அட்டியபா காமொழியே யான * விஷமுஷ்டியெனும்.....*
எட்டி மரவே ரிது...[* விஷமுஷ்டி-எட்டிமரம்.] ..(சுருகூ)

(புங்கமரத்தின் வேர்க்குணம்.)

வாதக் கடுப்பு மகாமூர்ச்சை தாபசுரம்..........................*
வாதகுன்மம் ரத்தத்தால் வந்திடுமேநாய் - ஓதுகின்ற.........*
புண்புரையும் வலவிஷமும் போகுந் திரண்டுருண்டே.......*
பண்பு றுபுங் கம்வேர்க்குப் பார்...............................(சகூ)

(நாவல்மரத்தின் வேர்க்குணம்)

வாத மறுங்கரப்பான் மாறும் விரணமொடு... ........... .. ..*
ஓதமுறு நீரிழிவும் * உந்து ரத்த - சீதமுங்காய்..............*
மாவன் சுரமும் வளர்மேக மும்போகும்..... ............*
நாவன்மர வேரதனை நாடு......[* உந்தல்-தள்ளல்]....(௬௱௧)

(கருவேல்மரத்தின் வேர்க்குணம்.)

கருவேலின் வேர்க்குக் கடுப்பிரத்தம் மாந்தம்..................*
பருவாதம் ஊறுகரப் பானும் - பெருகு..... ...............*
பெரும்பேதி யும்போகும் பேசவி னிக்குங்..................*
கரும்பே யிதனைக் கருது... ...........................(௬௱௨)

(ஒதிமரத்தின் வேர்க்குணம்.)

புண்புரைகி ராணிரத்தப் போக்கதிசா ரங்கடுப்புந்... ..........*
திண்பெறுதா கஞ்சோபஞ் சீதளமும் - நண்பில்............*
அதிவிரைவாய்த் தாண்டு மணங்கே பருத்த...... ...........*
ஒதிமரத்தின் வேருக் கொதுங்கி[*உதி-ஒதி-யெனமருவியது.]

(அகத்திமரத்தின் வேர்க்குணம்.)

நல்லகத்தி வேரதனை நாடுங்கால் மேகமெனுஞ்...............*
சொல்லகலுந் தாகம்அறும் தோகையே - மெல்லமெல்ல... *
மெய்யெரிவு கையெரிவு * மேகனத்தி னுள்ளெரிவும்... ....*
* ஐயெரிவும் போமென் றறி[*மேகனம்-என்பது-ஆண்குறி]

[* ஐயெரிவு- ஐம்பொறியைச்சேர்ந்தஎரிவு]

(நெல்லிமரத்தின் வேர்க்குணம்,)

வமனம் அரோசியறும் வாதமுதன் மூன்றுஞ்... ... ..........*
சமன முறும்மலமுஞ் சாறும் - * அமானசுரம்...........*
* புல்லிவரு தோஷசந்நிப் பொல்லாச் செயலும்போம்...[தல்
நெல்லிமர வேரை நினை[* அமானம்-அதிகம். புல்லல்-பொருந்

(அருநெல்லிமரத்தின் வேர்க்குணம்.)

சுத்த சுரம்அருசி * தோலாப் பெரும்வாந்தி...................*
பித்தசந்நி பாதமிவை பேருங்காண் - மெத்தமணம்...........*
நாறுமலர்க் கூந்தன்மின்னே நாவுக் கினிமையெனக்........*
கூறுமரு நெல்லியின்வேர்க் கு[* தோலா-இளைக்காத.](௬௱௫)

மரத்தின் வேர்வகை-முற்றியது.

## செடியின் வேர்வகை.

### ( ஆடாதோடை வேர்க்குணம். )

காசமொடு மந்தங் கதித்தபித் தங்கொடுஞ்சு..................*
வாசங் கழுத்து வலிமுதனோய் - கூசியே..................*
ஓடாதி ராதிங் கொருநாளு மொண்டொடியே..................*
ஆடாதோ டைத்தூருக் கஞ்சி..................(சகூஎ)

### ( சங்கம் வேர்க்குணம். )

சங்கம்வேர்ப் பட்டை சளியிருமலைச்சுரத்தை..................*
அங்கவா தக்கடுப்பை ஆட * தப்பைப் - பங்கமே..................*
செய்யுங் கிரந்தியையுள் தீகால் கிருமியையிவ்..................*
வையந் தனிலொழிக்கு மால்...[* அதப்பு-வீக்கம்.]...(சகூஅ)

### தே-( பேராமுட்டி வேர்க்குணம். )

வாதசுரந் தாகம் * மதலைக் கணம்மாந்தஞ்..................*
சீதசுரம் பித்தமெனச் செப் * பணங்கும் - ஓதுநம்பாற்..*
சேராமுட் டிக்கேகுஞ் செய்ய மடமயிலே... .........[தோய்
பேராமுட் டித்தூரைப் பேசு...[* மதலை-குழந்தை-அணங்கு

### ( சிற்றாமுட்டி வேர்க்குணம்-இதுவே-குறுந்தொட்டி. )

அத்தி சுரமுதல் அனந்தசுரம் பித்தமும்போம்..................*
மெத்த விழிக்கொளியாம் வீறுதயி - லத்திற்காம்..................*
நற்று மனைத்திருவு நாடு மெழிற்றிருவே..................*
சிற்றாமுட் டித் * தூரைச் செப்பு ..[ * தூர்-வேர்]...(சஎய)

### ( செந்தொட்டி வேர்க்குணம். )

* சந்து வலிவாதந் தாகஞ் சுரங்கரப்பான்..................*
உந்துசுவா சங்கபமும் ஓடுங்காண் - அந்தமிகும்..................*
இந்தொட் டியவதன இன்ப மடமயிலே..................*
செந்தொட்டி வேராற் சிதைந்து........[ * கீல்] .....(சஎக)

### தே-( மூக்காவேளை வேர்க்குணம். )

தாகாதி மந்தமதி சார மதிவறட்சி..................*
போகாச் சுரந்தாபம் போக்கமருந் - தோகையிற் ..........*
* சிக்காவே ளைப் * பதத்தைத் தின்னச்செய் விக்கவென்றுன்*
மூக்காவே ளைப் * பதத்தை மூன் ..................(சஎஉ)

[* சிக்காவேளை-அகப்படாதகாலத்தில்- பதத்தை-சாதத்தை
பதம்-வேர். மூக்காய்-மூக்காவேளையெனமருவியது.]

(மரக்காரை வேர்க்குணம்.)

மரக்காரை யின்வேர்தான் வாந்தி மருந்தாந் ...............*
திருக்காஞ்சி லேஷ்மமதைத் தீர்க்கும் - முருக்காருஞ் ..........*
செய்யவிதழ் மாதே திரிதோஷ மும்போக்கும் ...............*
வெய்ய மருந்தெனவே விள் ............................(௬௭௩)

(இதுவுமது)

சீதக் கடுப்பகலுஞ் சேராது ரத்தபித்தம் ...................*
மாதே கரப்பான்போம் வாதம்போம் - போதப் ..............*
பெருக்கான மாந்தகணம் பேரும் உலகில் ....................*
மரக்காரை வேரருந்து வார்க்கு .............................(௬௭௪)

(அவுரி வேர்க்குணம்-இதுவே-நீலி.)

எல்லா விஷங்களுக்கும் ஏற்ற முறிப்பாகும் ...................*
பொல்லாச் சுரமூர்ச்சை பொங்குவெட்டை - நில்லாப் .........*
* பவுரிதருங் குன்மமுதல் பன்னோ யொழியும் .........[ன்மம்
அவுரிதரும் வேருக் கறி ... [* பவுரிதரும்-கூத்தாடச்செய்கிற கு

(களாவேர்க் குணம்.)

விடத்துறுநோய் பித்தம்ஜ்ஜயம் வேர்வையதி தாகந் .............*
திடத்த * உதி ரத்தினது சிக்கல் - சடத்துளெழும் ...........*
அக்கினி மந்தம்இவை யண்டா தொருநாளுஞ் ..................*
சிக்கெனக்க ளாவேரைச் சேர் [* பிரசவ அழுக்குச் சிக்கல்] ..()

தே-(வெட்டிவேர்க்குணம்- இதுவே-குருவேர்)-க-க-றை.)

பித்தவி தாகஞ் சசிகா மிலங்கறைப் பித்தமனற் ...............*
றத்திடு குட்டஞ் சிரநோய் களமடி தாதுநட்ட ..................*
மத்தம னற்புண்ட னப்புண்வன் மூர்ச்சை வரிவிழிநோய் ...*
வித்திர மேகத்தின் கட்டியும் போம்வெட்டி வேரினுக்கே ...*

(இ-ள்) பித்தத்தால் அகாலத்தில் உண்டாகின்ற தாகம்- சசி-சோமரோகம்- காமிலம்-காமாலை - கறைப்பித்தம்-ரத்தபித்தம்-அனல்-சுரம்-குஷ்டம்-தலைநோய் -களமடி - கழுத்துநோய்-சுக்கிலநஷ்டம்- மத்தம்-உன்மாதம்- அனல்புண் - தீயால்வந்தபுண் தனப்புண்-முலைச்சிலந்தி-மூர்ச்சை-நேத்திரரோகம் - வித்திரம் வித்திரதிக்கட்டி - மேகக்கட்டியும். (௬௭௭)

---

செடியின் வேர்கை -முற்றியது.

## கொடியின் வேர்வகை.

(காட்டுமல்லிகை வேர்க்குணம்-வெ-பா.)

சுரங்களொடு நாவறட்சி தொந்திமந்தம் பேதி............*
யுரங்கதித்த தாகம்இவை யொட்டும் - வருஞ்சோரர்............*
தாமல்லி லோடுந் தகைமைபோல் ஓடிவிடுங்............*
* காமல் லிகைவேராற் காண்........[* கா-சோலை]...(எஅ)

(சிறுகுறிஞ்சா வேர்க்குணம்.)

சிறுகுறிஞ்சா வேர்விஷத்தைத் தீர்க்கும் அனிலத்............*
துறுசுரங்கள் வாதம் ஒழிக்குந் - தெறியாணக்............*
கண்ணோயிருமல்முதற் காசசுவா சந்தணிக்கும் ............*
விண்ணாட ருக்கிதனை விள்............(எகூ)

(பேய்ச்சுரை வேர்க்குணம்.)

* கடுவேறு பேய்ச்சுரைவேர் கண்டால் அரவின்............*
* கடுவேறு துண்மைமுக் காலுங்- கொடுவிஷமும்............*
ஈளை யிருமலும்விட் டேகும்உண்டால் வாந்தியுண்டாம்............*
வாளையுறுங் கண்ணாய் வழுத்து...[* கடு-கசப்பு. * கடு-நஞ்சு]()

தே-(முசுமுசுக்கை வேர்க்குணம்.)

கந்தம் பரவு களிச்சளியும் புன்விடமு............*
மந்தம் பெறுவிடமும் வாந்திகளும் - * அந்தம்............*
பெருகுரங்குக் கிச்சூடும் பித்தமுமி ருக்கா............*
* திருகுரங்குக் கைவேருக் கே[* அந்தம்பெருகு-அழகுமிகுந்த-உரம்- மார்பு-குக்கி- வயிறு * முசு முசுக் கை என்பதற்கு-இரண்டு-குரங்குக்கை-என்றும்-முசு-என்பது-குரங்கு.]

(வெண்காக்கட்டான் வேர்க்குணம்.)

மாதரால் வந்தவெட்டை வன்மேகஞ் சென்னிவலி............*
ஓது சுரம்விழிநோ யோடுங்காண் - பேதியொடு............*
மாக்கட்டாஞ் சீதம்அறும் மாமூலி யாம்வெள்ளைக்............*
காக்கட்டான் வேரைக் கருது............(௮௰)

(கருங்காக்கட்டான் வேர்க்குணம்.)

மாந்தங் * கிருமியடல் வாதங் * கபஇனமுஞ்............*
சேர்ந்தமலக் கட்டுஞ் சிதையுங்காண் - சூழ்ந்த............*
அருங்காக் குவடுகளி லண்டா மயிலே............[கபக்கூட்டம்
கருங்காக்கட் டான்வேரைக் கண்டு...[* கிருமி-புழு. கபஇனம்-

(கொடிவேலி வேர்க்குணம்-இதுவே-சித்திரமூலம்.)

கட்டிவிர ணங்கிரந்தி * கால்கள் அரையாப்புக்...*
கட்டிகு லைவீக்கங் காழ்மூலம் - முட்டிரத்தக்...*
கட்டுநீ ரோற்றங் கனத்த பெருவயிறும்...*
அட்டுங் கொடிவேலி யாம்[* கால்-வாயு-கள்-பன்மைமிகுதி]()

(பெருமருந்தின் வேர்க்குணம்.)

பெருமருந்தின் வேர்பித்தம் பீறிளைப்பு காசம்...*
வருசுரம் உடம்புவலி வாதம் - உருவுவிஷம்...*
ஒன்றிய மாகடிகள் ஓட்டும் உலகிலிது...*
அன்றியது*கோச்சிகிச்சைக்காம்[* கோ-பசு-எருதுமுதலிய]

(பெருங்காஞ்சொறி வேர்க்குணம்.)

காசஞ் சுவாசங் கபச்சுரங்க ளோடிவன...*
வாசஞ்செய் யும்ஊர்க்குள் வாராமல் - வாசம்...*
பெருக்கு முலையாய் பெருங்காஞ் சொறிவேர்...*
இருக்குமெனமனத்து ளெண்ணி...(௪௮௬)

(சிறுகாஞ்சொறி வேர்க்குணம்.)

சிறுகாஞ் சொறிவேர் சிலேஷ்மசுவா சத்தைக்...*
குறியாத * முச்சுரக்கு ழாத்தைச் - சொறியுங்...*
கரப்பான் சிறுசிரங்கைக் * காலைத்தா கத்தை...*
ஊரப்பாகச் சாடுமென வோது[* திரிதோஷத்தால் பிறக்கும்-சுரக்கூட்டத்தை. காலை-வாயுவை.]

(கருங்காஞ்சொறி வேர்க்குணம்.)

குத்திருமல் நீரோற்றங் கோர கபரூட்சை...*
நித்தியஅ ரோசகமும் நீங்குங்காண் - ரத்ன...*
அருங்காஞ்சி வாய்ந்தவிடை யன்னமே சுத்தக்...*
கருங்காஞ் சொறிவேரைக் கண்டு...(௪௮௮)

(பச்சைத்திப்பலி வேர்க்குணம்.)

தாகமுடன் சோபந் தணிக்குங்காண் எவ்வகையின்...*
மேகமுடன் பித்தம் விலக்குமே - போகமிகும்...*
நவ்விய ரன்ன நயங்கொடுக்கும் பச்சையாஞ்...*
* செவ்விய மூலச் செயல்.. [* சிவந்த-திப்பலிவேர்].(௪௮௯)

(இன்புரு வேர்க்குணம்.)

இன்புரு வேரா யிதமாய் அருந்தினர்க்குப்...*
பின்புரு தையமொடு பித்தமுமே - துன்பாம்...*

இருமல் சுவாசம் எரிசுரம்வ யிற்றுப்........ ..................*
பொருமல்உப்பி சம்பறந்து போம்.......... .........(௬௯௰)

தே—( நன்னாரிவேர்க்குணம். )

நன்னாரி வேரை நருக்கி யரைத்து * மதன்.....................*
வின்னாரி யூணல் வெதுப்பியே - தின்னவெறி..................*
தோணாது கற்றாழைச் சோற்றிற் கலந்துண்ணக்..................*
காணாது வண்டு கடி...[ * மதன்- மன்மதன்- வில்- கரும்புவில்.
நாரி-அதற்குநாண் வண்டு. ஊண்-வண்டிக்கு ஆகாரந்தேன்.]

(இதுவுமது.)

சலதோஷம் பித்தம்அதி தாகம் உழலை......................... *
சலமேறு மேகமின்னர் தஞ்சூ - டுலகம்திற்......................*
சொன்மதுமே கம்புண் சுரம்இவையெ லாம்ஒழிக்கும் .......*
மென்மதுர நன்னாரி வேர்...(கொடியின்வேர்வகை-முற்றியது)

---

புல்லின்வேர்வகை.

( பச்சைவிலாமிச்சு வேர்க்குணம். )

திரிதோஷந் தாகஞ் செறிகுஷ்டம் ஈளை.........................*
பெரிதான சூலைமந்தம் பேராச் - சுரவெப்பம் ...............*
*மச்சையுண்ணுங்* கீடமுதன்மாறுமெய்க்குங் காந்தியுண்டாம்
பச்சைவிலா மிச்சுக்குப் பார்[*மச்சை-எலும்புக்குள்இருக்கும்
மூளை. * கீடம்-புழு.]

( பஞ்ச மூலத்தின்குணம். )

செவ்வியம் பேராத்தை சித்திரமூ லஞ்சுக்கோ.................*
டொவ்வுகண்டு பாரங்கி யோராந்தும் - வெவ்வினையைச்.....*
சண்ணுபஞ்ச மூலமெனத் தாரணியெ லாம்அறிய.................*
வண்ண மயிலே வழுத்து...............................................(௬௯௪)

( சிறுபஞ்ச மூலத்தின்குணம். )

சிறிய வழுதுணைவேர் சின்னெரிஞ்சில் மூலஞ்.................*
சிறு * மலிகண் டங்கத் தரிவேர் - நறிய.......................*
பெரிய *மலி யோராந்தும் பேசுபன்னோய் தீர்க்கும்........*
அரியசிறுபஞ்சமூலம்..............[ * மலி-மல்லிகை]...(௬௯௫)

(பெரும்பஞ்ச மூலத்தின் குணம்.)

பாதிரிவேர் வாகை பருங்குமிழ் * மாலூரம்........................*
ஓதுதழு தாழையிவ்வேர் ஓனாந்தும் - போதிலம்.......... ......*
ருஞ்சிலேநு தற்றிருவே யோரும்பெரும் பஞ்சமூ...................*
லஞ்சிலநோ யேகுமிதி லாய்...[ * மாலூரம்-வில்வம்] (சகசு)

(அஷ்ட மூலத்தின் குணம்.)

கோரை * யரிகரந்தை * கூலங் * கஞுசி கஞ்சாங்.................*
கோரையா டாதோடை * கோத்துளசி - வீரியபற்.................*
பாடகமிவ் வெட்டும் பல்விஷக் குஷ்டாமிரியச்........ ... .........*
சாடுமஷ்ட மூலமென்பர் தாய்[ * அரிகரந்தை-விஷ்ணுகிராந்தி
* கூலம்- பேய்ப்புடல். * கஞுசி- சிந்தில். * கோத்துளசி-சிறந்
தஅளசி.]

(தச மூலத்தின் குணம்.)

வில்வம் பெரியகுமிழ் மென்னெரிஞ்சில் முன்னையிரு.......*
மல்லி சிறிய வழுதுணைவேர் - நல்லகண்டங்...................*
கத்தரி * புன்காலிபெரு வாகையிவை வன்மேஹையைக்......[ஆ.
குத்துந் தசமூலங் கூறு[ * பாதிரி] புல்லின் வேர்வகை-மூற்றிய

மரப் பட்டையின்வகை.

(அத்திமரப் பட்டையின் குணம்.)

வீறு கடுப்பிரத்தம் வெண்சீத ரத்தமொடு.........................*
நாறுவிர ணங்களெலாம் நாடாவாங் - கூறுங்கால்....................*
அத்திதரு மேகம்போம் ஆயிழையே யென்ஞான்றும் .......*
அத்திப்பாற் பட்டைக் கறி.....................................(சகஅ)

(நாவல்மரப் பட்டையின்குணம்.)

* ஆசியநோய் காசம் * அசிர்க்கரஞ்சு வாசவினை.................*
கேசமுறு பால கிரகநோய் - பேசரிய..............................*
மா * வியங்க * லாஞ்சனம்இவ் வன்பிணியெ லாமேகும்......*
நாவலுறு பட்டையத னுல்[ * ஆசியம்-வாய். அசிர்க்கரம்-பெரு
ம்பாடு. * வியங்கம்-லாஞ்சனம்- மச்சபேதங்கள்.]

(முருங்கைமரப் பட்டையின்குணம்.)

முருங்கைவேர்ப் பட்டைக்கு மூடு கபத்தோ.........................*
டொருங்குருச் சந்நிசுரம் ஓடும் - அருங்கனக.....................*

வட்டைப் பொருமூலையாய் வாய்வொடுவி ஷங்களுமேற்......*
பட்டைக்குப் போமே பறந்து..............................(௫௱௧)

( புளியமரப் பட்டையின்குணம். )

புளிய மரத்தின் * புரணிதனைக் கண்டால்..........................*
உளைமாந்தை குன்மவலி யோடும் - * வளியார்ந்த..............*
பேதிகட்டுஞ்சுரம்போம் பித்தமுறுந் தீபனமாம்........ ....*
ஓதஅ சீரணமே துன்னு[* புரணி-பட்டை. வளி-வாயு (௫௱௨)

( பெருமரப் பட்டையின்குணம். )

பெருமரப் பட்டையது பேதி கிராணி..........................*
மருவிரத்த நோயினத்தை மாற்றுந் - திருவே.................*
* நடலைபுரி வாதத்தை நாடாத கற்றும்........................[ன்ற.
உடலையிரட் சிக்குமென வோது[* நடலைபுரி- வஞ்சனைசெய்கி

( கருவேல்மரப் பட்டையின்குணம், )

தந்தம் இறுகுந் தனிச்சூதப் புண்ஆறும்..........................*
வந்தசுரம் பித்தம் மடியுங்காண் - பந்த...........................*
மருவே யகலா மலசளக மாதே..............................*
கருவேலம் பட்டைக்குக் காண்.............................(௫௱௪)

( கருங்காலிமரப் பட்டையின்குணம். )

மேகநீ ராக்கெடுக்கும் வீறுதந்த மூலத்துள்.....................*
ஆகிய வேதனையை யாற்றுங்காண் - சோகந்......................*
தருங்காசம் ஈளையிவை சாரா தகற்றுங்............................*
கருங்காலிப் பட்டையது காண்..........................(௫௱௫)

(மாவிலிங்கு-எருக்கு-கருவேல்-இவைகளின்பட்டைக்குணம்)

மாவிலிங்கப் பட்டையினால் வாதமொடு சந்நிகளும்...........*
பாவுகின்ற கல்லடைப்பும் * பாறுமே - மாவெருக்கம்......*
பட்டைசந்நி வாதம் பல்விஷம்போக் குங்கருவேல்...........*
பட்டை * நாநோய்தீர்க்கும்பார்[* பாறல்-ஒடல். நா-நாக்கு.]

(கள்ளி-நொச்சில்-இவைகளின் பட்டைக் குணம்.)

நரம்புச் சிலந்தி நளிர்வாத சந்நி.................................*
உரம்பெரிய வாதம்இவை யோடும் - பெரும்புவியிற்..........*
கள்ளிமரப் பட்டையினாற் காரநொச்சிற் பட்டையதூ...........*
துள்ளு சந்நிவாதம்அகற் றும்..................................(௫௱௬)

(கிளிபூறற் பட்டையின்குணம்.)

* மணவருக்க மாகும் வருசுரத்தைப் போக்குந் ........*
தணலாய வெப்பைத் தணிக்குங் - குணமார்........*
கிளிபூறற் பட்டையது கேதம் பயிலும்........[றாகும்.
அளிபூருங் கூந்தன் மின்னே யாய்[*வாசனைத்திரவியத்தில்-ஒன்

(அக்காரப் பட்டையின்குணம்.)

அக்காரப் பட்டைக் கறல்நா வறட்சிகளும்........*
எக்குசந்நி பாதசுரம் என்பவையும் - பக்கச்........*
சுகலதலை நோய்வாய்வுந் தாழ்ந்தே யொழியும்........*
புகலிரத்த * கந்தமது போம்...[* கந்தம்-நாற்றம்.]..(ருாகூ)

(பஞ்ச வல்க்கத்தின்குணம்.)

ஆலரசு *சம்புடனே யத்திகுரு வேல்அவற்றின்........*
தோல்ஐந்தும் பஞ்சவல்க்கந் தொல்லுலகில் - ஏலும்அதால்...*
காசஞ் சுவாசங் கபங்கொங்கை வித்திரதி........*
தாசமுறு மென்றே நவில்...[*சம்பு-நாவல். வல்க்கம்-பட்டை]

மரப் பட்டையின்வகை- முற்றியது.

---

மரத்தின் பிசின்வகை.

(மலைவேப்பம் பிசின்குணம்.)

மலைவேம்பு தன்பிசின்றான் வாத கரப்பான்........*
வலுமேகக் கட்டியிவை மாற்றும் - நலமீறு ........*
தாதுவைஉண் டாக்குஞ் சலப்பேதி யைக்கட்டும் ........*
மாதே யிதனை வழுத்து........(ருாயக)

(கருங்காலிப் பிசின்குணம்.)

கருங்காலி யின்பிசின்றான் காரார் கரப்பான்........*
வருமேக நீரிழிவை மாற்றும் - விளாவாய்ப்........*
பெரும்பாட்டை நீக்கும் பெருந்தாது விர்த்தி........*
* அரும்பு மெனக்கண் டறி...[* அரும்பல்-உண்டாதல்]...()

(வாகைப் பிசின்குணம்.)

வாகைப் பிசின்மேகம் வன்கிரந்தி கட்டியையும்........*
ஏகத் தூரத்தும் இதுநிசமே - மாகனக........*
மேனி கொடுக்கு மிகுத்தபலன் உண்டாக்குந்........*
தேனினிய மென்மொழியே தேர்........(ருாயரு)

( விளாம் பிசின்குணம். )

நல்ல விளாம்பிசினை நற்பாகஞ் செய்தருந்தத்.................*
தொல்லையதி சாரந் தொலைவதொன்றோ - மெல்லியரால்......*
வந்தவெள்ளை தன்னுடனே மாதர் பெரும்பாடும்..............*
உந்துநீர்ப் போக்கும்போம் உன் ...........................(௫ாயச)

( முருங்கைப் பிசின்குணம். )

மூந்துநீ ரைத்தடுக்கும் மோரைப்போ லேயொழுகும்.......*
விந்துவைத்த டிப்பித்து மேனிதருந் - தொந்தக் ............*
கரியநிற வாயுதனைக் * காதிவிடு நாளும்......................*
பெரிய முருங்கைப் பிசின்.....[* காதிவிடும்-கண்டிக்கும்)...()

( விடத்தேரின் பிசின்குணம். )

விடத்தேரின் றன்பிசின்றான் வெண்மேகம் போக்கும்...... ...*
அடுத்தபிற மேகத்தை யாற்றுந் - தொடுத்த ..................*
மேகக் கரப்பானை விட்டோட்டும் என்றுலகில் ..............*
நாகரிக மாதே நவில்...(மரத்தின்பிசின்வகை-முற்றியது.)....()

மரத்தின் இலைவகை.

( புளி யிலையின்குணம். )

அழுபுண்ணை நீக்கும் அடல்சோபை மாற்றும்....................*
எழுபாண்டு வைப்போக்கும் இப்பால் - முழுதும்...............*
அளியச்சி வந்தகண்ணோ யாற்றுங் கனலாம்.......................*
புளியிலையை நன்றாய்ப் புகல்.................................(௫ாயஎ)

தே- ( வேப் பிலையின்குணம்- இதுவே-நிம்பயிலை. )

கிருமிகுஷ்ட மாந்தங் கெடுவிடஞ்சு ரங்கள்.................. *
பொருமியம சூரிகையின் புண்க - ளொருமிக்க.................*
நிம்பத் திலையிருக்க நீடுலகி னீங்காமற்......................*
கம்பத் திலையிருக்கக் காண்..[வேப்பிலையிருப்பதினால்மேற்சொல்லியவியாதிகள்நீங்காமலிருப்பதற்குப்பத்துத்தலைகளில்லை-நீங்கிவிடுமென்பது-கருத்து.]

( முருங்கை யிலையின்குணம். )

செறிமந்தம் வெப்பந் தெறிக்குந் தலைநோய்....................*
வெறிமூர்ச்சை கண்ணோய் விலகும் - மறமே....................*
நெருங் * கையிலை யொத்தவிழி நேரிழையே நல்ல..........*
முருங்கை யிலையை மொழி........[* ஐ-போலி.]...(௫ாயஅ)

(அகத்தி யிலையின்குணம்.)

மருந்திடுதல் போகுங்காண் வன்கிரந்தி வாய்வாந்.....................*
திருந்த அசனஞ் செரிக்கும் - வருந்தச்.....................*
* சகத்திலெழு பித்தமது சாந்தியாம் நாளும்.....................*
அகத்தியிலை தின்னு மவர்க்கு......[* சகம்-உலகம்.]..(௫௱௨௰)

(செவ்வகத்தி யிலையின்குணம்.)

செவ்வகத்திப் பன்னஞ் சிலேஷ்மமதை யுண்டாக்கும்.....................*
வவ்வுபல சிந்தூரம் வைப்பதற்காங் - கவ்வு.....................*
நவநீத பஸ்பமதை நாளுமுடிப் பிக்குஞ்.....................*
* சிவமாக்குந் தாளகத்தைத் தேர்......[* சிவம்-நன்மை.]..()

தே- (பசுமுன்னை யிலையின்குணம்.)

வாயருசி சோபைஐய மாருக் கரப்பனெழும்.....................*
வாயுமந் தாக்கினிம யக்கமென்ற - நோய்கள்.....................*
அறு * முன்னை யுன்னுவர்கட் காழி யுலகில்.....................*
* நறுமுன்னை தன்னிலையை நாடு...[* உன்னையுன்னுவர்கட்கு-உன்னை நாடிவருகிறவர்களுக்கு. * நறுமுன்னை-நல்லமுன்னை.]

(கருவேப் பிலையின்குணம்.)

வாயி னருசி வயிற்றுளைச்சல் நீடுசுரம்.....................*
பாயுகின்ற பித்தமுமென் பண்ணுங்காண் - தூய.....................*
மருவேறு காந்தளங்கை மாதே யுலகிற்.....................*
கருவேப் பிலையருந்திக் காண்.....................(௫௨௩)

(தெங்கு-பனை-இவைகளின் குருத்துக்குணம்.)

தென்னங் குருத்தாற் சிலேஷ்ம வலிநீங்கும்.....................*
மன்னுதிர மூலமது மாறுங்காண் - உன்னும்.....................*
பனங்குருத்து தின்றாற் பகர்உதிர மூலங்.....................*
கனம்பெருகும் பேதியுமாங் காண்.....................(௫௨௪)

(பேரீச்சு-சிற்றீச்சு-இவைகளின்குருத்துக்குணம்.)

பேரீச்சு தன்குருத்தைப் பேணிமெய் தின்பவருக்.....................*
கீரிச்ச குன்மவலி யேகுங்காண் - ஊரிற்.....................*
சிறியஈச் சுக்குருத்தைத் தின்றால் வயிற்றின்.....................*
மறியுதிர வாயுவறும் வாழ்த்து.....................(௫௨௫)

தே—(மூங்கில் இலையின்குணம்.)

குடற்கட்டுச் சூலையுடன் குன்மம் உதிரம்.....................*
உடற்கெட்டா தோடி யொழியும் - அடற்றங்கு.....................*

வேல்விழிமா தேகேளாய் வேயின் இலைதனக்குக்................*
கால்வழியுஞ் சோணிதம்போங்காண் [*வேய்-மூங்கில்.].(ருஉசு)

மரத்தின் இலைவகை-முற்றியது.

( செடியின் இலைவகை. )

( ஆடாதோடை யிலையின்குணம். )

ஆடாதோ டைப்பன்னம் ஐயறுக்கும் வாதமுதற்...............*
கோடாகோ டிச்சுரத்தின் * கோதொழிக்கும் - நாடின் ......*
மிகுத்தெழுந்த சந்நிபதின் மூன்றும் விலக்கும்... ........*
அகத்துநோய் போக்கும் அறி.[ * குற்றத்தைநீக்கும்.].(ருஉஎ)

தே—( வெண்நொச்சி யிலையின்குணம். )

நாசந் தருவாதம் நாசிப் பிணியழற் சு..........................*
வாசந் * தசனவுரு வன்றோடங் - காசம் அறல்...............*
* உச்சி யடையை யுறைநோயும் என்படுமோ................*
நொச்சி * யடையை நுவல்....... ..[* தசனம்-பல்-உரு-வேதனை. உச்சி - சிரசில் - அடை - அடையைப்போல் - உறைந்த சிலேஷ்மநோயும். * அடை - இலை.]

( கருநொச்சி யிலையின்குணம். )

வாதக் கடுப்பகலும் மாருத பீநசம்போம்.........................*
ஓதப்பேய் ஓடி யொளிக்குங்காண் - வேதைசெய்யும் ........*
மண்டைக் குடைச்சலறும் மாசில்கரு நொச்சிநுக்குப்.......*
* பண்டைத் தலைவலிபோம் பார்...[* பண்டை-பழமை]...()

( வெள்ளாமணக் கிலையின்குணம். )

மந்தங் கதித்தெழுந்த வாதம் * மருமவலி..........................*
பந்தமல மியாவும் பறக்குங்காண் - சந்ததமும்...............*
பூமணக்கு நெய்த்த புரிகுழன்மா தேவெள்ளை................*
யாமணக்குப் பத்திரியால் ஆய்[* மருமம்-மார்பு. வலி-நோய்]

( செவ்வாமணக் கிலையின்குணம். )

குன்மமொடு மந்தங் கொடுவாதம் மெய்வலியுஞ்...... .......*
சன்மமட்டும் வாராமல் தாண்டுங்காண் - நன்மைதரும்........*
எவ்வா மணக்குகட்கும் எற்றமென்பார் காந்தியுள்ள..............*
செவ்வா மணக்கிலையைச் சேர்.........................(ருகக)

தே—(செம்பை யிலையின்குணம்.)

கட்டி யொடுவீக்கங் * காயத்துள் நீரோற்றம்.................*
ஒட்டிவரு வாதகபம் ஓட்டுவது - தொட்டுவிடும்..............*
அம்பையிலை வேலைவென்ற வங்கண் மடமாதே ...............*
செம்பையிலை வேலையெனத் தேர் ..[* காயம்-உடல்]..(ருகஉ)

(கருஞ்செம்பை யிலையின்குணம்.)

விப்புருதிப் புண்ஆறும் மீறு கரப்பானும்போந்...............*
தப்பாம ல்மேகந் தணியுங்காண் - வெப்பார்...................*
கபரோகம் ஏகுங் கருஞ்செம்பை யொன்றுக்.................*
கிபமா முலைமாதே யெண்...................................(ருகங)

(பாவட்டை யிலையின்குணம்.)

சீதவா தங்களறுந் தீபனமோ உண்டாகும்...................*
வாதங் கபம்ஒழியும் வார்குழலே - போதவே..................*
ஆவட்டைத் தாகசுரம் அற்றுவிடுந் தோஷம்போம்..............*
பாவட்டைப் ? பத்திரிக்குப் பார்..[? பத்திரம்-இலை.]...(ருகச)

(பெருஞ்சின்னி யிலையின்குணம்.)

காணுக் கடியும்எதிர் கண்ட விஷக்கடியும்...................*
நாணு திருந்திடவும் ஞாயமுண்டோ - தோணு................*
வருஞ்சின் மதலைமொழி மாதரசே கேளாய்.................*
பெருஞ்சின்னி மூலியுண்ட பேர்க்கு.........................(ருகரு)

(சிறுசின்னி யிலையின்குணம்.)

கடிவிஷமுங் காணுக் கடிவிஷமும் மாதர்.....................*
இவ்விஷமும் ஓடும்இது வன்றி - நெடியவிழிக்...............*
கன்னிகையே மேகங் கணக்காய்ச்சல் மாந்தமும்போஞ்.......*
சின்னி யிலைக்குத் தெறித்து..................................(ருகசா)

தே—(தழுதாழை யிலையின்குணம்.)

வாதப் பிடிப்பென்ற * வற்காலி யைப்புலிபோற்...............*
போதப் பிடிக்கும் புகலவற்றோ - ! காத ......................*
அழுதாலழைப் பீநசத்தை யண்டா தகற்றுந்.....................*
தழுதாழைப் பன்னமது தான்.....[* வற்காலியை-ஆட்டினை.
! காத-கொல்லும்படி-அழுது-ஆழ்-ஐப்பீநசரோகத்தை.]

(இதுவுமது.)

சேர்ந்த சொறிசிரங்குஞ் சேர்வாதம் எண்பதும்போம்.......*
ஆய்ந்திடிற் பித்தம் அதிகரிக்கும் - மாந்தம்அறும்............*

* ஐயின் சுரந்தணியும் ஆனதழு தாழைக்கு................*
மெய்யின் கடுப்பும்போம் விள்..[ * ஐயின்சுரம்-கபச்சுரம்]..()

( எருக் கிலையின் குணம். )

எலிவிஷங் குஷ்டம்ஐயம் ஏறு கிருமி..........................*
வலிசூலை வாயுவிஷம் மந்தம் - மலபந்தம்.....................*
எல்லாம் அகலும் எருக்கிலை யைக்கண்டால்.....................*
வில்லார் நுதலே விளம்பு..................................(௫௩௯)

( காட்டாமணக் கிலையின் குணம். )

கட்டி விரணங் கரப்பான்பி லீகம்அதி........................*
கெட்டியுறு குன்மங் கிளைத்தசிரங் - கொட்டுமே..............*
கூட்டோ டொழியுங் குவடனைய கொங்கைமின்னே ..........*
காட்டா மணக்கிலையைக் கண்டு...............................(௫௪௦)

(இதுவுமது.)

காட்டா மணக்காற் கபவாத சூலையுடன்...........................*
வீட்டு தலைநோய் விரிகிரந்தி - வாட்டுகின்ற....................*
உண்மூலம் போகும் உடம்புலர்த்தல் வெட்டைஅறுந்...... ..*
திண் ○மூலதாதுவுமாஞ்செப்பு[ ○ மூலதாது-விந்து]..(௫௪௧)

( தவசு முருங்கை யிலையின்குணம். )

தவசுமுருங் கைத்தழைக்குத் தையலே கேளாய்...................*
அவசியம் பீநசம்உண் ணுக்கும் - * உவசர்க்க....................*
ஐயஞ்சு வாசகபம் அண்டாது குத்திருமல்.........................*
வையம்விடுத் தேகும் வழுத்து...[ * உவசர்க்கம்-தொந்தம்] .()

( வெதுப்படக்கி யிலையின்குணம். )

* வெள்ளெடுப்பு சீதம் வெதும்பல் சுரத்துடனே... ........*
அள்ளெடுக்கு மாந்தம் அதிவாதந் - தெள்ளுமொழி.........*
மாதே வெதுப்படக்கி வன்றழையுட் காய்ச்சலொடு..........*
கோதேறி ரத்தமும்போக் கும்...[ * வெளுத்தபேதி]...(௫௪௩)

( பெரியாநங்கை யிலையின்குணம். )

பெரியாநங் கைத்தழைக்குப் பித்தம்என்ப தெல்லாந்.........*
தெரியாமல் ஓடும்இது * திண்ணம் - பிரியா.................*
மலம்அறுக்கும் பஸ்பவகை வைப்பதற்கும் ஆகுஞ்..............*
சிலைநுதலே நன்றாய்த் தெரி...[ * திண்ணம்-உறுதி.]..(௫௪௪)

(சிறியாநங்கை யிலையின்குணம்.)

சிறியாநங் கைத்தழையைச் சேவித்த பேரைப்............*
பிறியார் மடந்தையர்கள் பின்னும் - அறியதனால்............*
*டங்கணமும் நீறுந் தனியழகும் உண்டாகுந்...............*
திங்கண்முக மாதே தெளி.[* டங்கணம்-வெண்காரம்].(௫௪௫)

(பருத்தி யிலையின்குணம்.)

பருத்தியிலை மொட்டிரண்டைப் பாலிலரைத் துண்ண.......*
வருத்துகின்ற மேகம்எல்லா மாறும் - பருத்த..............*
விரத்தபித்தத் தோடு விரணவீக் கம்போம்...............*
அரத்தவிதழ் மாதே யறை........................(௫௪௬)

(கூத்தங்குதம்பை யிலையின்குணம்.)

குத்துகின்ற நோய்போக்குங் கோரபித்தம் உண்டாக்கும்.......*
*அத்திசெய்யுஞ் சந்தி யகற்றுங்காண் - சத்திக்கு............*
மாத்தங்கு வாய்வொழிக்கும் மண்டூரேத் திற்குதவுங்.............*
கூத்தங் குதம்பைக் ?குழை[* அத்தி-கொலை. ? குழை-இலை].()

(துத்தி யிலையின்குணம்.)

மூலநோய் கட்டி முளைபுழுப்புண் ணும்போகுந்............*
சாலவதக் கிக்கட்டத் தையலே - மேலும்அதை..............*
எப்படியே னும்புசிக்க எப்பிணியுஞ் சாந்தமுறும்..............*
*இப்படியிற் றுத்தியிலை யை[* இப்படியில்-இப்பூமியில்].()

(விழுதி யிலையின் குணம்.)

விழுதித் தழைகரப்பான் வெண்மேகம் நீக்கும்.............*
பழுபடுவன் சூலைநோய் *பாறும் - எழுபேதி...............*
யாக்கும்அதி மாந்தம் *அகக்கிருமி தன்மலமும்...............*
போக்கும் அதுவே புகல்[*பாறும்-ஓட்டும். *அகம் - உள்.]

(கணப்பூண்டினது இலையின்குணம்.)

கணப்பூண் டிலைமேகக் கட்டியைக்க ளைக்கும்..............*
மணக்குமிக வாய்க்கு மதுரஞ் - சிணுக்கான..............*
வாதகணம் பித்தகணம் மாற்றுங் கபச்சுரத்தின்..............*
பேதம்அறப் போக்குமெனப் பேசு....................(௫௫௰)

(காரை-சேம்பு- இவைகளின்-இலைக்குணம்.)

காரைத் தழைக்குக் கடுப்பிரத்தம் போம்புளியைச்..........*
சோரப்பெய் தாக்கிச் சுவைத்தறிநீ - பாரிலுள்ள...........*

சேம்பிலைக்கு நற்புளியைச் சேர்த்துச் சமைத்துண்டால்......*
* கூம்பிட்ட மூலம்அறுங் கூறு..[* கூம்பல்-குவிதல்].(௫௧)

( அவுரி யிலையின்குணம். )

உரியஅவு ரித்தழைதான் ஓது பதினெண்.........*
அரியநஞ்சைத் தின்றவர்க்கும் ஆகும் - தெரிவரிய.........*
வாதவெப்பு காமாலை மைந்தர்க் குறுமாந்தஞ்.........*
சீதம் அகற்றுந் தெரி ..........(௫௨)

(இதுவுமது.)

சந்நி பதின்மூன்றுஞ் * சந்தொடித்த வாதமுதல்.........*
உன்னு விஷக்கடியும் ஓடுங்காண் - மின்னுங்.........*
கவுரிநிறம் உண்டாகுங் காசினியுள் நல்ல .........*
அவுரியிலை தன்னால் அறி.........[* சந்து-கீல்]......(௫௩)

தே-( குப்பைமேனி யிலையின்குணம்-இதுவேமேனி. )

தந்தமூ லப்பிணிதீத் தந்திப்புண் சர்வவிஷம்.........*
உந்துகுன்மம் வாதம் உதிரமூ - லந்தினவு .........*
* சூலஞ்சு வாசம் தொடர்பீந சங்கபம்போம்.........*
ஞாலங்கொள் மேனியத னால்...[ * சூலம்-சூலைநோய்.] (௫௪)

( மிளகுதக்காளி யிலையின்குணம். )

மந்தாக்கினிசோபை வாந்திகழல் வாயுவெப்பம்.........*
* இந்துநோய் பாண்டோ டெதிர்விக்கல் - முந்த .........*
வளருமுத் தோஷநோய் மாற்றுங்கைப் பான.........*
மிளகுதக் காளியிலை மெய்...[ * இந்து-சோமநோய்].(௫௫)

( இதுவுமது. )

மிளகுதக் காளியிலை வெண்நாகங் கட்டும்.........*
இளகுபல சிந்தூரத்திற் கேற்குங் - கொளுவுகின்ற.........*
மேகச் சொறியகற்றும் வெட்டை யனல்தணிக்கும்.........*
மாகச் சணிமூலையாய் வாழ்த்து..........(௫௬)

( தும்பை யிலையின்குணம். )

சீறுகின்ற பாம்போடு சில்விஷங் ? கால் சென்னிவலி.........*
ஏறுகபம் மாந்தம் இருக்குமோ - நாறுமலர்க்.........*
கொம்பனைய மாதே குளிர்சீத சந்நிவிடுந் .........*
தும்பையிலை யென்றொருக்காற் சொல்[ ? கால்-வாதம்](௫௭)

( இதுவுமது. )

தும்பையிலை யையுண்ணுஞ் சோற்றுக்கெ லாங்கதியாய்.... ..*
அம்புவியோர் மிக்க அருந்துங்கால் - வெம்பிவரு...........*
மேகமொடு கண்புகைச்சல் வீறுங்கை காலசதி...............*
தாகம்அதி சோம்பலுறுந் தான்..........................(௫௫௮)

( முள்ளங்கி யிலையின்குணம். )

வாயுமிகும் பித்தம் வளருங் கிருமியுமாம்..................*
ஓய்வுறு நெஞ்செரிவும் உண்டாங்காண் - தூயநிற.............*
முள்ளங்கி யின்இலையை முற்றும்உண்டாற் குன்மவலி........*
யுள்ளாங் கிளம்பா துரை..... ..........................(௫௫௯)

( புகை யிலையின்குணம். )

மருந்தை முறித்துவிடும் வாய்வறளச் செய்யுந்...............*
திருந்து பலவீனஞ் சேர்க்கும் - பொருந்துபித்தம்...........*
உண்டாக்கும் விந்தழிக்கும் ஓது புகையிலையைக்...............*
கண்டார்க்கும் ஆகாது காண்..(செடியின் இலைவகை-முற்றியது.)

---

கொடியின் இலைவகை.

தே- ( தூதுளை யிலையின்குணம். )

காதுமந்தங் காதெழுச்சி காசந் தினவு மதம்.................*
ஓதுமந்த முத்தோஷம் உட்சூலை - தாதுநட்ட....... ...... ...*
* மீதுளைப் பத்திரியை மேவச்செய் வாராய்ந்தோர்.... ......*
தூதுளைப் பத்திரியைத் * துய்த்து[*மீதுஉளைப்பு-மேலுளைப்பு. அத்திரியை-மலையை. * துய்த்து-உண்டு]

( பறங்கி யிலையின்குணம்- இதுவே-பூசினி. )

பித்தமொடு வாதம் பெருந்தாக மும்பெருகுஞ்.................*
சுத்தமொடு பேதி தலைப்படுங்காண் - சுற்றுங்...............*
கறங்காகு மேனியுள்ளே கவ்வுபுழுச் சேரும்..................*
பறங்கி யிலைக்குப் பகர்...................................(௫௬௨)

( சுரை யிலையின்குணம். )

நீரிழியும் வீக்கம்போம் நேரே மலம்இறங்கும்..................*
பாரமுறு சோபை பறக்குங்காண் - தீராத்....................*
திரிதோஷம் போகுஞ் செறிந்த சுரையின்.....................*
உரிய கொழுந்திலையை யுண் ..............................(௫௬௩)

(பேய்ச்சுரை யிலையின் குணம்.)

மூலரோகத்தின் முளையைக் களைந்துவிடும்..................*
ஆலவிஷத்தையும் அகற்றுங்காண் - ஞாலமதில்..................*
வாய்ச்சிவிடங் கிட்டுவது மாவருத்தம் வெற்பிலுறும்..................*
பேய்ச்சுரையின் பத்திரத்தைப் பேணு..................(௫௱௪)

(பாகல் இலையின் குணம்.)

பிறியாக் கிருமியறும் பேதியுண்டாந் தோஷம்..................*
முறியும் ○ இரதம் முறியுங் - குறியாத..................*
மாகத் புடைய மடமயிலே யெப்போதும்..................*
பாகற் றழைக்குப் பயந்து..[○ இரதம்-பாதரசம்]...(௫௱௫)

(அவரை யிலையின் குணம்.)

அவரையிலைக் குத்தலைநோய் ஆழ்ந்தகி ராணி..................*
* யிவரும் விஷிசிமுதல் ஏகுந் - தவராமல்..................*
கொண்டவர்க்குத் தீபனமாங் கோதாய் விரணமறுங்..................*
கண்டவர்க்குத் தோற்றுமிது காண்.. [* இவர்தல்-மேலிடுதல்]

(காராமணி யிலையின் குணம்.)

காரா மணியிலையைக் காய்ச்சியுண்டால் நாவுரிசை..................*
வாராத வாயுமிக வந்துறுமே - நேரேகேள்..................*
மூலம் விளையும் * முசியாக் கழிச்சலுண்டாந்..................*
தாலம்அதில் அவ்விலையைத் தள்....[*முசியா-கெடாத](௫௱௭)

(கொடிக்குறிஞ்சா இலையின் குணம்.)

கரப்பான் கிரந்தி கடிய விருமல்..................*
உரப்பாம் விஷபாகம் ஓட்டும் - நிரைப்பான..................*
*அக்கரத்தை மாற்றிவிடும் ஆயிழையே பித்தமுமாந்..................*
தக்ககுறிஞ் சாவினிலை தான் [*அக்கரம்-நாவைப்பற்றியநோய்.

(கறிப்பாலை யிலையின் குணம்.)

மேகம்அனல் வெட்டைசுரம் வீறுபித்த மூந்தொலையும்..................*
போகமுறும் மெய்ம்மருந்தும் பொய்மருந்தாம்-பாகுமொழி
மானே கறிப்பாலை மன்னும்இலை யைத்தினமுந்..................*
தானே யருந்துவர்க்குத் தான்..................(௫௱௯)

(கோவை யிலையின் குணம்.)

கண்ணுங் குளிர்ச்சிபெறுங் காசமொடு வாயுவறும்..................*
புண்ணுஞ் சிரங்கும் புரண்டேகும் - தண்ணுடலம்..................*

* மீதிலார் வெப்பகலும் விழாநீர்க் கட்டேகுங்.................*
கோதிலாத் கோவைவயிலைக் கு[* மீதில்ஆர்-மேலேபொருந்திய]

( முசுமுசுக்கை யிலையின்குணம். )

இருமலுடன் ஈளை யிளைப்பு புகைச்சல்..............................*
மருவுகின்ற நீர்த்தோஷம் மாறுந் - திருவுடைய.....................*
மானே முசுமுசுக்கை மாமூலி யவ்விலையைத்......................*
தானே யருந்துவர்க்குத் தான்........................................(ருஎக)

( கோழியவரை யிலையின்குணம். )

ஆழிசுற்றும் வையத் தடர்ந்த * பே ராமைமயொரு....................*
தாழியினிற் கெட்டு நலியுங்காண் - தோழிகேள்.......................*
கோழிபவ ரைத்தழைக்குக் குன்மங் குடல்வாதம் ..[மைக்கட்டி
ஊழிவரைக் கும்வாரா தோது[ * வயிற்றில்காணும் பருத்த ஆ

(முசற்கா திலையின்குணம். )

மூசத் தெழுந்த பெருவீக்கங் கைகாலில்.............................*
வீசிப்பு டைத்த வெறும்வீக்கம்- பேசாமல்..........................*
ஏகும் முசற்கா திலையிருக்கும் ஊரைவிட்டுப்........................*
பாகுமொழி மாதே பகர்................................................(ருஎங)

(கழற்சி யிலையின்குணம்- இதுவே-வச்சிரம்.)

விரைவாதஞ் சூலையறும் வெட்டையனல் ஏகும்.......................*
* நிரைசேர்ந்த குன்மம் நிலையா - துரைசேர்...........................*
அழற்சி விலகும் அருந்திற் கசப்பாங்..............[கச்சேர்ந்த
கழற்சியிலை யென்றுரைக்குங் கால்....[ * நிரைசேர்ந்த-பலவா

( வெண்கழற்சி யிலையின்குணம். )

எறண்டத் தோடே யிறங்கண்டம் மெத்தவுமே..........................*
வீறண்டம் எல்லாம் விலக்குங்காண் - தாரண்ட........................*
வள்ளைக் குழையடியே போம் வாள்விழிமா தேநல்ல...................*
வெள்ளைக் கழற்சியிலை விள்..........................................(ருஎரு)

தே—( வரிக்குமட்டி யிலையின்குணம். )

பற்றுதிரப் பூச்சிகளைப் பற்பலவா மந்தத்தைச்.......................*
சுற்றுதிரப் பித்தத்தைத் தூவிடத்தை - முற்றும்.......................*
* அரிக்கும் அட்டி யாயிலைமா தங்கருளையன்றோ.......................*
வரிக்குமட்டி யாயிலைமா தே[* அரிக்கும்-கெடுக்கும்].(ருஎசு)

(சிறுபூளைக்காலி யிலையின்குணம்.)

சிறுபூளைக் காலியிலை சில்விஷத்தைப் போக்கும்.................*
உறுகாந்தத் தைச்சிந் தூரிக்குஞ் - சிறுமாந்தம்................*
ஐயங் கடந்தீர்க்கும் ஆர்த்தகய நோய்விலக்கும்...............*
வையந் தனில்இதனை வாழ்த்து....................................(௬௭௭)

(வேலிப்பருத்தி யிலையின்குணம்- இதுவே-உத்தாமணி.)

ஆலித் தெழுந்தநோய் அத்தனையுந் தீருமே.......................*
வேலிப் பருத்தியதின் மெல்இலையால் - வேலொத்துக்.........*
கண்டிக்கும் வாதங் கபிஞ்சந்நி தோஷமும்போம்...............*
உண்டிக்கும் வாசனையாம் ஓது.....................................(௬௭அ)

(இதுவுமது.)

உத்தா மணியிலையால் உள்வயிற்றுக் குன்மமொடு...............*
குத்தாம் வலியுங் குளிரும்போம் - பற்றி..........................*
இசிக்கும் வலியிளைப்பும் எத்தடிப்பும் எகும்....................*
பசிக்கும்அதி மாந்தமும்போம் பார்...............................(௬௭௯)

(தரா யிலையின்குணம்.)

புண்கிரந்தி கட்டி பொருசந்நி கீடமும்போங்.....................*
கண்புகைச்சல் காசங்க திக்கும்என்பார் - பெண்களுக்குப்..*
பாலும் பெருகும்உள்ளே பற்றுதிரச் சிக்கல்விடும்...............*
ஏலுந் தராவின் இலைக்கு..[* தரா- துரா-எனமருவியது].()

(செந்தரா யிலையின்குணம்.)

அனில மூலையும் அரோசகமும் நீங்கும்...........................*
தனியான தோஷம்அது தாழுங் - கனிமொழியே.................*
? வெந்தாரைச்சூநிம்விடாயும்போந்தீபனமாஞ்[கொடியகூடும்
செந்தரா வின்தழைக்குச் செப்பு...[? நீர்த்தாரையைப்பற்றிய

(விஷமூங்கில் இலையின்குணம்.)

பிளவை * யுகிர்ச் சுற்று பெரும்படுவன் வீக்கம்...............*
அளவில்நோய் காதெழுச்சி ஆற்றும் - அளவையுரு...........*
தோங்கி வளர்ந்தமூலை யோவியமே நீண்டவிஷ... [விரணம்.
மூங்கில்இலை நன்மூலிமுன்....[* உகிர்ச்சுற்று-நகத்தைப்பற்றிய

கொடியின் இலைவகை- முற்றியது.

கீரை வகை.

(கருணைத் தண்டின்குணம்-இதுவே-சூரணத்தண்டு.)

சுத்தகு தாங்குரத்தைத் துட்டகபம் * மேதையதி............*
கத்தை விலக்குங் கறிஅமைக்கில்-பத்தியமாஞ் .. ..........*
சீரணத்தை யுங்கொடிய தீபனத்தை யுங்கொடுக்குஞ்... .....*
சூரணத்தின் தண்டெனவேசொல் [* மேதோதாதுவிர்த்தியை.]

(கீரைத் தண்டின்குணம்.)

தண்டுமெத்த வாய்வு தணியாத சீதளமாம்.....................*
விண்டுரைக்கில் சின்மேகமேய்போம் விள்ளவோ-கொண்டக்கால்*
நீர்க்கடுப்பு வெட்டையனல் நில்லாது நேரிழையே...........*
போர்க்கடுப்பி ரத்தமும்போம் போம்.................(ருஅச)

(வெண்கீரைத் தண்டின்குணம்.)

வெண்கீரைத் தண்டுவி யாதியற்ற நற்கறியாங் ..................*
கண்காண சோடிவிடுங் காந்தலெல்லாங் - கண்காணும்.......*
மூலம்அதற் கேற்கும் மூசியா எரிவகற்றுந் .....................*
* தாலமதில் அக்குணத்தைச் சாற்று[ * தாலம்-பூமி].(ருஅரு)

(செங்கீரைத் தண்டின்குணம்.)

செங்கீரைத் தண்டதுதான் தீராத பித்தத்தைத்..................*
தங்காமல் ஒட்டிவிடுந் தையலர்க்குப் - பொங்கும்..............*
பெரும்பாட்டை நீக்கும் பெரிய கறியாந்.......................*
தரும்பாட்டு வெப்பகற்றுந் தான்.........................(ருஅசா)

(மூளைக் கீரையின்குணம்.)

தளர்ந்தவர்க்கும் பாலருக்குந் தக்கவய தோர்க்கும் ..........*
இளங்கீரை நாவுக் கிதமாங் - இளம்பு.............................*
சுரகாசம் போக்குந் தொடர்பசிஉண் டாக்கும்.................*
பிரகாச மாயெடுத்துப் பேசு ..................................(ருஅஎ)

தே-(முள்ளிக் கீரையின்குணம்-இதுவே-குப்பைக்கீரை.)

நீரைப் பெருக்கிவிடு நீடனலைத் தானெழுப்பும்...............*
பாரநறுந் தங்கத்தைப் பஸ்பிக்கும் - நேரே.....................*
விடவிருக்கும் பொற்றட்டைமேவுமல்குன்மாதே.............*
* அடவிநிற்கு முள்ளிக்கீ ரை......[* அடவி-காடு]...(ருஅஅ)

(அறு கீரையின்குணம்.)

காய்ச்சல் குளிர்சந்நி கபநோய் பலபிணிக்கும்...............*
வாய்ச்ச கறியாய் வழங்குங்காண் - வீச்சாய்.....................*

தறுவுமோ வாயுவினங் காமமிக வுண்டாம்..................[யது
அறுகீரை யைத்தின் றறி.[* அறுகீரை-அறைக்கீரை-என-மருவி

( புளிச்சிறு கீரையின்குணம். )

தேகசித்தி யாகுஞ் சிறுகாசம் மந்தம்அறும்...................*
போகம்உறும் விந்துவும்நற் புஷ்டியுண்டாம் - வாகாம்......*
வெளிச்சிறுமான் நோக்கும்விழி மென்கொடியே நாளும்...*
புளிச்சிறு கீரையுண்ணும் போது.........................(௫௱௧)

( சிறு கீரையின்குணம். )

கண்புகைச்சல் நேத்திரநோய் காசம் படலம் ரசப்.............*
புண்கிரிச்ச ரஞ்சோபை பொங்குபித்தம் - மண்பரவு ......*
* தாவரவி ஷங்களும்போம் தாழாத் திருவும்உண்டாம்...[கள்
கூவுசிறு கீரைதனைக் கொள்...[* நாவி-பாஷாணமுதலியவிஷங்

( கலவைக் கீரையின்குணம். )

வாதபித்த ஐயத்தை மாற்றும் மலம்அறுக்கும்...... ...........*
ஓதுகுடல் வாதம்அதை ஓட்டுங்காண் - போதின்..............*
பலகலவைக் கோதாய்நற் பத்தியத்திற் கொவ்வும்....... ......*
பலகலவைக் கீரையுண்டு பார்..............................(௫௱௨)

( மணலிக் கீரையின்குணம். )

வாதம்அறும் நெஞ்சேறி வந்த கபம்விலகும்........... ......*
சீதமுடன் நோய்பலவுந் தீருங்காண் - போதவுள்ளே.........*
வீறு கிருமியொடு மேவாப் பயித்தியம்போம்...................*
கூறுமணலிக் கீரைக்கு ..... ........ ....... .. .........(௫௱௩)

தே-(நீர்ஆரைக் கீரையின்குணம்· இதுவே-ஆரைக்கீரை.)

தின்றால் உரிசைதருந் தீராப் பயித்தியத்தைப்..................*
பொன்றுத நீரிழிவைப் * புண்ணீரை - என்றும்இந்த.....*
ஊராரைச் சாராமல் ஓட்டிவிடும் நால்இதழாம்................*
நீராரைக் கீரையது நீ.[* புண்ணீர்-ரத்தம்-ரத்தப்போக்கை].()

( புளியாரைக் கீரையின்குணம். )

பித்த மயக்கம்அறும் பேருலகில் மானிடர்க் * க................*
நித்தம்அருள் வாதகபம் நேருமோ - மெத்தெனவே... ......*
மூலக் கிராணிஅறும் மூல உதிரம்அறுங்...... .......[டுக்கின்ற
கோலப் புளியாரைக் கு..[* அநித்தம்அருள்-மரணத்தைக்கொ

(வள்ளைக்கீரை-பருப்புக்கீரை-இவைகளின்குணம்.)

வள்ளைக்கீ ரைக் *கனிலம் மாறும்பால் உண்டாகும்...........*
* பிள்ளைப் பருப்பிலைக்குப் பித்தம்அறுங் - கொள்ளத்.......*
தெரியுங் கடல்சூழ் இத்தேசத்தோ ருக்குங்........ ..........*
கரிய குழலணங்கே காண்...[* அனிலம்-வாயு-பிள்ளை-இளமை]

(கொடிவசலைக் கீரையின்குணம்.)

போகம் மிகக்கொடுக்கும் போர்செய்கபத் தைப்பெருக்கும்*
ஆகம்அதிற் றூகம்அன லைத்தணிக்கும் - * மாகுடரின்........*
மன்னு மலம்இளக்கும் மாறு உரிசைதருந்............... ......*
இன்னுங் கொடிவசலை செப்பு[* மாகுடரின்-பெரியகுடலில்]

(பசலைக்கீரையின்குணம்-இதுவே-பசறை.)

நீர்க்கடுப்பு நீர்அடைப்பு நீங்காத மேகமும்இவ்...............*
ஊர்க்கடுத்து வாராமல் ஓட்டுங்காண் -பார்க்கவொண்ணு.....*
அற்பவிடை மாதே அரோசிசர்த்தி யைத்தொலைக்கும் ......*
நற்பசலைக் கீரையது நன்று..................................(ருகூஅ)

(பாற்சொரிக் கீரையின்குணம்.)

வயிற்றுக் கடுப்பு மலஞ்சீதம் பேதி..... ........ ... .......*
நியத்த ரத்தப் போக்கிவைநி றுத்துங் -குயத்தையொரு......*
பாற்சரியக் காட்டும் பருவ வணங்கரசே... ... ....... ........*
பாற்சொரிக் கீரையது பார்...[இதனைப்பாச்சுத்தி-என்பர்]..()

(சாணக்கிக் கீரையின்குணம்.)

கோழையொடு மாந்தம் குழந்தைச் சுழிக்கணமும்...........*
பேழையெனச் சொல்லும் பெருவயிறுங் - கீழ்ஒருவர்..... ..*
காணக் கிருமிகளைக் கக்கும் அளியுண்ணுஞ்.................*
சாணக்கிக் கீரையிற்போஞ் சாற்று..............................(சூ௱)

(துயிலிக் கீரையின்குணம்.)

சீதம் விளையுஞ் சிறுசிரங்கு புண்ணுமாங்.....................*
காது பழமலமுங் கட்டறுங்காண் - சீதக்.......................*
குயிலனையாய் வெட்டைபோங் கூறஅழ கில்லைத் ............*
துயிலி இலைக்கறிக்குச் சொல்..................................(சூ௱க)

(பண்ணைக் கீரையின்குணம்.)

பண்ணையிளங் கீரையது பற்று மலம்இளக்கும்......... .......*
எண்ணுங் குடலுக் கிதங்கொடுக்கும் - பெண்மணிகேள்.......*

சீதங் கரப்பான் சிரங்குபுண் மாற்றிவிடுங் ....................*
* கோதங் கிலையதனைக் கொள்....[* கோது-அங்கு-இல்லை]...()

( பரட்டைக் கீரையின்குணம். )

பரட்டை நறுங் கீரையது பத்தியத்திற் காகும்....................*
வெருட்டுகின்ற பித்தம் மிகமீறும் - புரட்டுங்....................*
கபமுடனே வாதங் கரப்பானும் ஏகுஞ்....................*
சுபவசன மாதேநீ சொல்....................(௲௫)

( கோழிக் கீரையின்குணம். )

சொறியுங் கரப்பானுந் தோற்றும் மேன் மேலுஞ்....................*
* செறியுங் கிருமிமிகச் சேரும் - எறிகின்ற....................*
ஆழிக்கீ டானவிழி யாரணங்கே வையகத்திற் ....................*
கோழிக்கீ ரைக்குணத்தைக் கூறு...[* செறிதல்-நெருங்கல்]()

( புளிப்புக் கீரையின்குணம். )

வாதம்அறும் பித்தம்உறும் மாறு அ ரோசிவிடுஞ்....................*
சீதம்உடனே அகலுஞ் சேயிழையே - போதப்....................*
புளித்த இலைக்கறிக்குப் போம்இரத்த பித்தங்....................*
களித்த கரப்பனறும் காண்....................(௲௬)

( பிண்ணாக்குக் கீரையின்குணம். )

மலம்இறங்கும் வாதமுடன் வல்கரப்பன் உண்டாஞ்....................*
சலம்இறங்கு மேகந் தணியும் - மலர்விழியாய்....................*
உண்ணாக்குக் கின்பமாம் ஓடும்அனல் வெதுப்பையெலாம்....................*
பிண்ணாக்குக் கீரைஉண்ட பேர்க்கு....................(௲௭)

( மூக்குளிக் கீரையின்குணம். )

ஐயம் மிகக்கொடுக்கும் ஆர்ந்தபோ கந்தருங்காண்....................*
மெய்அனலை எல்லாம் விலக்குமே - தையலே....................*
பேதி அளிக்கும் பெருமூக் குளிக்கீரை....................*
சீதம் விளைக்கும்எனச் செப்பு....................(௲௮)

( வெந்தயக் கீரையின்குணம். )

பொருமல் மந்தம் வாயு கபம் போராடு கின்ற....................*
இருமல் அருசியிவை ஏகுந் - தருணியிற்....................*
தீதி லுயர்நயனைச் சீறும் விழியணங்கே....................*
கோதில்வெந்த யக்கீரை கொள்....................(௲௯)

( கொத்துமல்லிக் கீரையின்குணம். )

கொத்துமல்லிக் கீரை உண்ணில் கோர அரோசகம்போம் ....*
பித்தம்எல்லாம்வேருடனே பேருங்காண் - சத்துவமாம் ...*
வெச்செனவே போகம் விளையுஞ் சுரந்தீருங் ........[வியது.
கச்சுமுலை மாதேநீ காண்[கொத்துமல்லி-கொத்தமல்லிஎனமரு

( போகம் விளைக்குங் கீரைகள். )

தாளி முருங்கைத் தழை தூதுளம் பசலை....................*
வாளில்அறு கீரையும்நெய் வார்த்துண்ணில் - ஆளியென....*
விஞ்சுவார் போகத்தில் விம்புளைத்த பெண்களெலாங்........*
கெஞ்சுவார் பின்வாங்கிக் கேள்...(கீரைவகை - முற்றியது.)...()

—()❀()—

மரத்தின் புஷ்பவகை.

( பச்சைக் குங்குமப்பூவின்குணம்-வி-ம். )

சங்கையின் மதுரதோஷஞ் சலதோஷம் பீநசங்கள்...........*
செங்கயற் கண்ணின்ரோஷஞ் செவித்தோஷம் பித்ததோஷங்*
கெங்கையாங் கபதோஷங்கள் கெஞ்சிடும் பச்சையான ......*
குங்குமப் பூவினாலே கோதையே யிதனைக்கொள்ளே..(சுஈயக)

( கொன்றைப் பூவின்குணம்-வெ-பா. )

மலக்கிருமி யோடும் மதுநீர் குடலாந்........................*
தலத்துநோ யுங்குலைந்து சாயும் - நிலத்திற்குள்..............*
என்றைக்கும் வாடாத வின்ப மலர்க்கொம்பே....................*
கொன்றைப் பசுமலரைக் கொள்...[இதுவே-சரக்கொன்றை]()

( மைக்கொன்றைப் பூவின்குணம். )

மைக்கண் விழியனமே வையகத்தில் எப்போதும்...........*
மைக்கொன்றைப் பூமேகம் மாற்றுங்காண் - மிக்கவதைக் ....*
கொண்டால் சலமேகங் கூகூவென் றேபதறி......................*
அண்டாதீ துண்மை அறி......................................(சுஈயரு)

( காட்டாத்திப் பூவின்குணம். )

உதிரக் கடுப்போ டுதிரக் கழிச்சல்.............................*
விதிரக் கடும்பேதி மேகம் - எதிர்நிற்க.......................*
மாட்டா தகலும் வனச மலர்த்திருவே..........................*
காட்டாத்திப் பூத்தனக்குக் காண்..........................(சுஈயசு)

( சண்பகப் பூவின்குணம். )

வாதபித்தம் அஸ்திசுரம் மாமேகஞ் சுத்தசுரந்..................*
தாதுநஷ்டங் கண்அழற்சி தங்காவே - மாதேகேள்..........*
திண்புறு மனக்களிப்பாந் திவ்யமணம் உட்டினஞ்சேர் ......*
சண்பகப் பூவதற்குத் தான்..............................(கூ௱௰௫)

( பாதிரிப் பூவின்குணம். )

பித்த சுரந்தணியும் பெண்வசியம் உண்டாகும்...... ........*
முற்றியதோர் வெட்டை முடியுங்காண் - மெத்தவுமே.......*
மாதுரியம் நீங்கா வசன மடவனமே..............................*
பாதிரியின் பூவைபுண்டு பார்................ ......(கூ௱௰௬)

( மந்தாரப் பூவின்குணம். )

மந்தாரப் பூகுளிர்ச்சி மன்னர் வசியமுமாம்.....................*
செந்தா மரைத்திருவே செப்பக்கேள் - மந்தாரங் .........*
கண்ணுக்கு மாகுளிர்ச்சி காணுங் கொதிப்பகற்றும் ..... .....*
மண்ணில்நறும் பூவெனவே வை...............................(கூ௱௰௭)

( புன்னைப் பூவின்குணம். )

புன்னைப்பூ பித்தம்என்பார் போராடு வன்மேகம்...... .......*
வின்னப்ப டாச்சித்த விப்பிரமம் --பின்னுங்.....................*
கரப்பான் சொறிசிரங்குங் காணு தகற்றும்........................*
உரப்பாம் மயக்கம்உண்டாக் கும்........................(கூ௱௰௮)

( மகிழம் பூவின்குணம்-இதுவே- வகுளம்பூ. )

வெகு * அனலம் ஆகும் விரகமிக உண்டாம்........................*
மூகர் அரோசி முறியும் - மிகவும்.................... .....*
மகிழச் சுரத வலைகாட்டு மாதே.................. ...........*
மகிழத் * துருமு மலர்க்கு...[ * அனலம்-தீ. * துருமம்-மரம்]

( பன்னீர்ப் பூவின்குணம். )

சர்த்திஅ ரோசகம்உள் தாதுநஷ்டம் மேல்வறட்சி.............*
தோத்த அழலும் ஒதுங்குங்காண் - எத்தரத்துந் ..................*
தன்னீர்மை குன்றுத் தளிர்வண்ண மாதரசே......... ........ *
பன்னீர் மரப்பூவைப் பார்......................... ..(கூ௱௰௯)

(குருக்கத்திப் பூவின்குணம்- இதுவே-மாதவி.)

சிரரோகந் தாகஞ் சிலேஷ்ம விரணம்.......................*
பொருபித்தம் பல்விஷமும் போக்கும் - வரிசேர்..............*

கருக்கொத்த வாள்விழியாய் கைப்புமதூ ரஞ்சார்
ஒருக்கத்திப் பூவின் குணம் (சூஉக)

(செந்தாழம் பூவின்குணம்.)

தலைநோய் சலதோஷஞ் சன்னுவகபங் காசம்
உலைவாதம் எல்லாம் ஒழிக்கும் - நிலைசேர்
திருந்துடற்குக் காந்திதருஞ் செம்மணமுஞ் சூடும்
பொருந்துகின்ற செந்தாழம் பூ (சூஉஉ)

(முருங்கைப் பூவின்குணம்.)

விழிகுளிரும் பித்தம்போம் வீறருசி யேகும்
அழிவிந்துவும் புஷ்டி யாகும் - எழிலார்
ஒருங்கையக லாக்கற் புடைவா ணகையே
மூருங்கையின் பூவை மொழி (சூஉங)

(அகத்திப் பூவின்குணம்.)

புகைப்பித்த மும்அழலாற் பூரிக்கும் அந்த
வகைப்பித்த மும்அனலும் மாறும் - பகுத்துச்
சகத்தி லருந்தாத் தனியமிர்தே நாளும்
அகத்தி மலருக் கறி (சூஉச)

(புளியம் பூவின்குணம்.)

பித்தத் துடனே பெருத்தஅ ரோசகம்போம்
மெத்தஎழும் வாந்திமி தத்துள்நிற்கும் - மெத்தக்
கனத்துப்பூ ரித்தமுலைக் காரிகைமேய வெற்பாரீ
வனத்துப் புளியம்பூ வால் (சூஉரு)

(இலுப்பைப் பூவின்குணம்.)

குன்று இலுப்பையின்பூ கூர்மதுரம் வாசனையாந்
தின்றால் பயித்தியமுஞ் சேருங்காண் - மன்றல்உறுந்
தார்குழலே பித்தசுரந் தாகந் தணிந்துவிடும்
வார்தயக்கம் எய்தும் வழுத்து (சூஉசா)

தே—(முள்முருக்கம் பூவின்குணம்.)

* கருப்பா சயத்திற் கறுத்துத் தடித்தே
பருத்தவுதி ரத்திரளைப் பஞ்சாய்த் - துரத்திவிடும்
பண்முருக்கு மின்பமொழிப் பாவா யுலகறிய
மூண்முருக்கம் பூவை மொழி [* கருப்பாசயம்-கருப்பப்பை]

(வாகைப் பூவின்குணம்.)

வாதசம னஞ்செய்யும் வல்விஷத்தைப் போக்கிவிடுஞ் ........*
சீதசிலேஷ்மத்தைச் சிதைக்குங்காண் - போதவுள்ளே ......*
* மாகைப்பை வைத்திருக்கும் மாநிலத்தி லேபெரிய........*
வாகைப்பூத் தன்னை வழுத்து [*மாகைப்பை-மிருந்தகசப்பை]

(தென்னம் பூவின்குணம்.)

மேகம் அகக்கொதிப்பு வீறுவி ரத்தபித்தம்.................. *
வேக அசிர்க்கரநோய் வீழ்பிரமி - தேகத்தில்.............*
வின்னம்பா லிக்கும் விஷபாகம் போகவென்றால்............*
தென்னம்பாளைப்பூவைத் தின்..............................(சூஉக)

(பனம் பூவின்குணம்.)

பனையில்உறு பூவதுதான் பங்கமுறுக் குன்ம..............*
வினைஅகற்றும் நீர்க்கட்டை மீட்கும் - முனையான ........*
* பன்னோப் ஒழிக்கும் பழஞ்சுரத்தைப் போக்கிவிடும்........*
மின்னே இதனை விளம்பு ..[* பன்னோப் - பல்லின்நோய்]()

தே—(வேப்பம் பூவின்குணம்.)

பித்தத் தெழுந்த பெருமூர்ச்சை நாத்தோஷஞ்................*
* சத்தத் தெழுவமனந் தங்கருசி - முற்றியகால்.............*
ஏப்ப மலகீட மிவை யேகு நாட்சென்ற ....................[ந்தி.
வேப்பமல ருக்கு வெருண்டு[ * ஒசையோடு எழும்புகின்றவா

(மாதுளம் பூவின்குணம்.)

வாந்திபித்த தோஷமொடு மாறாக் கடுப்பனலஞ்.............*
சேர்ந்துநின்ற மூலரத்தந் தீர்க்குங்காண் - மாந்தளிர்க்கை ..*
மாதேயி ரத்தபுஷ்டி வல்லபலன் உண்டாக்கும்..............*
பூதலத்துள் மாதுளையின் பூ...[மாதுளம்-மாதுளை-மாதளை]()

(வாழைப் பூவின்குணம்.)

வாழைப்பூ மூலரத்தம் மாபிரமி வெட்டைபித்தங்.............*
கோழைவயிற் றுக்கடுப்பு கொல்காசம் - *ஆழியனல் ..... *
கன்னளரி கைகால் எரிவுந் தொலைத்துடலில்...... ....[லைபெற
* மன்னவளர்க் குந்தாது வை[*வடவாமுகாக்கினி *மன்ன-நி

---

மரத்தின் புஷ்பவகை- முற்றியது.

[௰௪]

## செடியின் பூவகை.

### (ஆவாரம் பூவின்குணம்.)

தங்கம் எனவே சடத்திற்குக் காந்திதரும்.........................*
மங்காத நீரா வறட்சிகளை - * அங்கத்தாம்.........................*
மாவைக் கற்றுழை மணத்தை அகற்றிவிடும்..................... *
பூவைச்சேர் ஆவாரம் பூ [* உடம்பில்- பூக்கின்ற- உப்புமாவை]

### (கருஞ்செம்பைப் பூவின்குணம்.)

தலைக்குத்தல் ஐயஞ் சலதோஷம் வாதம்.........................*
உலைப் பீ நசமும்இந்த ஊர்க்குள் - நிலைக்கா.........................*
தருஞ்சண் பகநாசி யாயிழையே சுத்தக்...........................*
கருஞ்செம்பைப் பூஇருக்குங் கால்...............................(௬௯௫)

### (செம்பரத்தம் பூவின்குணம்.)

செம்பரத்தை மேகவெட்டை தீராப் பிரமியொடு.........................*
* வம்பிரத்த வெள்ளை வழுவழுப்பும் - வெம்பும்.........................*
பெரும்பாடு ரத்தபித்த பேதம் அகற்றுங்...........................*
கரும்பா மொழிமயிலே காண் ..[* வம்பு-நாற்றம்]...(௬௯௬)

### (அலரிப் பூவின்குணம்.)

வெப்பருசி குஷ்டம் விதாகஞ் சொறி சிரங்கு.........................*
செப்பிரத்தம் புண் பித்தஞ் சென்னியெரி - விப்படியில்....*
தங்குமோ கும்பத் தனத்தணங்கே வாசஞ்சேர்.........................*
கொங்கலரிப் பூப்பெயராக் கூறு...............................(௬௯௭)

### (செம்பருத்திப் பூவின்குணம்.)

செம்பருத்திப் பூஅழலைத் தீயரத்த பித்தத்தை.........................*
வெம்புவயிற் றுக்கடுப்பை விந்துவை * நீற் - றம்பெனச்செய்
மேகத்தை வெட்டையை விஷ-சிமுதத் பேதியையுள்.........*
தாகத்தை ஓட்டிவிடுந் தான்...[* நீற்றுச்சலமாகச்செய்கின்ற]

### (நந்தியாவட்டப் பூவின்குணம்.)

காசம் படலங் கரும்பாவைத் தோஷம் எனப்.........................*
பேசுவிழி நோய்கள்தமைப் பேர்ப்பதன்றி - ஓசைதரு......*
தந்திபோ லேதெறித்துச் சாருமண்டை நோய்அகற்றும்.....*
நந்தியா வட்டப்பூ நன்று...............................(௬௯௮)

### (துத்திப் பூவின்குணம்.)

துத்தி மலரைநிதந் * துய்க்கின்ற பேர்களுக்கு.........................*
மெத்தவிந்து வும்பெருகும் மெய்க்குளிருஞ் - சத்தியமே....*

வாயால் விழும்இரத்தம் மாறும் இருமல்அறும்................*
தேயா மதிமுகத்தாய் செப்பு[* துப்த்தல்-உண்டல்] . (௲௪௰)

( செவ்வந்திப் பூவின்குணம். )

அலைமயக்கஞ் சுற்றல்அறும் * அட்சிக் கொளியாந்............*
தலைமயிர்உண் டாம் அனலஞ் சாரும் -நிலைமணமாம்..........*
ஒவ்வந்தி வான்பிறையை யொத்த நுதற்றிருவே................*
செவ்வந்திப் பூஅதனைச் செப்பு......[* அட்சி-கண்] ..(௲௪௧)

தே--( தும்பைப் பூவின்குணம். )

தாகங் கடிதொழியுஞ் சந்நிபாதங்கள் அறும்..................*
ஆகந் தனில்விழிநோய் அண்டுமோ - மாகந்த.................*
வம்பைப் பிறுங்குயத்து மாதேநின் செங்கரத்தால்.............*
தும்பைப்பூத் தன்னைத் தொடு.........................(௲௪௨)

( வேளைப் பூவின்குணம். )

கணமாந்தம் வாதங் கபக்கோவை கோழை......................*
* அணுமாந்த வெப்பும் அகலும் -மணமாரும்................. *
பாளைக் குழலே பசிமெத்த உண்டாகும்.......................*
வேளைப்பூ என்றுருக்கால் விள்.[* சேரும்-மாந்தசுரமும்]..()

( சிற்றுமனைப் பூவின்குணம்- இதுவே-பன்னீர்ப்பூ. )

சிற்று மனைப்பூவால் சேர்ந்தமலக் கட்டுவிடும்..............*
உற்றவெப்பு தாகம்அழி ஒக்காளஞ் - சற்றும்விடா ..........*
மூல எரிவு ரத்த மூத்திரம் வயிற்றிசிவும்..................*
ஞாலம்விடத் தேகும் நவில் ...[ இதனை-ரோசாப்பூ-என்பர்]..()

( களாப் பூவின்குணம். )

கண்ணிற் படருங் கரும்படலம் வெண்படலம்..................*
வண்ண உதிரப்படலம் வன்சதைகள் * எண்ணற்................*
களவிறேய் போக்கும் அணங்கே சிறிய.......................*
களவினது பூவொன்றுங் காண்(செடியின் பூவகை-முற்றியது.)

---

கொடியின் பூவகை.

தாமரைப் பூவின்குணம்.

பருத்தநற் றாமரைப்பூ பல்வாந்தி நோயைத் .................*
துரத்திவிடும் இன்னுஞ் சொலவோ - கரத்தில்..............*
எடுத்தணைக்கக் கண்குளிரும் எகுஞ் சுரமும்................*
எடுத்த வி தாகமும்போம் என்......................(௲௪௫)

( வெள்ளைத்தாமரைப் பூவின்குணம். )

சூலைப் பற்றிமிக ஏறுகின்ற வெப்பமும்போங்...............*
கோர மருந்தின் கொடுமைஅறும் - பாருலகில் ..............*
‡ தண்டா மணத்தையுள்ள தாழ்குழலே காந்தல்விடும்........*
வெண்டாமரைப் பூவால் விள். [ ‡ நீங்காதமணத்தை]....(௬௪௭)

( அல்லிப் பூவின்குணம். )

மேகம் அறும் புண்ஆறும் விட்டேகும் நீரிழிவு..................*
தாகந் தணியுந் தழல்அகலும் - வாகான..........................*
மெல்லியலே ஆயுண்மறை வேதியசொல் லாம்உரைக்கும் ......*
அல்லி மலரால் அறி............................................(௬௪௮)

( செவ்வல்லிப் பூவின்குணம். )

செவ்வல்லிப் பூவுக்குச் சேர்ந்திறங்கு நீர்ப்பிணியோ.........*
டொவ்வும்மேகப்பிணியும் ஒய்வதன்றி - இவ்வுலகிற்............*
கண்ணின்நோய் தீருங் கனத்தபித்த ரத்தமொடு...............*
புண்ணின்நோய் பன்னோயும் போம் ........................(௬௪௯)

( கழுநீர்ப் பூவின்குணம். )

உடற்குக் குளிர்ச்சியதாம் உள்உழலை மாற்றும்.............*
அடற்கபஅரோசகத்தை ஆற்றுங் - கடற்குள்..................*
எழுநீர்க் குமிழி யிகழு முலையாய்...........................*
கழுநீர் மலர்எனவே காண்.. [இதுவே-செங்குவளைப்பூ].(௬௫௰)

( சாதிப் பூவின் குணம்-இதுவே-பிச்சிப்பூ. )

முத்தோஷஞ் சென்னிவலி மூடுஞ்சுரவெப்பம்..................*
ஒத்த விழிகளின்நோய் ஓடுங்காண் - நித்தம்................*
விலகாத காந்தியுண்டாம் மேனிதனில் வாசங்..................*
குலவுசா திப்பூவுக் கு .........................................(௬௫௧)

( மல்லிகைப் பூவின்குணம். )

போகமிக உண்டாகும் பொங்குகபங் * கட்பிரமை.............*
ஆகஅனல் சூனியமும் அண்டுமோ - பாகனையாய்.............*
மன்னு ० திருவசியம் வாய்க்குஞ்சூடென்றெவரும்..............*
பன்னுமல்லி கைப்பூவாற் பார்[* கண்பிரமை.० திரு-லட்சுமி]

( முல்லைப் பூவின்குணம். )

முல்லையெனும் ஊசிமல்லி மொய்த்தமலர் எவர்க்கும்.........*
* ஒல்லைமன நோயை ஒழிக்குங்காண் - மெல்ல..............*

அழலைத் தணிக்கும் அரோசகத்தைப் போக்கும்...............*
மழலைமொழி யாயறிந்து வை...[ * ஒல்லை விரைவு] ...(௬௫௩)

( வெட்சிப் பூவின்குணம். )

வெட்சிப்பூ மேகஅழல் விட்டோட்டும் வாசனையாம்..........*
அட்சிவழி யாயுயிர்கொள் ளாரணங்கே - ! எச்சுஞ் ..........*
சுரமுடனே தாகந் தொலைக்கும் உலகில்.......................*
விரைவாய் இளைப்பகற்றும் விள்...[ ! எச்சு-அதிகம்] ..(௬௫௪)

தே--( தாதுளம்-பூவின்குணம். )

புஷ்டியுண்டாந் தாதுவுமாம் பொங்கழகோ ०டாற்றன்மிகும்*
முட்ட நராத்து முதிர்ந்தவனைக் - கட்டழகு.................*
* மாதுளத்தி னீங்காது வைத்திடவும் எண்ணம்உற்றால்......*
தாதுளத்தின் பூவுண்ணச் சொல்[० ஆற்றல்-பலம்.* ஸ்திரியின்

( வெங்காயப் பூவின்குணம். ) [உள்ளத்தில்

வயிற்றுச் சிறுநோயை வாத வலியை..............................*
உயித்தியஞ் செய்யாமல் ஓட்டும் - குயிற்றுத..... ... ........*
சிங்காரக் கொங்கைச் செழுந்திருவே நாட்டினுறை............*
வெங்காயப் பூஎனவே விள்.....(கொடிப்பூவகை-முற்றியது)

---

மரத்தின் பிஞ்சுவகை.

( வாழைப் பிஞ்சின்குணம். )

உதிரம் விழுகடுப்போ டுண்மூல ரத்தம்.........................*
எதிரில்விழு நீரிழிவும் ஏகும் - மதிநுதலே....................*
? பேழை வயிற்றுப்புண் பேருந் துவர்ஆர்ந்த...... .........*
வாழைக்கச் சற்கு மருண்டு...[ ? பேழை-பெரிய]....(௬௫௭)

( பலாப் பிஞ்சின்குணம். )

தாகம்போம் வந்தபித்தஞ் சாந்தமாம் ஆடவர்க்குப் .........*
போகம் மிகப்பொழியும் பொய்யன்றே - மூகம்............*
அலஜமந்தங் குன்மம்இவை அண்டிவருஞ் சொன்னேன்......*
* கலசப்ப லாப்பிஞ்சுண் காண்...[* கலசம்- பால்]...(௬௫௮)

( அத்திப் பிஞ்சின்குணம். )

மூலக்கி ராணிஅறும் மூலவிரத் தந்தீருஞ்.......................*
சாலக் கடுப்புந் தரிக்குமோ - மாலரவத்.........................*
துத்திப் படவல்குற் றேகாய் துவர்ப்பைஉறும்..............*
அத்திச் சிறுபிஞ்ச ருந்து.........................................(௬௫௯)

தே—(முருங்கைப் பிஞ்சின்குணம்.)

* சிக்குருக்கு யப்பிஞ்சத் திச்சுரத்திற் குஞ்சநிக்கும்..........*
அக்குருக்கு ருப்பம் அரோசிகட்குஞ் - சுக்கிலத்தின்.........*
! கொச்சை * யுறவருந்திக் கூறுவற்கு மாமதனைப்...........*
பச்சை யுற ? வருந்திப் பார்..[* சிக்குரு-முருங்கை-குயம்-இளமை-*அக்கு-எலும்பை-உருக்கு-உருப்பம்-உருக்குகிற-வெப்பம்.! கொச்சை-இளைத்தல். ? அருந்தி-உண்டு.]

(மாம்பிஞ்சின்குணம்-இதுவே-சூதப்பிஞ்சு.)

* கவைவாத பித்த கபம்அருசி வாந்தி.......................*
சுவைமறுத்த மந்தமெனுந் தோஷம் - இவையெல்லாங்.....*
காதத்துக் கப்புறம்போங் கான மடமயிலே...[சிறுமாம்பிஞ்சு
சூதத்தின் * புன்வடுவைத் துய்[* கவை-தொந்தம். * புன்வடு-

(நாரத்தங் கச்சலின்குணம்-இதுவே- போசனகஸ்தூரி.)

சீதம் விளையாது தீபனமும் உண்டாகும்.....................*
போத வயிற்றுப் பொருமலும்போம் - மாதேகேள்........*
எச்சும் வயிற்றில் எரிப்புமூச்சாம் நாரத்தங்...............*
கச்சல் தனை அருந்துங் கால்..............................(௩௩௨)

(இதுவுமது.)

அன்னம் இறங்கும் அரோசிகெடுந் தீபனமாம்................*
* வன்னமிகுந் தாதுவும்வ ளர்ந்தேறும் - மன்னுமலர்......*
வாசனையே றுங்குழலீர் வன்றேய் தனில்உண்ணும்..........*
போசனகஸ் தூரிக்கெப் போதும்..[*வன்னம்-நிறம்],(௩௩௩)

(மாதுளம் பிஞ்சின்குணம்.)

மலக்கழிச்சல் சீதத்தால் வந்த கழிச்சல்.....................*
சலக்கழிச்சல் * சோரியாற் சாரும் - பலக்கழிச்சல்...........*
மாளும் புளிப்பான மாதுளம்பிஞ் சால்அயிலை..............*
ஆளுங்கண் மாதே அறி.....[* சோரி-உதிரம்]......(௩௩௪)

(முகிழ்விரியாக்கத்தரிப் பிஞ்சின்குணம்.)

ஊனலுடனே பித்தம் அகலும் மலம்போந்.......................*
* தொனியுண்டாம் ஐயந் தொலையுஞ் -சனியாத................*
முத்திருக்கும் வெண்ணகையீர் மூடு முகிழ்விரியாக்..........*
கத்தரிப்பிஞ் சுண்பவர்க்குக் காண்[* தொனி-குரலின்ஓசை].()

தே—( அவரைப் பிஞ்சின்குணம். )

* கங்குலுண விற்குங் ? கறிக்கு முறைகளுக்கும்.........*
பொங்குதிரி தோடத்தோர் புண்சுரத்தோர் - தங்களுக்குங்...*
; கண்முதிரைப் பில்லநோய்க் காரருக்குங் * காழுறையா.....*
வெண்முதிரைப் பிஞ்சாம் விதி....[* இராக்காலப்போசனத்தி
ற்கும். ? உண்ணும் மருந்துகளுக்கும். ; கண்ணில்- முதிர்ந்த-ஐ-
நீர்ப்பில்லநோய்க்காரருக்கும் - * விதையில்லாத வெள்ளை அவ
மரத்தின் பிஞ்சுவகை- முற்றியது. [ரைப்பிஞ்சு.
மரத்தின் காய்வகை.

( வாழைக் காயின்குணம். )

வாந்திபித் தம்பேதி வாய்நீர் வயிறுளைதல்..................*
ஆர்ந்தஅன லங்காசம் அண்டாதாஞ் - சூழ்ந்தேறு...........*
* செம்புனலுந் தென்பும்உண்டாந் திண்டிமிகப்பெருகும்..*
அம்புவியுள் வாழைக்காய்க் காய்...[* செம்புனல்-உதிரம்]...()

( பலாக் காயின்குணம். )

உண்ணில்மிகு மந்தம் உறுதியாம் வாதநோய்...................*
அண்ணும் இளைப்பிளைப்பும் அண்டுங்காண் - வண்ணப்......*
பலாக்காய்க்கு விந்துவுமாம் பாரிலுவமை......................*
சொலாக்காம வாரிதியே சொல்.............................(௲௲௮)

( அத்திக் காயின்குணம். )

அத்திக்காய் தன்னை அருந்திஞல் ஆரணங்கே....................*
எத்திக்கும் மேகம் இருப்பதுண்டோ - சத்திக்கும் ..........*
வாதம் அகலும் மலங்கழியுஞ் சூலையொடு ...............[பமும்
* மீதனலும் புண்ணும்போம் விள்...[* மீதனலும்-சீரவெப்

( முருங்கைக் காயின்குணம். )

சொல்லும் பிணியெல்லாந் * தோல்வியாம் ஐயம்அறும்......*
பல்லுயிர்க்குந் தாதுமிகும் பத்தியமாம் - வில்லார்..........*
பெருங்கைக்கா மன்றுதிக்கும் பெண்ணே நறிய................*
முருங்கைக்காய் தன்னை மொழி...[ *தோற்றுவிடும்]...(௲௭௯)

( அருநெல்லிக் காயின்குணம். )

அருநெல்லிக் காய்குளிர்ச்சி யாம்பித்தம் போக்கும்.........*
மருவுதுவர்ப் பால் * துரிசை மாற்றும் - விரியுலகில்.......*
தாகத் துயர்நீக்குஞ் சார்இருமலைத் தொலைக்கும்...........*
ஆகக் கொதிப்பகற்றும் ஆங்கு...[ * துரிசு-துன்பம்] .(௲௭௪)

(நெல்லிக் காயின்குணம்.)

பித்தமனலயம் பீநசம்வாய் நீர்வாந்தி..................*
மத்தமலக் கட்டும் மயக்கமுமில் - ஒத்த* வுரு .............*
வில்லிக்கா யம்மருங்கா * மென்னாட்கா லந்தேர்ந்தே..........*
நெல்லிக்கா யம்மருந்து ணி [* உருவில்லிக்காயம்-மருங்காம்-ம ன்மதன் சரீரத்தினுடைய அழகு உண்டாம்.* எல்நாள்- காலம். பகற்காலத்தை- தேர்ந்து-அறிந்து- நெல்லிக்காய் -நெல்லிக்கா யாகிய-மருந்து-அமிர்தத்தை- உண்-நீ-நீ-உண்.]

(இதுவுமது.)

நெல்லிக்காய்க்குப் பித்தம் நீங்கும் அதன்புளிப்பால்..........*
செல்லுமே வாதம்அதிற் சேர்துவரால் - சொல்லும்ஐயம்....*
ஓடும்இதைச் சித்தத்தில் உன்ன அனலுடனே.......................*
கூடுபிற மேகமும்போங் கூறு ...................................(௬௭௩)

(புளியங் காயின்குணம்.)

சோபமொடு பித்தந் தொலைக்கும் உரிசைதருங்...............*
கோபமுற வாயுவையே கொண்டாடுந் - தாபக்...............*
கருப்பமட வார்க்குக் கனவிருப்பம் உள்ளே...............*
பருப்பைஉருப் பைம்புளியங் காய்.............................(௬௭௪)

(மாங்காயின் குணம்.)

தாதுநஷ்டம் வாதந் தனிக்கிரந்தி யாம்பசிபோங்...............*
காதுமுட்டப் பக்குவிடுங் * காயமதில் - ஓதுகின்ற...........*
* பாங்காறுப் புண்வளரும் பற்கூசுஞ் சொற்குளறும்.........*
மாங்காய்உண் பாரை மறு. [* காயம்-உடல். * பாங்கு-பக்கம்.]

(மரியங் காயின்குணம்-இதுவே-புளிமாங்காய்.)

வாயின் கசப்பகலும் மாறு அரோசகமும்.......................*
ஓயுஞ் சுரத்தோர்க் * குவப்பாகுந் - தூயவரித்...............*
தேனமரும் வார்கூந்தற் றெய்வப் பெடையனமே........[காடு
? கானமரி யங்காயைக் கண்டு [* உவப்பு-சந்தோஷம். ? கானம்-

(பச்சைக் கடுக்காயின் குணம்-இதுவே-அரிதகிக்காய்)

பச்சை அரிதகிக்காய் பண்ணும் வகைகேளாய்..................*
இச்சை உறத் * துவைத்துப் பிட்டமுத்தி - வைச்செடுத்துத்*
தின்னஅரோசிஅறுந்தீபனமாம்முன்மலம்போம்[ப்புசேர்த்து
அன்னநடை மாதே அறி [* துவைத்து-இடித்து-உப்புஇட்டு-உ

(கொடியெனுமிச்சங் காயின்குணம்.)

வாந்தி மயக்கம் வயிற்றுக் கழிச்சல்அனல்..........................*
சேர்ந்த அரோசகமுந் தீருங்காண் - தீர்ந்த..........................*
தொடியமரு மங்கையிளந் தோகாய் * அடவிக்..........................*
கொடியெனுமிச் சங்காயைக் கூறு...[* அடவி-காடு].(௬௭௮)

(எலுமிச்சங் காயின்குணம்)

தீதில்எலு மிச்சங்காய் சேர்முத்தோ ஷத்தையும்உள்..........*
வாதகபஞ் சூலையையும் மாகொடிய - சாதியெனுஞ்..........*
சர்த்திகுன் மத்தையும்உள் தங்கமருந் திட்டதையும்..........*
பித்தவெப்பை யுந்தணிக்கும் பேசு..........................(௬௭௯)

(கலுமிச்சங் காயின்குணம்.)

தந்தம்விழப் பண்ணுஞ் சலவை தனைக்கொடுக்கும்..........*
வெந்துமிக விந்துவைவி ழச்செய்யும் - அந்த..........*
எலுமிச்சங் காய்போல் இருக்குங் கொடிய..........................*
கலுமிச்சங் காய்க்குணத்தைக் காண்..........................(௬௮௰)

(நாரத்தங் காயின்குணம்.)

நன்றி யுறவுலகில் நாரத்தங்காய் அருந்த..........................*
வென்றி தரும்புளிப்பால் மெய்ச்சுத்தம் - அன்றியுமோ.....*
வாதமொடு குன்மம்அறும் * வாற்கிருமி யும்போகும்........*
காதலுறு தீபனமாங் காண்...[* வால்-வாலுள்ளபுழு] (௬௮௧)

(கடாரநாரத்தங் காயின்குணம்.)

பித்தமொடு வாயிற் பெருகறல் அரோசகம்போம்..........*
பத்தியமாம்நோயிற் * பருகலாங் - குத்துங்..........................*
கடாரி யனையவிழிக் கன்னிமட மாதே...............[நாரத்தை
கடார * நரந்தங்காயைக் கண்டு[* உண்ணல்-பருகல்·நரந்தம்-

(கொளுஞ்சிநாரத்தங் காயின்குணம்-இது-கொடிநாரத்தை.)

சொல்லுங் கொளுஞ்சிக்காய் தோன்றுகின்ற காசத்தை..........*
வல்லஉள் சீதத்தை * மாருதத்தைப் - பொல்லாத..........*
ஐயத்தைத் தாகத்தை அப்பொழுதே நீக்கிவிடும்..........*
வையத்துட் பெண்ணரசே வாழ்த்து...[* மாருதம்-வாயு]..()

மரத்தின் காய்வகை- முற்றியது.

செடியின் காய்வகை.

தே-( கத்தரிக் காயின்குணம் - வி-ம். )

* பண்டுமாண்ட கிரந்தியைப் பாலிக்கும்..........................*
உண்டகைக்குந் தினவை யுண்டாக்கிடும் ..........................*
நண்டுகெட்டுங் குரங்கென நாளுமாங்.......... ...................*
கண்டுவிட்டது கத்தரிக் காயதே...[* மூன்புநீங்கிய] .(௬௮௪)

(கத்தரிக்காய்- அதின்பிஞ்சு-இவைகளின் குணம்-வெ-பா)

கத்தரிக்காய் பித்தங் * கனன்றகபந் தீர்த்துவிடுந்...............*
தொத்து சொறிசிரங்கைத் தூண்டிவிடும் - மெத்தவுந்தான்..*
பிஞ்சான கத்தரிக்காய் பேசுமுத்தோ ஷம்போக்கும்.........*
மஞ்சார் குழலே வழுத்து....[ * கனன்ற-கோபித்த]...(௬௮௫)

( கண்டங்கத்தரிக் காயின்குணம். )

ஐயம் அறுந்தீபனமாம் ஆமமலக் கட்டுகளும்.................*
பையவெளி ஆகிவிடும் பார்மீதிற் - செய்யமலர்த்...........*
தொத்திருக்கும் வார்குழலே * தூமண லாருங்கண்டங்.......*
கத்தரிக்கா யைப்புசிக்குங் கால்...[* தூமணல்-வெள்ளைமணல்]

( முள்ளிக் காயின்குணம். )

வாதபித்த ஐபத்தை மாற்றும் அனல்போக்கும்.. ..............*
ஓது சுவாசத்தை ஓட்டுங்காண் - பூதலத்துள்....................*
துள்ளிப்பாய் கெண்டைவிழித் தோகாய்கள் எப்போதும்..*
முள்ளிக்காய் செய்யும் முறை...............................(௬௮௭)

( கொத்தவரைக் காயின்குணம். )

கொத்தவரைக் காய்பித்தங் கூடாது பத்தியத்தில்..............*
மெத்தெனவும் ஐயம் விளைக்குங்காண் - பித்தத்தால்.........*
சீதம் அகற்றும்என்பார் தின்மருந்தைப் பாழாக்கும்.........*
வாதக் குடைச்சல்தரு மால்... ..............................(௬௮௮)

( வெண்டைக் காயின்குணம்-இதுவே-வெண்டைக்காய்· )

கண்ட கிராணி கடிய அதிசாரம்..................................*
விண்டவெண் சீதரத்தம் மேவுங்காண் - ஒண்டொடியே.....*
வண்டறகாம் வெய்யகப வாதமிகும் வாய்க்குணவாம்.........*
வெண்டைக்காய் உண்பார்க்கு விள்............ ..........(௬௮௯)

( மணத்தக்காளிக் காயின்குணம். )

மலம்இளகுந் தானே மகாகபமும் போகும்........................*
பலமிகுந்த வாதம்போம் பார்க்குள் - மலைபோற்..............*

பணைத்துப்பூ ரித்தமுலைப் பாவாய்கேள் நல்ல............*
மணத்தக்கா ளிக்காயை வாழ்த்து............................(௲௯௰)

( மணத்தக்காளி வற்றலின்குணம். )

நீர்ப்பேதி யாகும் நிலை ? வமனம் போம்வாயிற்.............*
கூர்ப்ப இலைப்பும்அறுங் கூறுவதோ - பார்க்கிலினும்.......*
மிக்கான நோயோர் விரும்புகின்ற நல்லமணத்..............*
தக்காளி வற்றலுக்குத் தான்... ..[ ? வமனம்-வாந்தி]..(௲௯௧)

( சுண்டைக் காயின்குணம் )

நெஞ்சின் கபம்போம் நிறைகிருமி நோயும்போம்... .......*
விஞ்சுவா தத்தின் விளைவும்போம் - வஞ்சியரே..............*
வாயைக் கசப்பிக்கும் மாமலையில் உள்ளசுண்டைக் .. ........*
காயைச் சுவைப்பவர்க்குக்காண்.......................(௲௯௨)

( சுண்டைக்காய் வற்றலின்குணம். )

பித்தஅ ரோசகம்போம் பேராப் புழுச்சாகும்...............*
உற்ற கிராணிஅறும் உட்பசியாஞ் - சத்தியமாய்ப்.........*
பண்டைக் * குதஆமம் பற்றறும்இங் கியானையுந்தான்..[ சீதம்
சுண்டைக்காய் வற்றல்உண்ணச் சொல்[* குதம்-ஆசனம்-ஆமம்

( பாவட்டங் காயின்குணம். )

வாத சுரந்தணியும் வாய்அருசி ஏகிவிடுஞ்.................*
சீதக் கடுப்பகலுந் தேமொழியே - * வாதுபுரி...............*
பித்தஅதி சாரமொடு பேராக் கபமுமறும் ..................*
உற்றபா வட்டங்காய்க் கு[*வாதுபுரி-வாதுசெய்கின்ற](௲௯௩)

( களாக் காயின்குணம்-இதனைக்- கிளாக்காய்-என்பர். )

காதுவிடாய் தாகங் கடியபித்தம் வாந்தியும்போம்.......... ..*
மாதே அரோசகமும் மாறுங்காண் - ! தீதாம்...............*
இரத்தபித்தம் போகும் இனிய களாக்காய்க்..................*
குரத்த பசியும்உண்டாம் ஓது ..[களா-கிளாஎனமருவியது]..()

( ஊமத்தங் காயின்குணம். )

வாதம்அறும் பித்த மயக்கம்உறும் மாநிலத்தில்..............*
தீது கரப்பான் சிரங்ககலுங் - கோதாய்கேள்.......... .........*
மாமத்த மாகும் வறட்சிஎல் லாம்போகும் ....................*
ஊமத்தங் காய்க்கென் றுரை..(செடியின்காய்வகை-முற்றியது)

## கொடியின் காய்வகை.

(கலியாணப் பூசினிக்காயின்குணம்.)

பெரும்பூ சினிக்காய்க்குப் பித்தமொடிட் காய்ச்சல்*
அருஞ் * சார நீர்க்கட் டருகல் - மருந்திடுதல்*
பித்தசுரம் அஸ்திசுரம் பேய்வறட்சி மேகமும்போம்*
மெத்த அனிலம்உறும் விள்.........[* சாரம்-உப்பு]...(௬௧௭)

(பறங்கிக் காயின்குணம்-இதுவே-பூசினிக்காய்.)

* அனல்அழலை நீக்கும் அதிபித்தம் போக்குங்*
கனல்எனவே வன்பசியைக் காட்டும் - புனல்ஆரும்*
மிக்கஐயம் உண்டாக்கும் மென்கொடியே எப்போதும்*
சர்க்கரைப்ப றங்கிக்காய் தான் .[*அனலால்வரும்அழற்சியை.]

(குழிப்பறங்கிக்காயின்குணம்-இதுவே-கோடைப்பூசினி)

வாதக் குடைச்சலுறும் மாருத ஐயமுமாம்*
போத ? வளிச் சூலையுண்டாம் பொற்கொடியே - ஓதுங்*
குழிப்பறங்கிக் காய்க்குக் குளிர்ச்சி நிறையும்*
பழிக்கடுத்த மாந்தமிகும் பார்...[? வாதசூலைநோய்].(௬௧௮)

(குமட்டிக் காயின்குணம்-இதனை-மூலாங்காய்-என்பர்.)

தந்தம் விழுந்திடுமே தாது மெலிந்திடுமே*
விந்தைமிகுங் காந்தி விலகிடுமே - சந்ததமும்*
வாதம் மிகுந்திடுமே வந்துகபஞ் சேர்ந்திடுமே*
ஓதுகுமட் டிக்காயால் உன்.....................(௬௧௯)

(சுரைக் காயின்குணம்.)

வாதபித்தம் வாய்அருசி வன்பிலீ கஞ்சீதம்*
* ஓதிருத்து நோயும்உண்டாம் உள்ளனல்போம் - ஓதத்*
திருப்பாற் கடற்றிருவே தீக்குணத்தை மேவுஞ்........[ர்பு
சுரைக்காயைத் தின்பவர்க்குச் சொல்[* ஓதுகின்ற-இருத்து-மா

(வெள்ளரிக் காயின்குணம்.)

! உண்டருந்தத் தீஎழுப்பும் உண்மருந்தைத் தான்முடிக்கும்*
கண்டகரப் பானைக் கடிக்குங்காண் - பண்டிதரோ*
உள்ளரிப்பை நீர்க்கடுப்பை ஊரைவிடத்தோட்டிவிடும்[சியாம்
வெள்ளரிக்கா யின்குணத்தை விள்[! புசித்தஉடன் - உண்ணப்ப

(வெள்ளரிப்பிஞ்சு-காய்-பழம்-விதை-இவைகளின்குணம்.)

பிஞ்சுவெள்ள ரிக்காய்க்குப் பேசுதிரிதோஷம்போம்*
வஞ்சியரோ முற்றியகாய் வாதமுமாம் - நஞ்சகனி*

உண்டாற் சயித்ரியமாம் உள்ளிருக்கும் அவ்விதையைக்......*
கண்டாலும் நீர்இறங்குங் காண்.......................(௭௱௩)

( கக்கரிக் காயின்குணம்-இதுவே-முள்வெள்ளரிக்காய். )

கக்கரிக்காய் பித்தங் கடியுங் கபமுயர்த்தும்.....................*
மெய்க்குக் குளிர்ச்சிதரும் மென்னுதலே - மூக்குகின்ற.....*
மூல அழல்தணிக்கும் மூடிரத்த பித்தத்தைச்................*
சால அகற்றிவிடுஞ் சாற்று.........................(௭௱௪)

( ஆகாயக்கக்கரிக் காயின்குணம். )

ஐயம் விளையும் அழல்கரப்பான் பித்தமும்போம் ............*
மெய்யுள் அதிபோகம் விளையுங்காண் - செய்மருந்தின்......*
காந்தியும்போம் ஆகாயக் கக்கரிக்காய் தின்றவர்க்கு..........*
வாந்தியும்போம் மாதே வழுத்து........................(௭௱௫)

( அவரைக் காயின்குணம். )

கொட்டை அவ ரைக்காயால் கோர அரோசகநோய் .........*
கிட்டாதென் பார்மருந்தின் கீர்த்திகெடுந் - துட்டமந்தம்...*
பையஉண்டாம் பேதிஉண்டாம் * பாரிப் பனிலம்உண்டாம்..*
ஐயம்உண்டாஞ் சூலையும்உண் டாம்..[ * பாரிப்பு-அனிலம்...()

( வாள் அவரைக்காயின்குணம். )

அதிபித்தம் வாந்தி அரோசகமும் உண்டாங்.....................*
குதிவாதம் * வாய்ச்சுரப்புங் கூடுந் - சூதிசக்ர....................*
வாளவரை யொத்த வனமுலைமா தேபெரிய...................*
வாளவரைக் காயால் மதி.....[* வாயில் நீர்சுரக்குதலும்]...()

( பீர்க்கங் காயின்குணம் )

தின்றவுடன் பீர்க்கங்காய் சீதம்உறுங் காண் பித்தம்...............*
ஒன்றுமூன் றாக உயருமே - மன்றலணிக்......................*
காரளகக் கச்சுமுலைக் காரிகையே * வாதகபம் ........[பிசகும்
நேர்அளவைத் தாண்டும் நினை....[* வாத கபங்கள் தத்தம்நிலை

( புடலங் காயின்குணம். )

போகம் விளையும் பொருந்தி வளரும்ஐயம்......................*
ஆகம்அதிற் பித்தம் அணுகுங்காண் - மேக.............*
படலங் கவியளகப் பாவாய்கேள் நாளும்........................*
புடலங்காய்க் குள்ள புகழ்.............................(௭௱௯)

(பன்றிப்புடலங் காயின்குணம்.)

கரப்பான் சொறிசிரங்கு காணுஞ் சிலத்தி……*
உரப்பாம் ? விஷக்கடியும் உண்டாம் - உரைத்தவகை……*
அன்றிச் சயித்தியமும் ஆம்பன்றி தன்னையொத்த……*
பன்றிப் புடலுக்குப் பார்…[? இறங்கியவிஷமும்-ஏறும்]…()

(மிதிபாகல் காயின்குணம்.)

பித்தமொடு வாதப் பெருக்கைமிக உண்டாக்குந்……*
நத்துகரப் பானைத் தருவிக்கும் - பற் * றிரத……*
! தாரபா ஷாணந் தமைமுறிக்குந் தப்பாது……[தாரம்
காரவல்லி யாம்பாகற் காய்…[*இரதம்-பாதரசம். ! தாரம்-அரி

(கொம்புப்பாகல் காயின்குணம்.)

மருந்துகளின் நற்குணத்தை மாற்றும் அஃதொன்றே……*
இருந்தவலி வாதத்தைச் சேர்க்கும் - பொருந்துபித்தங்……*
கூட்டும்அவ பத்தியத்தைக் கொண்டிருக்கும் வன்கரப்பான்..*
காட்டுங் கொம்புப்பாகற் காய்……(௭௱௰௨)

(காட்டுப்பழுபாகல் காயின்குணம்.)

போஜனம்உட் செல்லும் பொருந்துபசி உண்டாகுங்……*
காசபித்த வாதமிகக் காணுவாம் - நேசமுற……*
வாட்டுப்ப டாக்கொங்கை மாதே குறிஞ்சிநிலக்……*
காட்டுப் பழுபாகற் காய்க்கு……(௭௱௰௩)

(அதளக் காயின்குணம்.)

அதளக்காய் வாய்க்குருசி யாய்இருக்குந் தின்றாற்……*
கதளவொட்டாப் பித்தங் கதிக்கும் - * பதலத்தின்……*
மந்தம்உண்டாம் வாயுமிக வந்தடருந் தப்பாதே……*
கந்த மலர்க்குழலாய் காண்…[* பதலம்-ஆழ்ந்தவயிற்றில்].()

(தூதுளங் காயின்குணம்.)

ஐயம்உடன் பித்தம் அகலும் அரோசகம்போந்……*
தையலே வாதந் தணியுங்காண் - வையமிசை……*
ஓதுங் குடல்வாதம் ஓடும் மலம்ஒழியுந்……*
தூதுளங் காய்உண்ணச் சொல்……(௭௱௰௫)

(பயற்றங் காயின்குணம்.)

ஐயம் அகலும் அரோசி கெடுந் தீபனமாம்……*
பையுறிர வாய்வும் பறக்கும்என்பார் - செய்யும்……*

நயத்த அவுஷதமும் நாசம் அடையும்.......................❋
பயற்றங்காய் தன்னைஉண்டு பார்......................(எளயகூ)

( கோவைக் காயின்குணம். )

வாயின் அரோசகம்போம் மாரு அழலைஅறும்...............❋
நோயிற் கபம்அகலும் நுண்ணிடையே - தூயஅதன்.......❋
❋ வற்றற் கருசி மருவுகரப் பான்போகும்..................❋
சுத்தக்கோ வைக்காயைச் சொல்.. [❋ வற்றலுக்கு-அருசி.]...()

( சுக்கான் காயின்குணம். )

மைக்குழலே நீகேளாய் வாதம்அறும் பித்தம்என்பார்.......❋
சுக்கான்காய் வற்றல்அது தொல்லுலகில் - ❋ கைக்கின்ற......❋
வாயுவை நீக்கும் வரும்அருசி போக்கிவிடும்..................❋
நீயும் அறிவாய் நிசம்...[❋ கைக்கின்ற-அலைத்தலைச்செய்கின்ற]

( மிளகுக் காயின்குணம். )

அளவைஉறுக் காரம் அடைந்திருக்கும் வாத....................❋
விளைவை எல் லாம்அறுக்கும் மெய்யே - மிளகின்காய்......❋
கண்டவர்க்கும் இன்பமாங் காரிகையே சீழ்மூலங்............❋
கொண்டவர்க்கு நன்மருந்தாங் கூறு.....................(எளயக)

தே (ஆற்றுத் தும்மட்டிக் காயின்குணம்- இதுவே-கலிங்கம்.)

இடையெங்கே சோம்பலெங்கே கேடுறச்செய் வாதக்.........❋
கடையெங்கே யாற்றுக் கலிங்க - மடைதிறக்கின்................❋
அண்டை யடைசலெங்கே யாயிழையார் சூதகத்தின் ... .....❋
உண்டை யுடைசலெங்கே யோது ............................(எஉய)

( சிகைக் காயின்குணம்-இதனைச்சீயக்காய்-என்பர். )

வாந்திதரும் பேதிதரும் வஸ்திரகா யஞ்செய்து..................❋
மோந்தால் நசியம்வெகு முக்கியமாம் - நேர்ந்த................❋
வகைநெய்யைப் போக்கிவிடும் மாதரசே நாளுஞ்..............❋
சிகைக்காய் அதனைத் தெரி..(கொடியின் காய்வகை-முற்றியது)

மரத்தின் பழவகை.

( விளாம்பழத்தின்குணம். )

எப்போதும் மெய்க்கிதமாம் ஈளையிரு மல் கபமும்..... .....❋
வெப்பாருந் தாகமும்போம் மெய்ப்பசியாம் -இப்புவியில்.❋
என்றாகி லும் ❋ கனிமேல் இச்சைவைத்துத் தின்னவென்னில்❋
தின்றால் விளாங் ❋ கனியைத் தின்...[❋ கனி-பழம்]...(எகஉஉ)

(இலந்தைப்பழத்தின்குணம்.)

பித்தம் மயக்கருசி பேராப் பெரும்வாந்தி............*
* மொத்தனிலம் எல்லாம் மூடிநந்திடுங்காண் - மெத்த. ......*
உலர்ந்த வெறும்வயிற்றில் உண்டால் எரிவாம்...............*
இலந்தை நறுங் கனியை எண்...[* மொத்துகின்ற-வாதம்.]..()

தே-(வாழைப்பழத்தின்குணம்-இதுவே-அரம்பைக்கனி.)

சுத்த ? அருச்சுனஞ்செய் சோமநோ யென்பதுவும்........*
பித்தநோ யென்னப் பிறந்தவையு - முற்றி ...............*
* வரம்பைக் கடந்த மதமூர்ச்சை யும்போம்... ...[பு-அளவு.
அரம்பைக் கனியுண் டறி ...[? அருச்சுனம்-வெண்மை. * வரம்

(எண்வகை- வாழைப்பழத்தின்குணம்.)

செவ்வாழை வெள்வாழை சேர்ந்தரச தாளிமொந்தன்.........*
ஒவ்வும்இவை நோயோர்க் குலகத்தில் - கவ்வடுக்கு.............*
வாழைமலை வாழைபசும் வாழைகரு வாழைகளில்.......... *
ஊழி கரு வாழைநன்றும் ஓது.................................(௭௨௫)

(இதுவுமது.)

ஓதல்உற்ற வாழைஎட்டில் உற்ற கனிகள்எல்லாம்...............*
வாதநோய்க் காகாது வையகத்தோர் -போதஉண்ண..........*
எண்ணம்உண் டாயின் இதற்கியைந்த சத்துருவோ.............*
பெண்ண இடர்இல்லை உரை..........................................(௭௨௬)

(பேயன்வாழைப்பழத்தின்குணம்.)

பேயன் பழம்அருந்தில் பித்தரோ கம்போகும்...............*
வாயுஉண் டாகும் மலங்கழியுந் - * தீயே....................*
தகத்தில் அதிகுளிர்ச்சி ஆகும் அணங்கே....... [தில்-உள்ளே
சகத்தில் இதைஅறியச் சாற்று[* தீயேது-வெப்பம்-ஏது. அகத்

(மொந்தன்வாழைப்பழத்தின் குணம்.)

மந்தமுட ஞெய்கனத்தல் வாதம் வலிசீதந்.......................*
தொந்தம்உறு தாகம்இவை தோன்றுங்காண் - * புந்திவலி.. *
ஒட்டுபித்தங் காமாலை உள்வறட்சி யுந்தொலையும்..............*
நாட்டுமொந் தன்பழத்தி னால்...[* புந்தி-மனம்-வலி-பலம்.]

(நவரைவாழைப்பழத்தின்குணம்.)

மாந்தமொடு நமைச்சல் வாதகப மும்பெருகும்... ........*
* பாந்தல் உறுகாப்பான் பாவுங்காண் - பூந்தடக்கை.......*

யானைப் பழித்தமொழி யன்னமே கேள் நவனா... ... ......*
வானைப் பழத்தால் மதி...[* பார்தல்உறு-ஒளித்திருக்கிற]...()

( பலாப்பழத்தின் குணம். )

தித்திக்கும் வாதசி லேஷ்மபித்தம் உண்டாக்கும்........ ... ...*
மெத்தக் கரப்பான் விளைவிக்குஞ் - சத்தியமாய்ச்...........*
சேராப் பிணியைஎல்லாஞ் சேர்க்கும் ஒருநொடியிற்..........*
யாராய் பலாவின் பழம்..................................(எகுய)

( மாம்பழத்தின்குணம். )

தின்றாற் றினவெடுக்குந் தீபனம்போம் நெஞ்செரிவாம்......*
அன்றே விழிநோய் அடருங்காண் - துன்றிமிக..............*
வாதக் கரப்பானும் வன்கிரந்தி யும் பெருகுஞ்...............*
* சூதக் கனியின் சுகம்..........[* சூதம்-மாமரம்] ..(எகுக)

(மாம்பழம்-காய்-பிஞ்சு- இவைகளின்குணம்-வி-ம்.)

வேத சத்திய மாக விளம்புவோர்...............................*
தாது விர்த்திக்குந் தம்பன மாங்கனி... ..........................*
* போதம் மர்த்தனம் புன்காயி னுல் * வடு...................*
வாத பித்த கபங்களை மாற்றுமே[* அறிவுகெடும். *வடு-பிஞ்சு]

( புளியம்பழத்தின்குணம்-வி-ம். )

புத்தியும் மந்தமாகும் பொருமியே உடலம்ஊறுதும்.........*
பத்தியந் தவருஞ்சந்தி பாதமாஞ் சுரங்கள்வீறுஞ்... .......*
சர்த்தியும் பித்துந்தீருந் * தனுவெலாம் வாதம் ஏறும்.......*
மத்திபந் தாதுபுஷ்டி வருந்திரா நரைபுளிக்கே[*தனு-உடல்]

( பழம் புளியின்குணம்-வெ-பா. )

தீதில் பழம்புளியைச் சேர்க்கத் திரிதோஷம்..................*
வாதமொடு சூலேகபம் மாறுங்காண் - ஓதுசுரஞ்..............*
சர்த்தியென்ற தோஷம்இவை சாந்தமாங் கண்ணோய்போம்...*
பித்தமென்ற பேர்ஒழியும் பேசு................. .....(எகுசு)

( பனம்பழத்தின்குணம். )

நாளும் பனம்பழத்தை நல்அமுதாய் உண்ணுங்கால்...........*
ஆளுங் கரப்பான் அழுகிரந்தி - நீளுமலஞ்....................*
சிக்கும் பித்தத்தில் ? வளி சேருதலால் நோய்க்கண * மூ......*
திக்கும் பலக்கும்எனச் செப்பு.[? வளி-வாயு. * உதிக்கும்.]..()

(தேற்றான்பழத்தின்குணம்.)

தேற்றான் கனிதனக்குச் சேயிழையே வன்காசந்...............*
தோற்றா தொழியுஞ் சுவாசமும்போஞ் - சாற்றின்மிக.......*
வாந்தி பெருகும் மலம்போம் முத்தோஷத்தைச்...........*
சேர்ந்த பிணிகளும்போஞ் செப்பு........................(௭௱௬)

(நாவல்பழத்தின்குணம்-இதனை-நாகப்பழம்-என்பர்.)

மாந்தம் விளையும் வலிகரப்பான் உண்டாகுஞ்................*
சேர்ந்ததொரு நீரிழிவுஞ் சேருமோ - நாந்தலொடு.........*
வாய்வுங் கடுப்பும் வருங்கொதிப்புந் தாகமும்போந்..........*
* தூயநா வற்பழத்தால் சொல்.... [* தூய-நல்ல...., (௭௱௭)

(வெண்நாவல்பழத்தின்குணம்.)

உதிரமொடு விந்துவையும் உண்டாக்கும் உள்ளே.............*
அதிர் அழலை தன்னை அகற்றும் - பதியதனிற்...............*
கண்ணாவ லியார்க்குங் கதிக்கநோக் குந்திருவே..............*
வெண்ணாவ லின்கனியை விள்...........................(௭௱௮)

(சம்புநாவல்பழத்தின்குணம்.)

அனில அழலும் அரும்பித்த வெப்புந்.........................*
தனியுலவு தாகமுந் தயங்கும் - தனிவேடன்.....................*
அம்புநா ணுங்கண் அணியிழையே கானில்உறுஞ்.............*
சம்புநா வற்கனிக்குத் தான்..................................(௭௱௯)

(பாலைப்பழத்தின்குணம்.)

வாத கரப்பன்அறும் வல்லசி லேஷ்மமும்போம்..............*
வேதுகி ரந்தியுஞ்சாம் மென்பசியாம் - ஓதுமதன்..............*
கோலைப் பழித்தவிழிக் கோதா யினிமையுள்ள...............*
பாலைப் பழத்தைப் பருகு.....................................(௭௱௰)

(பேரீச்சம் பழத்தின்குணம்-இதுவே-கர்ச்சூரம்.)

பேரீந் தெனுங்கனிக்குப் பித்தமத மூர்ச்சைசுரம்..............*
நீரார்ந்த ஐயம் நெடுந்தாகம் - பேரா..........................*
இரத்தபித்தம் * நீரிழிவி லைப்பறும் அரோசி....................*
உரத்தமலக் கட்டுமறும் ஓது....[* நீரிழிவும்-வாய்இலைப்பும்].()

(கொட்டைமுந்திரிப்பழத்தின்குணம்.)

தாகந் தணியுஞ் சகிக்காக் கரப்பானும்..........................*
ஆகத்திற் சேர்ந்த அழலும்அறும் - வேகின்ற......................*

துட்டவன்சி ரங்கொடுபுண் தோற்றுங் கறகறப்பாங்.........*
கொட்டைமுந்தி ரிப்பழத்தால் கூறு....................(எ௪௨)

( தமரத்தம்பழத்தின்குணம்- இதுவே-தந்தசடம். )

வாதபித்தம் வாதகபம் வாந்திகுரற் கம்மல்கண்ணோய்........*
தாதுநஷ்டம் பித்தந் தலைநோயோ - டோதுசித்தத் .........*
துற்ற பிரமையும்போம் ஒண்டொடியே மாபுளிப்பாம்....*
* நற்றமரத் தம்பழத்தை நாடு...[* நல்ல தமர்த்தம்பழம்].()

( கொய்யாப்பழத்தின்குணம். )

திரிதோஷஞ் சென்னித் திருப்பம் அரோசி..................*
பொருமாந்தம் வாந்தி பொருமல் - கரப்பானும்...........*
மெய்யாய்ப் பரவும்மலம் மெத்தவிடும் போகம்உண்டாங்....*
கொய்யாப் பழத்தினுற் கூறு.................................(எ௪௩)

( எலுமிச்சம் பழத்தின்குணம். )

தாகங் குநகநோய் தாழாச் சிலிபதநோய்.....................*
வேகங்கொள் உன்மாதம் வீறுபித்தம் - மாகண்ணோய்........*
* கன்னநோய் வாந்தியும்போங் கட்டுவாதித் தொழிலில்......*
மன்னெலுமிச் சங்கனியை வாழ்த்து...[* கன்னம்-காது]...()

( நாரத்தம் பழத்தின்குணம். )

பித்தவழிக் குன்மம்அறும் போராத தீபனமாம்...............*
* வித்தான தாதுவும்வி ளைந்திடுங்காண் - முத்திணைத்த......*
ஆரத்தைத் தாங்குமுலை யாயிழையே எக்காலும்..............*
நாரத்தை யின்கனியி னால்...... [ *வித்து-விதை.]...(எ௪௪)

( சாதிநாரத்தை-கொளுஞ்சிநாரத்தைப்பழங்களின்குணம். )

சாதிநாரந் தம்பழந்தான் தாகந் தனையகற்றும்.............*
* ஓதருசி வாய்க்கசப்பை ஓட்டுங்காண் - * வேதால்........*
அளிஞ்சமே கத்தேகர்க் காம்வறட்சி போக்குங்........[த்தால்.
கொளுஞ்சி நாரந் தம்பழந்தான் கூறு[* ஓது-அருசி-* வெப்ப

( சீத்தாப் பழத்தின்குணம். )

பித்தகப மெத்தப் பெருகுமந்தம் மேலாடுஞ்.................*
சித்த மதிற்றயக்கஞ் சேருங்காண் - நத்துலவும்.............*
பூத்தானத் தாரும் புலன்கொடியே பூவுலகிற் ..............*
சீத்தாக் கனிக்குணத்தைத் தேர்.............................(எ௪௫)

தே-(மாதுளம் பழத்தின்குணம்-இதுவே-தாடிமக்கனி.)
சங்கையறச் சொற்றவிர்க்குஞ் சந்நியா சஞ் சர்த்தி.............*
* யங்கை ? யதி தாக ○ டிமைச் சாருமோ - கங்கை.............*
இருந்தாடி ! மக்கட் கிரத்தலைச்செய் நோய்போம் ...........*
இருந்தாடி மக்கனிகட் கென் [*அங்கு-ஐ. ? அதிதாகம். ○ அமை
(இதுவுமது.) [சு-பித்தம். ! மலட்டுநோய்
வாய்நீரூற லகசப்பு வாந்திவிக்கல் மந்தமிகக்...............*
காய்வெப்பம் நெஞ்செரிவு காதடைப்பும் - ஓயா.............*
மயக்கமுந் தீர்ந்துவிடும் மாதுளம் பழத்தால்.................*
* தயக்கம்அறத் தேமொழியே சாற்று[* தயக்கம்-சந்தேகம்]
(இதுவுமது-வி-ம்.)
வெடித்துவீழ் பழத்தைவாங்கி மெல்லிய சீலைகட்டி...........*
கடுக்கெனப் பிழிந்துகொண்டு கண்டுசர்க்கரையுங் கூட்டிக்...*
குடித்திட வெப்புமாறுங் குளிர்ந்திடும் அங்கமெல்லாம்......*
வடித்தநன் மொழியினுளே மாதுளம்பழத்தின் சாறே..(எருக)
(கொமட்டி மாதுளம் பழத்தின்குணம்-வெ-பா.)
அருசிகெடும் பித்தம் அகலும் ஐயந் தீரும்...................*
உரிசை யுறுங்கபமும் ஓடுஞ் - சரசமுறக்......................*
காதளவும் பாயும்விழிக் காரிகையே நற்கொமட்டி......(றியது
மாதுளையின் பொற்கனியை வாழ்த்து. (மரத்தின்-பழவகைமுற்

செடியின் பழவகை.
(சிற்றீச்சம் பழத்தின்குணம்.)
சிற்றீந் தெனுங்கனிக்குச் சீதம் * உழலையொடு...............*
உற்ற சிரங்குகளும் உண்டாகுஞ் - சுற்றிச்....................*
செறியும்பலபிணியுந்தேமொழியேநாளும்.[கச்செய்யும்நோய்
அறிவும் மழுங்கும் அறி [* அடிக்கடிவாயில்-நீரைக்கொப்பளிக்
(பூந்தாழம் பழத்தின்குணம்.)
மேகவெட்டை வாந்தி பித்த மீறுவாம் மேனியிடுந்............*
தாகமுமட் டாகுந் தலைவலிபோம் - பாகமுறு..............*
பூந்தாழை யின்பழத்தைப் பூரிப் புடன் புசிக்க ........... ..*
லாந் தாழ்வும் இல்லை யறி...[இதுவே-அன்னசிப்பழம்.](எருச)
(கத்தரிப் பழத்தின்குணம்.)
பித்தங் கரப்பான் பெருங்கிரந்தி குஷ்டம் இவை..............*
மெத்தவுமாம் மெய்யில்அழல் வீறுங்காண் -சத்தான...........*

தாதுநஷ்ட மாங்கபங் * கால் சார்ந்தசு வாசமும்போம்.......*
ஓதுகத்த ரிப்பழத்தா லுன்.......[* கால்-வாதம்.]...(௭௫௫)

( கண்டங்கத்தரிப் பழத்தின்குணம். )

காசஞ் சுவாசங் * கயஞ் சீதம் பல்லரணை......................*
வீசு சொறிநினவை விட்டோட்டும் - ೦ பேசுடலே..........*
உத்தரிக்குந் திபனத்தை யுண்டாக்கி டுங்கண்டங்...........[லே
கத்தரிப்ப ழக்குணத்தைக் காண்.[* கயம்-க்ஷயம். ೦ பேசு உட

( காரைப் பழத்தின்குணம். )

சீதக் கடுப்புஞ் செறிந்தஇரத் தக்கடுப்பும்..........................*
ஓதும் அதி சாரமும்போம் உண்மையே - மோதுகடல்.....*
நீரைப் பருகுமுகி னேரளக மின்கொடியே.......... ... .....*
காரைப் பழத்திற்குக் காண்...............................(௭௫௭)

( மரக்காரைப் பழத்தின்குணம். )

சுரமும் பொருமலும்போந் தொல் ! மயக்க மில் * லு......*
தரஊதல் போம்அறிவுந் தங்கும் - பருக.........................*
அரக்காகு மெல்லிதழ்வாய் ஆரணங்கே கான.................[ல்
மரக்காரை யின்கனியை வாழ்த்து[! மயக்கம்இல்- * உதரஊத

( சூரைப் பழத்தின்குணம். )

மந்தம் அதிகரிக்கும் * வன்சீதளஞ் சேரும் ....................*
உந்து குடல்வலியும் உண்டாங்காண் - ? முந்துநவில்..........*
காரைப் பழத்தில் கதித்தஒருபேதமுமாஞ்...................[ன்ன
சூரைப் பழத்திற்குச் சொல்.[* வன்-வலியதான. ? முன்புசொ

( முளகாய்ப் பழத்தின்குணம். )

மூல விரத்த முளைகடுப்பும் உண்டாகுந்........................*
தாலம்அதில் தாதுவுந் தழைக்கும் என்பார் - ! ஆலம்எனும்*
மந்தம் அரோசி குன்மம் வாய்வும் பொருமலும்போம்.......*
உந்து முளகாய்ப்பழத்தால் ஓது...[; ஆலம்-விஷம்]..(௭௫௯)

செடியின் பழவகை-முற்றியது.

---

கொடியின் பழவகை.

( கொடிமுந்திரிப்பழத்தின்குணம்- இதுவே-திராட்சி. )

வெப்பருசி தாகம் விரணஞ்சு வாசகயம்.........................*
? எய்ப்புடைய பித்தம் இரத்தபித்தஞ் - செப்பும்..........*

* மடிமந்தம் மேகம் மதமூர்ச்சை யும்போந்................*
கொடிமுந்திரிக்கனிக்குக்கூறு [! எய்ப்பு-இளைப்பு.மடி-வயிறு]

(இதுவுமது.)

சோமநோய் தாவரத்தால் தோன்றுவிஷம் உன்மாதம்........*
நாமமுறு மூத்திரநோய் நாடுமோ - * சாமசுரம்..........*
விண்ஒழியும் மெய்குளிரும் வீறுகொடி முந்திரிக்குக்.......*
கண்ணொளியுந் தாதுவுமாங் காண் [* ஒருவித சுரம்]...(௭௯௨)

(தூதுளம் பழத்தின்குணம்.)

கபக்கட்டு கோழை கதித்ததிரி தோஷங்.........................*
குபுக்கென் றெழும்புநீர்க் கோவை - கபுக்கென்...............*
மழுத்து விஷ மும்போம் அடர்தூது ளத்திற்...................*
பழுத்துவிழுங் காயையுண்டு பார்..........................(௭௯௩)

(பாகல் பழத்தின்குணம்.)

சுரமேகங் காசஞ்சு வாசமொடு மூலந்...........................*
திரிதோஷங் குஷ்டம்இவை தீருங் - கிருமியறும்..............*
மோகப் புணரியெனு மொய்குழலே வெம்பிவிழாப் ........*
பாகற் பழத்தையுண்டு பார்...............................(௭௯௪)

( சவுரிப் பழத்தின்குணம். )

தலைவலி குடைச்சல் சலப்பிர சங்கள்........................*
குலைகுலைந்து காட்டிற் குடிபோம் - நிலைவா...................*
னவரிப் படிமாதென் றையுறுமெய்ம் மாதே...................*
சவரிப் பழத்தாற் சளைந்து.(கொடியின் பழவகை-முற்றியது.)

மரத்தின் வித்துவகை.

தே—(மாங் கொட்டையின்குணம்.)

பேசுமே சீதப் பெருக்குஞ் சோ ரிக்கடுப்பும்...................*
வீசுமோ மூலமுறு வெங்கொதிப்பு - மாசுடைய..............*
பூங்கொட்டை யைத்தள்ளிப் போட்டுக் கனியில்வந்த.........*
மாங்கொட்டையைக் காணில் வாது.........................(௭௯௫)

தே—( பலாக்கொட்டையின்குணம். )

அள்ளேறு நீள்குடரி னப்பான் மலங்கட்டுங்.....................*
கள்ளேறு நெஞ்சர்நெஞ்சாங் கல் * லகட்டி - னுள்ளே......*
சலாக்கொட்டை யிட்டசுகந் தானுங் கருக்கும்...................*
பலாக்கொட்டை யிட்ட பலன். [* அகட்டினுள்-வயிற்றுக்குள்]

(புளியங் கொட்டையின்குணம்)

சுக்கில மேகம்அனற் றுன்னும்அதி சாரமொடு............*
* மிக்கிரணம் நீர்க்கடுப்பு வெட்டையறுந்- * தொக்குள்துவர்
உற்றபுளி வித்திற் குறுகுணத்தை மேன்மேலும்...............*
நற்றாயுண் மாதே நவிற்று[ * தொக்கு-தோல். * அதிபுண்]

(தேற்றான் கொட்டையின்குணம்.)

கூற்றென் றுணாக்கும்விழிக் கோமளமே எப்போதும்.......*
ஊற்றும் பிரமியமும் உட்புண்ணும் - ஆற்றல்இலா.........*
வெட்டை அகக்கடுப்பும் வீறி வரிற் றேற்றான்..............*
கொட்டைதனை நீயெடுத்துக் கொள்........................(எகூகூ)

(இதுவுமது.)

தேற்றும் விதையதுதான் தீபனத்தைப் போக்கும் அனல்...*
ஆற்றும் இரு கண்ணுக் கருமருந்தாங் - கூற்று..............*
யிருத்துங் கிரிச்சரத்தை எங்குமிலா தோட்டுங்..............*
* குருத்துவம்உண் டாக்குங் குறி...[* குருத்துவம்-மந்தம்]()

(எட்டிக் கொட்டையின் குணம்.)

கைக்கறுப்பு சந்நி கடிவிஷங்குஷ்ட் டூதை வலி ..........*
எய்க்கவரு தாதுநஷ்டம் என்பதும்போம் - மைக்கண்ணுய்..*
கட்டி கரப்பான் கனமயக்கு பித்தமுமில்........................*
எட்டிமரக் கொட்டையினு லே..................................(எஎக)

(புரசங்கொட்டையின்குணம்- இதுவே-பலாசம்.)

வயிற்றுக் கிருமிகணம் வாதமொடு சீதம்..........................*
நியத்தபடர் தாமரையும் நீங்கும் - வயிற்று........................*
வலியினாச்சல் வன்கரப்பான் மாறும்பித் துண்டாம்..........*
மலிபுரசங் கொட்டைதனை வாழ்த்து..............................(எஎஉ)

(புன்னைக் கொட்டையின்குணம்.)

கன்ன விரணங் கடுஞ்சந்நி பாதமுடன்.............................*
இன்னல்உறு வாதை இவைஅகலும் - புன்னைக்கொட்..........*
டைக்கம்மட் டோவென்னில் ஆர்சூதி காவாய்வும்..............*
*மெய்க்கம்மிட் டாழ்வாய்வும் இல்[*மெய்க்கு-தேகத்தில்-அம்
இட்டு-சலத்தையுண்டாக்கி-ஆழ்- அழுந்தியிருக்கின்ற- வாய்வும்
இல்-வாய்வும்இல்லை-சீதளவாய்வு நீங்கிவிடும்-என்பதுகருத்து.

( இலுப்பை-அழிஞ்சில்- இவ்வித்துக்களின்குணம். )

இலுப்பைவிதை அந்தரவாய் விற்கும்விஷத் திற்கும்.........*
அலுப்பையுண் டாக்கி அகற்றும் - நிலத்தில்.................*
தொழுஞ் * சகமோ கக்கரப்பிற் சொல்அஞ் சனமாம்...[ஆம்.
அழிஞ்சில் விதையென் றறி.[ * சகமோகமறைப்பு-மைக்கும்.

( புங்கு- காட்டுப்புங்கு - இவ்வித்துக்களின்குணம். )

புங்கின்விதை காற்கிரந்தி புண்கரப்பான் காதெழுச்சி.......*
அங்கசந்தி கண்ணோய்க்கும் ஆம்பேதி - யுங்கட்டுங்.............*
காட்டுப் புங்கின்விதைக்குக் கண்டதே மற்சொறிமெய்ப்....*
பூட்டுப் * பங்கின்வாய்வும் போம்[* முடம்-ஆக்கின்றவாய்வும்]

( மருதோன்றி-வேம்பு-இவ்வித்துக்களின்குணம். )

மருதோன்றி யின்விதைக்கு மாயில்லி சூனியம்...............*
விருதாண்ட பேய்பூதம் மேவுங் - கருதுான்றி..................*
வேம்பின் விதைக்கு விஷஞ்சந்நி பாதமுதல்..................*
தேம்பிவிழுந் தோடுமெனத் தேர்..........................(எ௭௫)

( கடப்பம் வித்தின்குணம். )

கடப்பம் விதைக்குக் கடிவிஷமும் உண்டோ..................*
தொடுப்புமண்டை நீருந் தொலையும் - இடக்கான .........*
வாத வகையொழியும் மந்தங்கள் ஏகிவிடுங்.......................*
கீதமொழி மாதே கிளத்து.........................................(எ௭௭)

( மகிழம் வித்தின்குணம். )

தாதுவை நன் மெய்யழகைச் * சத்தியையுண் டாக்கிவிடுஞ்..*
சீதளம்என் பார்கலிக்கஞ் செய்மருந்தாம் - வாதை.........*
மலத்தைவிழித் தோஷத்தை வல்விஷத்தை வெப்பை...........*
விலக்கும் மகிழம் விதை......[* சத்தியை-பலத்தை]...(எ௭அ)

( தில்லம் வித்தின்குணம். )

தில்லம் விதைக்குச் சிறுவிஷம் மகாவிஷமுஞ்..................*
செல்வஞ் செருக்குந் திமிர்வாய்வும் - வெல்லங்கொள்........*
வாரா வருத்துகின்ற வன்கபமுங் குஷ்டமும்இவ்................*
ஊராவிடுத் தேகும் உரா ...........................................(எ௭௯)

( ஆளி வித்தின்குணம். )

வீக்கம் அதிவாந்தி மேனி வலி வாய்வுந்........................*
தாக்குநரம் பின்குத்தல் தொல்லழலை - ஒக்காளம்.............*

மீளி பருசி விதைவாத மும்போகும்.......................*
ஆளிவிதை தன்னால் அறி....................................(எஅ௰)

( உருத்திராக்ஷவித்தின்குணம். )

நீளும் அதி தாகத்தை நீங்காமுத் தோஷத்தை.....................*
ஆளும்விக்கல் பித்தத்தை யாற்றுங்காண் - நாளும்...........*
! மிருத்திரா மற்கபத்தை * வீட்டுமே நல்ல... ....[மொல்லல்
உருத்திராக் கத்தின்வலி ஓது[! மிருத்து-மரணம்- * வீட்டல்.

( முருங்கை வித்தின்குணம். )

நீரான விந்துவுமோ நீண்டபிசி னுப்பத்தடிக்குஞ்.................*
சீராக மேனி செழிக்குங்காண்- பாராய் ..........................*
முருங்கை விதைஅதனால் மொய்த்த இலை ஈர்க்கோ ........*
ஒருங்கையுற நீர் இறக்கும் உன்....................................(எஅ௨)

( மாதுளம் வித்தின்குணம். )

சுக்கிலத்தைக் கட்டும்அந்தச் சுக்கிலதோ ஷம்போக்கும்......*
அக்கணம்மே கக்கடுப்பை ஆற்றுங்காண் - எக்காலுங் ......*
கோதுளத்தெண் ணுதமலர்க் கொம்பனைய மாதேசெம்......*
மாதுளத்தின் * பீச வலி[* பீசம்-விதை-வலி-பலம்] (எஅ௩)

( முந்திரிப் பருப்பின்குணம். )

மெத்தஇனிப் பாகும்அது மென்கொடியே தின்றக்கால்....*
பித்த அனிலம் பிறக்கும்என்பார் - எத்தலத்தும்..........*
இந்திரியப் புஷ்டி யிளைக்காது மாந்தம்உண்டாம்...........*
முந்திரியின் நற்பருப்பை முன்...................................(எஅ௪)

(வாதுமைப்பருப்பின்குணம்-இதுவே-அடப்பம்விதை)

அடப்பம்விதை யாம்வாது மைப்பருப்பி னாலே ...... ..*
மடற்பெரிய கண்படலம் மாறுஞ் - சடக்கெனவே........*
புண்மேற் கொழுப்பகலும் போகமும்உண் டாகுமென....*
மண்மேற் புகல்வார் மகிழ்ந்து.................. ..(எஅ௫)

( சாரப்பருப்பு- மிசரிப்பருப்பு- இவைகளின்குணம் )

சாரப் பருப்பால் தனிமிசரி யின்பருப்பால்..................*
* நீரப் பருங்கடுப்பு நீர்ச்சீதந் - தீரத்........................*
தொலையும் இர தங்கந்தி துய்த்தார்க்கு நன்றாங்...............*
கலையும் விந்துவுக் கூக்கங் காண்...[ * நீர்க்கடுப்பு]....(எஅ௬)

மரத்தின் வித்துவகை-முற்றியது.

## செடியின் வித்துவகை.

### ( துத்தி வித்தின்குணம். )

கையிற்கா விற்படர்ந்த கார்மேகம் போய்ஒழியும்..........*
மெய்யில்உறு குஷ்டம்போம் வெப்பகலுந் - துய்யதிரா...*
யத்திதனை யொத்தவிழி யாரணங்கே நாட்டிலுள்ள..........*
துத்தி விதையைச் சுவை..............................(௭௮௭)

### ( தகரை வித்தின்குணம். )

வன்டு கடியுடனே வன்கடுவ னும்பல்வாம்....................*
* பண்டு நமை புடையும் பண்டிதர்கள் - கண்டுரைக்காப்...*
பித்த அனலும் பெருத்த தகரைவிதைக்......................*
கித்தரையுள் நில்லா திசை...[ * பண்டு-பழமை.]....(௭௮௮)

### ( நீர்முள்ளி வித்தின்குணம். )

விந்துவுமாந் தாதுவுமாம் மேகரோ கந்தொலையும்.........*
உந்தும்அதி சாரம் ஒழியுங்காண் - வந்துடலில்..............*
ஏறியநீர் வீக்கம் இறங்கும் இளைப்பும்அறுங்...............*
கூறியநீர் முள்ளிவிதைக் கு..............................(௭௮௯)

### ( ஊமத்தம் வித்தின்குணம். )

சுரம்போம் விஷம்போந் தொலையாத சந்நி -................*
உரம்போம் அதிசாரம் ஓடும் - நிரம்பவே....................*
மாமத்தம் உண்டாம் வளரிளங்கொங் கைத்திருவே ... ... (௭௯௰
ஊமத்தந் தன்விதையை யுன்..(செடியின் வித்துவகை-முற்றி

---

## கொடியின் வித்துவகை.

### ( பூசினி வித்தின்குணம். )

பித்தம்போம் மேகம்போம் பேரா அனலும்போம்.......*
மெத்த உட லங்குளிரும் மேனியிடும் - இத்தலத்துள்.......*
பூசினியொன் றில்லா வலர்ந்த வன சத்திருவே..............*
பூசினிவித் தைத்தின்னும் போது..........................(௭௯௧)

### ( வெள்ளரி வித்தின்குணம். )

கடுப்பொடுநீர்க் கட்டுவெறுங் கல்லடைப்பு * தாரை.........*
வெடிப்பு சதையடைப்பு மேகம் - எடுத்துரைக்கா..........*
உள்ளரிவி என்னும் உறைகிரிச்ச ரம்இவைகள்..............*
வெள்ளரிவி தைக்கேகும் விள்...[* தாரை. நீர்த்தாரை](௭௯௨)

( கழற்காய்-பேய்ப்பீர்க்கு- இவ்வித்துக்களின்குணம். )

கழற்காய் விதைக்குக் கனஅண்ட வாதந் ........................*
தழற்பக்கச் சூலேகுன்மஞ் சாந்தி - கழற்காயிற் ...............*
காய்ப்பாக்குந் துஷ்டக் கடிவிஷம்எல் லாம்போக்கும்....[சம்
பேய்ப்பீர்க்கி னுள்விதையைப் பேசு.[ * கழற்காய்-வச்சிரபீ

(பூனைக்காலி வித்தின்குணம்.)

தழுதளைநாற் றத்தோடு சார்இரத்தப் போக்கும் ..............*
! பழுதுபுரி கின்றக்ரப் பானும் - அழுதேகுந் ...............*
தாலமிசை விந்துவுமாஞ் சாற்றற் கரும்பூனைக் ...............*
காலி விதையைக் கழறு...[! குற்றத்தைச்செய்கிற]...(௭௯௪)

(உகா வித்தின்குணம்.)

வாதமுதல் முப்பிணியால் வந்த பிணியையெலாங்..........*
கோதிற் சமனமிகக் கொண்டொழிக்குஞ் - சீத ...............*
மகாவனசந் தன்னில் வளர்ந்திருக்கு மாதே ................*
உகாவிதையை நன்று யுரை ..................................(௭௯௫)

( குன்றி வித்தின்குணம்- இதுவே- குன்றிமணி. )

நேத்திரநோய் பித்தம் நிறமழுங்கல் காமாலை ...................*
வேர்த்திடுதா பச்சோப வெப்புடனே -கோத்திட்ட ........*
ஐயமுதல் யாவும்போம் ஆயிழையே காட்டிலுறை...........*
செய்யகுன்றி யின்விதையைச் சேர் ...........................(௭௯௬)

( நெருஞ்சில் வித்தின்குணம். )

சொல்லவொண்ணு நீர்க்கட்டு துன்மா மிசம்அருகல். ........*
கல்லடைப்பெ னும்பிணிகள் கண்டக்கால் - வல்லக் ........*
கருஞ்சினவேற் கண்மாதே காசினிக்குள் நல்ல........ [றியது
நெருஞ்சில்நறும் வித்தை நினை[கொடியின் வித்துவகை-முற்

---

தானியவகை.

செந்நெல் வகைக்குஞ் சிறுதா னியவகைக்கும் ............. *
இந்நிலத்தில் உண்டோ * இலக்கென்ப - துன்னுங்கால் .....*
கண்டமட்டி லேபெயராங் கண்ட அவரவர்கள் ...............*
உண்டமட்டி லேசுவையாம் ஓது[* இலக்கு-கணக்கு].(௭௯௭)

( கார் அரிசியின்குணம். )

காரரிசி மந்தங் கனப்புடலில் தாலிப்பும் ....... ....... .......*
பாரறிய வாயுவையும் பண்ணுங்காண் - நேரோ ...............*

கரப்பான்என் பார்பொருந்திற் காயம்அது மெத்த.........*
உரப்பாகும் என்றே புனா...........................(எ௬௯)

{மணக்கத்தை-வாலான்-கருங்குறவை-
என்னும்- இவ்அரிசிகளின் குணம்.}

மணக்கத்தை வாலான் கருங்குறவை மூன்றும்...........*
பிணக்குஷ்டைச் சில்விஷத்தைப் பேர்க்கும் - இணக்கமுற*
ஆக்கியுண் டாற்கரப்பான் ஆரும் என் பார்கள்சிலர்.........*
பார்க்குள் இதை எண்ணிப் பார்...........................(அ௱)

( ஈர்க்குச்சம்பா அரிசியின்குணம். )

ஈர்க்குச்சம் பாஎன் றியம்பும் அரிசியது..................*
நாக்குக் கதியுரிசை நல்குங்காண் - பார்க்குமிடத்...........*
தெல்லார்க்குங் காதல் இயற்றும்அற்பப் பித்தம்என்பார்....*
? வில்ஆரும் பூசைகட்காம் விள்...[ ? வில்-ஒளி] .....(அ௱௧)

( புழுகுசம்பா அரிசியின்குணம். )

புழுகுசம் பாஅரிசி பூதலத்தில் உண்பார்க்..................*
கழகும்ஒளி வுஞ்சேர்வ தன்றி - அழலாம்....................*
பசிதாகந் தீரும் பலமுமிக உண்டாம்.....................[ஊனத்தல்
* முசிவே துடற்சுகமா முன்[* முசிவு- கெடுதி - முன்னல்-நி

( கைவளைச்சம்பா அரிசியின்குணம். )

கைவளைச்சம் பாஅரிசி கண்டால் அவரவர்தம் ...............*
* மெய்வளையாம் என்றும் மிகுபலமாம் - * மையல்......*
அடையா தென் பார்கள் அடர்சுக் கிலமும்..................*
உடையா ததிசுகமாம் ஓது[* உடல்-மலைபோலாம்.* மயக்கம்]

( செஞ்சம்பா அரிசியின்குணம். )

செஞ்சம்பாத் * தண்டுலத்தால் தீராச் சிறுசிரங்கும்..........*
விஞ்சுபுண் ணும் வன்சொறியும் மெய்க்கணியாம் - விஞ்சும்*
அதிகபசி தானே அணங்கரசே யிந்தப்...........................*
பதியதனில் நாளும் பகர்...[* தண்டுலம்-அரிசி.]....(அ௱௨)

( கல்லுண்டைச்சம்பா அரிசியின்குணம். )

கல்லுண்டைச் சம்பாவைக் கண்டருந்தி நின்றவர்முன் ......*
! மல்லுண்ட பேர்எதிர்க்க வாய்க்குமோ - * வில்உண்டை...*
போலுளையாம் நல்ல புசபலமாம் இன்சுவையாம்..............*
பாலனைய மென்மொழியே பார்..[ ! பலம்பொருந்தியவர்கள்.

* வில்லில் உண்டைவைத்து அடிக்கிறபோது உண்டாகும் ஒலி போல உரத்தவார்த்தை உண்டாகும்.]

(குண்டச்சம்பா அரிசியின்குணம்.)

குண்டச்சம் பாஅரிசி கொண்டுண்ணும் பேர்களுக்குப்......*
பண்டையில்லா மந்தநோய் பாரிக்கும் - அண்டிடாத்......*
தாகம்எல் லாம்ஒழியுந் தையலே வன்கரப்பான்...... ......*
தேகம்எல் லாம் பரவுஞ் செப்பு......................(௩௬)

(மல்லிகைச்சம்பா அரிசியின்குணம்.)

மல்லிகைச் சம் பா அரிசி வாய்க்குரிசை யாயிருக்கும்.......*
நல்லது மெய்க்கு நலஞ்செய்யும் - பொல்லாத்..............*
கரப்பானை மேகத்தைக் கண்அழலை நீக்கும்...................*
உரப்பாம் பலங்கொடுக்கும் உன்........................(௩௭)

(இலுப்பைப்பூச்சம்பா அரிசியின்குணம்.)

பித்த மிகப்பெருக்கும் பேருலகில் யாவருக்கும்................*
உற்ற தலைவலிநோய் உண்டாக்குஞ் - சத்தியமாய்த் ........*
தாகம் எழுப் பிக்குந் தழல்இலுப்பைப் பூச்சம்பா............ *
ஆகம்அதில் நோய்வளர்க்கும் ஆய்..........................(௩௮)

(மணிச்சம்பா அரிசியின்குணம்.)

நல்ல மணிச்சம்பா நாடுகின்ற நீர்இழிவைக்...................*
கொல்லும் மிகுந்தசுகங் கொண்டளிக்கும் - மெல்லப்......*
பசியளிக்கும் மூத்தோர்க்காய் பாலர்களை நாளும்.................*
மூசியாம லேவளர்க்கும் முன்...............................(௩௯)

(வளைதடிச்சம்பா அரிசியின்குணம்.)

வளைதடிச்சம் பாவிற்கு வாதபித்தம் உண்டாம்...................*
உளையும் * மடிபொருமி யுப்பும்- கொளகொளெனத்......*
தானே கரப்பானுந் தாங்கொளு மந்தமுமாந்....................*
தேனே யிதனைத் தெளி........[* மடி-வயிறு]........(௪0)

(கோரைச்சம்பா அரிசியின்குணம்.)

கோரைச் சம் பாநற் குளிர்ச்சியென்பார் பித்தத்தைப்......*
பேரா அழலைப் பிரித்தோட்டுந் - தீராத....................*
மேக மொடுதினவை வீட்டுஞ் சுகங்கொடுக்கும்...................*
மேக முறைகுழலாய் விள்.......................................(௪௧)

(குறுஞ்சம்பா அரிசியின்குணம்.)

குறுஞ்சம்பா பித்தங் குடியிருக்கச் செய்யும்.....................*
வெறுங்கரப்பான் உண்டாக்கும் மெய்யில் - நொறுங்கச்செய்
வாதம்அருள் வாயுவினை மாற்றும்போ கங்கொடுக்குஞ்.......*
சீதவன சத்திருவே செப்பு......................................(௲௱௰௨)

(மிளகுச்சம்பா அரிசியின்குணம்.)

மிளகுச்சம் பாஅரிசி மென்சுகத்தைச் செய்யும்.................*
அளவில்பல நோயை அகற்றுங் - களகளெனத்..................*
தீபனத்தைத் தூண்டிவிடுந் தீரா * வளிதொலைக்குஞ்..........*
சோபனத்தைச் செய்நகையாய் சொல்...[* வளி-வாய்வு]...()

(சீரகச்சம்பா அரிசியின்குணம்.)

சீரகச்சம் பாஅரிசி தின்னச் சுவையாகும்.......................*
* பேரகத்து வாதம்எல்லாம் பேருங்காண் - வாருலகில்......*
உண்டவுட னேபசியும் உண்டாகும் பொய்யலவே ..[வாதம்.
வண்டருறை பூங்குழலே வாழ்த்து[* உள்ளேயிருக்கிறபெரிய

(காளான்சம்பா அரிசியின்குணம்.)

காளான்சம் பாஅரிசி கல்லையொத்த மாபலத்தைக்..............*
கேளாம லேகொடுக்குங் கேள்இன்னும் - நீளும்..................*
அனிலத்தைப் போக்கிவிடும் ஆரோக்கி யத்தை.................*
* நனிலத்திற் செய்துவிடும் நாடு[* நல்லநிலத்தில்](௲௱௰௫)

(மைச்சம்பா அரிசியின்குணம்.)

மைச்சம்பாத் தண்டுலத்தால் வாய்அருசி போய்ஒழியும்.....*
வெச்சென்ற வாதபித்தம் மெய்யைவிடும் - நச்சுந்..........*
தனிவாயு வுஞ்சுரக்குஞ் சர்த்தியும்போம் இன்பக்...........*
கனிமொழியே நன்றாகக் காண்...............................(௲௱௰௬)

(கோடைச்சம்பா அரிசியின்குணம்.)

கோடைச்சம் பாஅரிசி கொண்டாற் றிரிதோஷ..............*
வாடைக் கதிக வலியும் உண்டோ - நீடும்......................*
* உறுப்பில்உள்ள நோய்எல்லாம் ஓதாமல் ஏகுங்..............*
கறுப்பினுயர் வார்குழலே காண்[* உறுப்பு-உடல்.](௲௱௰௭)

(காடைச்சம்பா அரிசியின்குணம்.)

காடைச்சம் பாஅரிசி கண்டுதரி சித்தவர்க்கு.....................*
நீடுற்ற மேகஅனல் நிற்குமோ - காடைப்.........................*

பறவைபோல் நோயும் பறக்கும் பலத்தின்..................*
உறவையெவர் சொல்வார் உரை..........................(அ௱௰அ)

( குன்றிமணிச்சம்பா அரிசியின்குணம். )

குன்றி மணிச்சம்பா கொண்டால் அனிலம்அறும்.............*
வென்றி தரும்பலமி குக்குங்காண் - துன்றியநோய்..........*
எல்லாம் பறக்கும்உறை யிந்திரியப் புஷ்டியுண்டாம்..........*
நல்லா சறிய நவில்.........................................(அ௱௰௯)

( அன்னமழகி அரிசியின்குணம். )

அன்ன மழகி * யரி ஆரோக்கி யங்கொடுக்குந்....................*
தின்ன வெகுருசியாஞ் செப்பக்கேள் - இந்நிலத்து..........*
நோயனைத்துந் தூளாய் நொறுங்கத் * தகர்த்துவிடுந்...... ..*
தீயனலைப்போக்குந்தெளி[* அரி-அரிசி-தகர்த்தல்-கெடுத்தல்]

( பச்சை அரிசியின்குணம். )

சுத்த அனிலமந்தந் தோன்றும் எரி பித்தம்போம்..............*
பத்தியத்தில் எண்ணார்கள் பண்டிதர்கள் - மெத்தவுமே......*
வைச்சசுமை தாங்க * வலியுண்டாந் தேகத்திற்...... ........*
பச்சரிசி யைப்புசித்துப் பார்......[* வலி-பலம்]...(அ௨௧)

( புழுங்கல் அரிசியின்குணம். )

புழுங்கல் அரிசியது புத்திரர்க்கும் ஆகும்....................*
அழுங்குகின்ற வாயுவிற்கும் ஆகும் - ஒழுங்காய்..............*
நிலைத்தபத்தி யத்திற்கும் நீட்டலாம் மெய்க்குப்...............*
பலத்தைக் கொடுக்காது பார்.................................(அ௨௨)

( பழமை அரிசியின்குணம். )

பழஅரிசி மூத்தோர்க்கும் பாலர்கட்கும் ஆகும்...................*
* அழல்மிகவும் ஆகும் அருந்தில் - நிழலைப்போல். ........*
ஆகும் உடல்குளிர்ச்சி ஐயம்அறும் நோயுற்றோர்க்..............*
காகும்பன் னேய்போம் அறி...(* அழல்-தீபாக்கினி)(அ௨௩)

( சவ்வரிசியின்குணம் - இவ்வரிசி ஒருவர்பட்சம். )

மேகம் அத்தி மேகஞ் சீழ் மேகம் ரத்த மேகமும்போந்.....*
தேகத்திற் றூதுவுஞ் சி லேஷ்மமும்உண் - டாகும்எழிற்.....*
செவ்வரிய டர்ந்தவிழித் தேமொழிமா தேயுலகிற்.........*
சவ்வரிசி யின்குணத்தைச் சாற்று............................(அ௨௪)

( மூங்கில் அரிசியின்குணம். )

உதிரபித் தந்தீர்க்கும் ஒங்குசுரத் திற்கும்...................*
அதிரவரு கண்ணோய் அதற்கும் - புதிதாகக்...................*
கஞ்சிசெய்ய லாகுங் கருதிற்சிற் றுண்டியுமாஞ்.................*
செஞ் * சிலம்பார் மூங்கில் அரிசி. [*சிலம்பு-மலை]...(அஉரு)

( திப்பலி அரிசியின்குணம். )

திப்பலியின் தண்டுலஞ் சிலேஷ்மத்தைப் போக்கிவிடும்.....*
உப்பிசத்தை மேகத்தை ஒட்டுங்காண் - தப்பாமல்...........*
வாத சுரந்தணிக்கும் மாகபரோ கந்தொலைக்குந்...........*
தாதுவைவ ளர்ப்பிக்குஞ் சாற்று. .........................(அஉசு)

( கோதுமை அரிசியின்குணம். )

கோதுமையின் நற்குணந்தான் கோதிற் பலங்கொடுக்குந்...*
தாதுவிர்த்தி யாக்குந் தனிவாய்வைச் - சேதிக்கும்..........*
பித்தம் அளிக்கும் பிரமேகத் தைக்கெடுக்கும் ...............*
உத்தமமாம் என்றே உரை.(தானியவகை- முற்றியது.)(அஉஎ)

---

புன்செய்த்தானியவகை.

(கேழ் வரகின்குணம்-இதனைக்கேவரகென்பர்.)

சுத்தஅனி லந்தன்னைத் தோன்றுவிக்கும் அல்லவெனில்......*
பித்தஅனி லத்தைப் பிறப்பிக்குஞ் - சித்திரமலர்த் ..........*
தாழ்குழலே * நீடுபஞ்சந் தாங்கியெனச் சொல்லுகின்ற....*
கேழ்வரகின் செய்தியிது கேள்...[*பஞ்சம்-கருப்பு](அஉஅ)

( கம்பு- அரிசியின்குணம். )

கம்பு குளிர்ச்சியெனக் காசினியிற் சொல்லுவர்காண்.........*
* பம்பு சொறிசிரங்கைப் பாலிக்கும் - வெம்பும்.... .......*
உடலின் கொதிப்பகற்றும் உட்பலம்உண் டாக்கும்.........*
அடலயிற்கண் மாதே யறி...[ * பம்பு-நெருங்கிய.]..(அஉகூ)

( சாமை அரிசியின்குணம். )

உடலில்உறு தாகசுரம் ஓடும்மே கம்போம்... ...............*
* அடலின்உறு வாதம் அகலுங் - கடலினுறை.................*
ஆமை யனையபதத் தன்னமே மேனியிநிஞ் ..................*
சாமை யரிசிக்குத் தான்...[ * அடல்-பலம்.]........ (அ௯0)

( தினை அரிசியின்குணம். )

சந்நிசுரம் ஐயந் தனிவாத மும்போகுந்.......................*
துன்னுபித் தத்தைமிகத் தூண்டிவிடுந் - தின்னப்...........*
பினையும் பசியாம் பெருவீக்கம் நீக்குந்.................*
தினையரிசி யின்குணத்தைத் தேர்......................(அ௱௯௧)

( செஞ்சோள அரிசியின்குணம். )

செஞ்சோளந் தின்றால் சிறுசிரங்கு புண்ணுகளும்...........*
* விஞ்சும் எழிலான மேனிகெடும் - நெஞ்செரிந்து..........*
மந்தமிகுந் தீபனம்போம் மாறுக் கரப்பானும்..............*
கந்தமலர்ப் பூங்குழலே காண்...[* விஞ்சும்-மிகும்]. (அ௱௯௨)

( கருஞ்சோள அரிசியின்குணம். )

சொறியைச் சிரங்கைத் தொலையாத புண்ணை.................*
மறுவிலா மெய்யில் வளர்க்குங் - குறியா...................*
அழகு கொடுக்கும் அசதியைஉண் டாக்கும்...........(றியனு
பழக்கருஞ் சோளம்அது பார். (புன்செய்த்தானியவகை முற்

---

காய்த்தானிய வகை.

தே—(துவரையின் குணம்.)

* பஞ்சமுட்டிக் காகுமரும் பத்தியவி யஞ்சனமாம்........*
விஞ்சுசுரஞ் சந்நிகட்கு மெத்தநன்றாம் - ? பஞ்சின்.......*
விழுந் துவரை யாது மெலிந்தாரைத் தேற்றுங்................*
! கொழுந்துவரை யாயினீகொள் [* லங்கனதாரகம் ? பஞ்சணை
யேகிடையாய் எழுந்திருக்கச் சத்தியில்லாமல்மிகவும ! செழு
( உழுந்தின் குணம்-இதனை-உளுந்தென்பர்.) [மை

செய்ய உழுந் திற்குச் சிலேஷ்ம அனி லம்பிறக்கும்..........*
வெய்யபித்தம் போம்மந்தம் வீறுங்காண் - மெய் அதனில்..*
என்புருக்கி தீரும் இடுப்புக் கதிபலமாம்...................*
மூன்பு * விருத்திஉண்டாம் முன்...[* விருத்தி-சுக்கிலதாது]

( கடலையின் குணம் )

கடலைவயி றாதல் கனல் தாகஞ் செய்யுங்...................*
குடலைவலிப் பித்து மலங் கொட்டுந் - திடமருந்தைச்......*
சேதம்உறப் பண்ணுந் தியக்கமொடு வாயுவையும் ............*
* போத அழைக்கும் புகல்...[* போத-மிகுதியாக].(அ௱௯௫)

(மொச்சைக் கொட்டையின்குணம்.)

அனிலபித்த ஐயம் அனைத்தையும்உண் டாக்குந்..............*
தொனியெடுக்க வாயுவினைத் தூண்டுந் - தனிவேள்..........*
குனிக்குஞ் சிலைப்புருவக் கோதையே நாளும்...... ..........*
இனிக்குமொச் சைக்கொட்டை யே............ .....(௮௯௭)

(பெரும் பயற்றின்குணம்- இதுவே- பருங்காராமணி.)

பெரும்பயற்றை மேன்மேலும் பேணிஉண்ணு வார்க்குப்....*
பெருஞ் * சாட ராக்கினிபோம் பின்னும் -வரும்மந்தம்...*
பேதி அதிகரிக்கும்பேராக் கபங்கதிக்கும் .. ...... ........*
வாதகுடி லம்பெருகும் வாழ்த்து........[* பசி]......(௮௯௮)

( சிறு பயற்றின்குணம்-இதுவே-பனிப்பயறு. )

ஐயைப்பித் தத்தை அரோசகத்தைப் போக்கிவிடும்.........*
வெய்யவா தத்தை விளைவிக்கும் - மையாம்..................*
மறுவொழிந்த தூய மதிவதன மாதே..........................*
சிறுபயறு செய்யுஞ் செயல்..............................(௮௯௯)

( பச்சைப் பயற்றின்குணம். )

பச்சைப் பயறதுதான் பாரிற் பயித்தியத்தை.................*
அச்சம்அற நாளும் அகற்றுங்காண் - கச்சுலவு.......... .....*
கொங்கைமட மாதே குளிர்ச்சியென்பார் எப்போதுந்......*
தங்குவா தத்தைத் தரும்..........................................(௮ச௰)

(தட்டைப்பயறு-வெள்ளபயறு-கரும்பயறுகளின்குணம்)

தட்டைப் பயறுமந்தஞ் சந்திதரும் வெண்பயறு...... .....*
முட்டியே மெய்யில் முதிர்வாதக் - கட்டறுக்கும்... ......*
காணுப் கரும்பயறு கம்மூநீர் வாதம்உடன்......................*
கோணுவா தத்தையும்போக்கும்................................(௮ச௧)

( கொள்ளின் குணம். )

குடல்வாதங் குன்மம்உண்டாங் கொள்மருந்தோ நாசம்.....*
அடல்எறு பித்தமிக ஆகுங் - கடுகடுத்த........................*
வாதநீ ரோற்றமொடு மன்னுகுளிர் காய்ச்சலும்போஞ்......*
சாதிநறுங் கொள்ளுக்குத் தான்.................................(௮ச௨)

( எள்ளின் குணம். )

எள்ளு மருந் தைக்கெடுக்கும் ஏறனலாந் திண்மைதரும்......*
உள்ளில்ஐயைச் சேர்க்கும் உதிரத்தைத் - தள்ளும் இரு......*
கண்ணுக் கொளிகொடுக்குங் காசம்உண்டாம் பித்தமுமாம்...*
பண்ணுக் கிடர்புரியும் பார்...(காய்த்தானியவகை-முற்றியது)

## இறைச்சிவகை.

(வெள்ளாட்டு இறைச்சியின் குணம்.)

உள்ளாடும் நோய்எல்லாம் ஓடும் உடல்பருக்குந் ..............*
தள்ளாடு வாதபித்தஞ் சாந்தமாம் - வெள்ளாட்டின் ..........*
நற்கறியை உண்பார்க்கு நாடுகய ரோகமும்போம் ..........*
* மற்குரிய வன்பலனும் வாழ்த்து [*போர்க்குஉரிய]. (௪௯௪)

(கொடியாட்டு இறைச்சியின் குணம்.)

கொடியாடு நற்கறியாங் கொள்ளும்வகை கேளாய் ..............*
தடியாமற் பூப்போற் சமைத்து - விடியாலே ..............*
கொண்டால் இடுப்புவலி குத்திருமல் வெட்டையும்போம் ...*
கண்டாலும் வாதம்அறுங் காண் ................................(௪௯௫)

தே—(வரையாட்டு இறைச்சியின் குணம்.)

பத்தியத்திற் கொவ்வும்வளர் பாரநோ யைத்துரத்தும் .....*
மெத்த மெலிந்தார் மெலிவகற்றுஞ் - சுத்தமணம் ..........*
ஊட்டுவரை ஒத்தமுலை ஒண்டொடியே பன்மூலிக் ..........*
காட்டுவரை யாட்டுக் கறி ...........................................(௪௯௬)

(செம்புலியாட்டு இறைச்சியின் குணம்.)

அம்புவியிற் செங்கரப்பான் அண்டுவது மாத்திரமோ .......*
செம்புலியாட் டுக்கறியைத் தின்றக்கால் - கொம்பில் .......*
இருந்து குதித்தாற்போல் எப்பிணியும் உண்டாம் ..........*
அருந்துயரம் நீங்கா தறி ··· (இதுவே-செம்மறியாடு.) .. (௪௯௭)

(பள்ளையாட்டு இறைச்சியின் குணம்.)

மந்தமிகுந் தீபனம்போம் மாறு அரோசகமாந் ..............*
தொந்தநோய் எல்லாந் தொடருங்காண் - இந்துநுதன் .....*
மானே கபம்உயரும் வன்பள்ளை யாட்டுக்குத் .............*
தானே மிகும்வாயு சாற்று ...........................................(௪௯௮)

(குறும்பாட்டு இறைச்சியின் குணம்.)

குறும்பாட் டிறைச்சிதனைக் கொண்டார்கட் கெல்லாம் .......*
எறும்பார் சொறிசிரங்கும் எய்தும் - இறங்கும் ..............*
குடல்வாதஞ் சூலை கொடும்அனிலக் கூட்டம் ..............*
உடனே அடரும்என ஓது ...........................................(௪௯௯)

(மான் இறைச்சியின் குணம்.)

மான்கறி உண் டார்தமக்கு மாதொந்த நோய்கபநோய் .....*
ஊன்பகர்த்த ரங்கழலின் ஊதையொடு - தான்பரவு ..........*

வாதநமை யாந்தினவும் வாங்குங்கண் ணிற்புகையாம் ........*
மோதுபித்தம் வீறும் மொழி........................(அருய)

( கல்லமான் இறைச்சியின்குணம். )

மேகப் பிடிப்பகலும் வெட்டை அனலும்அறும்............*
போகம் உறும்பலனும் பூவையரோ - மேதகத்தில்...............*
பித்தவா தங்கள்அறும் பேரா அழலையும்போந்..............*
தத்துகலை மான்கறிக்குத் தான்..........................(அருக)

( கடமான் இறைச்சியின்குணம். )

உடலம் வலுவாகி ஓங்கிப் பருக்குங்.........................*
குடலில்அதி வாதங் குதிக்கும் - வடமார்......................*
கடமா மெனுங்கொங்கைக் காரிகையே கானக் ..............*
கடமான் இறைச்சி உண்ணுங் கால்.......................(அருஉ)

( ஊர்ப்பன்றி இறைச்சியின்குணம்- வி-ம். )

வாதபித் தங்கள்சேரும் மருவிய புண்ணும்உண்டாந்.........*
தாதுவுங் கபமும்பொங்குந் தாங்கொணு அசதியாகும்......*
வாதுற அனந்தநோய்கள் வளர்ந்தெழுந் துன்பம்எய்தும்...*
ஓதியுண் மருந்துநாசம் ஊர்ப்பன்றிக் கறியுண்பார்க்கே....()

( காட்டுப்பன்றி இறைச்சியின்குணம- வி-ம். )

ஏறிய வாதம்போகும் எழும்பிடுங் காசநோய்கள்..............*
வீறிடும் விழிநோய்சீதம் விஷிக்கடி கிரந்தியுண்டாங்........*
கூறிடு மூலங் * கிலங் குதங்குடல் வாதம்நாசம் ..............*
மாறிடு காட்டுப்பன்றி மாங்கிசந் தனையுண்பார்க்கே...(அருச)
[* கிலம்-சருமகிலரோகம்-குதம்-குதநெகிழ்ச்சிரோகம்]

( முள்ளம்பன்றி இறைச்சியின்குணம்-வெ-பா. )

காட்டுப்பன் றிக்குணமுங் காயம்எல் லாமுள்ளை..............*
நீட்டுப்பன் றிக்குணமும் நேர்ஒன்றாய்க் - காட்டுகினும்....*
இப்பன்றிக் கங்கம் இறுகுவதால * இப்பன்றிக்...............*
கெப்பன் றியுநிகரா என். [* இப்பன்றிக்கு-எப்பன்றியும்.]

( முசல் இறைச்சியின்குணம்- வி-ம். )

கடுகிய நடை உண்டாகுங் கனத்ததோர் பித்தம்ஏகும்........*
முடுகிய ஈளைகாசம் முதிர்ந்ததோர் சுவாசப்போகும்.......*
சடுதியில் வெருண்டேயோடுந் தனிமுயற் கறியினாலே........*
கொடுமையிற் கண்ணாய்வாதங் குறைந்திடும் மலம்இறங்கும்...()

( உடும்பு இறைச்சியின்குணம்- வெ -பா. )

கிட்டும் உடும்பிறைச்சி * கேள்விநோய் மூலமுளை.........*
வெட்டைசிரநோய்சோபை மேகம் புண - குஷ்டகபஞ்...*
சீதம் இரத் தக்கடுப்பு திராக் குடல்வாதம் ...................*
பேதியிவை போக்கும்எனப் பேசு[* கேள்வி-காது].(அ௩௭)

( இதுவுமது. )

சொலும்வாத பித்தமொடு தொல்வறட்சி யும்போம்.........*
பலம்இலாத் தூர்ப்பலர்க்கும் பாரில் - பலம் வந்...... .....*
திடுந் * துவர்ப்பி னிப்பும் இயற்கையிலே உள்ள .............*
உடும்பின் இறைச்சிதனை உண்[* துவர்ப்பு-இனிப்பு](அ௩அ)

(புலி-கரடி-சிறுபுலி-இவைகளின் இறைச்சிக்குணம்-வி-ம்)

வருபுலி மாங்கிசத்தால் மாறும்உன் மாதரோகங் ........ ..*
கரடிமாங் கிசத்தால்வாதங் கபங்கெடும் வலிப்புநீங்குந் ......*
திரிசிறு புலியிறைச்சி தீர்த்திடுஞ் சிலரோகத்தை...... ......*
வரிவிழி மாதேயிந்த வகையறிந் தோதுவாயே.........(அ௩௯)

( மாடு-முதலை-இவைகளின் இறைச்சிக்குணம்-வெ-பா. )

* கோமாங் கிசத்தைக் குறித்துண்ட பேர்உடம்பில்.........*
* ஆமாவி யாதிக் களவுண்டோ - * வாம.....................*
மதலைக் குறு கக்கு வான் அனிலஞ் சீதம்.....................*
முதலைத் தசைக்கிருக்கு மோ[* பசுமுதலியமாடு * ஆம்-உண்
டாகும்-மா-பெரிய.* வாம-மதலைக்குஉறு-அழகியபிள்ளைக்குப்

( பூனை இறைச்சியின்குணம். ) [பொருந்திய

பூனைக் கறியைப் புசித்தால் எழிலணங்கே ................ .....*
மேனிக் கழகுண்டாம் மேல்விரணந் - தான்அகலுஞ்.......*
சூடும் அதிகரிக்குஞ் சோரியது மேன்மேலும்.............*
நீடும்என நாளும் நினை.......... ..... .. .................(அ௪௧)

( புழுகுப்பூனை இறைச்சியின்குணம். )

இடுப்பில் உரத்தில் எழுநோய் அகற்றுங்.........................*
கடுப்புறுவா தத்தைக் கடுகுந் - தொடுப்பில்..................*
அமிழ்தா துவும்நல் அரும்பசியும் நல்குங்..... ...........*
கமழ்புழுகுப் பூனைக் கறி...... . ..................... ...(அ௪௨)

( கீரி இறைச்சியின்குணம். )

கீரி இறைச்சிக்குக் கெம்பீரம் உண்டாகும்...... .............*
நீரிழிவும் ஏகும்என்பார் நிச்சயமே - வீரியமாங்...........*

சில்விஷம்விட் டேகுஞ் சிரங்கு சொறி அகலும்..................*
பல்லரணை போகும் பறந்து.........................(அ௬௯)

(மரநாய் இறைச்சியின்குணம்)

மரநாய் இறைச்சிக்கு வன்கிரந்தி மேகம்...................*
உரம்அறவே ஒடி ஒளிக்கும்- * விளைவாதஞ்................*
சூலைகண வாதந் தொலையுஞ் சுரம்போகும்...............[ஞா
ஞாலமிசை இக்குணத்தை நாட்டு[* விதை-விளை-எனமருவிய

(எலி இறைச்சியின்குணம்.)

எலிஇறைச்சி குன்மம் பிலீகம் * உரநோய் .................*
நலிவித் திரப்புண் நமைச்சல் - மெலிவோட்டும் .........*
மீதுமட்டி டாப்புளகம் மேவச்செய் யும்புணரத்............*
தாதுவுக்கும் புஷ்டிதருந் தான்...[* உரம்-மார்பு].(அ௬௪)

(வெள்ளெலி இறைச்சியின்குணம்.)

சீதம்ஐயங் குன்மஞ் செறிமூலம் வித்திரதி .................*
பேதிதொந்த ரோகம் பிலீகமும்போந் - தாதுவுமாஞ்....*
சேரும் உதிரம்அது தேகம்எல் லாம்பரவுஞ்................*
சாருகின்ற வெள்எலிக்குத் தான்......................(அ௬௯)

(பெருச்சாளி இறைச்சியின்குணம்.)

வாதபித்தந் தாள்பிடிப்பு வன்பீநச சங்குஷ்டம்...............*
ஓதுதிர நோயோ டுறைகீடம் - பேதிஇவை.................*
பேர்ந்தகல ஓடும் பெருச்சாளி யின்கறியால்.................*
தீர்ந்தவெழில் ஒவியமே செப்பு.(இறைச்சிவகை-முற்றியது.)

---

பறவைஇறைச்சிஅல்லது-கறிவகை.

(கோழிக் கறியின்குணம்.)

கோழிக் கறிநெருப்பாங் கொள்ளில் * மருந்தூரம் * வங்....*
கூ * ஜைக் கடுப்பு மந்தங் கூ * றரசம் - * மாழ்கிப்போம்*
நீளூற்ற போகம் நிணக்கிரந்தி பித்தம்உண்டாந் ..........*
தாளித்த மெய்இளைக்குஞ் சொல்[* மருந்தின்பலம். * வங்கூ
ழ்-வாய்வு-* ஐ-சிலேஷ்மம்.* அரசம்-மூலம்.* நீங்கிப்போம்]

(கருங்கோழிக் கறியின்குணம்.)

குட்டங் கடிகிருமி கோரவா தக்கூட்டம்.......................*
மட்டிடாச் சூலையறும் மாதரசே - துட்டக்.....................*

இரந்தியொடு புண்வலிபோங் கேள்உடல் உரக்கும்..........*
அருந்துகருங் கோழிக்,கறி............................(௮௬௯)

( காளுங்கோழிக் கறியின்குணம். )

உத்தமமாம் தோயனைத்தும் ஓடும் இருமல்அறும்............*
பத்தியமாம் நோயோர்க்குப் பார்மீதில் - முத்தநகை......*
மானே கரப்பான்போம் மாசு மறுஅகலுங்...............*
காளுங்கோ ழிக்கறியைக் காண்............................(௮௭௰)

( வான்கோழிக் கறியின்குணம். )

போகமிகும் மெய்யிற் புளகிதம்வான் கோழிக்கு ..........*
ஆகமதில் ஐயம் அதிகமுமாந் - தேகம்எல்லாந்...............*
தானே கரப்பானுஞ் சாற்ற உரிசையுமாந்.................*
தேனே யிதனைத் தெரி..........................................(௮௭௧)

( சம்பங்கோழிக் கறியின்குணம். )

வரட்சி சொறி சிரங்கு வன்கரப்பன் என்றுந்...............*
திரட்சி யொடுபலநோய் தீரும் - பொருட்சிகரி..............*
கும்பங்கடாக்களிற்றின் கோடெனச்சொல் பூண்முலையாய்..*
சம்பங்கோ ழிக்கறிக்குத் தான்..................................(௮௭௨)

( வாத்துக் கறியின்குணம். )

வாத்துக் கறிஅருந்த வற்றிஉலர் புண்சிரங்குங் ..............*
கோத்தகபமுங் குலாவுங்காண் - ராத்திரியிற்..................*
போகம் உறுதியுமாம் பொல்லா அம்ரோசகநோய்... ..........*
ஆகம்அதில் ஊறும் அறி.........................................(௮௭௩)

( கோழி முட்டையின்குணம். )

வாதபித்தஞ் சேர்ப்பிக்கும் வன்ரேஷம் புண்போக்குந்.....*
தாதுவை மெத்தத் தழைப்பிக்கும் - ஓது...................*
கபத்தை அடக்குங் கரப்பான்உண் டாக்கும்..................*
இபத்தைஉறுங் கோழிமுட்டை எண்.............. .(௮௭௪)

( காடைக் கறியின்குணம். )

கட்டிற் கிடப்பார்க்குக் காட்டிற் படுங்காடை..................*
மட்டவிழுங்கோதாய் மருந்தன்றே - இஷ்டம்உறச்..........*
சோறுபுகுஞ் சோபை அறுந் துன்னோய் எலாம்எகும்........*
வேறுமருந் தேற்றுவதேன் விள்.................................(௮௭௫)

(கவுதாரிக் கறியின்குணம்.)

* சிவல்இறைச்சி பித்தஞ்சி லேஷ்மமந்தம் வாதக்..........*
கவலை அற ஒட்டிஉடல் காக்கும் - புவனமதில்...............*
மெய்க்குப் பலஞ்செய்யும் வீரியமும் உண்டாக்குஞ் .......*
சிக்கிய மலங்கழிக்குஞ் செப்பு...[* சிவல்-கவுதாரி].(௮௭௫)

(ஊர்க்குருவிக் கறியின்குணம்-வி-ம்)

மருவிய திரிதோஷம்போம் மறப்புறுப் புணர்ச்சியுண்டாம்*
பெருகிய சுரமேகம்போம் பிறந்திடும் இளமைமெய்யில்...*
கருகிய வன்னம்நீங்கிக் கனகம்போல் ஒளிவுஞ்சேரும்.......*
உருவமுந் திரமாம்நாளும் ஊர்க்குருவியின்ற சைக்கே.....()

(வானம்பாடிக் கறியின்குணம்-வெ-பா.)

வெட்டை அனலமொடு வீறுபல நோய்அகலும்.............*
மட்டிலாக் காமம் வளருங்காண் - மட்டணையிற்..............*
கானம்பா டிக்களிக்குங் காமரசப் பைங்கிளியே ..........*
வானம்பா டிக்கறி வறு ..................................(௮௭௮)

(விச்சுளிக் கறியின்குணம்.)

ஐயுடனே பித்த அரோசகத்தை மாற்றிவிடுஞ்...............*
சையோகபோகந் தழைப்பிக்கும் - மெய்யாகப் ..........*
பத்தியமாம் யார்க்கும் பசும்விச்சு ளிக்குருவி..............*
உத்தமத்தில் உத்தமமாம் ஓது.........................(௮௭௯)

(தூக்கணங்குருவிக் கறியின்குணம்.)

ஐயம் அருசி * அகட்டின்மல மும்போக்குந்..................*
துய்ய பசியைமெல்லத் தூண்டிவிடும் - மெய்யில்...........*
மினுத்தஅழ குண்டாக்கும் மென்பத்தியமாந் ..............*
தனித்தூக்க ணங்குருவி தான்...[* அகடு-வயிறு.]...(௮௮௦)

(கருங்குருவிக் கறியின்குணம்-இதுவே-வலியன்.)

வாதகா மாலையறும் மாதே கபமும்போம்...................*
ஊதுகா மாலைவிழுந் தோடுங்காண் - வாதுசெய...........*
வந்தகரப் பான்உடனே மாறுஞ் சொறியும்போங்...........*
குந்து கருங்குருவி கொள்..................................(௮௮௧)

(சிட்டுக்குருவிக் கறியின்குணம்.)

* பூவிரணம் போக்கிவிடும் பொல்லாக் கிருமிகளைப்.........*
பாவுமலத் தோடிறங்கப் பண்ணுங்காண் - பூவணையிற்.......*

கட்டுற்ற மாதர்எலாங் கைகுவித்துக் கெஞ்சுவிக்கும்.........*
சிட்டுக் குருவித் திறம்...[* பூ-ஆண்குறியின்முனை]...(௮௮௨)

( உள்ளான் கறியின்குணம். )

உத்தமமாம் பத்தியத்திற் கொவ்வும்உள் ளான்கறிதான்.......*
சத்தியமாய் வாதபித்த சாந்திசெய்யும் - மூத்த............. .......*
நகையீர்மே கம்போக்கும் நற்பசியுண் டாக்குந்... .. .......*
* தகைமந்தந் தீர்த்துவிடுஞ் சாற்று. [* தகை-முகம்] (௮௮௩)

( கொசுஉள்ளான் கறியின்குணம். )

கொசுஉள்ளான் றன்கறியைக் கூட்டியுண் பார்க்குப்..........*
பசியெழும்பும் மேகம் பறக்கும் - பசபசத்து.... ........*
நின்ற தினவகலும் நீங்காத போகம்உறும்..................*
மன்றலுறை வார்குழலே வாழ்த்து......................(௮௮௪)

( கோணையுள்ளான் கறியின்குணம். )

நாட்டில்உள்ள பட்சிகளில் நன்கிதுவே பத்தியமாங்..........*
* கூட்டில்உள்ள தோஷங் குலையுங்காண் - தாட்டிகமாய்...*
ஆறொன்ன சொன்னாலும் அம்புவியில் நோயோர்க்குக்.......*
கோணையுள் ளான்கறியைக் கூட்டு...[* கூடு-உடல்]...(௮௮௫)

( மயில் கறியின்குணம். )

சூலைப் பிடிப்புகளைச் ?சோரிவளி யைப்பித்தை.............*
* வேலைச்சி லேட்டுமத்தை வீட்டுங்காண் - நூலொத்த......*
அற்பவிடை மாதே அனலாம் மயில்இறைச்சி..................*
நற்பசிஉண் டாக்கும் நவில். [?ரத்தவாயுவை. * சமுத்திரம்]. ()

( குயில் கறியின்குணம். )

நல்லதொரு பத்தியமாம் நாடாது வாதபித்தஞ்...............*
சொல்லரிய மானே சொறிஎகும் - வல்ல .................*
குயில்அருந்த மேகம்போங் குன்மவலி தீருந்... ......... ...*
* துயிலில் அதி போகம்உறுஞ் சொல். [* நித்திரையிலும்]. ()

( கொக்குக் கறியின்குணம். )

○ கொக்கருந்த மேகம்உண்டாங் கூடும் அரோசகநோய்....*
மைக்குழலே புண்கரப்பான் வந்துறையும் - மெய்க்கு.....*
தியத்தமருந் துண்ணில் இதன் நீள் * கவிச்சா காது.....[காது
வயிற்றுக் கிருமிபோம் மாதி[○ கொக்குஅருந்த. * கவிச்சு-ஆ

(கருங்கொக்குக் கறியின்குணம்.)

கருங்கொக்கின் றன்கறிக்குக் காணுக் கரப்பன்.................*
ஃ மருங்கொக்கும் புண்ணும் வளரும் - பெருங்கிரந்தி......*
உண்டாஞ் சிலேஷ்மம் உலவும் உடலம்எலாம்..[ப்பொருந்தும்
வண்டார் குழலே வழுத்து[ ஃ மருங்குஒக்கும்-உண்பவரிடத்து

(தாராக் கறியின்குணம்.)

தாராக் கறி அருந்தத் தாதுமிக உண்டாகும்..........*
பேராக் கபம்வளரும் பெண்மயிலே - தீராத..........*
வாந்தி அரோசகமும் வன்கரப்பன் புண்ணுமிகச்..........*
சேர்ந்துவரும் இப்பலனைச் செப்பு..........(அகூய)

(நாரைக் கறியின்குணம்.)

நாரைக் கறியருந்த நாறுகரப் பான்புண்ணும்.........*
ஊரைத் ? தொடர்ந்து தொடர்ந் தொட்டுங்காண் - பாரித்த*
மேகமொடு வாதம் விளையுமே * நீரிழிவுக்.........[குஆகும்.
காகும்என் பார்கள் அறி[ ? தொடர்ந்து ஒட்டும். * நீர்இழிவுக்

(ஆள்காட்டிப்பக்ஷிக் கறியின்குணம்.)

ஆட்காட்டிப் * பக்ஷிக் கடல்மேகம் போய்ஒளிக்குந்.......*
தோட்காட்டு வாதந் தொடராவே - வாட்கண் .......*
அரிவையே பத்தியத்திற் காகும் புவியில்.........*
தெரியமறைப் பில்லாமற் செப்பு.[* பக்ஷிக்கு-அடல்-வலி].()

(கிருட்டிப்பக்ஷிக் கறியின்குணம்.)

மருட்டு விழியுடைய மாதே புவிக்குள்.......*
கிருட்டிக் கறியருந்திற் கேளாய் - மருட்டுபித்தம்.......*
வாதங் கடுப்பு வளருமிரத் தக்கழிச்சல்........*
காதம்போம் வாந்தியறுங் காண்........(அகூரு)

(சூறைப்பக்ஷிக் கறியின்குணம்.)

குஷ்டங் கிருமிகுன்மங் கோரவா தஞ்சோபை.......*
* துஷ்டம் பகந்தரநோய் தோன்றுமோ - இஷ்டமுறப்....*
பத்தியத்திற் காகும் பருகில் உரிசையுமாங்..........[காத
* கைத்திடாச் சூறைக் கறி[* துஷ்டம்-ஆறுதவிரணம். * கசக்

(கிளுவைக் கறியின்குணம்.)

பாலிலா மாதர்கட்குப் பாலும்உண்டாம் போகமுமாந்.....*
* தாலமிசை பித்தந் தரிக்குமோ - சாலச்.........*

சிரங்குபுண்க ளெல்லாமே சீழ்வற்றி யாறும்..................*
அருங்கிருவை யைத்தின் றறி.[* தாலமிசை-பூமியினிடத்தில்]

( மடையான் கறியின்குணம். )

அன்னநடை பின்னுசடை அங்கண்மட மாதேகேள்..........*
வன்னமடை யான்கறியை * மாந்தினர்க்குத் - துன்னு.....*
கரப்பான் சொறிசிரங்குங் காணும் ஐய வாதம்..............*
உரப்பாக நீடும் உரை......[* மாந்தல்-உண்ணல்].....(அசுகஈ)

( கூழைக்கடாக் கறியின்குணம். )

நெடுநாளின் நீரிழிவை நேராகக் கட்டும்.....................*
அடலான சூலை அகற்றும் - மடுவாருங்....................*
கூழைக் கடாக்கறிதான் கோரகரப் பான்புண்ணை..............*
ஆழத் * தே கத்திருத்தும் ஆய்...[* தேகத்து-இருத்தும்]..()

( நமிட்டுக் கறியின்குணம். )

நமிடுகரப் பான்வாதம் நாட்சோபை மாற்றும்..................*
அமிர்தகுணம் ஆம்உரிசை ஆகுஞ் - சமம்உரைக்கில்..........*
எல்லாக் கறிக்கும் * இஃ தின்பாகும் இக்கறிக்குப்..........*
பொல்லாக் கயநோய்போம் போம்[* இஃது இன்புஆகும்.]()

( சிறவிப்பட்சிக் கறியின்குணம். )

வாராய் மடமானே வாதகபம் உண்டாகுஞ்.....................*
சேராச் சிறவிதனைத் தின்றக்காற் - பேராத்...................*
தினவுகரப் பான்கிரந்தி சேருமோ நாளுங்....................*
கனஉறுதி யாம்போகங் காண்.........................(அசுசு)

( பொன்னுந்தட்டான் கறியின்குணம். )

மேக அழல்தணியும் மிக்கஅழ குண்டாகும்...................*
போகம் மிகுங்கரப்பான் போகுங்காண் - பாகான.......[ம்
பொன்னுந்தட் டான்கறியைப் போற்றிஉண்ணில் நற்சுவையா
மின்னுந்தே கம்புவியில் விள்.........[*விள்-சொல்.]...(கூஎ)

( கடல்இறஞ்சிக் கறியின்குணம். )

பத்தியத்திற் கொவ்வும் இந்தப் பாரிற் கடல்இறஞ்சி.........*
உத்தமமாம் நோயனைத்தும் ஓட்டுங்காண் - மெத்தச்........*
சொறிகரப்பான் வன்சிரங்கு தொல்மேகம் போக்குஞ்.......*
* செறிநுரைநீக் குஞ்சுவையாம் செப்பு..[* நெருங்கிய-நுரை]

( வெண்புறாக் கறியின்குணம். )

வெண்புறா வாதபித்தம் வீறுகபம் மேகம்இவை.............*
திண்புவியை விட்டோடச் செய்யுங்காண் - புண்பரவு .....*
வெண்குஷ்டம் நீள்கரப்பான் மெய்வறட்சி யும்போக்கும்...*
பண்புற்ற பத்தியமாம் பாரீர்................ .........(௯௱௨)

( பச்சைப்புறாக் கறியின்குணம். )

இச்சைதரும் புன்முறுவ லேந்திழையே மாந்தர்மிகப்... ..*
பச்சைப் புறா * ஊன் பருகினால் - கொச்சைதரும்.........*
வாதபித்த ஐயம்போம் மாயலமுந் தாதுவுமாம்.... ..........*
ஓது சீ தம்போம் உளை........[* ஊன்-இறைச்சி]..(௯௱௩)

( மாடப்புறாக் கறியின்குணம். )

உண்டாற் பசியாம் உறைதாது வும்பெருகும்.. ...... - ......*
கண்டாலும் வாதங் கலங்குங்காண் - வண்டாருங்.............. *
காரின்மிகு மைக்கூந்தற் காரிகையே பத்தியமாம்............*
பாரின்மா டப் * புறவைப் பார் .....[* புறவு-புறா]..(௯௱௪)

(வரிப்புறாக் கறியின்குணம்.)

வரிப்புறா வின் * றசையோ மாஉருசி தின்றால்...............*
? தரிப்புறு வாதபித்தந் தானும் - அரிப்பான...............*
சோபாரோ கங்கள் தொடரா எவர்களுக்கும்... ..............*
நீபார் கனிவாய் நினைத்து...[* தசை-இறைச்சி. ? தரிக்காவாம்]

( வன்னப்புறாக் கறியின்குணம். )

ஈளை இளைப்போ டிரத்தபித்தம் போக்கிவிடும்................*
வாளைவென்ற கண்ணாய் மலங்கழிக்கும் - நாளுமோ..........*
அன்னம் ஊட் டும்பசிமூட் டும் அருசி ஓட்டும் நல்ல..........*
வன்னப்பு றாவை * நுகர் வாய்....[* நுகர்-உண்] ...(௯௱௬)

( மணிப்புறாக் கறியின்குணம். )

கணிப்புறா இன்பக் களஞ்சியமே கேளாய்.....................*
மணிப்புறாப் பத்தியமாம் வாதப் - * பிணிப்பறும் உள்.....*
கொண்டாற் கயந்திருங் குன்மரோ கங்கள் அறும்.... ..........*
கண்டாலும் ஐயம்போங் காண்....[* கட்டு அறும்] ...(௯௱௭)

( மனைப்புறாக் கறியின்குணம். )

பத்தியத்திற் காகாது * பல்மனைப்பு றாக்கறிதான்............*
ஒத்தகரப் பான்சொறியை உண்டாக்கும் - மெத்தவுமே....*

நாவுருசி யாயிருக்கும் நற்சுக்கி லம்பெருக்குந்.............*
நாவு கயல்விழியாய் சாற்று..........[* பல்-பல]....(கூ௱அ)

( தவிட்டுப்புறாக் கறியின்குணம். )

ஓடுகரப் பான்சோபை உட்சொறிகா மாலைபித்தம்.........*
ஆடு பெரு * மூச் சடைப்பும்போம் - நீடு.................*
கவட்டுக் கலகவிழிக் காரிகையே நாளுந்...................*
தவிட்டுப் புறாக்கறிக்குத் தான்...[* மூச்சு அடைப்பு](கூ௱கூ)

( நீர்க்காக்கைக் கறியின்குணம். )

பாண்டோடு சோபை பருவயிறும் போங்கரப்பன்...........*
மீண்டுசொறி யும்வினையும் மெய்த்தவளா - நீண்டமதன்....*
ஊர்க்காக்கு மாதரசே ஓங்குபுலால் நாற்றம் உறும்...........*
நீர்க்காக்கை தன்னை நினை.................................(கூ௱ய)

( அண்டங்காக்கைக் கறியின்குணம். )

பித்தவெட்டை சோபைஅறும் பேதித் தெழுந்துடலில்....*
ஒத்தபெரும் பாண்டுவகை ஓடுங்காண் - நித்தியமோர்.......*
* கண்டஞ்செய் * காமிலம்போங் காக்கைக்குள் ஓர்பிரிவாம்*
அண்டங்காக் கைக்கறிஉண் டால்[* தத்து. * காமாலை](கூ௱யக)

(கோட்டான் கறியின்குணம்.)

கோட்டான் கறிக்குக் கொடும்பசியாம் நோய்கள்தலை.........*
காட்டா தடங்கும்இது கைவல்யங் - காட்டானை...............*
மாமதம்போற் காமம்உறும் வன்மருந்தின் பத்தியமாம்.....*
பூமியிலே யாவர்க்கும் போதி..(பறவைக்கறிவகை-முற்றியது.)

மீன்கறி வகை.

(வரால்மீன் கறியின்குணம்.)

உடலை வளர்க்கும் உறுபிணியைத் தீர்க்குந்.....................*
* குடலுக் கதிசுகங்கொ டுக்குங் - கடலை.......................*
யுழக்கும் வராலைவிட்டிவ் ஊர்க்குளத்துச் சேற்றை...........*
யுழக்கும் வரால்அதனை யுண்....[* குடலுக்கு அதிகசுகம்]..()

( குறவைக் கறியின்குணம். )

மூட்டு குடல்வலிபோம் மூடிருமல் ஏகு ० மலக்.............*
கட்டிரக்கும் வாய்அருசி காணுங்காண் - மூட்டத்.............*
துறவைப்பெற் றோருந் துதிக்கும்எழின் மாதே...........*
குறவைமீ னின்குணத்தைக் கூறு[० மலக்கட்டு-பலப்படும்]..()

( அயிலைக் கறியின்குணம். )

உயிலை வளர்க்கும் உடற்பிணியை நீக்கும்.....................*
மயிலைவளர்க் கும் அருசி மாற்றும் - வயிரச்.................*
செயிலையுறுச் சற்குண நற் றெள்ளமிர்தே நாளும்...........*
அயிலை எனுமீன் அது...................................(௯௱௰௫)

( இறால் கறியின்குணம். )

வாதமொடு மந்தம்உறும் மாறுப் பொருமல்மிகுஞ்..........*
சீதம் விளையுந் தினவும்உண்டாம் - மாதே ..................*
உதிர மிகப்பெருகும் ஓங்கும் இறால் உண்டால்...............*
* எதிரில்அங்க மாங்கிசமாம் என்[*ஒப்பில்லாதசரீரமாம்சம்]

( கெண்டைக் கறியின்குணம். )

அண்டையில்நிற் பார்களுக்கும் ஆரோசி கங்காணும்.........*
பண்டையுள நோய்முதிர்ந்து பாரிக்குங்- கெண்டையுண்டால்
வாயுவும்உண் டாகும் வயிற்றுவலி யுஞ்சேரும்..............*
தீயும் அறிவாய் நிசம்....................................(௯௱௰௭)

( சன்னக் கெண்டையின் குணம். )

மின்னை நிகருமிடை மெல்லியலே மேனியது...................*
சன்னமீன் உண்டால் தளராதாம் - முன்னைக்...............*
கரப்பானும் புண்ணுங் கடியகப மும்போம்....................*
உரப்பாக நாளும் உரை.....................................(௯௱௰௮)

( பேராரால்கறியின்குணம். )

வாராய் மடமானே வந்தபிணி அத்தனையும்.....................*
* பேராரால் மீனுக்குப் பின்னிடையும் - ! பேரா.........*
திருந்த பழமலம்போம் எய்தும்ஆ ரோக்கியம் ........[ருந்த
மருந்தோடே ஒக்கும்என வை[* பெரியஆரால். ! பேரா துஇ

( சிற்றாரால் கறியின்குணம். )

* சிற்றாரால் மீன்அருந்தச் சிக்கு மலசலம்போம் ...........*
உற்ற கபங்கரப்பான் உண்டாகுஞ் - சற்றேதான்.............*
மந்தம்உறுந் தீபனம்போம் வாயிற் சலம்ஊறுங்.............*
கந்தமலர்ப் பூங்குழலே காண்......[* சிறியஆரால்]...(௯௨௰)

( கச்சற் கருவாட்டுக் கறியின்குணம். )

வாதம்அறும் அப்பொழுதே வன்பித்தம் உண்டாகுஞ்.......*
சேதம் அகலுந் தினவும்போங் - கோதாய்கேள்...............*

உண்டால் பசிஎழும்புங் கச்சற் கருவாடு........................*
கொண்டால் சுரமும்விடுங் கூறு..............................(௬௨௧)

( உழுவைக் கறியின்குணம். )

முழுதும் புசிக்கலாம் முள்ளுமில்லை அந்த...................*
* உழுவைக் குடற்பிணிவிட் டோடும் - வழுவான ..........*
மூன்மலமுஞ் சாறும் முதிர்கரப்பான் உண்டாகும்... .....*
வன்முலையாய் நீயறிந்து வை.[* உழுவைக்கு உடல்]..(௬௨௨)

( வாளைக் கறியின்குணம். )

ஆளை வளர்க்கும்அதி ஆண்மைதனை உண்டாக்கும்...... .....*
வாளைவென்ற கண்மாதே வாயுவென்பார் - வேளை.........*
அறியாமல் உண்டால் அணுகுமே வாதங்....... ..............*
குறியார்கள் வாளைக் குணம்....................... ......(௬௨௩)

( சேல்கெண்டைக் கறியின்குணம். )

குடல்வாத சூலை கொடுக்குஞ்சேற் கெண்டை.....................*
அடல்வாத மேகமும்உண் டாக்குஞ் - ! சடமீது.............*
புண்ணுஞ் சிரங்கும் பொருந்திநிற்கச் செய்துவிடும்... ......*
உண்ண மிகுசுவையாம் ஓது.....[ ! சடம்-உடல்.]....(௬௨௪)

---

கடல்மீன் கறிவகை.

( கெளிற்றுக் கறியின்குணம். )

நெய்த்திருக்கும் நொய்த்திருக்கும் நீங்காத சுக்கிலமாம்......*
ஒத்திருக்கும் வன்கெளிற்றை யுண்டக்கால் - மெத்த.........*
கரப்பானும் புண்ணுங் கபமும் பெருகுந்........................*
தரைக்குள் எவருக்குஞ் சாற்று.(இமமீன்பெயர்-கெளிறு)...()

( ஓலைவாளைக் கருவாட்டுக்கறியின்குணம். )

ஆலைவாய்ப் பித்தம் அணுகாதாம் அம்புவியில்................*
ஓலைவா ளைக்கருவா டுண்டக்கால் - சாலப்.......... ..........*
பசிதீ பனமாம் பறக்குமே வாதம்...................................*
புசியார்க் கிதனைப் புகல்.......................................(௬௨௬)

( சுறாக்கறி யின்குணம். )

வாத கபம்அறுக்கு மன்னுநோ டம்போக்கும்.......................*
ஊது குடல்வாதம் ஓடுங்காண் - ஆதரவாய்.....................*
எல்லாப் பிணிக்கும் இதமாகும் நல்லசுறா.......................*
நல்லா ரறிய நவில்.............................................(௬௨௭)

( சுறுக்கருவாட்டுக் கறியின்குணம். )

சூலை கிராணிகுன்மந் துஷ்டஅதி சாரமிவை ..................*
வேலை யுலகை விடுத்தோடுஞ் - சால...............................*
அருப்பசியுண் டாகும் அபத்தியமல் லாத ........ ..........*
சுறுக்கருவா டுண்பார்க்குச் சொல்...........................(௬௨அ)

( கொள்ளிக் கருவாட்டுக்கறியின்குணம். )

கொள்ளிக் கருவாடு கொண்டால் உடம்பெல்லாங் ..........*
கொள்ளிகொண்டு சுட்ட * குறிப்பாகும் - விள்ளக் ... ...*
கரப்பானும் புண்ணுங் கனசிரங்கும் பைய ...................*
உரப்பாம் அழகுகெடும் ஓது....[* அடையாளம்]...(௬௨௯)

( சன்னக்கூனிக் கறியின்குணம். )

சன்னக்கூ னிக்கறியைத் தான்அருந்தில் அக்கணமே..........*
தின்னப் படும்அன்னஞ் சீரணமாம் - பின்னும்...............*
பசிக்கும் அதிநெருப்பாம் பாரில்நோ யெல்லாம் ... .......*
* நசிக்கு மெனவு * நவில்....[* கெடும்- * சொல்.]...(௬௩0)

( திருக்கைக் கறியின்குணம். )

வாதமொடு தாது வளர்ந்துள்ளே சேருமென்றும்.............*
ஓதுபித்தஞ் சோபம் இவை யோடுமென்றுங்- கீதச்.........*
செருக்கையடை வானைத் திருத்துமொழி மாதே ............ *
திருக்கைமீன் உண்பார்க்குச் செப்பு......... ............(௬௩௧)

( மடவைக் கறியின்குணம். )

மடவைமீன் வாதமொடு மந்தமுளை மூலங்....... ..........*
குடல்வாதஞ் சூலை கொடிய - அடல்கரப்பான்.................*
உண்டாக்கும் மாங்கிஷங்கள் ஊறுமெ னப்புகல்வார்.........*
வண்டார்க்கும் வார்குழலே வாழ்த்து...........................(௬௩௨)

( சுரும்புக் கறியின்குணம். )

சுரும்புமீன் பத்தியமாய்ச் சொல்லுவார் உள்ளில்...... ......*
அரும்பிணியை யெல்லாம் அகற்றும் - பெரும்போகந்.....*
தீபனம்உண் டாக்கும்அது தின்னச் சுவைகொடுக்குஞ் ......*
சோபனமின் னாரமே சொல்...... ...................... ....(௬௩௩)

( உல்லமீன் கறியின்குணம். )

உல்லமெல்லாஞ் சன்ன* எலும் போவியமே யிக்கறிதான்...*
நல்லகறி யாம்அதனை நாளும்உண்டால் - மெல்லக்...,......*

கழிச்சல் பிளவையொடு காணுக் கடியும்.........................*
விழிச்சுக்கொண் டாடுமென விள்.. [* எலும்பு-ஓவியமே].()

( கற்றளைமீன் கறியின்குணம். )

கற்றளைமீன் றன்னைக் கருதிநிதம் உண்பாருக்.....................*
குற்ற வயிறும் உற்பமியெழுஞ் - சற்றெருழிபாப்.............*
பேதி யெடுக்கும் பிறகுகரப் பான்ஒழியுஞ்...................*
சாதி மடமயிலே சாற்று..........................................(௯௱௫)

( வெள்வவ்வால் கறியின்குணம். )

வெள்ளைவவ்வால் தன்னை விரும்பிநிதம் உண்பார்க்குத்.......*
தள்ளுகின்ற பித்தந் தரிக்குமோ - துள்ளி.........................*
வருங்கரப்பான் ஏகும் மயிலே புவியில்..............................*
அரும்பத் தியமாம் அறி..........................................(௯௱௬)

( கருவவ்வால் கறியின்குணம். )

செங்கரப்பான் மேகஞ் சிறுசிரங்கும் உண்டாகும்...............*
வெங்கொடிய நீரிழிவும் விர்த்தியாங் - கொங்கைதனிற்.......*
பாலூறும் மெத்தப் பருகிற் கருவவ்வால்..........................*
மேலூறும் போகம் விதி..........................................(௯௱௭)

( நெய்த்தோலிக் கறியின்குணம். )

மந்தம்உறுந் தீபனம்போம் வாயிலைப்பும் உண்டாகுந்.......*
தொந்தமுறு வாதபித்தந் தோன்றும்பின் - நொந்தே ....*
வயிறும் பொருமும் வலியநெய்த்தோ லிக்குத்.................*
துயர மிகும்இதனைச் சொல்..........................................(௯௱௮)

(மயறிமீன் கறியின்குணம்.)

மயறி கரப்பன்ஐயம் வாதபித் தத்தோ..............................*
டுயருகின்ற சோபம் ஒழிக்கும் - நியமாய்.......................*
* உதரத்தின் உள்ளும் உறைவாதம் போக்கும்..................*
பதியில் இதனைப் பகர்..........[* உதரம்-வயிறு].....(௯௱௯)

( விலாங்குமீன் கறியின்குணம். )

விலாங்குமீன் றன்னை விரும்பிமிக உண்டால்....................*
குலாங்கிஷிமாய் ஐயங் குலாவும் - * இலங்கருசி...............*
போக மொடுசொறியும் புண்கரப்ப னுங்கதிக்குங்.............*
கோகனக மாதே குறி.........[* இலங்கு-அருசி].....(௯௱௰)

( கிழங்கான்மீன் கறியின்குணம். )

பத்தியத்திற் கேற்ற பருங்கிழங்கான் மீன்அருந்த..........*
உற்ற பிணியனைத்தும் ஓடுங்காண் - மெத்தப்..................*
பசியெழும்புஞ் சேர்ந்த பழமலமுஞ் சாறும் ..................*
* மூசியா தூடல்வளரு மூன்.......[* கெடாது]......(௯௪௧)

( ஆற்றுமீன்-கிணற்றுமீன் கறிகளின்குணம். )

ஆற்றுமீன் தாதுவையுண் டாக்கும்ஐய வெப்பத்தை.........*
ஊற்றும் அருசியைவிட் டோட்டுங்காண் - சாற்றுங்.........*
கிணற்றுமீன் வாதகுன்மங் கீறுபித்தங் குஷ்டம் ..........*
பணைத்தபிலீ கங்கொடுக்கும் பார்.........................(௯௪௨)

(மடு-குளம்-ஏரி-இவைகளிலுள்ள மீன்கறியின்குணம்.)

ஓதுமடு மீனால் உலவைபித் தங்கள்அறுந்...................*
! தாதுமே கங்கபமந் தங்கள்உண்டாங் - கோதில்குளம்......*
* ஆருமீன் றன்னால் அழற்பிணிமந் தந்தீரும்.................*
ஏரிமீன் மேகம்அடும் எண்...[! சுக்கிலம். * பொருந்திய]...()

( கடல்நண்டுக் கறியின்குணம் )

குன்மவலி வாதங் கொடுங்கரப்பான் உண்டாக்குஞ்...........*
* சன்மச் சொறியைத் தருவிக்கும் - பின்னும்................*
உதிரக் கழிச்சல்தனை ஓங்குவிக்கு மாதே.......................*
அதிரக் கடல்நண் டது.......[* சன்மம்-தோல்].....(௯௪௪)

( வயல்நண்டுக் கறியின்குணம். )

வயலில்உறு நண்டருந்த வாதக் குடைச்சல்.......................*
அயலினும்இ ருக்கா தணங்கே - துயிலவொட்டா..............*
வன்சயித்தி யங்கரப்பன் மன்குடல்இ ரைச்சலும்போம்......*
மூன் * பயித்தி யங் ! கதிக்கு மூன்[* பித்தம். !அதிகரிக்கும்]

( நத்தைக் கறியின்குணம். )

நத்தைக் கறிதனக்கு நாடாது மூலமுதல்.........................*
ஒத்தமல ரோகமெல்லாம் ஓடுங்காண் - நித்தநித்தம்.........*
தின்றாற் செரியாது தேடரிய தாதுவிர்த்தி.......................*
நன்றாகு மாதே நவில்..............................................(௯௪௫)

( ஆமைக் கறியின்குணம். )

ஆமைக் கறியருசி ஐயம்பித் தூன்மூலஞ்.........................*
சேமக் கனல்சூதி காமேகம் - நாமரத்தப்........................*
பேதி கிராணிமலப் பேதியகற் றும்பசியுந்.......................*
தாதுவும் * ஏ ருங்கொடுக்குந் தான்...[* ஏர்-அழகு].(௯௪௭)

மீன்கறிவகை-முற்றியது.

## கடைச்சரக்கின் வகை.

### ( சுக்கின் குணம். )

சூலைமந்தம் நெஞ்செரிப்பு தோஷம்ஏப் பம்அழலை.........*
மூலம் இரைப்பிருமல் மூக்குநீர் - வாலகப..................*
தோஷம் அதி சாரந் தொடர்வாத குன்மம்நீர்த்.................*
தோஷம் ஆ மம்போக்குஞ் சுக்கு...................(கூசஅ)

தே—( இதுவுமது-எண்சீர்ச் சந்தவிருத்தம். )

வாதப்பிணிவயி றூதற்செவிவாய்.............................*
வலிதலை வலிசூலை வலியிரு விழிநீர்.....................*
சீதத்தொடுவரு பேதிப்பலரோ...................................*
சிக * மலி முக ? மக முகஇடி கபமார்.......................*
சீதச்சுரம்விரி பேதச்சுரநோய்..................................*
தெறிபடும் எனமொழி குவர்புவி தனிலே.......................*
ஈதுக்குதவுமி தீதுக்குதவா.........................................*
தெனும்விதி யிலை ! நவ சுறுகுண முனவே[ * அலிமு
கம் - அலிமுகப்பாண்டு. ¿ அகமுகஇடி - வயிற்றுக்குள்குத்தல்.
தே—(மிளகின் குணம்-வெ-பா.) [! நவசு-சுக்கு.

சீதசுரம் பாண்டு சிலேஷ்மங் கிராணிகுன்மம்.....................*
வாதம் அருசி பித்தம் மாமூலம்-ஓதுசந்நி........................*
யாசம் அபஸ் மாரம் அடன்மேகம் காசம் இவை...................*
நாசங் கறிமிளகி னால்...........................................(கூருய)

தே—(இதுவுமது. )

கோணுகின்ற பங்கவலி குய்யஉரோ கம்வாத......................*
சோணிதங்க மூத்திற்குள் தோன்றுநோய் -காணரிய...............*
காதுநோய் மாதர்குன்மங் காமாலை மந்தம்என்றீர்..............*
ஏதுநோய் * காய் இருக்கில் ஈங்கு...[* காய்-மிளகு]...(கூருக)

### ( வெள்ளை மிளகின்குணம். )

வெள்ளை மிளகருந்த வீறு கிரகணிபோந்...........................*
தள்ளு கபவாதந் தான்எகும் - உள்ள.................................*
சுரம்போகுந் தீபனம்ஆந் தொல்மேகம் போம் இத்...............*
திரம்பார் எவர்களுக்குஞ் செப்பு.................................(கூருஉ)

### ( வால் மிளகின்குணம். )

வாத பித்த ஐயம் வயிற்று வலி தாகஞ்............................*
சீதம் பலநோய் சிதையுங்காண் - போத..............................*

அதிதீபனம்ஆம் அணங்கரசே நாளுந்......*
துதிவால் மிளகருந்தச் சொல்......(௬௫௫)

தே—(திப்பலியின்குணம்-கட்டளைக்கலிப்பா.)

இருமல் குன்மம் இளைப்பு கயப்பிணி......*
ஈளை பாண்டு சந்நியாசம் அரோசகம்......*
பொருமல் ஊதை சிரட்பிணி மூர்ச்சைநோய்......*
பூரிக் குஞ்சல தோஷம் பிலீகமும்......*
வருமலப் பெருக் கோடு மகோதரம்......*
வாதம் ஆதிமுத் தோஷஞ் சுரங்குளிர்......*
பெரும லப்புரி மேகப் பிடகமும்......(லி எனமருவியது
பேருந் திப்பலிப் பேரங் குளைக்கவே...(திப்பலி-திப்பி

தே-(இதுவுமது-வெ-பா.)

ஆசனநோய் தொண்டைநோய் ஆவரண பித்தமுதல்......*
நாசிவிழி காதிவைநோய் நாட்புழுநோய் - வீசிடுவி......*
பங்கலாஞ்ச னஞ்சிதையும் ? அம்பாய் அழிவிந்தும்......*
பொங்கலாஞ்ச நங்கையர்கோட் போல்.. [ ? நீராய்]..(௬௫௫)

(யானைத் திப்பலியின்குணம்.)

வாதம்அறுந் தீபனம்ஆம் மாறுக் கபங்கரப்பான்......*
ஓதுகுரற் கம்மல்இவை ஓடுங்காண் - பூதலத்தில்......*
* சோனையைநேர் நாசியில்நீர் ? தோலாச்சு வாசமும்போம்.*
யானையினல் திப்பலிய தால்[*விடாமழை. ? தோலா ஒழியாத]

(திப்பலி மூலத்தின்குணம்.)

தாகபித்தஞ் சோகந் தணியாச் சுரம் இருமல்......*
மேகங் குரற்கம்மல் மெய்க்கடுப்பும் - ஏகுங்காண்......*
திப்பலிமூ லங்கண்டத் திப்பலிய தாம்நறுக்குத்......*
திப்பலியென் றேயொருக்காற் செப்பு......(௬௫௭)

தே—(திரிகடுகின்குணம்-இது-சுக்கு-மிளகு-திப்பலி.)

மூக்கடுகால் ஆசியநோய் மூலங் * கொடிறுபிணி......*
திக்கடுபாண் டோடு சிரத்துறுநோய் - ? அக்கடுக்குந்......*
தாவரநஞ் சென்றுலகிற் சாற்றுமிந் நோய்முழுதுந்......*
தீவரநஞ் சுண்டிறக்குந் தேர்[* கன்னம்.?எலும்பைப்பற்றிய]

(இதுவுமது.)

திரிகடுகால் சீதபித்தஞ் * சிக்குவைநோய் கீடம்......*
எரி * கடு தேள் ஈளை யிருமல் - முடுகுசந்நி......*

யாசம் அருசி யபஸ்மாரம் அற்புதப்புண்............[விரணம்
வீசு ? சர்க்க ராற்புதம்போம் விள்[* நாக்கு.*விஷம் ? ஒருவித

( கடுக்காயின் சிறப்பு. )

கடுக்காயுந் தாயுங் கருதில் ஒன்றென் றாலுங்......................*
கடுக்காய் அத் தாய்க்கதிகங் காண்நீ - கடுக்காய்நோய்........*
ஓட்டி யுடல்தேற்றும் உற்ற அன்னை யோசுவைகள்............*
ஊட்டியுடல் தேற்றும் உவந்து..........................(௧௬௩)

தே—(கடுக்காயின்குணம்-இதுவே-வரிக்காய்.)

தாடை கழுத் * தக்கி * தாலு * குறியிவிடப்.....................*
பீடை * சி லிபதமுற் பேதிமுடம் - ஆடையெட்டாத்......*
* தால ? மிடி புண் * வாத சோணிகா மாலை * இரன்.......*
டாலமிடி போம்வரிக்கா யால்[* கண்-நாக்கு-ஆண்குறி-யானை
க்கால்- அதிதூலநோய் -இடிபட்டபுண் -வாதசோணிதநோய்-
தாவர சங்கம விஷங்களால் வருகின்றநோய்.]

தே—( கடுக்காய்ப் பிஞ்சின்குணம். )

வனதுர்க்கிச் சேய்க்கு மணித்தயிலம் பூசி.......................*
அனலிற் பொரித்தாங் கருந்தத் - தினமுமலச்................*
சிக்கலக்க டுப்பநின்ற சீதம்அறுங் காற்றுலைத்த................*
முக்கலக்க டுப்பிருக்கு மோ...(இ-ள்) வனதுர்க்கி-கடுக்காய்மர
ம்- இதன்பிஞ்சுக்கு ஆமணக்குநெய்தடவி தீயில்வறுத்துத்தூ
ள்செய்து அப்போதே உண்டால் மலச்சிக்கலும் எலும்பைப்
போல வெளுத்துநின்ற சீதமும் நீங்கும்- மூலவாயுவினால் பிற
ந்த முக்கலும் அவ் ஆசனக் கடுப்பும் இருக்குமோ இராதென்
( கடுக்காயின் பேதம். ) [பது கருத்து

ஆதி விசயன் அரோகிணியோ டேபிருதிவி......................*
நீதில் அமிர்தை சிவந்திமலை - மீதார் .........................*
திரிவிரு ததீஅபயன் செப்பில்இவை எழாம்...... ..........*
* அரிதகியின் பேதம் அறி.. [* அரிதகி- கடுக்காய்]...(௧௬௫)

( விசயன்என்னும் கடுக்காயின்குணம். )

விசயன் எனுங்கடுக்காய் வீரியத்தைச் சொல்வோம்..........*
நிசம்அதுதான் வாதத்தை நீக்கும் - * மிசையுளாக்கப்......*
பேய்ச்சுரைக்காய் போல்இருக்கும் பேர் அவந்தி யாதேசம்..*
வாய்ச்சிருக்கும் அக்காயை வாழ்த்து.....[*மேல். ]...(௧௬௪)

(அரோகிணிக் கடுக்காயின்குணம்.)

ஓதும் அரோகிணிக்காய் ஒன்றுண்டா லூற்சந்தி.................*
பாதமொடு சீதம் பறக்குங்காண் - ? மீதுகுறி.................*
நான்குவரி யாய்த்தோற்றும் நங்காய் அதன்தேசம்............*
ஆங்குகன்னி யாகுமரி யாம்[?மீது-மேலே-குறி-அடையாளம்]

(பிருதிவிக் கடுக்காயின்குணம்.)

தோற்றும் பிருதிவிதான் தோலாப் பயித்தியத்தை.............*
மாற்றும் வயதை வளர்க்கும்அதன் - மேற்றோலோ,.........*
மெல்லிபதாம் அக்காய் விளைதேசம் ஏதென்னில்.............*
வல்லசவு ராட்டிகமாம் வாழ்த்து..................................(௯௱௬௱)

(அமிர்தக் கடுக்காயின்குணம்.)

அமிர்தம் எனுங்கடுக்காய் அம்புவியில் உள்ள..................*
* திமிர்தசி லேட்டுமத்தைத் தீர்க்கும் - ? விமிதச்............*
சதைப்பற்றுண் டாயிருக்குஞ் சாற்றில்அதன் றேசங்.........*
கதிக்கொத்த காசிஎன்பர் காண்[* திமிர்தம்-ஒலி. ? விட்மிதம்]

(சிவந்திக் கடுக்காயின்குணம்.)

சிவந்தி எனுங்கடுக்காய் செய்குணத்தைக் கேள் * வா..........*
யுவந்த மூலத்தையெலாம் ஓட்டுஞ் - சிவந்ததிகப்............*
பொன்னிறம தாயிருக்கும் பூங்குழலே அந்தக்காய்...............*
துன்னுவனத் தோறும்உண்டாஞ் சொல்[* வாயுவினுல்வந்த]()

(திரிவிருததிக்கடுக்காயின்குணம்-இதுவே-மொந்தன்)

திரி * விருததிக் கடுக்காய் தேகத்தில் நாளும்..................*
வருவிரணம் போக்கும்அதன் வன்னம் - ஒருவிதமோ........*
பஞ்சவன்னம் மூவரம்பு பற்றி யிருக்கும்அது.........[கீற்று.
விஞ்சுமலை தோறும்உண்டாம் விள்.[* கொடிபோன்ற மூன்று

(அபயன் என்னும் கடுக்காயின்குணம்.)

அபயன் எனுங்கடுக்காய் அங்கநோய் எல்லாம்,...............*
அபயமிட் டோட அடிக்கும் - அபயற்.................................*
கதிக நிறங்கறுப்ப தாகும்விளை பூமி..............................*
பொதிய மலையாம் புகல்..(கடுக்காய்ப்பேதமுற்றியது.).(௩௨௰)

(கருங் கடுக்காயின்குணம்.)

பழமலத்தைப் போக்கும் பகரில் உடலுக்,..........................*
கழகுதரும் புத்தி அளிக்கும் - பழகி...................................*

மருங்கடுத்த வாதபித்த வன்கபத்தைத் தீர்க்குங்..............*
கருங்கடுக்காய் என்றுளத்திற் காண்........................(௯௭௧)

( செங் கடுக்காயின்குணம். )

சுத்தியொடு புத்தி சுகமும் புகழும்உண்டாம்..................*
மெத்தஒளிர் பொன்னிறம்ஆம் மேனிஎல்லாஞ்-சுத்த * கட..*
வங்கடுத்த ஊளைபல வன்காசமும் மலமுஞ்...........[துவாரம்
செங்கடுக்காய்க் கில்லை எனத்தேர்....[ * கடவங்கு-சலநரம்பின்

( வரிக் கடுக்காயின்குணம். )

மிடுக்காக்குந் தேகத்தை விந்துவையுண் டாக்குஞ்........ ..*
சடக்கெனவே புண்டியையுட் சாடுந் - துடுக்கான...........*
வாதபித்த ஐயகற்றும் ? வன்னியொடு ¡ நவ்விதருஞ்.........*
சாதி வரிக்கடுக்காய் தான்...... [ ? பசி. ! அழகு]......(௯௭௩)

( பால் கடுக்காயின் குணம். )

* ஆமங் கெடுங்காண் அழகும் பொலிவுமிகுஞ்..............*
சேமம் பெறுபலமுஞ் சேருமே - தாமநெடும்..............*
வேற்கடைக்கண் கும்பமுலை மெல்லியலே எப்போதும்.....*
பாற்கடுக்காய் உண்பவரைப் பார்[* ஆமம்-சீதபேதி].(௯௭௪)

தே-( நெல்லிமுள்ளியின் குணம். )

ஆகவன லஞ்சசிஅ சுர்க்கென்பு ருக்கிகண்ணோப்..............*
தாக முதிரபித்தந் தாதுநஷ்டம் - ? மேகனத்துன்..............*
இல்லிமுள்ளி போல்அருகல் எண் * காமிய வியங்கம் ........*
நெல்லிமுள்ளி யாற்போ நினை[ * ஆண்குறியைப்பற்றிய சிறு
( இதுவுமது. ) [கொப்பிளம்? நீர்த்துவாரம்.

நல்லநெல்லி முள்ளியது நாக்குக் குருசிதரும்....... .......*
அல்லல்விரி பித்தம் அகற்றும்அதை - மெலலத் .. ...........*
தலைமுழுகக் கண்குளிருந் தாவுபித்த வாந்தி....................*
* இலயிழிமே கங்களும்போம் எண்...[* இல்லை]...(௯௭௫)

தே—( தான்றிக்காயின் குணம்-இதனைத்தாணிக்காய்என்பர்)

சிலந்திவிடங் * காமியப்புண் சீழான மேகங்..................*
கலந்திவரும் வாதபித்தங் காலோ - டலர்ந்துடலில் .........*
ஊன்றிக்காய் வெப்ப முதிரபித் துங்கரக்குந்....................*
தான்றிக்காய் கையிலெடுத் தால்....[* காமியம்-ஆண்குறி]...()

( இதுவுமது. )

ஆணிப்பொன் மேனிக் கழகும் ஒளியுமிகுங்................*
கோணிக்கொள் வாதபித்தக் கொள்கைபோந் -தாணிக்காய்...*
கொண்டவர்க்கு மேகம்அறுங் கூறு அனல்தணியுங்.........*
கண்டவர்க்கு வாதம்போங் காண்........................(௯௭௮)

தே--( திரிபலத்தின்குணம்- கடு-நெல்லி-தான்றிக்காய். )

வித்திரதி நாசிநோய் வெண்குஷ்டம் ஆசனப்புண் ..........*
குத்திருமல் பாண்டு குஷ்டங் குன்மம் இளைப் - பெற்றுமத*
மூர்ச்சைபிலீ கம்பிரமி *மோடுருபுண் சர்வவிட... .........*
மூர்ச்சையறு ? முப்பலத்தான் மூன்[ *மோடுரு-வயிற்றுவலி.

தே-( கண்டுபாரங்கியின்குணம்-இது-சிறுதேக்கு-வி-ம். )

கண்டுபா ரங்கியெனுஞ் சிறுதேக் குண்டேல்...................*
காலெங்கே பித்தம்எங்கே கபந்தான் எங்கே...................*
தொண்டுதொட்டுத் தொடர்சுவாச காசம் எங்கே..............*
சுரம்எங்கே வெறியெங்கே தொனிநோ யெங்கே-..........*
மிண்டுப்புரி பீநசநீர்க் கோவை யெங்கே......................*
வெளிநீருன் ணீரெங்கே * விரற்கா லெங்கே...................*
அண்டுபடாச் சீதசுரங் கடுப்பு மெங்கே .....................*
யழலையக நோயெங்கே யறைகுவீரோ[* புச்சாவர்த்தவாயு]

( அரத்தையின் பொதுக்குணம்-வெ-பா. )

தொண்டையிற்கட் டுங்கபத்தைத் தூரத் துரத்திவிடும்.......*
* பண்டைச்சீ தத்தைப் பறக்கடிக்குங் - கெண்டைவிழி....*
மின்னே கரப்பனவே ரறுக்கும் பசிகொடுக்குஞ்...............*
சொன்னோம் அரத்தைச் சுகம்.[* பழையசீதளத்தை].(௯௮௧)

தே---(இதுவுமது.)

மார்பை அடர்பிணிசு வாசகா சம் மூலஞ்....................*
சோபை * தட்டச் * சூர்வாத சோணிதநோய் - தீபச் ......*
சுரத்தை யடுபடர்பல் தூருறுகண் நேரின்................. *
அரத்தை யெடுதுகள தாம்...[* தட்டம்-பல். * சூர்-நோய்] )

( பேர் அரத்தையின்குணம். )

அரத்தை கபத்தை யறுக்குங்கால் ஓட்டுஞ்.....................*
சிரத்தில்உறும் ஈளையைச்சி தைக்கும் - இளைத்துவரும்......*
பித்ததோ ஷித்தைப் பிறவலிப்பை மாற்றிவிடும்..............*
உற்றசர்வ வல்விஷம்போக் கும் ................................(௯௮௩)

(இதுவுமது)

சந்நியுபட்சிரணஞ் சார்ந்தசீ தச்சுரம்போம்................*
வன்ன மிகுந்து வளருங்காண் - கன்னியர்கள் ..............*
மாதவிடாய்க் காகும்வலி வாதக் கடுப்பகலும்................*
பேதமிலை பேர்அரத்தை பேணு..............................(௬௮௪)

தே-( சிற்றரத்தையின் குணம். )

வாந்திபித் தங்கரப்பான் வாதஞ் சிரோரோகஞ்..............*
சேர்ந்தகப முத்தோஷஞ் சீதமொடு - நேர்ந்தசுரம்........*
* மற்றரத்தைக் காட்டி வரும்இரும லுந்தீருஞ்..............*
சிற்றரத்தை வன்மருந்தால் தேர்[ * பலத்தின் தன்மையை].()

( கோஷ்டத்தின்குணம்-இதுவே-விரணாரி. )

நாட்டில்உறு வெட்டை நடுக்கம் எனுநோய்கள்..............*
கோஷ்டம்எனச் சொன்னாற் குலையுங்காண் - கூட்டிற்........*
சுரதோஷந் தொண்டைநோய் தோலாத பித்தம்..............*
பரதேசம் போமே பறந்து........................................(௬௮௫)

தே-( இதுவுமது-வி-ம். )

* திட்டி * கவுள் * அகடு * களஞ் * சென்னி * நா * வாய்.*
செறிபிணி * வெப் * பதைப் * புதா வர்த்தம் * ஊதை...*
முட்டியெழு * மூலவிரணஞ் சுவாச காசம்.....................*
* மூடிகத்தோ டரவுமர விடங்கள் மேகக்.....................*
கட்டிஅஜ கல்லி விட பாகம் பூத................................*
கணம் பால கிரகமொடு தாது நட்டஞ்.........................*
சொட்டிவரு பிரமிபித்தம் இவையொருங்கே....................*
தொலையும் விர ணாரிக்குச் சுகப்பேறுமே[* கன்ன-கபோலம்-வயிறு- கழுத்து-தலை- நா-வாய்- இவ்விடத்து நோய்கள்- சுரம்-அதைப்பு-உதாவர்த்தரோகம்- வாயு-மூலமுளை- * எலி-பாம்பு-விருட்சம்-இவைகளின்விஷம்-* அஜகல்லிகாரோகம்]

தே-( அதிமதுரத்தின்குணம்- இதுவே - மதுகம்-வி-ம் )

* கத்தியரி முட்பிணியால் வருபுண் தாகங்...................*
கண்ணோய் உன் மாதம்விக்கல் வலிவெண் குஷ்டம்.........*
பித்தம் * எலும் புருக்கி கிரிச்சரம் ஆவர்த்த....................*
பித்த மதமூர்ச்சை விடபாகம் வெப்பந்.........................*

தத்திவரு வாதசோ ணிதங்கா மாலை..........................*
சருவவிடங் காமியநோய் தாது நட்டம்.....................*
குத்திருமல் * ஆசியங் * கம் * இதழ்நோய் * இந்து.......*
* குயப்புணும்போம்மதூகமெனக்கூறுங்காலே[*வெட்டுக்
காயங்கவிஞல்-* வாய்-* சிரசு-* உதடு-*சோமநோய்-மூலவி
( அதிவிடயத்தின்குணம்-வெ-பா. ) [த்திரதி.

அதிவிடயஞ் சர்க்க ராற்புதநோய் வெப்பு..................*
கொதிமருவு பேதியொடு கோழை - எதிர்வாந்தி ...........*
என்றுரைக்கும் நோய்க்கூட்டம் இல்லாத கற்றிவிடுங்........*
குன்றை நிகர்முலையாய் கூறு...........................(௩௮௯)

( அக்கர காரத்தின்குணம். )

அக்கர காரம் அதன்பேர் உரைத்தக்கால்.....................*
* உக்கிரகால் அத்தோஷம் ஓடுங்காண் - மூக்கியமாய்க்....*
கொண்டால் சலம்ஊறும் கொம்பனையே தாகசுரங்...........*
கண்டால் பயந்தோடுங் காண்[* உக்கிராக்கிரக வாதம்](௩௯௰)

( கடு ரோகிணியின்குணம். )

மாந்தஞ் சுரம் ஐயம் வாயுகரப் பான் ஆமஞ்...................*
சேர்ந்தமலக் கட்டு திரிதோஷம் - பேர்ந்தபொட்டுப் .....[ந்
புண் வயிறு நோய்இவைபோம்பொற்கொடியே பேதியுண்டா
திண்கடு ரோகணிக்குத் தேர்...(இதனைக்கடுகுரோகணி என்பர்)

( பீத ரோகிணியின்குணம். )

படர்நீல காசம் படலமொடு பில்லந்..........................*
தொடர்இமைக ளிற்றோன்றுந் தோஷம் - அடரும்........*
* அருவியெனச் சொல்லுகின்ற அக்கிநோ யேகும்.........*
ஒருபீத ரோகிணியை யுன்.(ஜலசிராவம்-ஜலம்வடிதல்)..(௩௯௨)

( செவ்வள்ளிக் கொடியின்குணம். )

செவ்வள்ளி யின்கொடிக்குச் * சேடித்த குஷ்டமொடு.......*
கவ்வு குறைநோய் கரப்பானும் - இவ்வுலகில்...............*
மானே குடல்வாதம் வல்ல படுவனுடன்........................*
ஆனபரு மூலமும்போம் ஆய்.( * சேடித்த-மிகுந்த)..(௩௯௩)

( செவ் வியத்தின்குணம். )

சூலை யருசிசந்நி தொல்லிருமல் ஈளைபித்தம்...............*
மேலைக் குரற்கம்மல் வெங்களநோய் - மூலசுரம்............*
கவ்வியங்கத் தேறு கனதா வரவிஷமுஞ்........[மருவியது
*செவ்வியங் கொள்ளவிடுந் தேர்[* சவ்வியம்-செவ்வியம்-என

(சடாமாஞ்சிலின்குணம்-இதுவே-பருங்கோரை.)

குட்டஞ் சிலந்திவிஷங் கோர * புராணசுரம்..................*
உட்டினங் * கால் பேதிகண்ணோய் ஓட்டிருமல்-சொட்டிரத்த
பித்தம் இளைப் பேகும் பெருங்கோரை யென்றுரைக்குஞ்...*
சுத்தசடா மாஞ்சில்தனைச் சொல்....[ * பழமை. * வாயு]...()

(விலாமிச்சு வேரின்குணம்.)

மேகம் விழியெரிச்சல் வீறிரத்த பித்தமொடு..................*
தாக * மத மூர்ச்சைபித்தந் தள்மயக்கஞ் -சோகஞ்.........*
சிரநோய் இவையேகுஞ் செய்யவிலா மிச்சுக்.................*
கெரிசுரமும் இல்லை யிசை[ * மதமூர்ச்சாரோகம்.]...(௬௬௬)

தே-(பறங்கிப் பட்டையின்குணம்.)

தாகம் பலவாதந் நாதுநஷ்டம் புண்பிளவை.................*
மேகங் கடிகிரந்தி வீழ்மூலந் - தேகமுடங்..................*
* குட்டை பகந்தரமேற் கொள்வமனம் போம்பறங்கிப்.....*
பட்டையினை யுச்சரித்துப் பார்......[ ? குஷ்டு-ஐ-)...(௬௬௭)

(பிசின் பட்டையின்குணம்- இதுவே-மயிலாலக்கடி.)

தசையிலுஞ் சோரி தனிலும் பரந்தே.........................*
வசிபோற்குத் திக்குடையும் வாய்வை - நிசமாகக்..............*
கொல்லும் உடம்பின் கொதிப்பை ஒருநொடியில்........ .......*
வெல்லும் பிசின்பட்டை விள்.................................(௬௬௮)

(லவங்கப் பட்டையின்குணம்.)

தாதுநஷ்டம் பேதி சருவவிஷம் ஆசியநோய்..................*
பூதகிர கஞ் சிலந்திப் பூச்சிவிஷஞ் - * சாதிவிஷம்..........*
ஆட்டும்இளைப் போடிருமல் ஆதியநோய்க் கூட்டம்அற....*
ஓட்டும் * இல வங்கத் தூரி[ * சர்ப்பவிஷம். இலவங்கப்பட்டை]

(சன்னலவங்கப் பட்டையின்குணம்.)

சன்னலவங் கப்பட்டை தான்குளிர்ச்சி யுண்டாக்கும்.........*
இன்னும்இரத் தக்கடுப்பை * யீர்க்குங்காண்- முன்னம்உறும்.
உந்திக் கடுப்பகற்றும் உண்மூலப் புண்போக்கும்.............*
கந்தமிகு பூங்குழலே காண்...[* ஈர்த்தல்-அறுத்தல்.].....(௬)

(லவங்கப் பத்திரியின்குணம்.)

மேகசுரம் சீதசுரம் வெட்டைசுவா சங்காசம்......... .......*
தாகபித்தம் வாந்தி * சர் வாசியநோய் - மேகத்தின்.........*

கட்டியொடு தாதுநஷ்டங் கைப்பருசி போக்கிவிடும்........[ய்
இட்ட இல வங்கத் திலை[*விவுர்தாசியநோய்-சம்விருதாசியநோ

( லவங்கப் பூவின்குணம். )

பித்த மயக்கம்அறும் பேதியொடு வாந்தியும்போஞ்.........*
சுத்தவீரத் தக்கடுப்புந் தோன்றுமோ - மெத்த...............*
இலவங்கங் கொண்டவருக் கேற்றசுகம் ஆகும்..................*
மலம்அங்கே கட்டுமென வாழ்த்து ...........................(௯௨)

தே-( இதுவுமது. )

சுக்கிலநட் டங்கர்ன்னச் சூர்வியங்க லாஞ்சனந் * தாட்........*
சிக்கலவிடாச் சர்வா சியப்பிணியும் * அக்கிக்குள்..............*
தங்கப்பூ வோடு தரிபடருந் தோன்றில்இல..............(௯௩.
வங்கப்பூ வோடுரைத்து வா...[* தாள்-வாய்ப்பூட்டு.* கண்ணுக்

தே-( சாதிக்காயின்குணம்-இதுவே-குலக்காய். )

தாதுநஷ்டம் பேதி சருவாசி யஞ்சிரநோய்.....................*
ஓதுசுவா சங்காசம் உட்கிரணி - * வேதோ......................*
டிலக்காய் வரும்பிணிபோம் எற்றமயல் பித்தங்......[லக்காய்
குலக்கா யருந்துவர்க்குக் கூறு[*வேதுஓடு-வெப்பத்துடன்இ

( சாதி பத்திரியின்குணம். )

சாதிதரும் பத்திரிக்குத் தாபச் சுரந்தணியும்................*
ஓதுகின்ற பித்தம் உயருங்காண் - தாதுவிர்த்தி.................*
யுண்டாங் கிரகணியோ * டோதக் கழிச்சல்அறும்...............*
பண்டாங் குரையே பகர்........[* ஜலக்கழிச்சல்].......(௯௫)

( தாளிச பத்திரியின்குணம். )

* நாசி * களப்பிணிகள் நாட்பட்ட காசஞ்சு...................*
வாசம் அருசி வமனங்கால் - வீசிவரு...........................*
மேகமந்தம் அஸ்திசுரம் விட்டேகுந் தாளிசத்தால்.............*
ஆகுஞ் சுகப்பிரச வம்.........[*மூக்கு-* கழுத்து.]...(௯௬)

( மூப்பத் திரியின்குணம். )

பத்திரிகள் மூன்றிற் ? பயிலுங் குணங்களாய்...................*
நித்த மலக்கட்டு நீங்கிவிடுஞ் - சுத்தசுரம்.......................*
தாகமொடு வாந்திவிக்கல் தங்கா எக் காலையிலுங்..............*
கோகிலமே யிக்குணத்தைக் கூறு.....( ? சொல்லுதல்)...(௯௭)

(கர்க்கடகசிங்கியின்குணம்- இதுவே-கடுக்காய்ப்பூ.)

கர்க்கடக சிங்கி கபங்காசம் ஈளையொடு.........................*
முக்கல் கிராணி முதிர்இளைச்சல் - பொக்கெனவே...........*
சாடுகின்ற பேதியையுஞ் சாடும் அரிவையளைக்...............*
கூடு திறங்கொடுக்குங் கூறு.........................................(௯௮)

( இதுவுமது. )

மூலவிரத் தங் கடுப்பு * மோதிரத்த பித்தங்கால்.............*
மேல்அடரும் மேக விரணவெப்போ - டாலத்.....................*
துடிக்காங் கொதிப்பும்அறுந் தோகைமட மாதே..............*
கடுக்காயின் பூவைக் கருது.....[* மோது இரத்த]......(௯௯)

( நாகப் பூவின்குணம்-வி-ம்..)

மதமூர்ச்சை பிரமியஞ்சு வாசகா சம்புகைச்சல்...............*
விதிர்குரற் கம்மல் கீட விஷஞ் சரு வாசியந்தேள்...............*
அதிசாரங் * கமலப்புண்ணோ டரத்தமூ லம்மேகஞ்சூ ......*
டதிநீர்விந் துவினட்டம்போம் அதிநாக மலரினுக்கே [* புண்
( சிறுநாகப் பூவின்குணம்-வெ-பா. ) [டீகஞ்ஜூடு.

சிறுநாகப் பூவினது செய்கைதனைச் சொல்வோங் ..... ...*
குறியாடும் மேகத்தைக் கொல்லும் - * நெறியைவிட்டுத்....*
தீதாச்செல் வாயுவையுந் தீர்க்கும் இரு மற்போக்குங்........*
கோதா யிதையறிந்து கொள்... ..(* நெறி-வழி) ......(௱௧)

( கண்டில் வெண்ணெயின்குணம். )

கண்டில்வெண்ணெய் மாதேகேள் காந்திப்பிர தாபமுமாந்..*
தொண்டையினுள் நீர்க்கட்டு தாரிருமல் - மிண்டிவரு.......*
நீர்க்கடுப்பு மூலத்துள் நீர்க்குத்த லும்போக்கும் ............*
பார்க்குள் அறியப் பகர்.................................................(௱௨)

( கூகை நீற்றின்குணம். )

கூகைநீற் றுல் மாதர் குய்யநோய் வித்திரதி......................*
ஆகமெனும் மார்புநோய் அண்டுமோ - போகம்அதில்......*
வீரியமும் உண்டாகும் வீழ்கிருமி நோயோடு.. ..............*
தாரிருமல் ஈளையும்போஞ் சொல்.................................(௱௩)

( நாகணத்தின்குணம்-இதுவே-நகம். )

தலைவலிநீர் ஏற்றந் தலையிடிப்பு குத்தல்.............................*
தொலையா மலட்டுநோய் சோபை - நிலைவிழிநோய்.. .......*

பாகணச்சொன் பின்னே பரும்உதர ரோகமும்போம்.......*
நாகணத்தி னுமேல நவில்.................................(தூஎசு)

( மாசிக் காயின்குணம். )

அக்கரங்கள் போக்கிவிடும் ஆருத வெப்பாற்றும்..............*
மெய்க்குறுதி மாசிக்காய் மேன்மேலுந் - தக்கதொரு.......*
பாலர்கண நோய்போக்கும் பன்மேக மூந்தொலைக்கும்... .*
வேலனைய கண்ணாய் விளம்பு.............................(தூஎரு)

( வலம்புரிக் காயின்குணம். )

பூதபை சாசம் பொறுக்கொணு நேத்திரநோய்...............*
ஓத மிகுசெவிநோய் கேவல்விக்கல் -ஓதுகுளிர்..............*
* தோடமொடு மேகங்கூன் சொன்னவையெ லாம்நடுங்கி...*
ஓட வலம்புரியை யுன்.....[* தோடம் - தோஷம்]...(தூஎசு)

தே—( வாய்விளங்கத்தின்குணம். )

பாண்டுகுஷ்டங் குன்மம் பருந்தூல நோய்வாதத்............*
தீண்டு * திரிவிடஞ்சி ரந்துண்டம் - பூண்டமடி..............*
நோய்விளங்கக் காட்டாத நுண்கிருமி யாசனப்புண் ....[க்கம்.
வாய்விளங்கங் காட்டவிடு மால்.[* பாம்பு-தேள்-நாவி இவ்வரு

( தக்கோலத்தின்குணம். )

பாண்டுசுரம் போகும் பகரிற் பலஞ்சேருந்..................*
தீண்டும்உப யாசியமுந் தீருங்காண் - நீண்டதொரு ....... *
தாதுவிர்த்தி யாகுந் தளர்ந்தமல மூங்கட்டுங்................*
கோதகலுந் தக்கோலங் கொள்..............................(தூஎஅ)

( விழல் அரிசியின்குணம். )

விழலரிசி யென்றால் மிகுபித்தம் ஏகும்.......................*
அழல்குடலின் வாதம் அகலுந் - துழவு........................*
திரிதோஷம் மேகம்இவை சேராவாம் நீயுங் ...................*
குறியா யிதையறிந்து கொள்... .............................தூஎகூ)

( கார்போக அரிசியின்குணம். )

கார்போக மாம்அரிசி கண்டால் கரப்பான்புண்..........  .....*
* பீர்சருவ நஞ்சிவைபோம் பித்தமுண்டாம் -பார்மீதில்...*
வாத கபம்நமைச்சல் வன்சொறிசி ரங்கும்அறுஞ்............*
சீத மலர்க்குழலாய் செப்பு........(* பீர்-அச்சம்)....(தூஉய)

( வாலுழுவை அரிசியின்குணம். )

வயிற்றுக் கடுப்புவலி மாறுக் கிராணி ..............................*
பயித்தியங் காசம்மல பந்தஞ் - சயிக்கவொணுச்..............*
சூதிகா வாதமும்போந் தொல்வா லுழுவைவிதைக்..... .....*
காதிநவ சித்தர்மொழி யாம்...............................(தூஉக)

( வெட்பாலை அரிசியின்குணம். )

வெட்பாலை தன்அரிசி வீறுபித்த வாதமொடு........................*
* கொட்பார் கரப்பான் குடல்வாத -உப்பிசத்தைக்..........*
காணும லேநாளுங் கண்டிக்குங் காசினியிற்....................*
பூணுர் முலையாய் புகல் .....[ * கொட்பு-சுழற்சி].....(தூஉஉ)

(காசினிவிதை-துளசிவிதை- இவைகளின்குணம்.)

காசினிவி தைக்குக் கதித்த அருசி சர்த்தி.........................*
காசினியை விட்டேகுங் காணனமே - பேசும்......................*
அளவில் கபம்போம் அருசி நடுங்குந்..............................*
o துளவின் நறுவிதைக்குச் சொல்[o துளவு - துளசி].(தூஉகு)

( புத்திரசீவி விதையின்குணம். )

ஆகியதோர் மூலம் அனலம்வெட்டை மேகமும்போம்......*
போகம் விளையும் பொருமல்அறுந் - தாகம்போம்..........*
புத்திர சீவியெனப் போற்றும் விதையதனுல்...................(து
இத்தரையுன் மாதே யியம்பு(இது-புத்திரசோகி-என மருவிய

( சமுத்திர்சோஷி விதையின்குணம். )

ஐயம் அகற்றும் அரோசகத்தை மாற்றிவிடும்.....................*
பையுதிர வாயுவையும் பற்றறுக்கும் - ? மெய்யை..............*
அமிழ்த்துகின்ற நீரை அனிலத்தைப் போக்கும்............[பச்
சமுத்திரநற் சோஷிவிதை தான்(இதனைச்சமுத்திரசோகி என்

( கசகசாவின் குணம். )

கிருமி நமைச்சல் கிராணி அதி சாரஞ்..........................*
சிரநீர் அதித்திரைபோஞ் செப்பில் - உருஅழகுங்.............*
காந்தியும்உண் டாகுங் கசகசா வின்குணத்தைத்..................*
தேர்ந்தவர்க்கு வித்துவுமாந் தேர்...... ...........................(தூஉகு)

தே—( ஏலத்தின்குணம்-கட்டளைக்கலிப்பா. )

தொண்டைவாய்கவுள் தாலுகுதங்களில்..............................*
தோன்றும்நோய்அதி சாரம்பன் மேகத்தால்...................*
உண்டபோல்எழுங் கட்டிகிரிச்சரம்.. ...............................*
உழலைவாந்திசிலந்தி விஷஞ்சுரம்....................... ........*

பண்டைவெக்கை விதாகநோய்காசமும்......................*
பாழுஞ்சோமப் பிணிவிந்துநட்டம்உள்..................*
அண்டையிளைவன் பித்தம்இவைக்கெலாம்..................*
* ஆலமாங்கமழ் ஏலமருந்ததே...[* ஆலம்-விஷம்]....()

(சிறு ஏலத்தின்குணம்-வெ-பா.)

? மலவாத மோடு வயிற்றுக் கொதிப்பு......................*
சலம்ஊறல் வாய் இனிப்பு தாகஞ் - சலபேதி................*
வேர்க்குந் தலைநோய் மிகுரூட்சை ஐயமிவை...............*
போக்குஞ்சிற் றேலம் புகல்...[? மலாவர்த்தவாதம்]. ௩௨அ)

(மலை ஏலத்தின்குணம்.)

நாவறட்சி தாகசுரம் நாடாத கற்றிவிடுந்.....................*
தீவறட்சி நீர்க்கடுப்பைத் தீர்க்குங்காண் - * மூவறட்சி......*
கூடும் அரோசகத்தைக் கூடாமல் ஓட்டிவிடும்..................*
நாடுமலை யேலம் நவில்...[* திரிதோஷ உட்டினம்]...(௩௨௯)

(காட்டு ஏலத்தின்குணம்.)

தீராத வாந்தி சிலேஷ்மம் அதிசாரம்.........................*
பேரா அருசி பித்தம் பேருங்காண் - சோராமால்...............*
காட்டேல வார்குழலே காரம் பரிமளஞ்சேர்....................*
காட்டேலம் என்றுணாக்குங் கால்..........................(௩௩௰)

தே-(சீரகத்தின்குணம்-இதுவே-போஜனகுடாரி.)

வாந்தி யருசி குன்மம் வாய்நோய்பி லீகம் * இரைப்.........*
பேந்திருமல் கல்லடைப்பி லாஞ்சனம்உட்-சேர்ந்தகம்மல்...*
ஆசன ? கு டாரியெனும் அந்தக் கிரகணியும்...[? கோடாலி.
போஜனகு டாரியுண்ணப் போம்[* இளைப்புஎந்து இருமல்-
(இதுவுமது)

வாயுவொடு நாசிநோய் வன்பித்தஞ் சேராது....................*
காயம் நெகிழாது கண்குளிருந் - தூயமலர்க்..................*
காரளகப் பெண்மயிலே கைகண்ட தித்தனையுஞ்.................*
சீரகத்தை நீதினமுந் தின்...............................(௩௩௨)

(பெருஞ் சீரகத்தின்குணம்-இதுவே-சோம்பு.)

யோனிநோய் குன்மம் உரூட்சைமந் தம்பொருமல்.........*
*பேனம்உறு காசம் பிலீகம் * இரைப் - பீனஉரை..........*
சேர்க்கின்ற வாதமும்போஞ் சீர்பெரிய சீரகத்தால்..........*
மூக்குநோ யில்லை மொழி.[* நுரை-* இரைப்பு ஈனஉரை]...()

(கருஞ்சீரகத்தின்குணம்.)

கருஞ்சீரகந்தான் கரப்பனொடு புண்ணும்.................*
வருஞ்சிராய்ப் பீநசமும் மாற்றும் - அருந்தினால்..........*
காய்ச்சல் தலைவலியுங் கண்வலியும் போம்உலகில்............*
வாய்ச்ச மருந்தெனவே வை..............................(௬௪)

(காட்டுச் சீரகத்தின்குணம்.)

கைகறுப்பு மாறுங் கடியமேகம்போகும் ......................*
மெய்குளிரும் பித்தம் விளையுமோ - வெய்யகரிக்............*
கோட்டுப் பணைமுலையாய் குன்மவா தந்தொலையுங்............*
காட்டுநற் சீரகத்தைக் காண்...............................(௬௫)

(பிளப்புச் சீரகத்தின்குணம்.)

* உடலுக் கழகாம் உறைபித்தம் ஏகும்.......................*
அடலுறு வாதம் அதமாம் - கடிசேர்.........................*
தளவுநகைக் கோட்டுமுலைத் தையலே நாளும்...................*
பிளவுநறுஞ் சீரகத்தைப் பேண்....[* உடலுக்கு-அழகு]...()

(கொத்துமலியின்குணம்-இதுவே உருள் அரிசி.)

கொத்துமலி வெப்பங் குளிர்காய்ச்சல் பித்தம்மந்தஞ்.........*
சர்த்திவிக்கல் தாகமொடு தாதுநஷ்டங் - கத்தியெழும்.......*
வாத விகாரம்அடர் வன் * கர்த் தபிவிரணம் ........(காண்க.
பூதலத்தில் லாதகற்றும் போற்று.( இதனை ஜீவரக்ஷாமிர்தத்தில்

தே—(கடுகின் குணம்.)

இடிகாசம் நாசிச்சூர் ஈளைகபம் பித்தங்......................*
கடி வாத சீதங் கடுப்போ - டுடலிற்.........................*
படு ? கோட்டு நோயென்னும் * பங்கிவைக ளைப்புன் .......*
கடுகோட்டும் ஏன்மருந்து காண் [ ? வளைவு.* முடம்.]..(௬௮)

(இதுவுமது)

மந்தமயக் கம்வாதம் வாய்நீர்ச் சுழற்றல்அறும் ..............*
உந்து சுகப்பிரச வங்கள்உண்டாம் - இந்துநுதன்............*
மானேகி ராணிகுன்மம் மாறும்மூத் தோஷமும்போம்.......*
தானே கடுகிற்குத் தான்.....................................(௬௯)

(வெண் கடுகின்குணம்.)

பாலகிர கம்பூத பைசாசம் ஓட்டிவிடும்........................*
ஆல விஷங்கடிகள் ஆற்றுங்காண் - கோலமிகு...............*

வள்ளைச் செவிமாதே மாபங்க நோய்விலக்கும்.............*
வெள்ளைக் கடுகின் விதி..............................(௲௬௰)

( நாய்க் கடுகின்குணம். )

சூதக வாயுவொடு * சோணிதத்தின் வாதமும்போம்.........*
வாதவலி குன்மம் மடியுங்காண் - மாதுநல்லாய் ...........*
பேய்க்குப் புகைபோடப் பேசா தொழிந்துவிடும்...........*
நாய்க்கடுகை நீவிரும்பி னல்.........[* உதிரம்]......(௲௬௧)

( வெந்தியத்தின் குணம்-இது-மேதி. )

பிள்ளை கணக்காய்ச்சல் பேதி சீ தக்கழிச்சல்.................*
தொள்ளைசெய்யும் மேகம் தொலையுங்காண் ,- உள்ளபடி.....*
வெச்சென்ற மேனி மிகவுங் குளிர்ச்சியதாம் ...................*
அச்சம்இலை வெந்தியத்திற் காய்(மேதி-எனும்சொல்-மெந்திய

( இதுவுமது. ) (ம்-வெந்தியம்-என மருவியது

பித்தஉதி ரம்போகும் பேராக் கணங்களும்போம்...............*
அஸ்திசுரந் தாகம் அகலுங்காண் - தத்தும்அதி................*
வேக இருமலொடு வீறு கயம்தணியும்............................*
போகமுறும் வெந்தியத்தைப் போற்று...........................(௲௬௨)

தே---( ஓமத்தின் குணம். )

சீதசுரங் காசஞ் செரியாமந் தம்பொருமல்.........................*
பேதியிளைச் சல்கடுப்பு பேராமம் - ஓதிருமல்...................*
பல்லொடுபல் மூலம் * பகம்இவைநோ யென்செயுமோர்...*
சொல்லொடுபோம் ஓமமெனச் சொல்..[* பகம்-பெண்குறி]

( குரோசானி ஓமத்தின்குணம். )

வெகுமூத் திரம்வாதம் வீரியநஷ்டி டம்புண்....................*
உகுபேதி யுட்கடுப்பி னேடே - மிகுகரப்பான் ............*
தீராக் கபம்இவைபோம் செய்யகுரோ சாணியென்றால்.......*
வாரா மயக்கம்உறு மால்.....................................(௲௬௩)

( சதகுப்பையின்குணம். )

வாதமொடு சூதிகா வாதம் சிரசுநோய்..............................*
மோதுசெவி நோய்கபநோய் மூடுசுரம் - ஓதுகின்ற.........*
மூலக் கடுப்பு முதிர்பீந சம்போக்கும்...............................*
* ஞாலச் சதகுப்பை நாடு.....[* ஞாலம்-பூமி]......(௲௬௪)

மே-( பெருங்காயத்தின்குணம்-கட்டளைக்கலிப்பா.)

* தந்தவேதந்த மூலத்தெழும்பிணி.....................*
* சருவகாளம் விருச்சிகங்கீடம்மா.....................*
மந்தம்வாதம் உதாவர்த்தம்அல்குல்நோய்.....................*
! மார்பணங் * கட்ட குன்மம் மகோதரம்.....................*
உந்துகெர்ப்பத்தின் வித்திரஞ்சூலைச்சூர்.....................*
உதிரப்பூச்சி சிலேஷ்மத்துரும்வலி.....................*
வந்தமெய்க்கடுப் போடிவைமுற்றுமே.....................*
மாயுநாறுநற் காயங்கிடைக்கினே [*பல்லின்நோய்-அந்தப்பல்லின்வேர்-* சகலவிஷம். ! மார்புநோய். * அஷ்டகுன்மம்]

( வெள்ளைப் பூண்டின்குணம்-இதுவே-உள்ளி-வெ-பா.)

சந்நியொடு வாதந் தலைநோவு * தாளின்வலி.....................*
மன்னிவரு நீர்க்கோவை வன்சீதம் - அன்னமே.....................*
உள்ளுள்ளிக் காண்பாய் உளைமூல ரோகமும்போம்.....................*
வெள்ளுள்ளி தன்னால் வெருண்டு...[ * தாள் - வாய்ப்பூட்டு]()

( அபினியின்குணம். )

நல்லஅபி னிக்குணத்தை நாடறியும் நாம்புகல்வ.....................*
தல்லகுன்மம் வாதம் அருஞ்செவிநோய் - பல்லின்வலி......*
பேதிமந்தம் அஸ்திநோய் பீநசம்போம் வன்மைஉண்டாம்..*
* சாதியுதி ரச்சுத்தி தான்..[* லிங்கம்போல்-சிவந்த]..(௩௪௬)

( கஞ்சாவின் குணம். )

மூலக் கிராணிஅறும் மூன்புள்ள பேதிகட்டும்.....................*
சாலமயக் கும்பசியுஞ் சாருங்காண் -தூலஞ்செய்.....................*
வாதமொடு ஐயமும்போம் வன்கரப்ப னுந்தொலையும்......*
கோதறுகஞ் சாச்சடைக் கு.....................(௩௪௭)

( கரிய போளத்தின்குணம். )

மார்புவலி வீக்கம் வயிற்றுவலி பங்கநோய் .....................*
வார்மேகக் கட்டியொடு மாவாதம் - பாருலகில்.....................*
* நீளங்கை காலில் நிலைசூலை யுங்கறுத்த.....................*
போளந் தனைக்காணிற் போம்...[ நீண்டுஅழகியகை.] (௩௪௮)

( வாலேந்திர போளத்தின்குணம். )

சூலைகய ரோகம் சொறிகரப்பான் குன்மம்இவை.....................*
ஆலைவா யின் * கோல்போல் ஆகுங்காண்- நீலசக்கர.....................*

வாளமெனத் தோற்றுமுலை மாதரசே வாலேந்திர...........*
போளந் தனையெடுக்கும் போது. (* கோல்-கரும்பு,..(௩௬௨)

( வெள்ளிச்சப் பிசின்குணம். )

முகசந்நி பாதமொடு முட்டிவரு நீரும்......................*
அகவாத சந்நிகளும் அண்டா - மகிழுங்.................*
களிற்றை நிகருமுலைக் காரிகையே நாளும்.................*
வெளிச்சப் பிசினை விளம்பு..............................(௩௬௩)

( நாவியின் குணம். )

வாதவலி மந்தம் * அறல் மாறுக் கபப்பிணிகள்...............*
ஓது குஷ்டு குன்மந்தேள் ஓடுங்காண் - காதலர்தம்...........*
புத்தியோ டாருயிரும் பூவும் வனைகுழலே....................*
சுத்திசெய்த நாவியின்பேர் சொல்...(* அறல்-நீர்.)...(௩௬௪)

(வெள்ளை நாவியின்குணம்.)

குஷ்டங் கடிசூலை ० கூடுபுரி வன்கிருமி........................*
துஷ்டகுன்ம வாதந் தொலையுங்காண் - வட்டமுலைப்..........*
பெண்மேண சுரந்தணியும் பேருலகத் தார்பகைக்கும்...........*
வெண்ணுவி தன்னை விரும்பு....( ० கூண்டுகெட்டுகிற)...(௩௬௫)

( கரு நாவியின்குணம். )

எண்ணுச் சுரம்போம் இறங்கும்பி லீகம்அறும்...................*
புண்ஆறும் ஊரும் புழுக்கள்விழும் - தண்ணூரும்..............*
வல்லை கவிகையென வையகத்தோர் சொல்லிடுநோய்...........*
இல்லையொரு * கார்நாவிக் கே ..( * கார்-கறுப்பு)...(௩௬௬)

( பச்சை நாவியின்குணம். )

கடியதொரு குஷ்டங் கனத்தவிஷ சந்நி.......................*
கொடியதொரு குன்மங் குலையும் - படியில்......................*
தளிர்அஸ்தி வெப்புடனே தாகசுரம் தீரும்......................*
வளர்பச்சை நாவிதனை வாழ்த்து............................(௩௬௭)

( சூத்திர நாவியின்குணம். )

காய்ச்சல் தலைநோய் கனத்தசந்நி பாதம்எரி....................*
பூச்சி விஷக்கடிஉட் புண்குஷ்டங் - கூச்சல்தரு....................*
* காத்திரத்தே ளுங்குடிபோம் காரளகப் பைங்கொடியே...*
சூத்திரநா விக்குத் துவண்டு..( * காத்திரம்-பெரியஉடல்)..()

( நில ஆவாரையின்குணம். )

நிலாவாரை யின்குணந்தான் நீகேள் மயிலே................*
பலமூல வாயுவெப்பு * பாவைச் - சிலகிரந்தி...............*
பொல்லாத குன்மம் பொருமுமலக் கட்டுமுதல்...............*
எல்லாம் அகற்றுமென எண்.....[* பரவிய-ஐ].....(௲௱௯)

( சிவதை வேரின்குணம். )

உள்ள மலமும் * உதாவர்த்த மும்வயிற்றைக்...................*
கொள்ளுபித்த வாதமும்போங் கூறுங்கால் - பிள்ளைகட்குச்.*
செப்பு கிரகமும்போந் தேனே யுலகத்துள்...................*
தப்பில் சிவதைக்குத் தான்..................................(௲௱௰)

( வெண்சிவதை வேரின்குணம். )

கைப்புந் துவர்ப்புங் கலந்திருக்கும் பித்தத்தை...............*
இப்புவியில் நாடொட்டா திவ்வளவோ - செப் * புதரத்....*
தொள்ளைக் கிருமி தொலைக்குமிகு பேதிதரும் ..............*
வெள்ளைச் சிவதைதனை விள்...(* வயிற்றின் துவாரக்கிருமி)..()

( கருஞ்சிவதை வேரின்குணம். )

காரமுடன் கைப்பும்உண்டாங் காணு எலிவிஷத்தைப்.........*
பார * அனற் குன்மத்தைப் பற்றறுக்கும் -பாரில்...........*
தெரிஞ்சுரைத்தோம் பேதிதருந் தேமொழியே காட்டுக்.....*
கருஞ்சிவதைக் கந்தம்அது காண்(* பித்தகுன்மத்தை).(௲௱௨)

( நேர்வாளக்கொட்டையின்குணம்-இது-நேபாளம். )

ஓதில் உதரத் துறுமலம் * பன் னோய்விலகும் ..............*
பேதி மருந்தில் பெரிதாகும் - வாதம்அறுங்...................*
கூர்வாளை யொத்தவிழிக் கொம்பனையே பண்டிதர்சொல் ...*
நேர்வாளக் கொட்டைதனை நீ...(* பலநோய்விலகும்)..(௲௱௩)

( இது சில நோய்க்கு ஆம் ஆகாதெனல் - வி-ம். )

உரைத்திடு வாதநோய்க்கும் உரைகெடு விஷசந்நிக்கும்.......*
நிரைத்திடு சூலைகுன்மம் நீண்டிடு மலக்கட்டிற்கும்............*
கரைத்திடு வாளந்தன்னைக் கட்டிய மேகத்திற்கும்..............*
அரைத்திடு பித்தத்தோர்க்கும் அகற்றிடு அதனைத்தானே(௲௱௪

( நீரடி முத்தின்குணம்-வெ-பா. )

நீரடி முத்திற்கு நீங்காக் கிரந்திகுஷ்டம்.......................*
போரிடு வாதமுமே போகுங்காண் - காரடிக்கும்.............*

மென்குழலாய் பித்தம் மிகும்அனலம் உண்டாகும்...... ......*
மூன்கிளர்ந மைச்சல்அறு மூன் ........................(௲௱௫)

(சேங் கொட்டையின்குணம்-இதுவே-சேராங்கொட்டை)

குஷ்டங் கயரோகங் கொல்லும் விஷபாகந்............. ......*
துட்டந் தருகிருமி சூலையும்போம் - மட்டலருங்.. .........*
கூந்தன்மயி லேகிரந்திக் கூட்டம்போஞ் செங்கையில்......*
வந்துசேங் கொட்டைதனை யே.....(இது-பல்லாதகியாம்)...()

( இதுவுமது. )

சேங்கொட்டை மெய்த்திமிரைத் தீராக் கடிவிஷத்தைப்......*
? பாங்கொட்டு மூலத்தைப் பற்றறுக்கும் - ஆங்கெட்டிக்...*
கொல்லும்வா தத்தினொடு குன்மத்தை யும்மதனை... .. ......*
வெல்லும் அயிற்கண்ணாய் விள்...(? பாங்கு-ஒட்டும்)...(௲௱௭)

( தேங்காய்ப் பிண்ணாக்கின்குணம். )

சொறிசிரங்கு புண்ணுமாந் தோலாக் கரப்பான்.......... ...*
மறுவாக்கும் மேனியெலாம் மாதே - சிறுக........ ... ...*
வயிற்றிற் புழுவினங்கள் * மாறா துதிக்குஞ்...............*
சுயத்தேங்காய்ப் பிண்ணாக்காற் சொல்( * மாறாது-உதிக்கும்).()

( எள்ளுப் பிண்ணாக்கின்குணம். )

உள்ளிற்புண் ணுங்கிரந்தி யூரலுமி கக்கிளைத்தே.............*
எள்ளின் * பிண்ணாக்குக் கெழும்புங்காண் - விள்ளுங்......*
கரப்பான் விரணங் கதித்தநீர் மேகம்... ......................*
உரப்பாகும் நாளும் உரை...(* பிண்ணாக்குக்கு-எழும்பும்)...()

( வேப்பம் பிண்ணாக்கின்குணம். )

சந்நியுடன் வாதந் தலைநோய்போம் வாதம்அறும்............*
முன்னிநின்ற தோஷம் முறியுங்காண் - பன்னுதமிழ்.... ...*
வல்லவரோ வேம்பின்வழி வந்தபிண்ணாக் கென்றுருக்காற்...*
சொல்லஐயம் போமே தொலைந்து....... ...... ...(௲௱௰)

( இலுப்பைப் பிண்ணாக்கின்குணம் )

பொத்திக் கடுவனொடு புண்ணுங் கரப்பனும்போம்... ......*
* வித்தலைப்பு தோஷம்இவை வீறுவாம் - மெத்தெனவே..*
யெண்ணெய்க் கசிவுகளும் ஏகும் இலுப்பைவிதைப்........*
பிண்ணாக்குக் கென்றறியப் பேசு...[*விதைவீக்கம்]...(௲௱௧)

( சாம்பிராணியின் குணம். )

வாத * சீ தங் கணனேய் மாருத் தலைவலியும் ..................*
ஓதம்உறு பீநசமும் ஓட்டுங்காண் - பூதலத்தில் ..............*
வேம்பிதுதான் என்ன மிகுகசப்பை வாய்க்களிக்கும் ...... ..*
சாம்பிராணி யென்னுஞ் சரக்கு...[ * சீதம் சீதளம்.]..(௬௭௨)

( கர்ப்பூரத்தின் குணம். )

கிருமிசல தோஷங் கிளைவலிப்பு சந்நி ............................*
பொருமுமந்தம் * அங்கிபட்ட புண்ணே - டெரிசுரங்கள்..*
வாந்தி பித்தஞ் * சீதமூறு வாதஞ் செவிமுகநோய்..........*
சாந்திகருப்பூரம் ஒன்றாற் சாற்று..(* தீப்புண்-* சீதளவாதம்)

( பச்சைக் கர்ப்பூரத்தின்குணம். )

அஷ்டகுன்மஞ் சூலை யணுகாது வாதமொடு.................*
துஷ்டமே கப்பிணியுந் தோற்றாதே - மட்டலருங்..........*
கூந்தன்முடி மாதே கொடிய கபம்போகுஞ்..................*
சார்ந்தபச்சைக் கர்ப்பூரத் தால்.......................(௬௭௩)

( பச்சைக் கர்ப்பூரத்தின்பேதம். )

பச்சைக்கர்ப் பூரம் பகருவதில் பேதம்உண்டிங்..................*
கிச்சையொடப் பேதம் இசைக்குங்கால் - இச்சகத்துள்......*
ஈச னொடுவீமன் எற்றபூ தாச்சிறையன்......................*
காசறுமூன் றாகுமென்பர் காண்...........................(௬௭௫)

( ஈசன் என்னும் பச்சைக்கர்ப்பூரத்தின்குணம். )

ஈசன்என்னும் பூரம்வெண்மை என்பர்அது காரமுமாம்.....*
பேசரிய சீதம்உஷ்ணம் பித்தம்மயல் - வீசுகின்ற...........*
பீநசம்உள் தாகம்இவை பேர்த்துவிடுங் காந்தியுண்............*
டான தத்துவசியம் ஆம் ....................................(௬௭௬)

( வீமன் என்னும் பச்சைக்கர்ப்பூரத்தின்குணம். )

வீமன்என்னுங் கர்ப்பூரம் மேக அழுக்குவெண்மை ........*
சேமம் உறுங்குளிர்ச்சி தின்றக்கால் - தாமருவு................*
நோயகலுந் தாகம்அறும் நுண்பே தியும்ஆகுந்...............*
தூய மதிமுகத்தாய் சொல் ..................................(௬௭௭)

( பூதாச்சிறையன் என்னும்- பச்சைக்கர்ப்பூரத்தின்குணம்.)

பூதாச் சிறையன்எனும் பூரமஞ்சள் கைப்பாகுங்...............*
* கோதையர்க்காங் காசங் கொடுமேகம் - வாதாதி ............*

என்னுந் தனித்தோஷம் ஏறும்முத்தோ ஷஞ்சொறியுங்......*
குன்ன விரணமும்போக் கும் ( * ஸ்ரீகளுக்கு-ஆகும்.).(௱எஅ)

(.புழுகுச்சட்டத்தின்குணம்-வி-ம். )

ஆசுறுக் காந்தியுண்டாம் அசிரண வாதம்போகுந்............*
தேசுதான் வளரும்பித்த சிலேஷ்மவல் விஷமும்ஏகும் ......*
மாசறு ஆயுள்உண்டாம் வனசமா தருணுஞ்சேரும்...........*
வாசமார் புழுகுச்சட்ட மகிமையை யுரைக்குங்காலே...(௱எகூ)

( கஸ்தூரியின்குணம்-வி-ம். )

சொல்லரும் வசியங்காந்தி சுகமுதல் அணுகும்பின்னும் ... *
மெல்லியார் தமக்குநாத விர்த்தியாந் தலைநோயேகும் ......*
பல்லுறு கபமுந்தீரும் பகரொணுப் பலமும்உண்டாம்......*
மல்லடர் சந்நிருட்டை மாறுங்கஸ் தூரிக்கென்னே.....(௱அ௰)

( கஸ்தூரியின் பேதம்-வெ-பா. )

கஸ்தூரி யைந்தாங் * கரிகை * திலகை * குளுந்தை........*
கைத்த * பிண்ட கை * நாய கைமுறையே- மொய்த்தசிவப்*
பெள்ளுகொள்ளு கட்டி சிறிதுபரு மங்களென..............*
விள்ளும்இவைக் கேகும் வினை.(* கரிகை-சிவப்புநிறம்)-திலகை
எள்ளுப்போலிருக்கும்) குளுந்தை-கொள்ளைப்போலிருக்கும்)
பிண்டகை-கட்டியாயிருக்கும்)- நாயகை-சிறிதும்பெரிதுமாயி
(ருக்கும்

(சவ்வாதின் குணம்.)

சுரமுந் தலைவலியுந் * தூண்டத்த டைப்பும் ...................*
உரமுந்து நோயோ டுடற்குள் - பரவிமிகக்... ..............*
குத்துகின்ற வாயுவும்போங் கோதில்சவ் வாதினுக்கு........*
மெத்த வசியமுமாம் விள்.. [* மூக்கு அடைப்பு]...(௱அஉ)

தே-( குங்குமப் பூவின்குணம். )

விந்துநஷ்டந் தாகம்அண்டம் மேகசலஞ் சூலை கபம்........*
உந்துசுரம் பித்தங்கால் உச்சிவலி - முந்துகண்ணில்.........*
* தங்குமப்பூ வோடுறுநோய் சர்த்தியிவை நீங்கவென்றுற்...*
குங்குமப்பூ ஓர்இதழைக் கொள்(* தங்கும் அப்பூவோடுஉறு)()

( இதுவுமது. )

குங்குமப்பூ வைக்கண்டால் கூறுகொண்ட பீநசநோய் ......*
தங்கு * செவித் தோஷஞ் சலதோஷம் - பொங்கு..........*
மதுரதோ ஷந்தொலையும் மாதர் கருப்ப......................*
உதிரதோ ஷங்கள்அறும் ஓது.,...(* செவி-காது. ) ..(௱அச)

( கோரோசனையின்குணம். )

நீரிழிவு மேகசுரம் நீங்காக் கனல்வேகம்........................*
கூரியஉன் மாதம் குழந்தைகள்நோய் - பாரகபம்...........*
வீறும் மசூரியும்போம் *வேதந் தனில்இரண்டாய்க்........*
கூறுங்கோ ரோசனைகட் கு.......[ * ஆயுள்வேதம்.]...(௬௮௫)

( சந்தனத்தின் குணம், )

கோதில்சந்தஞ் * சீதோஷ்ணங் கொண்டிருக்கும் அச்சந்தம்*
வாதபித்தம் ஐயம் மனப்பிரமை - ஓதுசுரம்..................*
மேகந் தணித்தாகம் வெப்புசொறி யும்பொக்கும் .. ... .....*
ஆகந் தனக்குறுதி யாம்...(* சீதஉஷ்ணம்-குளிர்ச்சி-வெப்பம்)

( சந்தனத்தின் பேதம். )

* மும்மைஎனச் சொல்வார் *முருகு* சந்தப் பேதம்அவை.*
* செம்மை மஞ்சள் வெண்மைஎனத் தேர்முறையே - நன்மை
உத்தமமும் மத்திபமும் ஓததம மும்ஆகும்............[தரும்
தத்தை மொழியணங்கே சாற்று[*மூன்று-*மணம்-*சந்தனம்

(பச்சிலை-கிச்சலிக்கிழங்கு-இவைகளின்குணம்.) [*சிவப்பு

பச்சிலைக்குக் கந்தம் பரிமளிக்கும் அவ்விலையோ...............*
* வெச்சைக் கிரந்திதனை மெய்ப்புழுவைச் - சொச்சமற...*
ஒட்டும்நற் கிச்சலியின் ஒண்கிழங்குக் குக்கபமும்........[ரந்தி
பூட்டுவிஷ மும்புண் ணும் போம்[* காங்கையால்பிறந்த-நீர்க்கி

---

( உப்பின் குணம் )

அளத்தில்உறை நல் * உப் பனல்வாதம் மாற்றுங்...............*
களத்துநோய் தன்னைக் களையுங் - கிளைத்தகப..............*
ஆசுடைய வல்லைநோய் அஷ்டகுன்ம மும்போக்குங்..........*
காசினியுண் மாதே கழறு .....[ * உப்பு-அனல்]....(௬௮௬)

( கறி உப்பின்குணம். )

மந்தம் பொருமல்அறும் வாயுவும்போம் தீபனம்ஆம் .......*
தொந்தித்த ஐயந் தொடருமோ - சந்ததமும் .... ........*
அக்கினியின் புஷ்டி அடருங் கறியுப்பால்.......................*
சிக்குகின்ற நீர்இறங்குஞ் செப்பு.................................(௬௮௭)

( கல் உப்பின்குணம் )

ஐயம்அறுஞ் சூலை அரோசிபித்தம் சர்த்தியொடு...............*
வெய்யபிணி அஷ்டகுன்மம் விட்டேகும் - வெய்வளையே...*

வாதம் அதி தாகம் மலக்கட்டும் போம்உலகில்.................*
கோதறுகல் உப்பைக் கொடு.........................(௲௬௧)

தே-( வெடிஉப்பின்குணம் -இதுவே-கம்பிஉப்பு. )

மல்லாரும் அஷ்ட குன்மம் மாதர் உத ரக்கட்டி..................*
கல்லாம் அதைப்புநீர்க் கட்டருகல் - எல்லாமே ..... .........*
* கம்பிகம்பி யென்றுங் கருவுண்டாம் அங்கிநின்ற...........[ம்
கம்பிகம்பி யென்றுரைக்குங் கால்[* ஓடிப்போம் - ஓடிப்போ

( இதுவுமது. )

சூதகவாயுவொடு சோணிதத்தின் வாதமும்போம்.............*
வாதவலி குன்மம்இவை மாறுங்காண் - மீதாங்...................*
? கொடிய வயிறிழியுங் கோழைகபம் ஏகும்....................*
வெடியுப்புத் தன்னை விளம்பு...[? மகோதரம்போம்].(௲௬௨)

( அட்டுப்பின்குணம். )

பித்தங் குடிவிலகும் பேராத சூலைஅறுஞ்....................*
சர்த்தி அருசியிவை சாராவாம் - ஒத்தகச்சிற்...................*
கட்டுப் படாக்கொங்கைக் காரிகையே சங்கையற..............*
அட்டுப்பின் பேரா ! ய்றை... ..( ! அறை-சொல்).....(௲௬௩)

( வளையல் உப்பின்குணம். )

துளையார் குடல்வாதந் தொந்த * வா தத்தோ ..................*
டிளையாச் சுவாசம்அறும் இன்னும் - வளையல்உப்பால்......*
குன்மவலி சூலைவெப்பங் கூறுப்பி லீகம்இவை... .. ........*
சென்மம்விடுத் தோடுமெனத் தேர்[* வாதத்தோடு இளையா.]

தே—( இந்துப்பின்குணம். )

அஷ்ட குன்மம் மந்தம் அசுர்க்கரச்சூர் சீதபித்தந்..............*
துட்டஜயம் நாடிப்புண் தோஷங்கள் - கெட்டமலக்..........*
கட்டுவிட இந்துப்பைக் காமியநோய் வன்கரப்பான்.........*
விட்டுவிட இந்துப்பை விள்.............................(௲௬௪)

தே—( இதுவுமது. )

சென்னிகண் நா பல்தூர் செவிகவுள்கண் டம்பகநோய்.....*
சந்நியா சங்காசந் தாகம்இளைப் - புன்இரத்த...................*
மூலஞ் சிலந்தி * நளி * மூடிகநஞ் சூதைவலி[* இந்துப்பால்
* சூலஞ் சிதையும் * இந்தாற் சொல்[ * தேள்- * எலி- * சூலை-

தே—(பஞ்ச உப்பின்குணம்.)

நீராமை அற்புதப்புண் நெஞ்சுவலி மாகுன்மம்..............*
போராக் கிரகணிபீ லீகமந்தம் - தீராக்கால்..............*
* விஞ்சஉப்பைக் குக்கிநோய் மெய்ச்சூலை யும்பறக்கும்.....*
பஞ்சஉப்பைத் தின்பையெனிற் பார். [* மிகவும்கனத்த-சிலே
(இதுவுமது.) [ஷ்மவயிற்றுநோய்

பஞ்ச * லவணம் பயித்திய குன் மம்போக்கும்..............*
விஞ்சிய சி லேஷ்மத்தை வீழ்க்குங்காண் - கிஞ்சுகமே.......*
தீபனம்உண் டாக்குந் திரிதோஷம் போக்கிவிடுஞ்..........*
சோபனமாம் இம்மொழியைச் சொல்...(* லவணம்-உப்பு)()

(கந்தி உப்பின்குணம்.)

உடல்கரையச் செய்துவிடும் உட்டினமாம் பொல்லாக் .......*
குடல்வாதந் தன்னைவெட்டிக் கொல்லும் - அடலாருந்.......*
தந்திமத்த கத்தையடத் தாவுகொங்கை மாதரசே............*
கந்தியுப்பை நன்றாய்க் கழறு.(இதனைக்கெந்தக உப்பு-என்பர்)

(சவ்வர்ச்ச லவணத்தின்குணம்.)

சவ்வர்ச்சம் என்னுந் தனிலவணத் தால்உலகில்............*
வெவ்வச் சுரஞ்சூலை வெப்புமஅறுங் - கவ்வுகின்ற..........*
* நாடி விரணமுடன் நாட்பட்ட குன்மமும்போம்.........*
தேடியன மேயிதனைச் செப்பு...[* நரம்புச்சிலந்தி]..(௲௭௪)

(பிடா லவணத்தின் குணம்.)

பிடாலவணம் என்றொருக்காற் பேசின் உலகில்..............*
விடா ? நீர் இழிவகலும் மெய்யே- விடல்அரிய...............*
மந்தம் அகலும் வளரும் அதிகபசி............................*
கந்த மலர்க்குழலே காண்...[* நீரிழிவு அகலும்].....(௲௭௫)

(வெங்காரத்தின் குணம்.)

வெங்காரஞ் சர்ப்ப விஷம்ஜயம் நீர்அடைப்பு..................*
மங்காக் கிராணி * ரத்த மாம்மூலம் - பங்கஞ்செய்..........*
வாயுவுடன் கல்அடைப்பு வன்கிருமி அஷ்டகுன்மம்..........*
ஓயும் படிபுரியும் ஓது...........[* ரத்தமூலம்].....(௲௭௬)

(இதுவுமது.)

அரியவெங் காரந்தான் ஐயறுக்குங் குய்யம் ...............*
மருவு கிரிச்சரத்தை மாற்றுந் - திருவனையாய்..............*

* சந்நிக்காஞ் சொல்லுஞ் சகல பிணிக்கும்அதாம்...........*
பொன்னுக்கும் ஆகும் புகல்...[ * சந்நிக்கு ஆம்.]...(சூ௱௪)

( சீனக்காரத்தின் குணம். )

சீனமெனுங் காரம்அது சீறிவரு பல்அரணை....................*
ஆனைக்கால் கண்ணோய் அனிலமொடு - மாநிலத்தில்..........*
துன்மாங் கிசம்வாயு தோலாத உள் அழலை.....................*
குன்மம்இவை போக்கும்எனக் கூறு.............................(சூ௱௫)

( சவுக்காரத்தின் குணம். )

கரப்பானைச் சீதத்தைக் கண்டிக்கும் பேதி ....................*
உரப்பாக்கும் வாயுவைவிட் டோட்டும் - தனைக்குள் ........*
வழலை எனப்பேர் ? வசித்தசவுக் காரம்.........................*
அழலைகுன்மம் போக்கும் அறி...[? வசித்த -பெற்ற.]..(சூ௱௬)

( அப்பளக்காரத்தின் குணம். )

குடல்வாதஞ் சூலை கொடிதான வாதம்............................*
அடல்புரியும் ஐயம் அறுக்கும் - நெடுவயிற்றின் ...............*
உப்பிசத்தி னோடே உயர்குன்ம நோய் அகற்றும்...............*
அப்பிளக் காரம் அது.. ....................................(சூ௱௭)

( நவக்ஷாரத்தின் குணம். )

குன்மங் குடற்சூலை கொல்லும் மகோதரத்தை...... ..........*
வன்மையுறு கல்அடைப்பை மாற்றுங்காண் - * சன்மக்....*
கவிச்சுமுத் தோஷங் கனவாதம் நீக்கும்..........................*
நவக்ஷாரம் மாதே நவில்.[ * தோலின்-கவிச்சுநாற்றத்தை·]()

தே—( யவாக்ஷாரத்தின்குணம். )

குய்யம் களம்நா கொடிறுவாய் இவ்விடநோய்...............*
ஐயம் இரைப்பிருமல் ஆசனப்புண் - பையவுறு..... ........*
கீடவிடஞ் சோபைகி ராணியையும் பம்பரம்போல்........ *
ஆடவிடும் மெய்யவாக்ஷா ரம் ..........................(சூ௱௯)

( இதுவுமது. )

அஷ்டகுன்மஞ் சூலை அதிதூலம் உட்டினத்தால்.............*
ஒட்டிவரு வாதம் உதரநோய் - துஷ்டமந்தம்.................*
நீடுகபம் நீர்அடைப்பு நீங்காப்பி லீகம்இவை.................*
ஓடும்யவா க்ஷாரத்தால் உன்.........................(சூ௱௰)

( சத்திக்ஷாரத்தின்குணம். )

மந்தமொடு தங்கும் மலசலம்பி லீகம் * மடி.................*
உந்திவரு கின்ற ஒலியிருமல் - குந்தவைக்கும்..............*
வாதவலி குன்மம் மகோதரங்கி ராணியும்போம்.....[றும்படி
ஓதுசத்தி க்ஷாரத்தை உன்...[ * மடி-வயிறு-கீழ்வயிறு மேலே

( தும்பக்ஷாரத்தின் குணம். )

ஈளை யுடனே இளைப்பு வலிவாதம் ...........................*
ஆளைவிடாக் குன்மநோய் ஆயதும்போம் - வேளைஇமைப்*
போதில்வெல்லும் வேழப் புருவச் சிலைமயிலே.................*
1 கோதில்தும்ப க்ஷாரத்தைக் கூறு...[ 1 கோது-இல்] (தூய௨)

( உமிலி க்ஷாரத்தின்குணம். )

குடல்வாதஞ் சூலை கொடுங்குன்மம் ஓடும்....................*
விடல்அரும்நீர்க் கட்டும் விலகும் - மடலார்..................*
கமல வதனக் கனங்குழலே நாளும்...........................*
உமிலிக்ஷா ரத்தை உண்...................................(தூய௩)

(துத்தத்தின்குணம்-இதுவே-மடல்துத்தம்.)

முற்றியகு றிப்புண் மூளைவிரணஞ் சென்னித்தலைப்............*
பற்றிநின்ற வாதம் படர்கரப்பான் - சுத்தவிழிக்...........*
காசங் கணம் பில்லங் கண்ணோய்குந் தம்தொலையும்...........*
வாசமிகு துத்தத்தால் வாழ்த்து...........................(தூய௪)

( துரிசின்குணம்- இதுவே-மயில்துத்தம். )

புண்ணுற்றுங் * காமியத்தின் புண்ணுற்றுங் கண்ணோயை...*
விண்ணேற்றும் முத்தோஷ * வீறடக்கும் - சண்ணுகின்ற...*
வாந்தியொடு பேதிதரும் வாய்நோய் சுரந்தணிக்குங்.......[ம்
காந்தி தருந்துரிசி காண்[* காமியம்-ஆண்குறி-* வீறு அடக்கு

தே -( அன்னபேதியின்குணம். )

மூளைவிரணஞ் சூலைமந்த முட்டாமைக் கட்டி.................*
விளை * அறல்ம கோதரநோய் வீட்டும் - வளைமலைபோற்...*
காட்டும்அன்னந் தன்னைக் கணத்திற் சலமாக்கிக்........*
காட்டும்அன்ன பேதியது காண்.[* சலமகோதரம்].(தூய௬)

( மாங்கிசபேதியின்குணம். )

துன்மாங்கி சங்கமாக்குஞ் சோபை அழலையொடு ........*
வன்மைமிகு சூலைகபம் மாற்றுங்காண் - நன்மயிலே... ...*

ஒப்பறுபி லீகமென ஓதுகட்டி யைக்கெடுக்கும்.........*
செப்பரிய மாங்கிசபே தி.......................(௩௱௰௮)

( அம்பரின் குணம். )

அளகமுள ஆரமிர்தே ஆண்மையையுண் டாக்கும்.........*
பளபளென மெய்யையுரப் பாக்குங் - குளகுளத்த..........*
புண்ணுற்றும் அம்பர் பொரிகரப்ப னைப்போக்கும்.........*
விண்ணூர்க்கும் வாசனையாம் விள்...................(௩௱௰௯)

( குந்திரிக்கத்தின் குணம். )

காசசு-வாசங் கனத்தமே கக்கட்டி...........................*
வீசு விஷக்கடி * வி றுச்சுகுஷ்டம் - பேசு.....................*
படர்தா மனாசிரங்கு பண்டைவிர ணங்கள்.....................*
இடர்செய்யிற் குந்திரிக்கம் ஏந்து...(* விறுச்சு-துர்க்கந்தம்.)

( குங்கிலியத்தின் குணம். )

பெரும்பாடு மேகம்போம் * பேரா துடலில்...................*
அரும்பியபுண் ஆறும்இவை யல்லால் - துரும்பாம் ........*
எலும்புருக்கி புண்சீழும் ஏகும் உலகில்.......................*
* சலம்பருகுங் குங்கிலியத் தால்....(* நீரைஇழுக்கின்ற)...()

தே-( வெள்ளைக்குங்கிலியத்தின்குணம்-இது-சருவரசம்.)

வெள்ளை யளித்த விரணநா பிக்கமலத்.......................*
தொள்ளைவிர ணம்மேகந் தோற்றுகினும் - உள்ளே.........*
வருவரச மேற்புண் வரினுஞ் * சு வேதச்.....................*
சருவரச மேற்பழியைச் சாற்று...[* சுவேதம்-வெள்ளை]...()

தே-( குக்கில் குணம். )

* காததர நாசிநோய் கட்டிகடி மேகப்புண்.....................*
வாதவித்தி ரஞ்சூலை வன்குநகம் - ஓதிவையித்...............*
திக்கிலி ருக்கத் திடமுமுள வோ * உபயக்..... ..........[கில்.
குக்கிலி ருக்கநமக் குள்.[* காது அதரம் நாசி-* இருவிதக்குக்

தே- ( அரக்கின் குணம். )

குஷ்டம் அசுர்க்குபித்தம் குன்மம்இரைப் பெண்புருக்கி....*
பட்டிடுபுண் ஆகச்சூர் பங்கநோய் - தொட்டோர்...........*
அரக்கரக்குஞ் சந்நிசுரம் ஐயமிவைக் கெல்லாம்..............*
அரக்கரக்கு நூலை யறி....................................(௩௱௨௰௨)

தே- (மெழுகின் குணம்.)

அறை * பக்க வாதம் * அதைப்பையம் ஊதை..................*
* குறைவிந் * திகழ்நோய்தேள் கூளி - * கறையைப்......*
புழுகெடுக்க அங்கம்உறு புண் இடிப்புண் தீப்புண்..............*
மெழுகெடுக்க அங்ககனு மெய் [* பக்ஷகாதம். *அதைப்பு-ஐய
ம்-* குறைவிந்து-சுக்கிலநஷ்டம். * இதழ்-உதடு.*ரத்தத்தை.]

(பலவகை மெழுகின்குணம்.)

பொன்மெழுகு மாறல் சுரங்களை ப்போக்கிவிடும் ......*
நன்மெழுகு புண்ணைக்கு நஞ்சாகும் - உன்னுங்..........*
கொசுமெழுகு நாளுங் குறித்த * வசி யத்திற்.[வைகளுக்குஆம்
இசையும் * எந்தி ரத்திற்கும் என்...[* வசியம்-* எந்திரம்-இ

தே- (அப்பிரகத்தின் குணம்.)

அப்பிரக மென்றறைந்தால் அண்டம்ம கோதரமும்.......*
எப்பிரமி யங்களுமுன் னீரிழிவும் - ! வெப்பூரற்.............*
பேதமும்போ காமேகப் பித்தமுங்கண் ணைப்களும்பல்......*
வாதமும்போந் தாதுவுமா மால்[ ! வெப்புஊரல்.]..(தூஉகு)

தே- (கல் நாரின்குணம்.)

காசபித்தம் வாதங் * கடுப்பீறு நோயெரிவு.....................*
வீசுசர்த்தி நீரடைப்பு விந்துநஷ்டம் - பேசும் * அசை....*
தின்றாலாக் கூவுமந்தந் தீக்குடர்கால் தாகமிவை...............*
கன்றாலாக் கூவவிடுங் காண்[* கடுப்பு-ஈறு-* அசை-சீரகம்]()

(சகஸ்திர வேதியின்குணம்.)

அஸ்திசுரந் தாகசுரம் ஆசனவி ரத்தமொடு ..................*
குத்திவரு வாந்திகபம் கூறுசந்நி - மெத்த.....................*
நிகழ்த்துசண்நோய் தாதுநஷ்டம் நீங்காமே கம்போம்.......*
சக்ஸ்திரவே திக்குத் தளர்ந்து(சகசிரம்-சகஸ்திரம்-என-மருவி

தே- (கல் மதத்தின்குணம்.) (யது

கண்டப் பிணிமேகங் கல்லொடுநீர் ஊனடைப்பு..............*
வண்டற் கிரிச்சரநோய் மாபிரமி - யுண்டலின்றற்...........*
பன்மதஞ்சேர் தாதுநஷ்டம் பன்னுமிந்நோய்க் கூட்டத்துட்
கன்மதஞ்சே ரக் * கரக்குங் காண்...[* கரத்தல் - ஒளித்தல்.]

தே- (சிலா சத்தின்குணம்.)

கல்லடைப்பு மேகங் கனதூலம் வித்திரதி......................*
சொல்லடைக்கு நீர்அருகல் சோணிதக்கால் - மெல்லிடையார்க்

* இல்லகச்சத் தில்லையெனு மிந்திரிய நட்டமுமாங்........*
* கல்லகச்சத் தில்லையெனுங் கால் [* இல்லகச்சத்து-இல்வாழ்க்கைக்குரியசத்து-அதாவது-சந்ததிவிர்த்திக்குளதுவாகியவிந்துவும்நஷ்டமாம்.* இது-மலைக்குள்ளிருந்துவருவதால்-கல்லகச்சத்து-என்றார்]

( நண்டுக்கல்லின்குணம். )

நீரருகல் நீர்அடைப்பு நீங்காப் பெருவயிறு..................*
நீரொழுகு மேகம்வெட்டை நீக்குங்காண் - ஆரமிர்தே......*
ஐயம் அறுக்கும் அரியதொரு நண்டுக்கல்......................*
செய்யுங் குணமிதுவாந் தேர்..............................(ரூ௱கூக)

( காவிக்கல்-கடல்நுரை- இவைகளின்குணம். )

அடலூறுநற் காவிக்கல் அட்சிநோய் மேகம்...................*
வெடிஅக்கி வாந்திபித்தம் வீழ்க்குங் - கடல்நுரையோ..... *
நேத்திர நோய்விரணம் நீடுகபங் குன்மம்இவை..............*
தீர்த்திடுந்தப் பாமலெனச் செப்பு........................(ரூ௱கூஉ)

( நான்குவகை நிமிளைகளின்குணம். )

தாதுவைவ ளர்க்குந் தனிப்பித்தத் தைப்போக்கும்..........*
ஓதுசந்நி பாதத்தை ஓட்டுங்காண் - ஓத......................*
ஒருநா வுறுதே யுயர் * பொன் முதலாம்...............[செம்பு
ஒருநால் வகைநிமிளை யும்...[* பொன்-வெள்ளி- வெண்கலம்-

( ஊதுசங்கின்குணம். )

* கசிவாம் இரத்தபித்தங் கண்ணோய்கள் ஏகும்...............*
பசியாரும் வாதம் பறக்கும் - இசிவுடனே ....................*
தங்கு முளைவிரணந் தான்அகலும் ஊதுவெள்ளைச்...........*
சங்கமது உண்டாகிற் றுன்...[* கசிவு-ஆம்.] ......(ரூ௱கூச)

( முத்துச் சிப்பியின்குணம். )

ஈளை விலகும் இருமல் குடியோடுங்...........................*
கோழை விழுகயநோய்க் கூட்டம்அறும் - நீள்உடலில்......*
கப்பி வருமேகக் கட்டி ஐயம் போம்முத்தின்.................*
சிப்பிதனைக் கண்டவிடத் தே..............................(ரூ௱கூரு)

தே—( பலகறையின்குணம். )

மந்தந்தா கங்கிரணி மாவிடச்சு ரங்கண்ணோய்.................*
தொந்தம் பரிநாமச் சூலைகயம் - இந்த......................*
* உலகறையைக் காலொடிவை யோடு நரைத்த...................*
பலகறையைக் காணினியம் பார்[* உலகு அறை-ஐ]..(ரூ௱கூகா)

(சுக்கான்கல்லின்குணம்.)

விரணந் தனைஆற்றும் வீறுசந்நி நீக்கும்.....*
மரணஞ்செய் வாயுவையும் வாட்டுங் - கரணத்தில்.....*
மிக்கான இன்பம்அருள் மெல்லியலே தூயவெள்ளைச. ....*
சுக்கான் எனுங்கலது சொல்.....(௲௩௰௭)

(கலைமான்கொம்பின்குணம்.)

அவயவத்தின் வெப்பம் அதிஅஸ்தி மேகம்.....*
கவிழ்திரிதோ ஷம்பெருந்தா கங்கள் - இவைதான்.....*
நிலைக்குமோ மார்புநோய் நேத்திரநோய் நீங்கும்.....*
கலைக்கொம்பால் பேயும்இலை காண்.....(௲௩௰௮)

(சோகி-சீங்கான்-மிருகக்கொம்பு-பல் எலும்புகளின்குணம்)

* சோகிசீங் கான்அறுக்குந் துன்மாங்கி சம்தன்னைக் ......*
* கோ குதிரை ஒட்டை ? குரங்கம் * உவா - வேகப்......*
பலமிருகப் பல் எலும்பும் பல்விழிநோய் தீர்க்கும் .......*
நலமிலகு மாதே நவில்[* பலகறை.* பசு. ? குரங்கு-*யானை]

{பஞ்சலோகம் - ஐந்தெண்ணெய் - குதிரைக்குளம்பு- கழுதைக்குளம்பு-எருமைக்கொம்பு-இவைகளின்குணம்.}

பஞ்சலோ கச்சார்வு பற்றறுக்குங் கண்ணோயை.....*
அஞ்செண்ணெய் வாதசந்நி யைப்போக்கும்- விஞ்சு.....*
குதிரை கழுதைக் குளம்பெருமைக் கொம்பும்.....*
குதிரைவலி நீக்கும் குறி.....(௲௪௰)

(சீலை-கம்பளம்-மயிலிறகு-இவைகளின்-சாம்பல்குணம்)

அஸ்திபிர மேகம்போம் ஆடைசுட்ட சாம்பலுக்குத்.....*
தத்திவரு ரத்தந் தடைபடுங்காண் - சத்தியமாய்க்.....*
கம்பளச் சாம்பல்சந்நி*காதும் * மஞ்ஞைத் * தோகைபஸ்பம்
கும்புவிக்கல் வாந்திகெடுக் கும்[*கெடுக்கும்.*மயில்*இறகு.]

தே-(ஒட்டறையின்குணம் -இதனை-ஒட்டடை-என்பர்.)

குட்டங் களநோய் குருதிமூ லம்பேதி -.....*
* உட்டங்க சீரணம்உள் ளுருகுன்மங் - கெட்டசிரா.....*
அற்புதம்புண் சீதசுரம் * அற்பஅகி நஞ்சிவைகள்..... *
*புற்புதம்போல் ஒட்டறைபாற் போம்[* உள்தங்குஅசீரணம்
* சிறுபாம்பு நஞ்சு இவைகள்-* நீர்க்குமிழி.]

பாஷாணவகை.

தே- ( பாத ரசத்தின்குணம். )

விழிநோய் கிரந்திகுன்மம் மெய்ச்சூலை புண்குட்.........*
டழிகால்இல் விந்துவினால் அத்தை - வழியாப்...........*
புரியும்விதி யாதும் புரியினே யெல்லாம்...............*
இரியும்விதி யாது மிலை...................................*

(இ-ள்.) விந்துஎன்னும் பெயரையுமுடைய ரசத்தினால்மே ற்சொல்லிய வியாதிக ளில்லையென்னும்படி நீங்கும்- இதுவும்அ ன்றி இந்தரசத்தை ரச ஜீவரக்ஷாமிர்த சாஸ்திரத்திற்சொல்லியி ருக்கிறமுறைமைப்படி செய்யத்தக்க சுத்தியெல்லாஞ் செய்தா ல்வியாதியெல்லாம் ஒடிப்போம்- இதைக்குறித்துச் சொல்லாத சாஸ்திரம் யாதொன்றுமில்லை. (கூாசா)

( பாதரச தோஷித்தின்குணம்-வி-ம். )

கலையைக்கிழிக்கும் அவிழ்த்தெறியுங்.........................*
கல்லைத்தேடி யெடுத்தெறியும்..............................*
மலையிற்குதிக்கும் புனல்மூழ்கும்..............................*
மருள்சேர்பித்தந் தனைக்கொடுக்கும்........................*
உலையின்அனல்போல் உடல்வெதுப்பும்......................*
ஓயாஉழலை வியர்வாக்கும்.....................................*
பலகாலமுமே வாய்பிதற்றும்...................................*
பாதரசதோ ஷிமும்இஃதே....... ............(கூாசச)

தே-( எண்வகைத்தோஷிம் நீங்காதபாத ரசத்தின்குணம் )

சர்ப்பம்வங்கங் கந்திவன்னி சாஞ்சலம்ம லங்காளம் .............*
ஒப்பின்மந்தம் எண்தோஷம் ஒட்டிரதத் தைப்புசியார்.......*
கொப்புளங்குட் டங்கியெரி கோதுவிந்தி ளைப்பிறத்தல்......*
அப்புளமூர்ச் சைக்கும்உரி யார்..............................*

(இ-ள்) ரசத்துக்கு எட்டுவகைத்தோஷிமுண்டு-அதாவது- சர்ப்பம்-வங்கம்-கந்தி-வன்னி-சாஞ்சலம்-மலம் -காளம்-மந்தம் -என்பவைகளாம். இந்தத் தோஷித்தை நீக்காமல் உண்பவர்கள் கொப்பிளம்-குஷ்டம்- அக்கினி-எரிச்சல்-கோதுபோன்ற தேக நிறம்-விந்துநஷ்டம்-மரணம் -மூர்ச்சை என்கிற எட்டுவிதரோ கங்களுக்கும் உரியர்கள் ஆவார்கள். (கூாசரு)

( ரசாஞ்சனத்தின் குணம். )

அரியர சாஞ்சனத்தால் அம்புவியில் உள்ள....................*
வரிவிழிநோய் எல்லாம் மறையும் - மருவி....................*

வரு * காமியவிரணம் மாறும்புண் ஆறும்.....................*
ஒருமா மயிலே உரை......[* காமியம்-ஆண்குறி]....(௲௩௱௪௩)

( ரசகர்ப்பூரத்தின்குணம். )

? இடைவாத சூலை எரிசூலை குன்மம்..............................*
தொடைவாழை வாதமாஞ் சோணி - இடையாதோ...........*
ஒக்கும்ரச கர்ப்பூரம் ஒன்றே அளவொடுநல் ..................*
இக்குவெல்லத் தேழுநாள் ஈ [? சகஷவர்த்தவாதசூலை](௲௩௱௪௭)

தே—( சாதிலிங்கத்தின்குணம். )

பேதிசுரஞ் சந்தி பெருவிரணம் நீரொடுத.......................*
காதகடி காசங் கரப்பான்புண் - ஓத.................................*
* உருவிலிங்க சங்கதமா யூறுகட்டி யும்போம்.........[௲௩௱௫௰.
குருவிலிங்க சங்கமதைக் கொள்[*உருவில்இங்கு-அசங்கதமாய்

( இதுவுமது. )

ஆதி யிரத * உருக் காதலாற் சாதிலிங்கம்..........................*
ஓதில் இரதகுணம் உற்றுடலில் - தீதுபுரி...........................*
குஷ்டங் கிரந்தி கொடுஞ்சூலை வாதமுதல்.....................[ங்கு
? உட்டங்கு நோய்களையோட்டும்.[* உருக்கு ஆதலால். ? உள்த

தே—( சவ்வீரத்தின்குணம். )

குன்மமொடு குஷ்டம் கொடியஅனி லத்திரட்சி............. ...*
துன்மாங் கிசப்பெருக்கஞ் சூலைநோய்-வன்மையுறு...........*
காமியப்புண் ஆதியநோய் கண்டாற்சவ் வீரனெனுஞ்.......*
சாமியின்நா மத்தையுச்ச ரி ...........................(௲௩௱௫௰௧)

( நெல்லிக்காய்க் கந்தகத்தின்குணம். )

நெல்லிக்காய்க் கந்திக்கு நீள்பதினெண் குஷ்டமந்தம்.........*
? வல்லை * கவிகைகுன்ம வாயுகண்ணோய் - பொல்லா..........*
விடக்கடிவன் மேகநோய் வீறுசுரம் பேதி..............................*
திடக்கிரக ணீகயம்போந் தேர்[? கட்டி-* ஒருவிதமகோதரம்]

( வாணக் கந்தகத்தின்குணம். )

வாணக்கு ழாக்கந்தி வாசனையைக் கண்டவுடன்....................*
காணக் கிருமிசொறி காணுவாம் - தோணும்.........................*
பெருவியா திக்கூட்டம் பேருமதன் நூலில்....................*
மருவியா மூங்கொடியே வாழ்த்து........................(௲௩௱௫௰௨)

( தாளகத்தின்குணம். )

தாளகத்தின் பேருரைக்கத் * தாலு ? கவுள் நோய்குஷ்டம்...*
நீளக் குளிர்காய்ச்சல் நீடுகயம் - தாளகங்கொள்.......................*

துஷ்டப் பறங்கிப்புண் சூழ்அழுகண் மண்டைநோய்...... *
கிட்டப் படுமோ கிளத்து...[* நாக்கு. ? கபோலம்]..(தூரு௩)

( சிவந்தஅரிதாரத்தின்குணம். )

சிவந்தஅரி தாரம்அது செஞ்சிலைபோற் காட்டும்............*
* உவந்ததனை யுண்முறையோ டுண்டால் - * இவர்ந்தாழ்...*
சுரங்குளிர்மா வாதம்உடற் சூலைநமை குஷ்டம் ..............*
இரங்குமென நாளும் இசை[ *உவந்துஅதனை-இவர்ந்துஆழ்]

( மடல்அரிதாரக்கரடு-மனோசிலை-இவைகளின்குணம். )

மடலரிதா ரத்தில்- வருங் * கரடி ரண்டும்....................*
உடல்விஷங்க ளைக்களையும் உண்மை - கொடியகுஷ்டம்.... ..*
காய்ச்சல் நடுக்கல்அஜ கல்லிஇளைப் புச்சிலந்திப்...............*
பேச்சறும மனோசிலைக்குப் பேசு ..[ * கரடு-இரண்டு(தூருசு)

( மடலரிதாரத்தின்குணம். )

ஈளை யுடனே யிருமல் குடிவிலகுங்.............................*
கோழை மலம்அகலும் கொம்பனையாய் - நாளும்...........*
அடலுறுக யங்கரப்பான் ஆறுப்புண் ணும்போம்...........*
மடலரிதா ரத்தை மதி..........................(தூருஎ)

( அரிதாரத்தின்குணம். )

காச முடனே கபநோய் கபவாதம்..............................*
பேசரிய குன்மம்எட்டும் பேருங்காண் - மாசகன்ற..........*
கீற்று மதிநுதலே கேள்ஆயுள் வேதம் அது.................*
சாற்றும் அரிதாரத் தால்....................................(தூருஎ)

( பொன்அரிதாரத்தின்குணம். )

மந்தாரத் தாலே வளருஞ் சுவாசநோய்..........................*
உந்திவரு தீச்சுரநோய் ஓடுங்காண் - முந்து....................*
தொனிக்கயஞ்செய் யான்கடியுந் * தோற்குஷ்டம் ஏகுந்.....*
தனிப்பொன் அரிதாரத் தால்.[* சருமதளகுஷ்டம்].(தூருஅ)

( மிருதாரசிங்கியின்குணம். )

மிருதார சிங்கெனவே மெல்லவுணத் தாலும்.....................*
உருவார் புடைகரப்பான் ஓடும் - ஒருவிதமோ ..............*
சாலச் சிரங்குபுண்ணுந் தப்பாமல் ஆறிவிடும்..................*
வேலொத்த கண்மயிலே விள்..............................(தூருகூ)

(வெள்ளைப்பாஷாணத்தின்குணம்.)

வெள்ளைப்பா ஷாணம் விஷிங்கடிதீ ரும்பூசக்.................*
கொள்ளைச் சுரந்தோஷங் கோரசந்நி - தொள்ளையுறு.......*
நாசிப்புண் வாய்ப்புண் நனைகிரந்தி போம்உன்ன...........*
ஆசிக்குங் கும்பமுலை ஆய்..............................(சூாசுய)

(கௌரிபாஷாணத்தின்குணம்.)

அவுரியொடு பாகல்இவை யாற்சுத்தி செய்த....................*
கவுரிபா ஷாணத்தைக் கண்டால் - சவுரியஞ்செய்...........*
வாதநோய் மந்தமொடு வந்த சுரங்கள்எல்லாம்...[மூந்துஓடும்
* காதிவிழுந் தோடும்எனக் காண்[ * காதி - கொல்லப்பட்டுவி

(நீலாஞ்சனபாஷாணத்தின்குணம்.)

சந்நிசுரம் மேகம் கயந்தாகம் நேத்திரநோய்....................*
வன்னிரச வேகம் மறைவதன்றி - மன்னுடலம்.................*
விஞ்சு குளிர்ச்சியொடு * வீறழகு காந்தியுமாம்................*
அஞ்சனக் ? கல்லுக் கறி[* வீறுஅழகு. ? கல்லுக்கு அறி.]...()

(இதுவுமது.)

வாரிருக்கும் பூண்முலையாய் வாய்த்தநீ லாஞ்சனத்தால்........*
நீருறுத்துங் கண்ணோய் நிலைகெடுங்காண் - பாரினிலே.......*
எல்லாச் சுரமும் இரத்தபித்த தோஷமுதற்......................*
பொல்லா * அறுபுண்ணும் போம்....[* வெட்டுக்காயம்]...()

(தொட்டிப் பாஷாணத்தின்குணம்.)

தொட்டிப்பா ஷாணமெனச் சொன்னால் சுரங்கிரந்தி.........*
எட்டிப்பார்க் காவாம் * இடருறுத்தக் - கிட்டிவரு.........*
வாயுவின் றன்பெருக்கும் மந்தம்முளைக் கட்டியும்போம்....*
ஆயினது வாதவித்தைக் காம்..( * இடர்-துன்பம்)...(சூாசுச)

(பஞ்சபாஷாணத்தின்குணம்.)

பஞ்சபா ஷாணமெனப் பாரில்உரைத் திட்டாலும்.............*
* வெஞ்சதை ஆணிபுற்றும் வீழுங்காண் - விஞ்சிவளர்.....*
கண்புற்றுத் தீரும்அதி காய்ச்சல்குளிர் மேகம்போம் ........*
பண்புற்ற மாதே பகர்......[* வெஞ்சதை-துர்மாங்கிசம்)...()

(நவபாஷாணத்தின்குணம்.)

நவபாஷா ணந்தன்னை நற்சுத்தி செய்தங் ......................*
குவகையாய்ச் ○ சிந்தூரித் துண்டால் - நவமாகக்.............*
காயம் இறுகுங் கனத்தநோ யும்போகும்...............(ண்டால்
மாயும்நோய் எல்லாம் மதி.(○ சிந்தூரித்து-சிந்தூரஞ்செய்து

## உலோகவகை.

### தே—(பொன்னின் குணம்.)

* அடற்ரு வரவிடங்கள் அங்கஒளி மங்கல்.......................*
கடத்தாமுத் தோடகயங் காசம் - உடற்ருபஞ்...............*
? சேகையிருந் தாதுநஷ்டத் திட்டிநோய் ஈளையிவை.........*
* ஈகையிருந் தால்வரும் என் (* அடல் தாவர- ? சேகு-ஐ.* ஈ
கை-பொன்]

### தே—(வெள்ளியின் குணம்.)

* பாய்க்கூட்டங் காட்டாப் பழையசுரந் தாருவிடம்...........*
? வாய்க்கூட்டச் செய்மேக வாதமுதல் - நோய்க்கூட்டம். ..*
அண்டாது காணிகொளும் அத்திமே கக்கசிவும்...............*
ஃ வெண்டாது காணிமெய்யை மேல்(* மெய்யை-உடலை-பாய்க்கு-பாயவுக்கு-ஊட்டங்காட்டா - பருவுகாட்டாத. ? வாய்க்கு ஊட்டச்செய். ஃ வெண்டாது வெள்ளி-காண்நி-நீ அறிவாய்)

### (இதுவுமது.)

இரத்தம் கயம்பித்தம் ஈளை கண்ணேப் காசம்.................*
* உரத்தையம் அஷ்டகுன்மம் ஊதை - வருத்தும் ........ *
விரணஞ் சிலேஷ்மநோய் மெய்ப்புளிபுண் ஊரல் ..........*
மரணம்உறும் வெள்ளியினல் வாழ்த்து...[* ஊரத்து-ஐயம்]()

### (தாம்பரத்தின்குணம்.)

தாம்பரத்தாற் சோரிபித்தம் சந்நி மகுவைகபம்..............*
லீம்பார்பி லீகமந்தம் வெண்மேகந் - தேம்பழலை..........*
சூதகநோய் புண்கிரந்தி தோஷசுவா சங்கிருமி...............*
தாதுநஷ்டங் கண்ணேய்போம் சாற்று................(௲எ௰)

### (பித்தளையின்குணம்.)

தாதுவிர்த்தி யுண்டாகுந் தாபச் சுரம்போகும்................*
சீதளம்ஆம் வாதம் சிதையுங்காண் - பூதலத்துள்..............*
மாட்டியதோர் பித்தகுன்மம் மாறும் மலர்த்திருவே..........*
தாட்டியதோர் பித்தளையி னல்...........................(௲எக).

### (வெண்கலத்தின்குணம்.)

நேத்திரநோய் சோமவினை நீர்ப்பெருக்கி ரத்தபித்தம்......*
வீழ்த்துசுவா சம்மந்தம் மேகங்கால் - ஆழ்த்துகபம் ........*
வாதவலி சூலை மகோதரம்போம் பித்தமொடு................*
தாதுவும்ஆம் வெண்கலத்தாற் சாற்று.................(௲எஉ)

( தராவின்குணம். )

சூலையொடு மேகம்இவை தோன்றாமல் ஓட்டிவிடும்.........*
மேலைவரு காலை விலக்குங்காண் - ஆல......................*
அராமே வியவல்குல் ஆரணங்கே வெட்டைத்......................*
தராவெனும்உ லோகம்அது தான்........................(௲௭௬)

( வெள்ளீயத்தின்குணம்-இதுவே-வெண்ணாகம். )

தாகங் கரப்பான் சலமேகம் பித்தகபம்.............................*
மேகம் ஒளிமங்கல் * வெப்பபலம் - மாகிரந்தி.................*
துள்ளியமந் தார சுவாசமும்யந் தாக்கினியும் .....................*
வெள்ளீயம் போக்கும் விதி ...[*.வெப்பு-அபலம்]. (௲௭௪)

தே- (காரீயத்தின்குணம்-இதுவே-கருநாகம்.)

* பன்மாநஞ் * சக்கிநோய் பாகர்த் தபிவிரணங்.................*
குன்மங்கால் சூலங் குதவிரணஞ் - சன்மப்.......................*
பெருநாக மேகப் பிணிசுரம்இ வற்றைக்...........................*
கருநாக மேநீக்குங் காண்...[* தாவரவிஷம்.* அக்கி-கண்]..()

( துத்திநாகத்தின்குணம். )

மேகங் கிளர்பேதி வெட்டைஅழ லைத்தணிக்கும்..............*
வேகங்கி ராணி விலக்குங்காண் - போகாப்........................*
பரியமுளைப் புண்ணும் பயித்தியமும் போக்கும்..................*
அரியதுத்தி நாகம் அது...............................(௲௭௬)

தே - ( இரும்பின்குணம். )

பாண்டுவெண் குஷ்டம் பருந்தூல நோய்சோபை................*
மாண்டிடச்செய் மந்தங்கா மாலைகுன்மம் - பூண்ட.........*
பெருந்தாது நட்டமும்போம் பேதிபசி புண்டாங்................*
* கருந்தாது * நட்டமிடுங் கால்...[* இரும்பு-நடனம்.]..()

தே - ( எஃகுவின்குணம். )

தந்தமந்த மூலவுரு தாதுநட்டஞ் சோபைகண்ணோய்.........*
வந்தமந்தம் பாண்டுவினை வன்மைகுன்றல் - முந்தப்.........*
* பெருக்கிடையாய் நீட்டுகப பேதம் * இவைகட்.. ..........*
குருக்கிடையா தோட்டும் உசை...[ ! பெருங்கிடையாய்-நீட்டு
கபம்-*இவைகட்குஉருக்குஇடையாதுஓட்டும்-உருக்கு-எஃகு.]

( காந்தத்தின்குணம். )

காந்தத்தாற் சோபைகுன்மம் காமிலம்மே கம்பாண்டு.........*
சேர்ந்தஜிரி தோஷம்வெட்டை சீதம்கால் - ஓய்ந்தபசி.......*

* பெருதரங் கண்ணோய் பிரமியம்நீர் ஆமையும்போம்.....*
* ஓரினிறை ஆயுள்உறும் உன் ..[*பெருவயிறு-*ஓரில்நிறை]

( மண்டூரத்தின்குணம்-இதுவே-கிட்டம். )

கிட்டம்என்றாற் சோபை கிளைவீக்கம் அஸ்திசுரந்..........*
துஷ்டவிஷ பாகஞ்சு வாசம்ஐயங் - கெட்டகொடும்........*
! பாண்டிருமல் நீர்ஆமை பாழும் பிரமியமுந்...........*
தாண்டிவிடும் உண்டிரத்த தாது.....[ !பாண்டு-இருமல்]....()

## நவ ரத்தினவகை.

( மாணிக்கத்தின் குணம். )

சுரரோகம் சந்நிகளின் தோஷம்அதி தாகம் ....................*
உரமான மேகம் ஒழியும் - திரமாக.........................*
ஊணிக்கொள் நேத்திரநோய் ஓடும் * அர வீன்றவொளி....*
மாணிக்கத் தால்வசியம் ஆம்...[ * அரவு-நாகம்.]. ..(தூ ௮௧)

( வச்சிரத்தின்குணம்-இதுவேவயிரம். )

ஆறுவித மாம்வயிரம் அவ்வவற்றுள் மாரசங்கள்...........*
வீறி நிலைத்திருக்கும் மேன்மையினால் - கூறும்௦ அவைக்....*
கெப்பிணியும் நீங்கும் இணையில் வனப்பும்உண்டாம்........*
செப்பணியு மாமுலையாய் செப்பு.[௦ அவைக்கு எப்பிணியும்.]

( வயிடூரியத்தின்குணம். )

சீதவா தத்தொடுசி லேஷ்மம் புளிஏப்பம்.....................*
காதுசூலைப்பிணிக னத்தகுன்மம் - ஓதுபித்தம்.............*
என்றுரைக்கும் நோய்கள்அறும் எப்போதும் தோஷம்இலை*
நன்றுவயி டூரியத்தி னால்..................................(தூ ௮௩)

( கோமேதகத்தின்குணம். )

வாதபித்த கோபத்தை மாற்றுமலக் கட்டறுக்கும்..............*
ஓதுமந் தாக்கினியை ஓட்டுங்காண் - மீதில்...................*
* அழறருவி காரம் அகற்றும்ஒளி செய்யும் ...................*
கழறுகின்ற கோமேத கம்...[ * அழல்தரு ]........(தூ ௮௪)

( புட்பராகத்தின்குணம். )

வீரிய விர்த்திய து மேன்மேலும் உண்டாகுங்............*
கூரியநற் புத்தியுண்டாங் கூறுங்கால் - பாரில் .................*
பிணிவருக்கம் ஏகும் பெரும்புட்ப ராக.................*
மணியாற் புகழும்உண்டாம் வாழ்த்து.................(தூ ௮௫)

( பவளத்தின்குணம். )

சுரதோஷம் ஐயமுத் தோஷசுரங் காசம் ........................*
அருசிகீ டத்தால்ஆம் * ஆலம் - பெருவிந்து ..................*
நட்டம் அதிதாகம் நாவரட்சி போம்ஒளிவுங் ..................*
கிட்டும் பவளத்தாற் கேள் ....[* ஆலம்-விஷம்.]...(தூ௮௬)

( முத்தின் குணம். )

அஸ்திசுரம் சோபை அருசிதுர்ப்ப லம்கண்ணோய்..............*
பித்தவிஷஞ் சீதளநோய் பேசுகபம் - சுத்தத்...............*
தயிரியநஷ் டத்தோடு தாதுநஷ்ட மும்போம்.................*
* உயிருறுநன் முத்திருந்தால் ஓது[*ஜீவரத்தினம்] தூ௮௭)

( மரகதத்தின்குணம். )

தாதுதரும் பூதபை சாசந் தமைஓட்டும்........................*
மீதுவரு புண்ணை விலக்குங்காண் - தீதுபுரி..................*
ο நச்சை யகற்றும் நலிமதுமே கம்போக்கும்.......... .........*
பச்சை யதுமதுரம் பார்...( ο நச்சு-விஷம்.).......(தூ௮௮)

( நீலத்தின்குணம். )

குதிவலிமே கம்பித்தங் கூறரிய பாண்டு.........................*
மதிமயக்கம் எல்லாம் * மருளும் - மதிநுதலே...............*
புத்தியொடு மேன்மேலும் போகசுகம் உண்டாகும்..........*
சுத்தநறும் நீலத்தாற் சொல்..[* மருளல்-அஞ்சல்].(தூ௮௯)

வைத்தியாங்கம்.

தே- ( மருத்துவன்குணம்-கழிநெடி-வி-ம். )

தெய்வவுபா சனைபலநூ லெல்லை காண்டல்......................*
திரிகரண சுத்திபன்னோய் தீர்த்தனனு..........................*
நைவகன்ற தீரமதி நுட்பஞ்சான்றோர்..............................*
நட்பொழுக்க மேன்மைகுண மன்புள்ளானாய்................*
மெய்வசுதை விகலையணங் குறைபதார்த்த.....................*
விதியுடற்கா தாரமட லங்கிமாந்தல்.........................*
கைவருமெண் பேதமெலா முணர்ந்துற்றோனைக்..............*
காணிலந்த மருத்துவன்கைக் கரணியுண்ணே...............*

(இ-ள்)தேவதாஉபாசனை-பலசாஸ்திரங்களை ஆதியொடந்தமாக ஆராய்ச்சிசெய்துஅறிகுதல்-மனம்-வாக்கு-காயம்-என்னும்திரிக ரணசுத்தி-பலவியாதிகளைத்தீர்க்குதல்-எந்நாளும்வியாதியைக்

கண்டுஅஞ்சாததீரத்துவம்-மிகுந்தபுத்திநுட்பம்-பெரியோர்களுடையசிநேகம்-ஆசாரம்-மேம்பாடு-நல்லகுணம்-அன்பு-இத்தன்மைகளையுடையவனாகிப்-பிணியாளனுடையதேகம்-தேசம்-காலம்-ரோகம்- அவுஷிதம்- பதார்த்தகுணம்- சரீரத்துக்கு உள்ள ஆதாரம்- உதராக்கினி -தேகபலம்- ஆகாரம்-கைபாகம்-செய்பாகம்-இன்னநோய்க்கு-இத்தனை நாள்அவுஷிதங்கொடுக்கவேண்டுமென்கிற-காலஅளவு-என்னும்இப்பேதங்களையெல்லாம்-அறிந்திருப்பவனாகத்தெரிந்தால் அந்த வைத்தியன்கொடுக்கும்-சஞ்சீவியை ஒத்தமருந்தை உண்ணக்கடவை-எ-று. சரீரத்துக்குள்ள ஆதாரபேதமாவது (வாதம்-பித்தம்-சிலேஷ்மம்-ரசதாது-ரத்ததாது-மாமிசதாது-மேதோதாது-அஸ்திதாது-மச்சைதாது-சுக்கிலதாது-மலம்-மூத்திரம்)-என்னும்இப்பன்னிரண்டுமாம் -உதராக்கினிபேதமாவது (சமாக்கினி-விஷமாக்கினி-தீக்ஷணாக்கினி-மந்தாக்கினி)என்னும்இந்நான்குமாம்-தேகபலமாவது-(சகசபலம்-காலபலம்-யுத்திகிருதபலம்) என்னும் இம்மூன்றுமாம். இப்பேதங்களின் விவரத்தை ஜீவரக்ஷாமிர்தம்-என்னும்-சகலரோகநிதானசாத்திரத்தில்-தோஷபேத படலத்தில் காண்க. (௲௬௰)

தே—( கைபார்த்தமருத்துவன் நடத்தை-வெ-பா. )

கன்மவுரு நோயதைமூக் கண்கொடறி வுற்றறிந்தார்...........*
தன்ம நீராடற் சதத்துடனெட் - டின்மையெனி ...........*
லங்கைபதத் தூய்மையின்றே லங்குலிபூ வெற்றலின்றேற் ....*
கங்கை பதம்புனிறு காண்.......................................*

(இ-ள்) நோயானது கர்மரூபமாகையால் அந்தநோயை மூன்றுவிரலைக்கொண்டு பிணியாளனுடைய கைமுதலாகிய தசவிதநாடிஸ்தானங்களையும் தொட்டறிந்து அதுவுமன்றி அஷ்டவிதபரீக்ஷையினாலும் அறிந்த மருத்துவர்கள் முக்கியமாக நடந்துகொள்ளத்தக்க ஒழுக்கமாவது-நூற்றெட்டுஸ்நானஞ்செய்தல் அல்லது கைகால்களைச் சுத்திசெய்தல்-அவ்விரலைப்பூமியில்தட்டுதலாம் இப்படிசெய்யாவிட்டால் சகல பாபங்களையும் நிவிர்த்திசெய்யுங் கங்காநதியையொத்த வைத்தியருக்கும் பக்குவமாகச் செய்யப்பட்டிருக்கிற அவுஷிதங்களுக்கும் ஆகுசம் உண்டாம்-எ-று. கண்போலத்தெரிவிக்கின்றமையால் விரலைக்கண்ணென்றார்-இவ்வொழுக்கமில்லாத வைத்தியர்கள் கைமருந்து பிணியை நீக்காதென்பது கருத்து. (௲௬௧)

தே- (பிணியாளன்குணம்-கழிநெடி-வி-ம.)

அருப்பமுறி னரசெனினுந் தீர்ப்பானைக்கண்......*
டழைத்தலனை யாதியரு மவனென்றோர்தல்......*
விருப்பமுறத் தவிசிருத்தன் மெய்யன்பாடல்......*
வேண்டிடலீந் திடலுறையேற் றுண்டலத்தைத்......*
திருப்பவருந் துயராற்றற் சாதங்கூறற்......*
செப்புளொடுங் கற்பன்மருந் தொழித்தலூழா......*
மிருப்பகற்று முறைகுயிற்ற லிவையுள்ளானே......*
லிவருமம் புகலுநர்க்கு மின்றுநோயே......*

(இ-ள்) இராஜனேயானாலும்-தனக்குவியாதிசம்பவித்தால் வைத்தியனை உபசாரத்துடன்அழைப்பித்தல்--தாய்-தந்தை-குரு-தெய்வம்-நமக்கு இந்தவைத்தியனோ என்று-நினைக்குதல்-விருப்பம் உண்டாகும்படி-ஆசனங்கொடுத்து இருக்கச்செய்தல்-உண்மையான அன்புவைத்தல்-அவுஷிதத்துக்குவேண்டிய திரவியங்கொடுத்தல்-அவர் கொடுக்கின்ற மருந்தை இரண்டுகையினாலும்வாங்கிக்கொண்டு உண்ணுதல்-அவுஷிதத்தை வேண்டாவென்று மாற்றும்படி உண்டாகும் வருத்தத்தைச் சகித்துக்கொள்ளுதல்-அவுஷிதஞ்சாப்பிடுதலினால் தனக்கு இருக்கும்குணகுணங்களை உண்மையாகச் சொல்லுதல்- அன்றியும் அவர் சொல்லுக்குள் அடங்கியிருத்தல்-கண்டகண்ட அவுஷிதங்களை உண்ணாமல் நீக்குதல் பூர்வகர்மத்தினால்வியாதிசம்பவிப்பதாதலால்-அந்தக்கர்மத்தை நிவிர்த்திசெய்துகொள்ளுதல்-என்னும் இந்தக்குணங்களையுடையவனாயிருப்பானானால்-இவன்பேரை உச்சரிப்பவர்களுக்கும் வியாதி அணுகாது-எ-று. இந்த விவரங்களை எல்லாம்- சிகிச்சாசாரம் என்னும் சாத்திரத்தில் காண்க. (௲௱௫௰௨)

தே- (பாகஞ்செய்வான்குணம்-வெ-பா.)

பிணியர்க் குரியர் பிடக்குளத்தை யொப்ப......*
ரணியிற் சிறந்தநட்ப ராம்பற் - பணியர்க்குட்......*
டொப்புறையை யுண்மைமிகு தூய்மையிவை யார்ந்தாரை ......*
யொப்புறையை யாடற் குவந்து......*

(இ-ள்.) பிணியாளர்களிடத்திலிருந்து அவுஷிதபாகஞ்செய்கின்றவர்கள்-அவர்களுக்கு உரிமையுள்ள வர்களும்-மிகுந்த நன்மையுள்ள சிநேகரும்-வைத்தியர்மனதை ஒத்தவர்களுமாயிருக்கவேண்டும் - அத்தன்மையர்களில்லாத பக்ஷத்தில் - மற்ற ஏவலாளிகளுக்குள்-தேகபலம் - பிணியாளர்களுடைய ஆயுசு விர்த்தியை விரும்புதல் புத்திநுட்பம்-சத்தியம் - உள்ளும் புறம்புப்-பரிசு

த்தம்-என்னும் நற்குணம் உள்ளவர்களைப் பரிசோதித்து- அவு ஷதபாகஞ்செய்ய வைத்துக்கொள்ளவேண்டும்-எ-று. (௲௭௱௩௰௩)

( கலுவங்களின் குணம். )

கருங்கற் * கல் வத்தவுழ்தங் காணில் * உடற் கின்பாம்......*
* நெருங்கிரத்தக் கல்தோஷம் நீக்கும் - ஒருங்கு* வெள்ளைக்*
கன்மருந்தோ வீரமொடு காரமும்இல் மஞ்சள்அம்மி......*
யின்மருந்தோ நோய்விலக்கா எண்... [* கல்வத்து அவுழ்தம்
* உடற்குஇன்பாம். * நெருங்கு இரத்தக்கல். * வெள்ளைக்கல்.]

மேற் (மருந்தினதுபக்குவாபக்குவகுணம்.)

பக்குவபா கத்தையுறு பஞ்சின்மருந் தும்பிறழ............*
பக்குவபா கத்துப் பருமருந்து - மெய்க்குறுங்கா........*
லக்கால மும்பருணு மாமிமருந் துஞ்சேடன்..............*
கக்கால மும்பொருந்துங் காண்.............................*

(இ-ள்) லகுவான முறையினாற் செய்யப்பட்ட அவுஷதங்களையாயினும் பககுவ பாகத்தைப் பொருந்துமானால் தேவர்களுண்ணத்திருப்பாற்கடலில்உண்டானஅமிர்தத்துக்கொப்பாம் கனமான முறையினாற் செய்யப்பட்ட அவுஷதங்களையாயினும் செப்பாகங் கெடுமானால் அக்காலத்தில் ஆதிசேஷன் கக்கிய விஷத்துக் கொப்பாகும்-எ-று. (௲௭௱௩௰௪)

மேற் — (மறுபாககுணம்.)

பாகமொடட் டிக்குளிர்ந்த பாணியிர சாயனநல்..............*
வேகவிலே கங்குடிநீர் மெய்ச்சுரசம் - ஏகுமிரா........ .....*
மீந்தவெஞ்ச ஞதிகளை மீளவொருக் காலட்டி..............*
மாந்தநஞ்சம் வேறிருக்கு மா........................ (௲௭௱௩௰௫)

( மருந்துவைக்கும்பாத்திரத்தின்குணம். )

தெங்கின் குடுக்கை * திகிரிதந்தப் பாத்திரத்தார்..............*
நன் கிராப் புன்மருந்தும் நன்மருந்தாம் - வெண்கலத்தால்..*
மையிரும்பால் கட்டைகளால் * மாக்கொம்பால் பாத்திரங்கள்
செய்யினிரண் டாம்பக்ஷம் செப்பு..[ * மூங்கில்-* மிருகம்]()

மேற் —(மருந்தூட்டும் பாத்திரம்பதம்.)

வாதமுதன் முப்பிணியோர் வைத்துறையுண் பாத்திரத்தின்..*
பேதமுறை யேகேள் பெருங் * கஞ்சம் - * சாதகும்பந். ..*
தாம்பரமா மின்றென்னிற் * சக்கிர்கைப் பாத்திரம் * நன்..*
றும்பரமாயுட்கொடுக்குமாங்கு.............. [* வெண்கலம்.
* பொன்- * குயவன். * நன்றுஆம்]

தே-( மருந்தூட்டுங்காலம். )

அனிலரோ யர்க்கசன மாகாமுன் பித்தத்........................*
துனியர்க் கசனநடு தூயை - யெனுநோயர்க் ..................*
காகாரப் பின்னு மருத்திவுறை யப்பிணியாற் ...................*
சாகா * ரப் பின்னுலகிற் றான்.........................................*

(இ-ள்) வாதரோகிகள் போஜனஞ் செய்வதற்குமுன்னும்)-பித்தரோகிகள் பாதிபோஜனஞ் செய்தவுடனும் ) - சிலேஷ்மரோகிகள் போஜனஞ் செய்தபின்னும்)அவுஷதம் உண்ணக்கொடுத்தால் அந்த வியாதியினாலே சமுத்திரஞ்சூழ்ந்த உலகத்தில் அவர்கள் இறக்கார்கள்-எ-று. (தூளகக)

தே-( மருந்தருந்தியபின்புவாயிலிடும்வஸ்துக்கள். )

சீவற் கனமதுதி ராட்டை தும்பை மூக்குகிராம்.....................*
பூவற் சரநெற் பொரிசசித்தூட் - பூவி ............................*
னிருந்துண்ட நீர்மைகுன்றா தேற்றுமேன் மக்கண்.............*
மருந்துண்ட வாய்க்கிலைவயா மால்...................................*

(இ-ள்) கொட்டைப்பாக்குச்சீவல்-நாகப்பூ-தேன்-திராட்சைப்பழம்-வெற்றிலைக்காம்பு- கிராம்பூ-ஒருவருஷஞ்சென்ற நெல்லின்பொரி-பச்சைக்கர்ப்பூரத்தூள்- என்னுமிவைகள் உண்டஅவுஷதத்தின்தன்மையைக் கெடுக்காதவஸ்துக்க ளாதலாலும் அவுஷதச்சுவைகளின் வெகுட்டினால் செந்தாமரை மலரை யொத்த முகங்களின் சுபாவத்தன்மை மாறும விருக்கும்படி செய்யத்தக்க வஸ்துக்களாகையாலும் அதுகளில் எதாவதொன்றை மருந்துண்ட வாய்க்குக்கொஞ்சங்கொடுக்கக்கடவை-எ-று. (தூஉள)

தே—( உறக்கம்நீக்கி மருந்தூட்டும்உபாயம். )

வேசையர்கூத் தொன்றொழித்த வேறுவே றுங்கூத்தால் ....*
ஆசியத்தால் கீதத்தால் அற்புதத்தால் - வீசுபகல்..........*
தூக்கமருள் நீக்கி *புறை * துய்ப்பித் * த ணங்கையுள்ளார்க்
* கூக்கமருள் வார்மருத்து வர் ...(* மருந்து. * துய்ப்பித்தல்-உண்பித்தல். * அணங்கை-உள்ளார்க்கு. * ஊக்கம்-பலம்)

தே—( சிகிச்சையின்பேதம். )

* சூத * கந்தி * தா துபஸ்பஞ் * சொர்ன்னநாட் டார்சிகிச்சை
ஓதரிய மூலியிம்மண் ணூர்ச்சிகிச்சை - வேதடரும்..........*
* சத்திர * க்ஷா * ராக்கினி * நி சாசரச்சி கிச்சையொன்றே.*
மூத்தரத்ததாகும்மொழி (* ரசம். *கந்தகம். *பாஷாணம். *தேவர்-* அறுத்தல். * காரம்வைத்தல். * சுடுதல். * ராக்ஷதர்)

தே—(காலபேதவிரேசனம்.)

குடிநீர்க் கற்கந்தயிலங் கோடைக்காம் பேதி........*
கடிமாரி மூடுபனிக் காலங் - கெடுமவைகள்.........*
சோபிக்கு மெக்களிக்குஞ் சூதமுப்பிற் கும்பேதி......*
சோபிக்கு மெக்காலுஞ் சொல்..........*

(இ-ள்) கஷாயம்- அரைத்தமருந்து-எண்ணெய்-என்னும்-இம்மூன்றில் ஒன்று கோடைக்காலத்தில் பேதிக்குக் கொடுக்கத்தக்கமருந்தாம்- மழைகாலத்திலாவது-பனிக்காலத்திலாவது கொடுத்தால் அம்மருந்துகளின் குணங்கெட்டுவிடும்- மேற்சொல்லியமூன்றுகாலங்களிலும் -நேர்வாளமாவது- பலவித கள்ளிப்பாலாவது-ரசமாவது-உப்பாவது- சேர்ந்த மருந்தைக்கொடுத்தால்கிரமமாகப்பேதியாகும்-எ-று. (தூடாமு)

மருந்துவகை.

(அயச்சிந்தூரத்தின்குணம்.)

* அயத்தில்வரு சிந்தூரம் ஐயமொடு சோபை..........*
வயிற்றில்உறு காமாலை மாற்றும் - புயத்திற்குச்..........*
செய்யபலம் உண்டாக்குந் தீபனத்தைத் தான்எழுப்பும்.....*
வெய்யபாண் டோட்டும்இது மெய்(* அயம்-இரும்பு. * பாண்டு-ஓட்டும்)

(காந்தச்சிந்தூரத்தின் குணம்.)

காந்தச்சிந் தூரத்தைக் கண்டவுடன் * உந்திவலி........*
போந்தஅதி சாரசுரம் போவதன்றி - வாந்திகப........*
காசசு வாசவினை காமாலை பாண்டுவொடு...............*
* பூசலிடு நோயனைத்தும் போம்..(* வயிறு. * பூசல்-சண்டை)

தே—(தாம்பரயஸ்பத்தின்குணம்-சந்த-வி-ம்.)

உருவங்குறு பசியும்பெறு முரமும்பெறு முரமா..........*
மிருகண்டரு டநயன்பெறு மிகையும்பெறு குவரோ........*
வருசெம்புறு மலினந்தெறி வகையும்பொடி வகையும்......*
பருகும்பெரு விதமுந்தெரி பவரம்புவி மிசையே........*

(இ-ள்) இந்தஉலகத்தில் இருப்பவர்களுக்குள் செம்பில்பொருந்திய களிம்பை நீக்கும்வகையும் அதனைப் பஸ்பம்செய்யும் வகையும்- பஸ்பத்தை உண்ணும் பெரிதான வகையும் அறிந்தவர்கள் வயிற்றில் உண்டாகும் பசியையும் தேகபலத்தையும் தவத்தில் உயர்ந்த மிருகண்டுமகாரிஷிபுத்திராகிய மார்க்கண்டே

யர்போல ஆயுசுவிர்த்தியையும் அடைவார்கள்-அவுஷிதஞ்சாப் பிடும்போது பத்தியம் கண்டிப்பா யிருக்க வேண்டுமென்கிற முறைமைபற்றி பருகும்பெருவிதமென்றார். (௬௱௯)

( இதுவுமது-வெ-பா. )

தாம்பிர பஸ்பஞ் சகலகுன் மங்குறைநோய்.................*
சோம்புகுஷ்டம் எல்லாந் தூரத்தும்என்பார் - தேம்பி......*
இருக்கின்ற பித்தமுடன் சுவாசுரஞ் சந்நி......................*
* குருக்கின்ற வாயுவும்போக் கும்.(* குருக்குதல்-உண்டாதல்)

( வங்கசிந்தூரத்தின் குணம். )

* வங்கசிந் தூரம் மதுமேகம் நீர்* இழிவோ....................*
டங்கமுறு தாகம் அகற்றுங்காண் - பொங்கிவரும்..........*
ஓதஉதி ரத்தால் உறுவிரண நோய்போக்கும்..............(உ௱
தாதுவையுண் டாக்கும்அது தான்( * சுயம்.*இழிவோடு-அங்கம்

{ஆனந்தபைரவம் - சுத்தபைரவம் - சொர்ணானந்த பைரவம் - பிர்ம்மானந்தபைரவம் - ஆனந்தரசம்- விநோதபைரவம்- இவைகளின்குணம்-வி-ம்.}

ஆனந்த பைரவம்பின் அடர்சுத்த பைரவஞ் சொன்..........*
ஞானந்த பைரவம்பிர் மானந்த பைர வம்மா..................*
ஆனந்த ரசம்விநோத மாம்பை ரவம் இவற்றால்.......(அந்தம்
* வானந்த மேவுருட்சை வருதிரி தோஷம் போமே( * வான்

{சுத்தமண்டூரம்-மகாமண்டூரம்-சித்தமண்டூரம் திரிகடுகாதிமண்டூரம் - நாராயணமண்டூரம்- இவைகளின்குணம்-வெ-பா.}

சுத்தமண் டூரம் துதிமகா மண்டூரம் ...........................*
சித்தமண் டூரம் திரிகடுகம் - ஒத்திடுமண்.....................*
டூரநா ராயணமண் டூரம் இவைக்குவெகு.....................*
தூரமாம் பாண்டொடுசோ பை ..............................(௬௱௰)

{வாதராக்ஷசமாத்திரை - தசவிதஅக் கினிகுமாரம் - இவைகளின்குணம்.}

* இகல்வாத ராக்ஷசனுக் கெண்பது வாய்வும்...................*
புகலாமல் ஓடும் புறத்தே - இகலார்.............................*
தசவித அக்கினிகு மாரர்க்குச் சந்நி.............................*
நசிசுரங்க ளும்போம் நடுங்கி....(* இகல்-பலம்) ..(௬௱௰௧)

{கோரோசனாதிகுளிகை - தாககோப
சமனமாத்திரை-இவைகளின்குணம்.}

கோரோசனாதி குளிகைக்குப் பித்தசுரம்.......................*
தீராத தாகம் சிறுவர்சுரம் - நேராது..........................*
தாககோ பச்சமனந் தன்னாற் சுரஞ்சந்நி.......................*
தாகபித்தம் போமே தணிந்து .. .......................(௲௨௱௰௨)

{குன்மகுடாரம் - சுயம்அக்கினி -பாஷாண
பின்னவச்சிரரசம் - இவைகளின்குணம்.}

குன்ம குடாரமெனக் கூறில்அஷ்ட குன்மமும்போம்.......*
வன்னசுய மக்கினிக்கு வாயுமந்தம் - பின்னமுறும்..........*
* பாடாண பின்னவச்சிர மாரசத்தைப் பார்த்தவுடன்.......*
கேடாகும் கல்அடைப்பிற் கே...(* பாஷாணம்)...(௲௨௱௰௩)

(மேககுலாந்தகன்-சர்வசித்திரசம்- இவைகளின்குணம்.)

மேக குலாந்தகனால் மேககுலம் போம்அரிய ..................*
யோகசர்வ சித்திரசம் ஒன்றுக்கே - போகும்....................*
* பெருமூத் திரமென்ற பேரும் *பே தித்து...... ......(ரம்
வருமூத் திரமும்அறி வாய்(* வெகுமூத்திரம்.* சொட்டுமூத்தி

(கோடாசலக்குளிகை-மகாவன்னிரசம்- இவைகளின்குணம்.)

கோடா சலத்தால் கொடும்பாண்டு சோபைமுதல்..............*
ஓடாக் கிராணியும்போம் உண்மையே - நீடுமகா..............*
வன்னிரசம் என்றுரைக்கில் வாடாச் * சலோதரமும் ........*
பின்னிடையும் தப்பாது பேசு...(* சலமகோதரம்)(௲௨௱௰௫)

{உலகோத்தமரசம் - வங்கேஸ்வரம்-
நாரசிங்கரசம்- இவைகளின்குணம்.}

உரைத உலகோத் தமரசத்தால் உன்னும்.........................*
விரைதம்எனும் பேதி விளையும் - கனமான....................*
வங்கேஸ் வரத்திற்கு வல்லகுன்மம் போம் நார..............*
சிங்கம்மூ லச்சுரந்தீர்க் கும்.. ........................(௲௨௱௰௬)

{சிந்தாமணிக்குளிகை-திரிலோகசிந்தா
மணிக்குளிகை - இவைகளின்குணம்.}

சிந்தா மணிக்குளிகை சேர்ந்தமலக் கட்டறுக்கும்..............*
உந்துசுர வாயுவையும் ஒட்டுங்காண் - நந்தாத் .................*
திரிலோக சிந்தா மணியென்னிற் சந்நி.............................*
திரிலோகத் தப்புறம்போம் சென்று.............. ...(௲௨௱௰௭)

(திரிலோகசூடாமணி-திரிலோகரக்ஷாமணிகளின்குணம்)

திரிலோக சூடா மணிக்குந் திறல்சேர்.......................*
திரிலோக ரக்ஷா மணிக்கும் - * உரநோவு..................*
காசம்விக்கல் சந்நி கபம்தலைநோய் மந்தம்சு..................*
வாசம்பாண் டும்போம் மதி...[ * உரம்-மார்பு]...(௯௨௰௮)

(ராஜமிருகாங்கம்-மகாராஜமிருகாங்கம்-இவைகளின்குணம்.)

ராஜமிரு காங்கம்அது ராஜநோய் போக்குமகா..................*
ராஜமிரு காங்கம்அது ராஜநோய் - காசகபம்..................*
பாண்டுகா மாலை பலவீன சம் சோபை,......................*
தாண்டுபித்த நோயகற்றுஞ் சாற்று ...............(௯௨௰௯)

{ராஜகண்டேச்சுரம் - ராஜராஜேச்சுரம்-
ராஜகேசரிவடகம்-இவைகளின்குணம்.}

ராஜகண் டேச்சுரமும் ராஜரா ஜேச்சுரமும்......................*
வீசுசுரம் எல்லாம் விலக்குங்காண் - ராஜநற்.....................*
கேசரிய தாம்வடகம் * கேதஞ்செய் தோஷசுரம்...............*
நாசமுறக் காட்டுமதை நாடு[ * கேதம்-துன்பம்.].(௯௩௰)

{தே-சந்திரோதயம்-சந்திரகாசரசம்-சந்திரபிரபாவவ
டகம்-பூரணசந்திரோதயம்-இவைகளின்குணம்-வி-ம்.}

சந்திரோ தயத்தால்வெப்பந் தணியுஞ் சந்திரகா சத்தாற்......*
பிந்துமுத் தோஷஞ்சந்திர பிரபாவ வடகமோநான்.........*
கைந்துநீர் போக்கும்பூர்ண மாஞ்சந்தி ரோதயத்தால்.........*
விந்துவு மதிகரிக்கும் வீறுநோய்க் குழுவும்போமே.........()

( வசந்தகுசுமாகரத்தின் குணம்-வெ-பா. )

வசந்தகுசு மாகரத்தால் வல்லகயம் காசம்....................*
உசந்தவிஷ பாண்டுகுன்மம் ஊற்றுாய்க் - கசிந்தநீர்க் .....*
கட்டுபுளி யேப்பமொடு கல்அடைப்பு தாகமிவை...........*
விட்டு விடுங்காண் விரைந்து.................................(௯௨௨)

தே-( மகாவசந்தகுசுமாகரத்தின் குணம்-வி-ம். )

மகாவசந்த குசுமாக ரத்தால் வந்த................................*
வாயுகபம் பித்தம்மந்தம் வயிற்று நோய்கள்.................*
விகாரவுன் மாதங்கா மாலை பாண்டு ..........................*
விடுசிநீர்க் கட்டுசந்நி குன்மஞ் சோபை.......................*

யகாதக்ஷய காசசுவா சம்பிர மேக..................*
மதிசார மெனும்புருக்கி விக்கல் மூலஞ்.................*
சிகாவாதஞ் * சுருங்குகுட்டம் மார்பு நோயுந்..................*
தீருமதற் கனுபானந் தெரியுங் காலே.[ * குறைநோய்.]

{ லங்கேச்சுரம் - பிரதாபலங்கேச்சு ரம்-இவைகளின்குணம்- வெ-பா. }

இலங்கேச் சுரத்திற் கெழு * சூதி கைக்கால்..................*
இலங்கா கிராணியுமோ இல்லை - நலங்கொள்பிர..................*
தாபலங் கேச்சுரத்திற் சாந்தமாஞ் சீதசுரம்..................*
சோபமுறு நோயினமுஞ் சொல்.. [* சூதகவாயு] ..(ஙூஉஉச)

(ஏகாதசருத்திரகுளிகை-சிந்தூரபூஷிணங்களின்குணம்)

ஏகா தசருத் திரம்என்னும் மாத்திரைக்குப்..................*
போகாத சந்நிசுரம் போகுங்காண் - வாகான..................*
சிந்தூர பூஷிணத்தால் சீர்கருப்ப மாதருக்கு ..................*
வந்தசுரம் போம்உணரு வாய்..................(ஙூஉஉரு)

( பூபதிமாத்திரையின்குணம். )

நாவிலிட அன்னமுறும் நாளும் விஷம்போகும்..................*
மேவுசுரம் சந்நிகளும் விட்டுப்போம் - காவிவிழி..................*
மானார் வசியம் வரும்மேல பனம்ஆகும்..................*
தானேகேள் பூபதிக்குத் தான்..................(ஙூஉஉசா)

( நவலோகபூபதி-சூலைப்பூபதி-இவைகளின்குணம். )

நவலோக பூபதிக்கு நண்ணுசுரம் சந்நி..................*
புவலோக வாழ்க்கைவிட்டுப் போங்காண் - ஒவுசூலைப்..................*
பூபதிக்குச் சூலைசந்நி பொங்கனலம் தென்றிசைவாழ்..................*
பூபதிக்கா ளாகும் புகல்..................(ஙூஉஉஎ)

( பூபதிரசம்-ரசபூபதி- இவைகளின்குணம். )

பூபதிர சத்திற்குப் போஞ்சந்நி மந்தம்ரச..................*
பூபதிக்குச் சந்நி பொருபாண்டும் - கோபமிகு..................*
காசம்சு வாசம் கடுஞ்சூலை பாண்டுமுதல்..................*
நாசம் கபவாய்வும் நாடு..................(ஙூஉஉஅ)

தே-( பிணிக்குமருந்தளவுகூறல்-வி-ம். )

தாதுநஷ்டமபஸ்மாரஞ் சுவாசகாசந்..................*
தனியுன்மாதம்மிவைக் * காண் ‍0 டுறையாமென்பர்..................*
மோதுகிரிச்சரம்விரணங் கல்லடைப்பு..................*
மூதிர்மேகநீர்க்குமருந் தீலாந்திங்க..................*

ளோதுமுதாவர்த்தமர்த் தாங்கமேழென்.................*
றுளாவித்திரதிக்குமருந் தையாண்டன்றி.............*
மீதுவேண்டாவுளைத்த விம்மட்டுண்ணின்...................*
விலகுமவைசேடமற விரும்பிக்காணே( * ஆண்டு-வருஷ
தே-( இதுவுமது-வி-ம். ) (ம்.௦ உழை-மருந்து.

சோகபகந் தரமூல முதிரச்சூலை...........................*
சூலைகுரு திக்குன்ம மசுர்க்குநோயா........................*
நாகமுப யாஷ்டிலநோய் திமிரங்குன்ம......................*
நாறுகப மிவைக்குறைகே ளன்காந்திங்க... ......... *
ளாகமடி மூர்ச்சைதவல் வியசிரந்தி..........................*
யாம்மிலபித் தஞ்சீத பித்தமுட்டீ............... ......*
யேகவரு மதிமந்தஞ் சோமரோக......... ..............*
மிவைக்குறைமும் மதியுண்ணி னிமீளாவே ...(௬௨௱௰)
தே-( இதுவுமது-வி-ம்.)

வாந்திவிக்கல் கணம்மாந்தம் பேதிகட்கு...................*
மண்டலமொன் றுறைவாதங் காமிலங்கட்....................*
கேந்திருமண் டலமுறைபற் பாண்டுசோபை...............*
யெண்மகோ தரம்பிரிதி துனிகட்கூக்க..................*
மோய்ந்திடமும் மண்டலநல் லுறைநாட்சென்று............*
மொழிவில்சுரங் கட்குறைமண் டலநான்குன்னி........*
மாந்திடுபோ மித்திரனே சகலநோய்க்கு.......................*
மருந்தூட்டின் மீட்டுமவை வாட்டாவாறே......(௬௨௱௧)

பத்தியவகை.

தே {பிணியாளர்க்கு - குடிநீர்- சுரசம்-சலம்<br>இவைகளின்- உஷ்ணநிதானவிதி- வி-ம்.}

சுத்தநற் குடிநீர் காண்டஞ் சுரசமுண் டிடிலுரதைக்கு.......*
மெத்தவுஞ் சூடாம்பித்தம் வெப்பிரத்தஞ் சந்நிக்கு............*
முத்தமங் குளிர்ச்சிபாகு மோங்கைக்குச் சிறியசூடாங்.......*
கொத்தடர் தொந்தநோய்க்குக் குளிர்சமோட் டினமாங்கூறே

தே-( பிணியாளர்க்குத்தயிர்தோய்க்கும்விதி-வெ-பா. )

காற்றெழிக்க வென்னிலுப்புங் காலொடுசே ளையென்னுங் ..*
கூற்றெழிக்கச் சுக்குங் குறுமிளகு - மூற்றடுபித்............ *
தம்மொழிக்கக் ௦ கட்டியும்பா றன்னிலிட்டுத் தோய்ப்பர்தயி*
யம்மொழிக்க மாட்டா தவர்...[௦ வெல்லம். ‡ தயிர்] (௬௨௱௨)

(பிணியாளர்க்குமோர்சேர்க்கும்-விதி.)

இரிச்சந் தனக்குவெல்லங் கேள்பாண்டு நோய்க்கும்............*
அரிப்பேதி கட்குஞ்சுக் காரும் - எரிப்பான..................*
மேகந் தனக்குத்தேன் மிக்கு ○ பிணி கட் * களையுள்..........*
ஊகங் கொடிவேலி யூட்டு.[○ பிணிகட்கு *அளையுள்].(தூஉகச)

தே—(அயச்சிந்தூரத்தின் பத்தியம்-வி-ம்.)

பத்தியந் திலங்கூசுமாண்டம் பறங்கிகொள் கடுகுதோரை.....*
கத்தரி பிரமபத்திரி கள்கஞ்சா வபினிமாதர்.....................*
சுத்த மாகா துபானெய் துய்த்திட லாம்புளிப்புப்...............*
புத்தம மகற்றலாறு லுத்தமம் பழுதுமின்றே.......(தூஉகரு)

தே—(காந்தசிந்தூரத்தின்பத்தியம்-வி-ம்.)

பத்தியம் புளியுப்பின்றேற் பலிதமாம் வாரத்துள்ளே........*
நத்திடி லிரண்டுவார நவிலுமிச் சாபத்தியங்கொள்..............*
கத்தரிக் காயகத்தி கடுகுகூசு மாண்டமெள்ளு................*
கொத்தவ ராக்காய்மாங்காய் *கூலக்கா யிவையாகாதே[*பாகல்

தே—(தாம்பிர பஸ்பத்தின்பத்தியம்-வி-ம்.)

புளியொன்று தவிரவெல்லாம் புசிக்கினு ; நவையுருதை......*
யிளைபெரு நெருப்புக்கீர மில்லையென் பதுபோலாகு.......*
மளைமுசல் விகுசங்காடி யாமில மடாதுபாகற்................*
சுளையாமகட்பழம்நெய்குதைசருக்கரைமா நன்றே[ ; குற்றம்]

தே—(பாதரசத்தின் பத்தியம்-வெ-பா.)

மற்சமுப்பு சிதோட்டின மந்தாதி வத்தெண்ணெய்..........*
துற்ச ○ மத்தி யங்கைப்பு தாவுபுளி - யைச்சற்றுங்.........*
கூட்டாமற் சூதங் கொடுப்பருண்டா ரைச்சமன்பாற்..........*
காட்டாமற் றுயிருத்தக் காண்......[○ மதுபானம்...(தூஉகஅ)

(பறங்கிப்பட்டையின் பத்தியம்-வி-ம்.)

மஞ்சளோ டெண்ணெய்பாக்கு மாங்கிசம் அுவா காரம்.....*
இஞ்சிகார் கடுகுகைத்தல் இழிவுறு புளிமண்உப்பு...........*
மஞ்சுறு வாளைகோலா மடவைமீன் சன்னை வெளவால்.........*
கிஞ்சிதம் அருந்தின்மாதே கெடும்பறங் கித்தோலென்னே...()

தே—(தைலங்களின் பத்தியம்-வி-ம்.)

புலர்த்திய பின்பருந்து போஜனந் தனிற்புளிப்பு...........*
சலத்துறு ததி பால் பாகல் சாகம்மீ னிறைச்சி யச்ச..........*

நிலத்தெழு பிரமபத்திரி நித்திரை மடவாரின்னு ..............*
நலத்துரு வகைநீக்குப்பின் னூளும்பத் தியத்துணில்லே......()

தே-(முக்கியமாகமருந்துகளுக்குதவாதவஸ்துக்கள்-வெ-பா)

* சிந்தக் கனிமிகுந்த ௦ ஜீவனந்தாம் பூலம்வெல்லம் .........*
பந்தப் பயற்றுப் பருப்புமோர் - சிந்து.....................*
கடலையிவை யற் ? றுறைக நித்திடார் தங்க ................[ந்து
ளுடலையிவை யத்திருத்தா ருன்....[* புளி. ௦ சலம். ? உறை மரு

( பத்தியபதார்த்தங்கள்-வி-ம். )

பொன்னுங்காணி சிறுகீரை புதியநறுநெய் வரால்குறவை.[னே
சொன்னேங கோவைக்காய் வற்றல் சுண்டையவரைப் பிஞ்சுட
பன்னுஅப்பை வெள்ளுள்ளி பரியமுருங்கை யிளம்பிஞ்சும்..*
நன்னீர்விளைத்த சிறுபயறு நன்மாங்காய்க்குட் பிஞ்சுநன்றே()

( இதுவுமது. )

அத்திப்பிஞ்சு கருவாழை யதன்றன்பிஞ்சுபூவாகும்...... .....*
சுத்தித்திரியும் ஊர்க்குருவி காடையுடனே * சிவல்ஆமை ...*
சுத்தமாங்காய் நறும்பருப்பும் சுறுமீன் திருக்கைக் கருவாடாம்
பத்தியத்தில் இவைதவிரப் பச்சைமீன்கள் பகையாமே[* கவு

( இதுவுமது-வி-ம். ) [தாரி

வேண்டிய மருந்துண்பார்கள் விராலொடு குறவைதேளி....*
ஆண்டிடும் அயிரைஉடான் ஆனசன்னையுஞ் சுதும்பும்......*
ஈண்டிடும் இருநெய்த்தோலி யிவைகளை அருந்துங்காலை ......*
மீண்டிவை உலர்ந்ததாகும் விரைமலர்க் குழலினுளே(௬உ௪௪)

( இதுவுமது-வி-ம். )

காடை உடும்பு கவுதாரி காட்டின் எலியும் ஊர்க்குருவி......*
ஆடு விரும்பில் வெள்ளாடாம் அதுவும் உலர்த்திக் கறிகொள்ளு
நாடுதனில்வாழ்வரால்குறவை நலமாமிவையும்உலர்த்திக்கொள்
கூடுங் கூடா தென்றுதே கூட்டில் மருந்துங் குணந்தருமே..()

( பேதியைக்கட்டுகிறபதார்த்தங்கள்-வி-ம். )

மானே வயிறு கழிவார்க்கு வாழைக் கச்சல் அத்திக்காய்.....*
கானே திரியும் ஊர்க்குருவி காடை உடும்பு கவுதாரி........*
தானே யாகும் முயல்உலரில் தக்க குளத்துக் கருவாடாம்....*
மீனே விரும்பித் தின்றிரேல் வீணே உயிரை யிழந்தீரே.....()

(பேதியாகிற பதார்த்தங்கள் - வெ-பா.)

காரா மணிக்கீரை காட்டுப் பறங்கியிலை ..................*
பேராம் பெரும்பயற்றின் பேர்இலைகள் - சீரார் ..........*
அகத்திபருங் கத்தரிக்காய் ஆயிழையே மீன்கள் ..........*
பகைத்தநிக பேதிதரும் பார் ..........................(௲உ௬௭)

(பத்தியாபத்திய பதார்த்தங்கள் - வி-ம்.)

பயறு குறவை வரால்தேளி மற்றுங் குறவை நாய்க்கெளிறு...*
அயிரை சன்னை பத்தியமாம் ஆகா மீன்கள் இனிக்கேளும்....*
உயரும் வாளை இருல்கூனி ஒங்குங்கெளிறு விலாங்குகெண்டை
கயலோ டிவைகள் ஆகாவாங் காரார் குழலே கண்டுணையே. ..()

(அபத்தியபதார்த்தங்கள் - வி-ம்.)

கொள்ளு காடி குமட்டிக்காய் கோழி பன்றி கொக்குடனே ..*
முள்ளிற் பெரிய பாகற்காய் முதிரும் அவரை பயற்றங்காய்..*
பள்ளத் தெழுந்த மடற்சேம்பு படரும் வள்ளி பாலையிவை.*
எள்ளத் தனைதான் தின்றிரோல் எல்லா மருந்தும் இழந்தீரோ.().

(இதுவுமது - வி-ம்.)

மாங்கா யிளநீர் மாதுளங்காய் மாவின்பண்டம் புளி கடுகு....*
தேங்காய் நெய் பால் கிழங்குபழம் தின்னுங்காயம் வெங்காயம்
ஈங்கா தரிக்குஞ் சுராபானம் ஈச்சங்கள்ளு பனங்கள்ளும்.....*
ஆங்கேயிவற்றுள்ஒன்றேனும்அருந்தாதிருந்தால்மருந்தாமே.()

(வாதரோகாரி வஸ்துக்கள் - வெ-பா.)

செங்கழு நீர்கோஷ்டந் தேன்மிளகு நல்லெண்ணெய் .......*
தங்குபெருங் காயந் தழுதாழை - எங்கெங்கும் ..........*
கூட்டுசிறு முத்துநெய் கோதில் உழுந்திவைகள்...........*
வாட்டும்அனி லத்தை மதி ...........................(௲உ௬௯)

(பித்தரோகாரிவஸ்துக்கள் - வி-ம்.)

கொம்மட்டி வாழைப் ₀ பன்னங் கொளுத்திய கரியினோடே*
விம்மிய தண்ணீர்விட்டான் வேரொனுங் கிழங்கு சாந்தஞ்.....*
செம்மைசேர் நெல்லிமுள்ளி சேரும்இம் மருந்தெல்லாமே ..*
அம்மிய பித்தத்திற்குக் காலனென் றுரைதுவாரோ[பன்னம்இலை

(இதுவுமது - வி-ம்.)

சம்புநா வல்பீத்தாருச் சருமமும் முத்தக்காசுஞ் ...........*
செம்பருத் தியுஞ்செழித்த தெங்கிளம் பூவும்கன்னல்.. ......*

* அம்புயத் தாதிரேடே அதனுறு வளையம்நெய்தல்........*
வெம்பிய சீலைச்சாம்பல் வெள்ளைப்பூ சினிக்காயென்னே......()
[* அம்புயத்தாது-தாமரைப்பூவிலிருக்கும்மகரந்தம்]

( சிலேஷ்மரோகாரி வஸ்த்துக்கள்-வெ-பா. )

ஆவி னதுபால் அரத்தைமுள் ளங்கிமயில்......................*
* தூவி நறுஞ்சாம்பல் தாதுளம்தேன் - மாவோமம்........*
துய்ய சருக்கரை * துழாய்விதைவி ளாம்பழமும்...............*
ஐயமதை யோட்டும் அறி[ *தூவி-இறகு-*துளசி].. (௬௨௫)

( மூலரோகாரி வஸ்த்துக்கள். )

மருள்சா ரடைகருணை வச்சிரவல்லி காட்டுக்......................*
கருணை புளிநரளை காருக் - கருணை..............................*
* மெருகோடு வெள்அறுகு வெண்சித்திர மூலம்................*
வருமூலம் போக்கும் மருந்து...[* மெருகன்கிழங்குஉடன்]

( விஷாரி வஸ்த்துக்கள். )

பேய்ச்சுரை பேய்க்கொமட்டி பேய்ப்பீர்க் கொடுதுமட்டி.*
பேய்ப்புடலை ○ புங்கழிஞ்சில் பேர்அவுரி - வாய்த்தமலை...*
வேம்புசிவ னார்வேம்பு வெள்ளெருக்கு வெள்அறுகு.........*
சோம்புவிஷம் போக்குமெனச் சொல்[ ○ புங்கு-அழிஞ்சில்-]

( பித்தசமதிரவியம். )

மொச்சை கடலைபெரு * முற்கம்உழுந் தேலம்வெந்தி......*
மெச்சு மிளகுசுண்டை வெண்ணெய்இஞ்சி - பச்சைநிறங்..*
காட்டுமப்பைக் கோவை கருநிம்பம் சீரகங்கள்...............*
கூட்டுகறி பித்தசமம் கூறு...[ * முற்கம்-பயறு.] ..(௬௨௭)

( திரிதோஷசம திரவியம்-வி-ம். )

ஒன்றிய வாதபித்த கபம்இவை யுயராவண்ணம்...............*
நன்றுறு கறிகள்எல்லாம் நாளுமே சமைப்பர்ஆய்ந்தோர்....*
தின்றிடு மிளகுமஞ்சள் சீரகம் உயர்ந்தகாயம்...................*
வென்றிகொள் சுககோடேலம் வெந்தியம் உள்ளிசேர்த்தே...()

தே - ( அறுசுவைகளின்மிகுதிக்குணம்-வெ-பா. )

புளிதுவர்விஞ் சுங்கறிபாற் பூரிக்கும்வாதந் ...................*
தெளியுவர்கைப் பேறில்பித்துச் சீறுங் - கிளிமொழியே....*
கார்ப்பினிப்பு விஞ்சிற் கபம்விஞ்சுஞ் * சட்டிரதச்...........*
சேர்ப்புணரி னேயணுகா தே...[ * சட்டிரதம்-ஆறுசுவை.].()

(காலைக்கறிக்கான பயறுகள்.)

காலைக் கறிக்காகுங் காரா மணிஉழுந்து.........................*
தோலற் றிடிகடலை தோரைஎள்ளு - கோலமொச்சை.........*
தட்டை சிறுபயறு தாழ்வில் கடுகு ○ கறி.........................*
இட்டசுக்கு காயம் இவை......[ ○ கறி-மிளகு].......(சூஉசாய)

தே-(பகல்கறிவகை.)

கந்த வருக்கங் கனிவருக்கம் வாதமெழு.........................*
மந்த வருக்கமந்த மாம்வருக்கங்- கந்தமுறு.........................*
தண்ணடைவ ருக்கந் ததிமோ ரிவை * என்று.........................*
ளுண்ணடையாற் றேடமறு மோர்...[ * எல்நாள்-பகல்]....()

தே-(இராக்கறிவகை.)

அவரைப்பிஞ் சத்திக்கா யாப்பால் முருங்கை .......................*
துவரைப் பருப் * பாற்றுத் தோணி - யெவரையுமோ.....*
கண்டா விழுக்குங் கறித்தூ துணமிவையல்.........................*
லுண்டா * விழுக்குமிலையுண்[ * ஆற்றுமுள்ளிக்காய். * குற்றம்]

(தே-(காலை-மாலைப்போஜனத்தின்- நெய்-மோர்-பேதம்)

காலைக் கெருமைநெய்மோர் காரத்தோ டுண்ணலாம்..........*
மாலைக்கா வின்னெய்மோர் வார்த்துணலா-மேலையண்ட......*
வெப்பப்புக் காலம் விரவிவர லாற்றுகளி.........................*
லொப்பப் * பகற்கனற்கண் டுண்[ * பகலினும்-பசிகண்டு-உண்]

(வாதமுதலியமூன்றுதேகிகட்கும்- உப்புவகை.)

வாத ? பித்தை யென்றே வருதேகர்க் குக் * கல்லுப்.........*
* போதவுப்பிந் துப்பாம் உணர்முறையே- ஓதவெள்ளம்...*
வற்றியஇந் துப்பதனை வாதமுத லோர்அருந்தக்............[பு
குற்றமில்லை குற்றமில்லை கூறு[ ? பித்து-ஐ. * கல்-உப்பு- * கடலுப்

தே-(வாததேகிகட்குக் கறிவகை.)

மாட்டுப் பறங்கிவங்கம் மாமுருங்கை வெள்ளவரை,...........*
நாட்டுக் ? கூரப்பிஞ்சு நற்கருணை - காட்டுளுறை...........*
மாகருணை யுங் ? கருவில் வாதத்தெ ழுந்துவந்த............*
? தேகருணை நற்கறியாந் தேர். [ ? கூரம்-பாகல் - கருப்பத்தில்
அமைந்த வாததேகர்உண்-உண்கின்ற-ஐ-அழகிய ]

(வாததேகிகட்குக்கீரைவகை.)

மேனிமுன்னை யாரைநறும் வேளைமணத் தக்காளி...........*
யானைநெருஞ் சில்முசுக்கை யப்பைநெடுங் - கானிலுறை...*

மூக்குறட்டை நல்வசலை * மூன்பிவைக ளிற்கீரை..............*
யாக்குவர்வா யுத்தேகர்க் காய்ந்து...[ * மூன்புஇவைகளில்.]()

( வாததேகிகட்குரசவகை. )

சக்கர வர்த்திவெள்ளைச் சாரணைபா கல்முருங்கை .........*
தொக்கில்இளந் தண்டுநறுந் தூதுணம்வார் - மைக்குழலே·*
சிதமூறு காணிபிவை செந்தளிர்க ளிற்றினமும்...... ........*
வாத ? தே கர்க்கிரசம் வை...[ ? தேகர்க்குஇரசம் ]..(௬உ௬எ)

( வாததேகிகட்கு வற்றல்வகை. )

சுண்டைக்காய் பேய்ப்புடற்காய் தூதுளங்காய் நெல்லிக்காய்*
* தொண்டைமணத் தக்காளி தூஅவரை - பண்டைமுள்ளிக்*
காயிவையின் வற்றல்களுங் கான்புரண்டை வற்றலுமாம்......*
வாயுதே கர்க்கறிந்து வை......[* ஆதொண்டை].(௬உ௱௬அ)

( வாததேகிகட்கு ஊறுகாய்வகை. )

நாரத்தை தான்றிகடு நற்றேற்றான் நீடுகளா... ..................*
ஏரொத்த புன்களா இவ்வகைக்காய் - * காருப்பப்.........*
பூறியகாய் ஆகும் உயர்இஞ்சி யும்அமையுங்................[னிவ
? கூறனில தேகிகளுக் கு [* கார்உப்பு-அப்புஊறிய. ? கூறுஅ,

( பித்ததேகிகட்குக்கறிவகை-வி-ம். )

வெள்ளரி இரண்டுபாகல் விரிபுடல் பீர்க்குசிம்பை............*
முள்ளிபூ சினிகத்தாரி முருங்கைமா களவரம்பை............ *
எள்ளிலிக் காய்கள்வள்ளி ஈருளி கதலிப்பூதண்...............*
டள்ளியுண் ஆணஞ்செய்வர் அரும்பித்த தேகர்க்கென்றே ...()

( பித்ததேகிகட்குக்கீரைவகை-கலித்துறை. )

புளியாரை கோவை முருங்கை வசலைநற் பொன்முசுட்டை...*
மிாகப்பை யோரிதழ்த் தாமரை பாலை வெளிமுசுக்கை......*
வளர்தூ துணஞ்சுரை வல்லாரை * சில்லி மணத்தக்களித் ......*
தளிரிளங் கீரைகள் பித்தசு தேகிகள் தாமுண்பரோ[* சிறுகீரை]

( பித்ததேகிகட்குரசவகை-வெ-பா. )

கொத்து வசலை கொடிவசலை நல்அகத்தி.......................*
தத்துபுனல் வழுக்கை தைவேளை - நெய்த்ததராச்..........*
* சாகங் களையவித்துச் சாறுவைத்துண் பார்பித்த............*
தேகங் களையுடையார் தேர்.. [* சாகங்கள்-கீரைகள்]..(௬உ௱உ)

(பித்ததேகிகட்கு வற்றல்வகை)

சுத்தமுள்ளி பேய்ப்புடோல் தூதுணங்கான் சுண்டைகண்டங்
கத்தரிப் பற்றைமணத் தக்காளி - நித்தமூறு......................*
சுஞ்சம்வல் ல⁻ளாயிவை காய்த்தநறுங் காய்வற்றல்............*
விஞ்சுபித்த தேகிகட்காம் விள்.............................(௲௨௬)

(பித்ததேகிகட்கு ஊறுகாய்வகை-கலித்துறை.)

பச்சை மிளகிஞ்சி தூதுளங் காய்மூப் பலநாரந்தங்...........*
கச்லை தமரத்தம் புன்னை வடங்கபித் தம்மில்லமா...........*
கொச்சையி ளம்பிஞ்சு மாகாளிக் கந்தங் கொளுஞ்சியெலு...*
மிச்சையுப் பூறிய காய்பித்த தேகர்க்கு மிக்குநன்றே..(௲௨௪)

(சிலேஷ்மதேகிகட்குக் கறிவகை-வி-ம்.)

கத்தரிபேய்ப் புடல்அவரை யிருபாகல்..........................*
பருங்களா கண்டங்காரி.............................................*
அத்திக்காய் களும் * வருக்கை மாபயற்றை........................*
சுளையால் * பீர்க் கரும்பிஞ்சும்வேர்..............................*
மொய்த்தகு ரணங்கதலித் தண்டுகளப்.............................*
பூமுளங்கி * முருக்கரும்பும்.........................................*
அஸ்திபூசி ணிக்காயீ ருள்ளிவள்ளி.................................*
யுங் * கபத்தோர்க் காணமாமே[*வருக்கை-பலா.*பீர்க்
கு-அரும். * முருக்குஅரும்பு. * கபத்தோர்க்குஆணம்.]

(சிலேஷ்மதேகிகட்குக்கீரைவகை-வி-ம்.)

காரையிரு கோவைமுன்னை செம்பைபடோல்.....................*
தூயிலிவழுக் கைநெருஞ்சில்..........................................*
ஆரைபுளி யா⁻முல்லே மருதநெய்தல்................................*
மேனிநல்வல் லாரைபொன்னு...........................................*
வாலாமுசுக் கைமுருங்கை யிருபிண்ணாக்...........................*
கோடுபண்ணை மணலி * பிள்ளைக்.....................................*
ஙிளா⁻முசுட்டை. புங்கார மணிமாடங்............................*
கடலைபுளிக் கிரிக்களாவே[* பிள்ளைக்கீரை-முளைக்கீரை.]

(இதுவும தூ-வெ-பா.)

வேளைமணத் தக்காளி மென் * சீதை சக்கரவர்த்தி...............*
பீளை வசலைசுக்கு * பெண்சுணங்கன் - வேளையிவைச்.......*
செந்தளிர்க ளைக்கீரை செய்வர்கப தேகர்நிதம்......................*
வந்தளியுணத்தான்மகிழ்ந்து [* பொன்னாங்காணி.* கற்றாழை]

( சிலேஷ்மதேகிகட்கு ரசவகை. )

கந்தஒ மஞ்செங் கடுகுசத குப்பைதரா.............................*
வெந்தியங் கொத்துமலி வேளைசுக்கு - * மூந்தகத்தி..........*
தாழுகுழிஞ் சாபாகல் தும்பையிச்சா கங்கள்வெந்த..........*
சாழுகப தேகர்க்காஞ் சாற்று...[* மூந்துஅகத்தி]..(தூஉஎஅ)

(சிலேஷ்மதேகிகட்கு வற்றல்வகை.)

சுண்டைமணத் தக்காளி தூதுணைப்பு ரண்டையா..............*
தொண்டைமுள்ளி பேய்ப்புடலை தொண்டைசிம்மை-கண்டை
கத்தரிநெல் லிப்பிஞ்சு காநரந்தம் பிஞ்சிவைகள்.........[புழு
ஒத்தவற்றல் ஐத்தேகர்க் குன்.............. .. ............(தூஉஎகு)

( சிலேஷ்மதேகிகட்கு ஊறுகாய்வகை. )

மஞ்சள் மிளகுசுண்டை வாழைத்தண் டோடுமாம்..........*
* பிஞ்சாலம் பிஞ்சத்திப் பிஞ்சுகளும் - விஞ்சுகபம்.... ...*
* நூறுநறுந் தூதுணமுந நொய்யபா கற்பிஞ்சும்..... ......*
ஊறுகா ○ யைத்தேகர்க் கோது.[ * பிஞ்சுஆலம் பிஞ்சு-அத்தி
ப்பிஞ்சு. * நூறல்-அழித்தல். ○ ஐத்தேகர்-சிலேஷ்மதேகர்.]

தே—( கால-தேக-திரவிய-அவிரோத பதார்த்தம். )

எல்லாக் கறிகளுமே * யெல்லுக்கா ? மல்லுக்கா..................*
மெல்லாக் கறிகளுமெல் லார்க்குமாம் - பொல்லாக்...........*
கறிகளுக்குச் சத்துருக லந்தமைத்து நன்றுங்..................*
கறிகளுக்குள்வைத்தருந்துங்கால்..[* எல்-பகல். ? அல்-இரா]()

தே—( இவ்விதநோய்க்குத் தாம்பூலங்கூடாதெனல். )

மதமூர்ச்சா ரோக மகாசந்நி பாத.....................................*
மதிருட்சை சுட்கநோ யாறு - முதிர்விடங்கள் ........... ...*
பித்தங் கயஞ்சிரநோய் பேசுமிவைக் காகாது.....................*
சுத்தந்தாம் பூலமெனச் சொல் .......................(தூஉஅஉ)

தே—( இவ்விதநோய்க்கு நெய்கூடாதெனல். )

தருணசுரஞ் சந்நி சலதோடந் தோட............................*
மரணம கோதரமா நாகம் - வருணவதி........... ... ........*
சாரங்க * வீனவுளா தாவரிக்குன் மங்களுக்கா..................*
தாரங்க வீனவுளா தள்...[* தொனியைக்கவ்வுகின்ற ஈனவுளா.]

தே—(இவ்விதநோய்க்குத்தயிர்கூடாதெனல்.)

குட்டமதைப் பக்கிநோய் குன்மங்கா மாலைமந்தந்..........*
துட்டவிடே சிக்களச்சுர் சோபைகபங் - கெட்டசுர............*

* மீர * மிவை மீநசம்பி லீகம்புண் ० பாண்டோடதி......*
சாரமிவைக் கில்லை ? ததி.[* ஈரம். * மிவை-நாசியின்மேல்வை
க்கும்-மீ-மி-யெனக்குறுகியிருக்கின்றது. ? ததி-தயிர்]

தே—( தற்காலபலாபலபதார்த்தம். )

திரிபதார்த் தம்பலமே செய்யு முடனே......................*
திரிபதார்த் தம்மபலஞ் செய்யுந் - தெரிமுறையே.........*
* சீதவம்பு ணர்ச்சியூன் றேனு சொரிநறும்பா...............*
லாதவம்பு ணர்ச்சிதை லம்[* குளிர்ந்தநீர்-ஞாபகத்தில்வருகின்
றமாமிசம்-பசு

தினக்கிரமாலங்காரம்.

( சொர்ன்னவீட்டின் குணம். )

மேனிதனிற் காந்திஎழில் வீறும்உத ராக்கினியும்............*
ஞானமுமே தோதாது நண்ணுங்காண் - மானே..........*
மிகைசேர் சகலகுண விர்த்திகளும் விர்த்தி....................*
தகைசேர்சொர்ன் னத்தின்*இல்லத் தால்...[* இல்லம்-வீடு].()

தே- ( கருங்கல்வீட்டின் குணம். )

அலங்கா ரமுமதமு மக்கினியு நீங்குந்...............................*
துலங்கா தவமுந் துலங்கா - இலங்க.................................*
வருங்கலகப் பித்து மனத்துயரா நோயுங்...........................*
கருங்கலகப் பித்தர்க்குக் காண்........................................*

(இ-ள்) கருங்கல்வீட்டில் வாசமாயிருக்கும்வெறியர்களுக்கு-உலகில் விளங்குகின்ற சூரியகிரணமும் சந்திர கிரணமுமில்லை-அதனால் அழகும்-வீரியமும்-உதராக்கினியும்- நீங்கிவிடும்-கலகஞ்செய்கின்ற பித்தமும் மனத்துன்பமும்- சிலேஷ்மரோகமுமிகுதியாக உண்டாகும்-எ-று. (சூஉஅஎ)

தே-( மேல்வீடு-ஓட்டுவீடு-புல்வீடு-இவைகளின்குணம். )

நீட்டையுறு மேல்வீடு நீணிலவெப் போடுபல.....................*
வேட்டை யொழிக்குங்காண் மிக்கெழிலா - லோட்டையுறு...*
கல்வீ டுயர்வெனினுங் * கா * விமஞ்சா ராநலத்தாற்.........*
புல்வீ டுயர்வாம் புகல்[*கால்-காற்று.* இமம்-பனி](சூஉஅஅ)

தே- ( காலைவிழிப்பின்குணம். )

புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்குஞ்.......................*
* சுத்த நரம்பினற றாய்மையுறும் - பித்தொழியுந்.............*
தாலவழி வாதபித்தந் தத்தநிலை மன்னுமதி .....[இருக்கும்-நீர்.
காலவிழிப் பின்குணத்தைக் காண்...[* நரம்பின்துவாரத்தில்

தே-( விழித்தவுடன்-சுத்தோதகம்-அருந்தலின்குணம்.)

தூங்கி விழித்தவுடன் * சுத்தோதக மருந்தி........................*
லோங்கிநின்ற பித்த மொழிவதன்றித் - தேங்கு.......................*
மலமூத் திரந்தங்கா வாதாதி யுந்தந்.................................*
தலமாத் திரமுலவுந் தான்...[ * சுத்தோதகம்-வெறுஞ்சலம்]()

தே-( விழித்தவுடன்பார்க்கத்தக்கவஸ்துக்கள். )

* கஞ்சந்தங் கந்தியங் கண்ணாடி * யெல் * லங்கி..........*
செஞ்சந்த * நீர் * மண் சிவலிங்க - மஞ்சங் * கல்...........*
* கற்று தமதுவலக் கை * மனை * த டாரியிவை..................*
யுற்றால் விழிப்பிலுத்த மம்..[* தாமரைப்பூ-சூரியன்-அக்கினி-கடல்-வயல்- மலை-கன்றையுடையபசு-தன்மனைவி-மிருதங்கம்.]

தே-( விழித்தவுடன்பார்க்கத்தகாதவஸ்துக்கள்-வி-ம். )

ஊனமவத் திரம்பவங்கல் லாடைசங்கை..........................*
பூமைதட்டை செவிடிரங்கல் சடைநிராசை.........................*
கூனழுக்கு மேனிவிரி மூர்த்தந்தூக்கங் ..........................*
குட்டமற நெய்த்தலையா குலமுன்மாதந்..........................*
தீனமறற் கயமிவையுள் ளார்முகத்துந்...............................*
தீட்டழுகை விதவைவஞ் சியர்முகத்துங்.............................*
கானவர விந்திபலி மூரிமாறு .........................................*
கயிறுலக்கை முறத்திடத்தும் விழித்தநீதே..........................*

(இ-ள்) நித்திரை செய்து எழுந்தவுடன்- அங்கஈனம்- வஸ்திரஈனம்- பாவம் - காவிவஸ்திரம் - கிரகசங்கை-ஊமை - மொட்டைத்தலை- செவிடு - அழுகை - சடை - மனிதரிடத்தில் விருப்பமில்லாமை- கூன்-அழுக்குமேனி- விரிந்தமயிர்த்தலை- சதாநித்திரை-குஷ்டம்-கொலை- எண்ணெய்த்தலை - மயிர்வியாகுலம்-உன்மாதம்-தரித்திரம்- க்ஷயரோகம்- இதுகளையுடையவர்முகத்தையும்) தீட்டு-அழுகை-விதவை-ஆகிய மாதர்முகத்தையும்) பாம்பு-பூனை-சாம்பல்-எருமை- விளக்குமாறு-சயிறு-உலக்கை-முறம்-என்னும் இவைகளையும் ) பார்த்தால் அன்றைக்குக் கெடுதியுண்டாகும்—எ-று. (௬௨௯௨)

( விழித்தவுடன் கண்ணாடிபார்த்தலின்குணம்.)

தாதுங் களிப்புஞ் சகலவ சீகரமும்..........................................*
போத அறிவும்உண்டாம் பூதலத்துள் - நாதமுறும்.................*

பண்ணுடிப் பார்க்கும் பனிமொழியே நீவிழிப்பிற்........*
கண்ணுடி பார்த்திதனைக் காண்...........................(௲௨௱௩௰

{காலையில்-சிலம்பம்-மல்லயுத்தம்செய்தல்-குதிரையே
ற்றம்- பாதநடை - இவைகளால் உண்டாகும்குணம்.}

சிலம்பமுதல் மல்லயுத்தந் * தேசிநடை கொள்ளிற்.... .....*
பலம்பரவு மெய்யிறுகும் பன்னத் - துலங்குபசி...... .....*
யுண்டாங் கபவாத மோடுவலி சூலையும்போம் ..............*
பண்டா மலம்இறங்கும் பார் ..[* ம்தேசி-பெருங்குதிரை]...()

தே—( மிதாமிதவார்த்தையின்குணம். )

மிதவார்த்தைக் குள்ளறிவு மெய்ச்சுக்முங் குன்று..............*
ததிவார்த்தைக் கவ்வுரைகெட் டப்போ - டுதிரமிவை.........*
கண்டும்பொங் கும்பித்தஞ் சூழுதலா லையவினை..............*
பண்டும்பொங் கும்புனலே யாய்.......................... *

(இ-ள்.) மிதமான வார்த்தை வசனித்தால் உள்அறிவும் சரீரசு வுக்கியமும் உண்டாகும் - அதிகமாக வசனித்தால் - மேல் நாம் சொன்ன அறிவும் சவுக்கியமுங்கெடும்- இதுவு மல்லாமல் -ரச தாதுவும் ரத்ததாதுவுஞ்சுண்டும் - அவ்விரண்டு தாதுக்களுங் கு றைவதினுல் பித்தம் அதிகரிக்கும் - அதனுல் சிலேஷ்மரோகம் பிறக்கும் அதனுல் சலரோகம் உண்டாகும்-எ-று. (௲௨௱௩௰௫)

( வெயிலால் உண்டாகுங்குணம். )

வாதமொடு காந்திகெடு மாதுயரம் வோர்வைபலம்.............*
ஓதுபசி பித்தம்இவை யுண்டாங்காண் - தேக் ..............*
குயிலி னிசைபழிக்குங் கோதின்மொழி மாதே..............*
வெயிலின் உறுகுணத்தை விள்..........................(௲௨௱௩௰௬)

தே—( காலை-மாலை-வெயிலால்உண்டாகுங்குணம். )

காலைவெயிற் காய்ந்தார்க்குக் காணுப் பிணியனைத்தும்.........*
பாலைவெயிற் போலப் பரவுங்காண் - மாலைவெயிற்...........*
காய்ந்தார்க் குறுபிணிமுற் காசறுமி லக்கண நூ..............*
லாய்ந்தார்க் குறுவமுச்சொ லாம் ............................*

(இ-ள்) உதயகால வெய்யிலில் காய்ந்தவர்களுக்குமுன்பு இல் லாத வியாதிக ளெல்லாம்-பாலைநிலத்து வெய்யிலைப்போலமிகு ந்தகொடுமையுள்ளதாகப்பரவும்- மாலைக்காலவெய்யிலில் காய்ந் தவர்களுக்குப் பொருந்திய வியாதிகள் பழமையாகிய குற்றம ற்ற இலக்கண நூல்களை ஆராய்ச்சி செய்து உணர்ந்த வித்துவா

ன்களுக்குக் காணப்படுகிற வழூவுள்ளசொற்கள் நீங்கல்போலநீங்கிவிடும்-எ-று---குறிஞ்சி- முல்லை- பாலை-மருதம்- நெய்தல்-என ஐந்துவகை நிலங்கள்-அவைகள் -மலைசார்ந்தபூமி-காடுசார்ந்தபூமி-பரல்மேடுசார்ந்தபூமி- வயல்கள்சார்ந்தபூமி-கடல்சார்ந்தபூமி என்பவைகளாம். (௲௯௰௭)

(நிழலால் உண்டாகுங்குணம்.)

மேனி தடிக்கும் விவர்ன்னஅழ குண்டாகும்..................*
போனவலி வாதமந்தம் பூரிக்குந் - தானே..................*
வளர்ந்தேறுஞ் சோம்பல் மதிவதன மாதே..................*
குளிர்ந்த நிழலின் குணம்..........................(௲௯௰௮)

(மழைமந்தாரத்தின்குணம்.)

நித்திரை காந்தி நெடியப்சி தாகம்போம்..................*
ஒத்த மகிழ்ச்சிகுளிர் ஊதையொடு - மெத்த..................*
அழைவந்தி டச்செய்யினைப் பாதியநோ யுண்டாம்.......... *
மழைமந்தா ரத்தால் வழுத்து.......................(௲௯௰௯)

(தீக்காய்தலின் குணம்.)

தீக்காயில் வாதமொடு சீத நிவாரணமாம்..................*
ஊக்கமிகு தாகம்அதி புட்டினமும் - நீக்கா..................*
இரத்தபித்த நோயும் இரத்தக் கொதிப்பும்..................*
ஊரத்தெழும்பு மென்றே யுரை.........................(௲௱)

{தே-வேள்விப்புகை-சுடுகாட்டுப்புகை-தை
லப்புகை - இவைகளாலுண்டாகுங்குணம்.}

மகத்தூம மியாயுள் வளர்க்குஞ் சவஞ்சா..................*
ரகத்தூம மத்தை யழிக்கு - மகத்தா..................*
மருந்தயிலத் தூம மடர்வாத வன்னோய்..................*
விருந்தயிலும் மென்றே விதி..................*

(இ-ள்) வேள்விப்புகையானது தீர்க்காயுசுகொடுக்கும்)-சுடுகாட்டுப்புகையானது-உள்ள ஆயுசுவையும்கெடுக்கும்)- மகாதயிலப்புகையானது-வாதரோகத்தைவிருந்தாகஉண்டுவிடும்)-எ-று

தே- (மலசலம்விடுத்தலின் குணம்.)

இருமலங்க டங்கா விறங்குங்கான் மூன்று..................*
* மிருமலங் கடங்கணிலை யெய்து - மிருமச்..................*
சமனுக் கினிசாருஞ் சாராநோ யீட்டஞ்..................[மங்கள்
சமனுக் கினைசாரா தாம்[ * பெருமையுள்ளவாதபித்தசிலேஷ்

தே- ( பல்விளக்கலின் குணம். )

தூளிலை காட்டமிவை தொட்டுத் துலக்கிற்...................*
றுளிலை காட்டாது தோடந் - தூளிலைகண்..... ..........*
மெய்த்துவரை யொத்திருக்கின் மேனாள் வரைமூரன்.........*
மெய்த்துவரை யொத்திருக்கு மே..............................*

(இ-ள்) தூள்-இலை-கொம்பு-இவைகளால்பல்விளக்கினால்-பல்லுகளுக்குக்குற்றமில்லை- வாதபித்த சிலேஷ்மங்களால்- பல்லினிடத்தும்-அதன் வேரினிடத்தும்-உண்டாகின்ற-இருபத்துமூன்றுரோகங்களும்உண்டாகாது-மேற்சொல்லிய-தூளும்- இலையும் கொம்பும்-இயல்பான துவர்உள்ளதுகளாயிருக்கவேண்டும்-அப்படியிருந்தால்- இறுதிநாள்வரைக்கும்- பல்லுகள் - மலையைப் போல்அசைவில்லாமல் உறுதியாயிருக்கும்-எ-று. (கூகாக)

( பல்விளக்கத்தக்கமொம்புகள். )

வேலுக்குப் பல்இறுகும் வேம்புக்குப் பல்துலங்கும்.........*
பூலுக்குப் போகம் பொழியுங்காண் - ஆலுக்குத்............*
தண்டா மனையாளுஞ் சாருவளே நாயுருவி....................*
கண்டால் வசீகரமாங் காண்..............................(கூகாச)

( பல்விளக்கத்தகாதவஸ்துக்கள். )

கல்லு மணலுங் கரியுடனே பாளைகளும்.......................*
வல்லதொரு வைக்கோலும் வைத்துநிதம் - பல்லதனைத்......*
தேய்த்திடுவா ராமாகில் சேராளே சீதேவி......................*
வாய்த்திடுவள் மூதேவி வந்து ................................(கூகாரு)

( சுத்தஸ்நானத்தின்குணம். )

சுத்தப் புனலாடத் தொல்நமைச்சல் ஆயாசந்.................*
தொத்தெரிச்சற் பாரிப்புந் தோன்றுவா - மெத்தனவுங்......*
காந்தி பலம்பசியுங் கட்டழகும் உண்டாகும்....................*
ஏந்துமுலை மாதே யியம்பு..........................................(கூகாசு)

தே - ( காலை-மாலைக் குளியலின்குணம். )

காலைக் குளிக்குக் கடும்பசியுண் டாநோய்போ................*
மாலைக் குளிக்கவைகண் மத்திபமே - சோலையடை..........*
வாசநீர் சுத்தசலம் வன்னிநீ ராங்கால.........................*
தேசமுடற் பேதமுன்னிச் செப்பு.....................................(கூகாஎ)

( மஞ்சள்குளியலின் குணம். )

மஞ்சட் குளிதனக்கு மாறுத்துர்க் கந்தமொடு...............*
விஞ்சுமுக சாட்டியமும் விட்டகலுந் - தொஞ்சல்உறும்......*

ஐயம் ஒழியும் அடர்வியர்வுங் காணுது............*
வையமதனில் வழுத்து.......................(௲௱அ)

அப்பியங்கஸ்நானவிதி.

தே—(பஞ்சகற்பத்தின்குணம்.)

மிருகமதம் பித்தமணி வேப்புகடு நெல்லி..............*
கருகுநறும் பாலனைத்துக் காய்ச்சி - யொருகமிட..........*
விங்கற்ப நோய்க்கு மிடமில்லை யென்ஞான்றும்..........*
மைங்கற்ப மீதே யறி.....................*

(இ-ள்) கஸ்தூரிமஞ்சள்- மிளகு-வேப்பம்வித்து- கடுக்காய்த்தோல்-நெல்லிப்பருப்பு- இவைகளைக்கிரமப்பிரகாரம்- காராம்பசுவின்பால்விட்டு அரைத்துக்கொதிக்கவைத்து ஒப்பற்றசிரசில்தேய்த்துக் கொண்டால் எந்நாளும் அதிதூல ரோகத்துக்கும் அதிசூட்சரோகத்துக்கும் இடமில்லை - இதுவே பஞ்சகற்ப விதியென்று அறியக்கடவை—எ-று. (௲௱க)

(அப்பியங்கனத்தின்குணம்.)

தலைமுழுக்காற் சென்னிமுழந் தாள்இவைக்கு நீங்காப்.......*
பலமுண்டாங் கேசம் படரும் - தலைநோய்போம்..........*
* பஞ்சேந் திரியம் பலத்துத் தெளிவையுறும்..........*
* எஞ்சாத் தொனியுமெழும் எண்.........[* பஞ்சஇந்திரியம் என்பது-மெய்-வாய்-கண்-மூக்கு-செவி-* எஞ்சா-இளைக்கா.]

(நித்தியஅப்பியங்கனத்தின்குணம்.)

தினம்அப்பி யங்கனமே செய்யிற் சருமம்...............*
மினுமினுக்குஞ் சோம்பல் விலகுந் - தனியான............*
ஐயமுத் தோஷம் அருசிதந்த நோயொழியும்.............*
மெய்யுமிகப் புஷ்டியிடு மே...... (இதுசிலதேசத்துவிதி)...()

தே—(பசுவினதுநெய்முழுக்கின்குணம்.)

மைந்தர்முதன் முப்பருவ மாந்தர்க்கு மாமுடலின்......*
முந்தெரிச்ச லுன்மாத மூர்ச்சைகப - முந்திரத்த.........*
பித்த * மமா தாகமொடு பேசுவிகா ரங்களுக்கு.........*
முத்தமமா மானெய்முழுக் குன்[*அமாதாகம்-மிகுந்ததாகம்]

தே—(தைலாதிகளின்குணம்.)

எள்ளினெய்பு மூக்கூட் டெனுநெய்பு மானெய்யும்..........*
விள்ளுதயி லாதியென வீறுநெய்யு - முள்ளபடி..........*

வாரந் தனக்கிருநாள் வைத்தாடி ளேய்களதி..................*
காரந் தனக்கிடமிற் காண்.........................(௲௱௭௫)

தே—(தைலம்தேய்க்கும்விதி-வி-ம்.)

எடுத்தநற் றயிலநாசிக் கிரிரண் டாறுகாதுக்.................*
கடுத்திடத் துளிவிட்டுச்சி யங்கந்தா ளடிகளிற்கு...............*
டெடுத்திடாத்தேய்ந்தூறச்செய் திப்புறஞ் சிகைக்காய்வெந்நீர்
விடுத்துட னுடிநீரும் வியர்ப்புமற் றிடப்புலர்த்தே(௲௱௭௪)

தே—(பாதாதிகளில்-தைலமிடலின்குணம்-வெ-பா.)

பாதத் திடிற்கண்ணோய் பாறுமக் கட்கிடினோ...............*
காதுற் றெழுநோய்போங் காதுளிடி - னோதுந்..............*
தலைநோ யகலுந் தலைக்கிடினோ யெல்லா...................*
நிலையா வறலாடி னெய்..............................(௲௱௭௫)

(அனைப்புவகை.)

சிக்கிராந் தூள்விரண தேகர்க் கனைப்பாகும்.................*
ஆக்கிலுப்பைக் கட்டிசொறி யாளர்க்காந் - தாக்குமணிப்...*
புங்கனைப்புஞ் சீய்க்காயும் போக்கடிக்கும் எண்ணெய்களைக்.*
கங்குலுறை கூந்தன்மின்னே காண்....................(௲௱௭௬)

தே—(இதுவுமது.)

பருப்பனைப்புக் கோடிடுநெய் பன்னுமெண்ணெய் யாதிக்..*
கனைப்புச் சிகைக்காயு மாகுந் - தெருப்பன்றி..............*
நெய்யாதி யாநெய்க்கு நீள்காரைப் பூண்டாதி...............*
மெய்யா ரனைப்பாகும் விள்.........................(௲௱௭௭)

தே—(ஸ்நானகால விதி-கலித்துறை.)

அயமா னிவைக்கைம் பதத்துளி யாழ்குளிர்க் கட்டமத்துள்...*
வயமா கனிக்குங்கோல் தேட்குநந் நான்குவின் மானிரண்டே.
பயமார் கடமர்ச்சத் திற்குந் திரிக்குட் பகர்திங்களி..........*
னயமாந் தயிலங்க ளாடவ ரோகமெய் நண்ணுவரோ..........*

(இ-ள்.) ஸ்நாநகாலவிதி-சித்திரை- வைகாசி மாதங்களில்-உதயமான ஐந்துநாழிகைக்குள்ளும்)-ஆனி- ஆடி-மாதங்களில்-எட்டுநாழிகைக்குள்ளும்)-ஆவணி-புரட்டாசி- ஐப்பசி- கார்த்திகை-மாதங்களில்-நாலுநாழிகைக்குள்ளும்)-மார்கழி-தை -மாதங்களில்-இரண்டுநாழிகைக்குள்ளும்)மாசி-பங்குனி-மாதங்களில்-மூன்றுநாழிகைக்குள்ளும்) பக்குவபாகமுள்ள தைல ஸ்நானஞ்செய்தால் அரோகசரீரத்தைப் பொருந்துவார்கள்-எ-று.(௲௱௭௮)

( க்ஷவரத்தின்குணம்-வெ-பா. )

தூக்கம் விரணந் தொடைவலி * சூலங்காசந்............*
நற்கால சாந்தஞ் சுவரத்தால் - மிக்குடற்குக்............*
காந்திமனப் பூரிப்பு கண்ஒளிவு காமம்உண்டாஞ்............*
சேர்ந்ததிங்கட் கொன்றிரண்டாந் தேர்...[* சூலம்-சூலை.]...()

வஸ்திரவகை.

( சாலுவையின்குணம். )

சலதோஷம் போகுந் தலைவலியும் ஏகும்............*
உலவிவரு நோய்வாதம் ஓடும் - வலிய............*
வயிற்றுவலி போங்குளிரா மாறும் பனியைச்............*
சயித்ததொரு சாலுவைக்குத் தான்............(௲௱௨௰)

( பட்டுவஸ்திரத்தின்குணம். )

பித்த கபம்அகலும் பேரா மகிழ்ச்சியொடு............*
புத்தி மிகும்வியர்வை பூணுங்காண் - நித்தியமுங்............*
காந்தியது உண்டாங் கனஞ்சேர்பட் டுத்துகிலுக். ............*
கேந்துமுலை மாதே யியம்பு ............(௲௱௨௧)

( வெண்பட்டு வஸ்திரத்தின்குணம். )

வெண்பட் டுடையால் விரிசுரமுஞ் சீதமும்போம்............*
பண்பட்ட வாதம் பறக்குங்காண் - பெண்கிட்டுங்............*
காந்தியும்உண் டாகுங் கதித்த அழகும்உண்டாங்............*
காந்தி மதிமுகத்தாய் காண்............(௲௱௨௨)

( நாருமடியின்குணம். )

சளியோடு நீர்ஏற்றந் தங்கா தகலும்............*
* வளியோடு சந்தியும்பின் வாங்கும் - அளியினங்கள்............*
சேருமடிக் கூந்தன்மின்னே தேகமிகச் சுத்தியதாம்............*
நாருமடிக் கென்றே நவில்.........[* வளி-வாயு]....(௲௱௨௩)

( வெள்ளைவஸ்திரத்தின்குணம். )

ஓடுந் திரிதோஷம் ஓங்காயுசும் பெருகுங்............*
கூடுந் திருஅழகுங் கூர்களிப்பும் - நீடுமதி............*
போதம்உறும் வெற்றிவரும் பூரிக்கு மெய்வியர்வின்............*
ஏதம்அறும் வெள்ளைத் துகிலுக் கே............(௲௱௨௪)

( சிவப்புவஸ்திரத்தின்குணம். )

ஏந்துபித்தம் உஷ்ணம் எதிர்ந்த தருணசுரம்............*
வாந்தி யருசிகப மந்தமிவை - சேர்ந்திடுங்கால்............*

செய்ய கடுஞ்சிவப்புச் சீலையுடுத் தால்அவைகள்..............*
பைய அதிகரிக்கும் பார்...........................(௲௱௨௫)

( மஞ்சள்வஸ்திரத்தின்குணம். )

நீர்க்கடுப்பு காசமொடு நீடு விஷசுரமுந்...................*
தீர்க்கநமைச் சல்வெப்புஞ் சேர்மலமும் - பார்க்குண்மிக...*
அஞ்சியே யேகுமஞ்ச ளாம்வத்தி ரம்புனைந்தால்............*
வஞ்சியே நன்றாய் வழுத்து........................(௲௱௨௬)

( பச்சைவஸ்திரத்தின்குணம். )

மெய்யழலை யேகும் விழிக்குக் குளிர்ச்சியுண்டாம்..............*
பொய்யில் உடலமெலாம் பூரிக்கும் - ஐயம்அறும்..........*
நச்சை நிகரு நளினவிழிப் பெண்ணமிர்தே..................*
பச்சை * யுடை யின்குணத்தைப் பார். [ * உடை-வஸ்திரம்.]

( கறுப்புவஸ்திரத்தின்குணம். )

காசமொடு வெப்புங் கறுத்த கொடுவிஷமும்..................*
பேசுமந் தாக்கினியும் பித்தமும்போம் - நேச ..............*
வெறுப்புறு மின்பநய மெல்லியலே நீலக்......................*
கறுப்புநிற மாந்* துகிற்குக் காண்[* துகில்-வஸ்திரம் ௲௱௨௮)

தே-( அழுக்குவஸ்திரத்தின்குணம். )

நோயடருங் காந்திகெடும் நுண்ணறிவும் போயொளிக்குந்...*
தீயகுளிர் துக்கந் தினவுசங்கை - வாய்பேசக்...................*
கூசுதலு முண்டாகுங் கோதாரு மாசுடைக்குப்..............*
பேசுதலு மியாதிதற்குப் பின்பு..........................(௲௱௨௯)

( கம்பளத்தின்குணம். )

பெரும்பா டசீரணங்கள் பேராக் கிராணி........................*
அருஞ்சூலை பேதி யகற்றுங் - கருஞ்சீலைப்...................*
போக்குங் குளிர்வாடை பொல்லாப் பனிநீக்கிக்..............*
காக்கும் பருங்கம் பளம்...................................(௲௱௩௰)

( முண்டாசு-கவசம்-நடுக்கட்டு- இவைகளின்குணம். )

முண்டாசு வாதபித்த முன்பொழிக்கு மெய்க்கவசம்.........*
உண்டாயிற் காந்திபுஷ்டி யுண்டாகுந் - திண்டாடு... ........*
பித்தமறுந் * தீயாம் பிணைத்தநடுக் கட்டுக்குக்...............*
கொற்றமுறு வீரியமாங் கூறு..[* தீ-உதராக்கினிஉண்டாம்].()

தே—( ஆபரணத்தின்குணம். )

ஆபரணஞ் சூடி லரியலீ லாலயமா..................*
மாபரண மெய்க்குமதி மங்கலங்காண் - சோபமனத்..........*
துக்கத் தொடுநோய்போஞ் சொல்லா வசியமுறும்..........*
மிக்குக் களிப்படரு மெய்..................(துஙகூஉ)

புசிப்புவகை.

தே- ( பசியின்குணம். )

பசியா லழகாண்மை பாழியின்பு மோகஞ்..................*
சுசியாவி வார்த்தையிவை சோரும் - * பிசியாலாந்...........*
தாதினத்தின் சீரணமுந் தள்ளு கிழத்தனமு..................*
மோதினத்தின் பேதமுமா மோர்......[*பிசி-அன்னரசத்திற்
லுண்டாகும் சத்ததாதுக்களும் சீரணகதியையடையும்.]

தே—(போசனகால விதி. )

தன்மமி ரண்டேயூண் டப்பிமுக்காற் கொள்ளினினன்.........*
சின்மதலை காலைகடல் சேர்பருவ - நன்முகுர்த்த.............*
மொன்றுக்கு ணன்குக்கு ளோதுமிரண் டிக்குளுண்பர் .....*
நன்றுக்குத் தீயோர் நயந்து ..................*

(இ-ள்.) இரண்டுகாலபோசனமே நன்மை-தப்பி மூன்றுகாலபோசனங் கொள்ள வேண்டுமானால்-சூரியன் இளம் பருவமாயிருக்கும் உதயகாலத்தில் மூன்றேமுக்கால்நாழிகைக்குள்ளும்) காளைப்பருவமாகிய உச்சிக்காலத்தில்பதினைந்துநாழிகைக்குள்ளும்)-மேற்றிசைக் கடலிற்சேர்ந்த பருவமாகிய இராத்திரி ஏழைநாழிகைக்குள்ளும்)-பசியாகிய தீயையுடையவர்கள் கொள்வார்கள்-எ-று. முகூர்த்தமாவது-மூன்றேமுக்கால்நாழிகை. ()

தே— (காலாகாலபோசனகுணம்.)

மூன்றுநான் காறெண்மு கூர்த்தங்க ளின்முறையே..........*
ஞான்றுளுண் ணு மந்த நறுமுணவே -தோன்றுடலுக்......*
கொக்குமித நோயரமு ரோகமுயிர்க் கந்தாஞ்செய்..........*
விக்குமித மாராய்ந்து விள் ..................(துஙகூரு)

தே—( போசனஞ்செய்விதி. )

ஆதி யினிப்புநடு வாம்பிர நீ ருப்பொடுசா..................*
காதி யுறைப்புப்பா லந்தத்திற் - கோதிறுவர்ப்..............*
பாந்தறியுப் பூறியகா யாதிவகை சேருணவை..................*
மாந்தறிசு கத்தைபுறு வாட் ..................*

(இ-ள்) முதலில்- மதுரம்) மத்தியில்-புளிப்பு-நீருப்பு- இவை முதலானதுகள்-காரம்) முடிவில்- துவர்ப்பு-தயிர்-ஊறுகாய்) இந்தக்கிரமமாக ஆகாரங்கொண்டால்சுகத்தையடைவை-எ-று.

தே-( போசன அளவைகூறல்-க-கலித்துறை. )

முக்கா லுணவன்றி யெத்தேகி கட்கு முழுவுணவி.............*
லக்கா ரணமன்ன சாகாதி கூடி யரையதிற்பால்...............*
லிக்கா லமுதம்பு தக்கிரங் காலுண்டிச் சேடம்வெளி ..........*
வைக்கா விடிலுண்டி வேகா தனலும் வளியுமின்றே..........*

(இ-ள்) எவ்விததேகிகளுக்கும் முக்கால் வயிற்றுஉணவேயன்றி முழு உண்வுஇல்லை- அதற்கென்னகாரணமென்றால்-அன்னம் பதார்த்தங்கள்கூடி அரைவயிற்றுஉணவு-பால்-மோர்-சலம்கூடி கால்வயிற்றுஉணவு- இவைபோக-இன்னும் கால்வயிற்று உணவு கொள்ளத்தக்கஇடத்தை வெளியாகவைக்கவேண்டுவது- வைக்காவிட்டால் அன்னம் சீரணமாகாது அதைச்சீரணிக்கத்தக்க அக்கினியும் வாயுவும் சஞ்சரிப்பதற்கு இடமில்லை-எ-று. (௲௩௱௭)

தே—( புசித்தபுசிப்பின் பிரிவுகூறல்-வெ-பா.)

பிலத்தமரு முண்டிப் பிரிவை யுரைக்கிற்....................*
பலத்த கிருமிகட்கோர் பங்கு - மலத்திற்கோர்...............*
பங்குமாய் வில்லனற்கோர் பங்கு முடலினுக்கோர்.............*
பங்குமாய்த் தங்குமுன்னிப் பார். ......................(௲௩௱௮)

தே-( புசித்தஅன்னசாரச்செய்கைகூறல்-வி-ம். )

ஒருநாளுண் ணனவிரத மிரததா துவைநனைத்தங் கூறிநிற்கு*
மிருநாளுண் டிடினஃதங் கிரத்ததா துவிலேறு மிவ்வாறேபின்
வருநாளுண் டெழுநாளுமாயினஃதெழுதா துவையும்வளர்த்தே
தருநாளுஞ் சோராத வலியதனை யெட்டாநாட் சடத்தினுக்கே.

---

உண்கலவகை.

( தங்கக்கலத்தின்குணம். )

தங்கக் கலத்திலுண்ணத் தாதுவிர்த்தி யும்பசியும்..............*
பொங்க மிகுதிடமும் பூரிப்பும் - அங்குறையும்...............*
பித்தசோ பப்பிணியிப் பேருலகை விட்டகலுஞ்..............*
சுத்தரசத் தீங்கனிமே சொல்...............................(௲௩௱௯)

( வெள்ளிக்கலத்தின்குணம். )

வெள்ளிக் கலத்திலுண்ண வீறி வருகபமுந்........................*
துள்ளியெழு பித்தமும்போஞ் சொல்லவோ - விள்ளரிய...*

காந்தியுண்டா நாளுங் களிப்புண்டாந் தேகத்திற்..............*
சேர்ந்திவரும் வாதமுண்டாஞ் செப்பு..................(௲௩௪௧)

( செம்புக்கலத்தின்குணம். )

செம்புக் கலத்துண்ணத் தேகஆ ரோக்கியமாம்..............*
பம்பிரத்த தோஷம் பறக்குங்காண் - அம்புவியில்...........*
அண்ணியிடுங் காந்தி யணங்கே விழியொளியாம்.............*
புண்ணியமு நண்ணும் புகல்.........................(௲௩௪௨)

( வெண்கலக்கலத்தின்குணம். )

தாம்பிரத்தில் வெள்ளீயந் தான்கலக்க வெண்கலமென் ........*
ஞம்பெயர்பெ றுங்கலத்துள் அன்னம்உண்ணில்- தேம்புகின்ற
சோபமொடி ரத்தபித்தந் தோன்றஅறி யாதனங்கள்.........*
சாபமெனச் சொன்னுதலே சாற்று....................(௲௩௪௩)

{ தாம்பிரம் - வெள்ளி - கலப்பு - வெண்கலம் }
{ இவைகளாற்செய்த-உண்கலத்தின்குணம்-வி-ம் }

தக்கதாம் பிரத்தின்வட்டிற் றன்அதி ரத்தபித்தம்............*
மெய்க்குறு தகற்றும்வெள்ளி விலக்கிடும் ஐயந்தன்னை.......*
யொக்கவே கலப்புவட்டில் உறுதிரி தோஷம்போக்குங்.....*
கக்கிய உதிரமேறுங் கனத்தவெண் கலத்திற் கென்னே(௲௩௪௪)

தே-( உண்கலத்தில்-இவைகள்முக்கியமெனல்-வெ-பா. )

வாழைவெள்ளைப் பன்னநன்று மற்றிலைகள் மத்திபமா.....*
மாழைவெள்ளி வெண்கலமு மாநன்றாங் - கோழை.........*
கயப்பாண்ட நோய்போங் கருதினிவைக் கெல்லாங்...........*
குயப்பாண்ட மேலசனங் கொள்.......................(௲௩௪௫)

தே-( வாழையிலையின்குணம். )

தொக்கினுறு மின்னுஞ் சுகபோ கமுமன்னு.................*
மக்கினி மந்த மபலமொடு - திக்கிடுகால் ...................*
பாழை யிலைப்புமறும் பன்னுபித்த முஞ்சமனும்............*
வாழை யிலைக்குணரு வாய்.............................(௲௩௪௬)

தே - ( பலா இலையின்குணம். )

பலாவிலையி லுண்ணப் பதுங்கிநின்ற பித்தங்................*
குலாவி யெழும்பிக் குதிக்கு - முலாவிவரு..................*
குன்ம மகோதரநோய் காணு தகலாத.........................*
குன்ம மகலுங் குறி......................................(௲௩௪௭)

தே-(பாலுள்ளமரத்திலைகளின்குணம்.)

பாலிருக் கின்றமரப் பன்னங் களிலுண்டால்……………*
கோலிருக்கச் செய்வாதங் கோழைகபங் - கால……………*
வசுர்க்குபித்தந் தாகமிவை யண்டா தகலு……………*
முசுக்குமதி சீதளமா மோது……………(௩௱௪௮)

(தாமரையிலையின்குணம்.)

தாமரைப்பன் னத்திலுண்டால் தாங்கரிய உட்டிணமாம்……*
நாமவா தஞ்சினந்து நண்ணுங்காண் - தாமமுறு……………*
அக்கினிமந் தங்களுண்டாம் அன்றே மலர்த்திருவத்……………*
திக்கினிலி ராளெனவே தேர்……………(௩௱௪௯)

(கரபாத்திரத்தின்குணம்.)

கைப்பாத் திரத்திற் கலந்தன்னங் கொள்ளுங்கால்……………*
வைப்பா மனச்சேட்டை மாறுங்காண் - இப்பாற்……………*
சருவகி லேசமும்போஞ் சாற்றவென்று மின்னும்……………*
பெருவருசி நோயும்போம் பேசு……………(௩௱௫௰)

சோற்றின்வகை.

(அதிசுடுகையன்னத்தின்குணம்.)

அதிசுடுகை யன்னம் அரத்தபித்தம் தாகம்……………*
பிதிரோறு சித்தப் பிரமை - மதரோகம்……………*
என்றுரைக்கு நோய்கட் கிடங்கொடுக்குந் தப்பாது……………*
குன்றுரைக்கும் பூண்முலையே கூறு……………(௩௱௫௧)

(அற்பச்சுடுகையன்னத்தின்குணம்.)

அற்பச்சூட் டன்னம்வா தாதிகளாற் பீநசத்தால்……………*
உற்பவித்த நோயை யொழித்துடற்கு - நற்பலத்தைச்……*
செய்யும் அருசிதனைத் தீர்க்குஞ்சர் வோத்தமமாம்……*
பெய்யும்வளைக் கையாதே பேசு……………(௩௱௫௨)

(புழுங்கலரிசியன்னத்தின்குணம்.)

தென்புவியி லுளுஞ்செ ழித்துவள ருஞ்சாலி……………*
வன்பு புழுங்கல் வடிசாதம் - முன்புணவே……………*
வாயுவிலை யத்தால் * வலியும்வன் னேயுமிலை……………*
நோயுடையார்க் காகு நவல்……[* வலி-பலம்]…(௩௱௫௩)

(பச்சையரிசி யன்னத்தின்குணம்.)

பச்சரிசிச் சோறு பலங்கொடுக்கும் வாயுவென்பார்……*
நிச்சயமா கப்பித்தை நீக்குங்காண் - அச்சமற……………*

மூத்திரக்கிரிச்சரத்தை மூன்பொழிக்குஞ் சேய்க்குமந்த.....*
மாத்திரமுண் டாக்கும் வழுத்து..............................(கூருச)

( நன்ருகச்சமையாத அன்னத்தின்குணம். )

நன்ருச் சமையா நடுத்தண்டு லச்சோறு...........................*
தின்றல் மலசலமுஞ் சிக்குமென்ப - தொன்ருேகேள்......*
மற்றையநா ளுஞ்செரிக்க மாட்டா ததுவுடலிற்.................*
சற்றும்வியா பிக்காது சாற்று .................................(கூருரு)

( குழைந்தஅன்னத்தின்குணம். )

குழைந்தசோ றுண்ணிற் கொடுமேகம் காசம்...................*
அழுந்துமந் தாக்கினியும் ஆரும் - விழுந்திடச்செய்.........*
துற்பலமும் பீநசமுந் தோன்றும் அரிவையர்க்குட் .........*
பொற்படரு மாதே புகல்.........................................(கூருசா)

( சுத்தான்னத்தின்குணம். )

சுத்தஅன்னங் குற்றமில்லத் தோஷங் களையகற்றும்............*
முத்தரத்தே கிக்கும்அது முக்கியங்காண் - பத்தியத்திற்.....*
காகும்அது முப்பிணிக்கும் ஆம்வியஞ்ச னங்கலந்துண்......*
எகும்உள்ரோ யெல்லா மிரங்கி.................................(கூருஎ)

( பொங்கலன்னத்தின்குணம். )

பொங்கலெல்லா மந்தம் பொருமல்எனு நோய்விளைக்கும்......*
அங்கமெலாம் வாதம்உண் டாக்கு * மன - லங்கெடுக்குஞ்...*
சம்பாநற் பச்சரிசித் தன்பொங்கல் தாதுவிர்த்தி........ .....*
யென்பார் பெரியோர்க ளெண்...[* அனலம்-சூடு](கூருஅ)

( பாலும்- அன்னமும்-புசித்தலின்குணம். )

பாலும்அன்ன மும்புசிக்கிற் பன்னுபித்தந் தாகமறும்.......*
மேலுமற்ப மந்தமென்பார் மேனியிடும் - ஞாலமதில்.......*
அப்பொழுதே தாதுவிர்த்தி யாகுஞ் சிசுவாதி..................*
யெப்பருவத் தர்க்குமா மெண்...................................(கூருகூ)

தே—(பால்-அருந்தற்கு-நாழிகையளவைகூறல்.)

ஆப்பான் மூகூர்த்தத்து ளேங்கடிகைக் குள்ளுணது ........*
மீப்பான் மனுவர் விருந்தாகு - மூப்பாயி.......................*
ஊஞ்சத்தான் காண்டற் கரியா னகிலமுன................*
மஞ்சத்தா னுண்டவிருந் தாம்...................................*

(இ-ள்.) பசுவின்பால்கறந்த மூன்றேமுக்கால் நாழிகைக்குள் அல்லது ஐந்து நாழிகைக்குள் உண்ணக்கடவை - அந்தக்கிரமப்படி உண்டால் அந்தப்பால் தேவாமிர்தத்தை யொப்பாகும்- அந்தக்காலத்துக்கு மேற்பட்ட பாலையுண்டால்-பிரமன் அறிதற்கரிய சிவனுண்டவிஷத்தை யொப்பாகும்-எ-று. (கூஙகூ௰)

( காலையில்-பச்சைப்பாலுண்பதின்குணம். )

கையெரிச்சல் காலெரிச்சல் காமிலம்இ ரத்தபித்தம்.........*
மெய்யெரிச்சல் பாண்டுநோய் விந்துநஷ்டம் - வெய்ய.....*
இதயகபம் போம்புஷ்டி யெய்துஞ் * சேய்க் கொவ்வும். ..[ம்
உதயமதில் பச்சைப்பால் உண்[* பிள்ளைகளுக்குப்பொருந்து

(நெய்-அன்னத்தின்குணம்.)

வெறுநெய்யுஞ் சோறும்உண்ணில் வீறுபல நண்ணுங்........*
கிறுகிறுத்த பித்தநோய் ○ கிட்டா - தறிவிக்குங்..............*
கண்ணுக்கு மாகுளிர்ச்சி காட்டுமிகச் சீரணமாம்..............*
உண்ணற்குப் பத்தியமா மூன்.....[○ கிட்டாது அறிவிக்கும்.]

(எண்ணெய்-அன்னத்தின்குணம்.)

எண்ணெய்யுஞ் சோறும்உண்ணில் என்றைக்கு மாபலமாம்..*
பெண்ணுக் கிளையாத * மீடுமுறுஞ் - சண்ணுகின்ற.......*
வாதகப மேகம்போ மாமுப் பசியெழும்பும்..................*
பூதலத்து ளுளும் புகல்..........[* மீடு-பலம்]...... கூஙகூஙு)

( மாங்கிசங்கலந்துசமைத்த அன்னத்தின்குணம். )

* ஊனமைத்த அன்னம்உண்ணில் உண்டாம் அதிகபலம்...*
போனமே தோதாதும் பூணுங்காண் - ஆனல்...............*
விரணநோய்க் காகா மிகுமந்த க்ஷீணந்...................*
தருணகப பித்தசமனம்.....[* ஊன்-மாங்கிசம்]...(கூஙகூசு)

---

பதார்த்தவகை.

தே—( நன்றாகச்சமைத்த துவரம்பருப்பின்குணம். )

தண்ணக் குறிஞ்சித் தலத்தா டகிப்பிளப்பை................*
வண்ணச் சுடறறற்குள் வைத்தாக்கி - யுண்ணற்...............*
கடிக்குப் பசுவினறு மாச்சியத்தோ டுண்ணிற்................*
பிடிக்குப் பிடிசதையாம் பேசு.................................*

(இ-ள்) குறிஞ்சி நிலமாகிய மலைச்சாரல் பூமியில் விளைகின்ற-துவரம்பருப்பைவெந்நீரில்போட்டுச்சமைத்து, போசனஞ்

செய்வதற்கு முதலில் பசுவின்னெய்யுடன் அன்னத்திற்கலந்து புசித்தால்-ஒருபிடி அன்னத்திற்கு ஒருபிடிசதைவளரும்-எ-று குறிஞ்சி நிலத்தில் பயிராகிற வஸ்துக்கள் எல்லாம் அதிகபலம் உள்ளதாயிருப்பதினால் அந்தநிலத்துத் துவரையை விசேஷமாகச்சொன்னார். (தூகசுரு)

தே-(போசனமுதலில்நெய்சேர்த்துண்பதின்குணம்.)

பருப்பிலெழு வெப்பும் பருங்குடன்மு றைப்புந்.........*
திருப்புரு முன்மலத்தின் சிக்குந் - தரிப்புறு..............*
மெய்க்குள்ள காந்தி விலகா தழகுறுநன்..................*
னெய்க்குள்ள உண்மை நெறி...........................(தூகசுசு)

(இதுவுமது.)

புத்திமிகுஞ் சிக்குவைநோய் போயொழிபு நேத்திரத்தில்....*
மெத்த வொளியும் விளங்குங்காண் - பித்தமொடு..........*
வாதகப மாறு வறட்சியெல் லாநீங்குங்.....................*
கோதினறு நெய்யைக் குடி...............................(தூகசுஎ)

தே—( பொரியலின்பேதகுணம். )

கார மிகுபொரியல் காயந் தனிற்கபத்தைச் ..................*
சேர வுறவாக்குந் திண்ணமே - சோரப்........................*
புளியிட் டிடும்பொரியல் போர்மந்தத் தோடு..................*
வளியிட் டிடுமனத்துள் வை ................................(தூகசுஅ)

தே—(வறலின்பேதகுணம்.)

இளவறுப்பான் மந்த மெழும்புங் கருக ........................*
துளவறுப்பான் முத்தோட மோங்கு - மளவறுத்த ...........*
மைய வறற்பிணிக்கும் வாதமடு மாயினஃ ......................*
* தைய வறற்பிணிக்கு மாம் [* கபத்தைப்பற்றிய சலரோகம்]

தே—( பச்சடியின்பேதகுணம். )

புளிப்பான பச்சடியாற் போம்பித்தங் கார்த்தல்...............*
வளைப்பான பச்சடிக்கை வாத - மிளைக்கு .....................*
மினித்தபச்ச டிக்கருசி யேகுந் துவராற்........................*
சனித்தபச்ச டிக்குறும்வா தம் ...................................(தூகசுகூ)

தே—( துவையலின்பேதகுணம். )

புளிப்பா மிலைத்துவையல் போக்கும்பித் தத்தைப்............*
புளிப்பா லமைதுவையல் பொல்லா - புளிப்பில்...............*

வெறுந்துவைய னன்றதற்கு மிக்கவுறைப் பிட்ட..........✻
நறுந்துவைய னன்றினு 'நன்று......................(தூ௱எக)

( குழம்பின்பேதகுணம். )

சொல்லஉறைக் குங்குழம்பால் தோன்ரு தனிலம்அஃ.......✻
இல்லையெனில் வாதம் இருக்குங்காண் - தொல்லுலகில்.......✻
நீர்த்தகா ரக்குழம்பால் நீடுமுத் தோஷமுன்பின்..........✻
பார்த்தோடு மென்றே பகர்..............................(தூ௱எஉ)

( துவரம்பருப்பின்ரசகுணம்- க-கலிப்பா. )

நவாவாழைக்கனி பலவின்கனி..............................✻
நல்லமாங்கனி பாலொடுநெய்க்கறி..............................✻
கவரில்அப்பொழுதே மந்தமாம்பரி..............................✻
காரங்கேட்கும் பயித்தியக்காரரோ..............................✻
யெவருங்காண்கவறைகுதும் அன்னத்தில்..............................✻
இட்டுணுங்கறி தன்னுடன்கூடவே..............................✻
துவைநீர்மிள குள்ளியிட்டுக்கொளீர்..............................✻
துட்டவாதமுந் துஞ்சிடுமுண்மையே ..........(தூ௱எ௩)

( காடைச்சாற்றின்குணம்-வி-ம். )

பொற்றொடி மாதேகண்ணின் புண்ணொடு பிணியெலாம்போம்
வற்றிய உடல்பருக்கும் வாதபித் தையும்ஏகுஞ்..............✻
சுற்றிய கிராணிகுன்மஞ் சுரம்பல சுவாசகாசம்..............✻
அற்றிடுங் காடைச்சாற்றல் ஆவியும் வளருங்காணே...(தூ௱எ௪)

(கொள்ளுச்சாற்றின்குணம்- வி-ம்.)

வற்றிய உடம்புதூணும் வாதமும் பித்தூங் ✻குக்கி ...........✻
சுற்றிய கிராணிகுன்மஞ் சுரம்பல சுவாசகாசம்..............✻
உற்றடர் கண்ணின்புண்ணோ டுறுபிணி யொழியும்வெப்பைப்✻
பெற்றிடுகாணச்சாற்றூற்பெருஞ்சலதோஷம்போமே[ ✻ வயி
[று

தே {போசனமுடிவில்-தயிர்- உப்பு
சேருவதின்குணம்- வெ-பா.}

✻ மூத்ததயி ருப்புமுண முன்பிறங்கு வத்துகளிற்..........✻
கோத்தநிரி தோடங் குடிவிலகும் - பூர்த்தியா..............✻
யுண்டபிற்கூ மூற்குநடு வுற்றவையெ லாம்புழுக்கங்..........✻
கொண்டடரச சீரணமா கும்...[✻ புளித்ததயிர்].....(தூ௱எரு)

(மோரும் அன்னமும் புசிப்பதின்குணம்.)

மோருமன்ன மும்புசிக்கின் மூளும் பசி மேக...........*
நீருங் குதாங்குரமு நீள்பாண்டும் - பேராத..........*
தாகங் கிராணி சலம்ஏறு வீக்கமும்போம்..........*
ஆகவிர ணத்தில்விலக் காம்.........................(சுஅளஎ)

(ஊறுகாயின்குணம்.)

ஊறுகா யெல்லாம் உதராக் கினிவளர்க்கும்.................*
வீறுருசி யென்பதையும் வெல்லுங்காண் - கூறுகின்ற........*
ஐயமொடு பித்தம் அனிலத்தை யுந்தொலைக்குஞ் ...........*
செய்யவடி வேற்கண்ணாய் செப்பு..........................(சுஅளஅ)

(உண்டபின்பு வெந்நீரருந்தலின் குணம்.)

உண்டபின்பு வெந்நீர் ஒருதரமாக் கொண்டக்கால்.........*
பிண்டுசுரம் வாதம் விதாகமந்தம் - அண்டுதரத்............*
தார்ந்த பொருமலும்போம் ஆயுளுண்டா மாதர்தமைச்......*
சேர்ந்தணையத் தாதுவுமாந் தேர்..........................(சுஅளகூ)

(நீரருந்துங்கிரமம்.)

தண்ணீர்அுண் ணுந்துண்டாற் சாருஞ் செவிமந்தங்...........*
கண்ணக் குனிந்துண்டாற் காசம்உண்டாந் - தண்ணீர்........*
குடிக்கவென்றாற் பாத்திரத்தைக் கோதறவே வாயாற் ........*
கடித்தருந்தத் துன்பம்இலைக் காண்........................(சுஅஅய)

கஞ்சிவகை.

{பால்கஞ்சி - பொரிசேர்ந்தகஞ்சி-
சுடுகஞ்சி-இவைகளின்குணம்-வி-ம்.}

* சுாதரு பாலில்வெந்த சோறுறு கஞ்சிகொள்ளில்.........*
எரிதரு பித்தந்தாழும் எழுமதி விந்துவுந்தான் ...........*
பொரிதரு கஞ்சிபித்தம் போக்கிடுஞ் சுடுகஞ்சிக்குத்...........*
தரிதரு மலமும்வாய்வுந் தாகமும் போகுங்காணே ....[* பசு]

தே—(கொள்ளுக்கஞ்சியின்குணம்-வெ-பா.)

கொள்ளுந் * தண் டுலமுமாய்க் கூட்டியடுங் கஞ்சியது......*
கொள்ளுங்காற் தீபனத்தைக் கூறுவதோ - எள்ளை ..........*
நசிக்கிப் பிழிபலமு நல்விந் துவுமே.........................*
வசிக்குங் கிழவர்கட்கும் வை...[* தண்டுலம்-அரிசி].(சுஅஅக)

தே—( கோதுமைக் கஞ்சியின்குணம். )

கோதுமைக் கஞ்சி கொடுஞ்சுர நீ ரோத்றமிவை ............*
காதுமைக்குஞ் சந்திக்குங் * காதரமே - போத.......... ..*
வுடலுந் திடமா மொலிவண்டுங் கூற்றுங் ..................*
கடலும் பணிவிழியே காண்...[ * காதரம்-அச்சம்]..(௲௬௲)

(சிறுபயறு-உழுந்து-பச்சரிசிகளின்கஞ்சிக்குணம்.)

சிறுபருப்புக் கஞ்சிபித்தந் தீர்க்கும் உழுந்தின்..............*
உறுபருப்புக்கஞ்சிவளிக் கூக்கம் - நறியபசும்..............*
பச்சரிசிக் கஞ்சி பவனகபத் தைப்போக்குங்......... ........*
கச்சிருக்குங் கொங்கையின்னே காண்..................(௲௬௪)

தே-( காய்ச்சுக்கஞ்சியின்குணம்-வி-ம். )

கஞ்சி யன்னத்திற் காயம் பருத்திடு........ ..................*
மஞ்சி வெப்ப மகலுஞ்சி லேஷ்மமோ............ ............*
விஞ்சி யுற்றிடு மேனி மினுத்திடும்..........................*
பஞ்சி போலப் பறந்திடும் பித்தமே..................(௲௬௫)

( புனற்பாகத்தின்குணம்-வெ-பா. )

புனற்பாக முத்தோஷம் போக்கு மருந்தின் ....................*
அனற்பாகந் தன்னை யடக்குந் - தனிக்குணங்கள்..............*
அம்மட்டோ வாய்க்கிதமா மாரோக்கி யங்கொடுக்குங்........*
கம்மிட்ட பூவனமே காண்..................................(௲௬௬)

தே- ( பஞ்சமுஷ்டிக்கஞ்சியின்குணம். )

பஞ்சமுட்டிக் கஞ்சிநெடும் பட்டினியிற் கொள்ளுங்கால்.....*
விஞ்சனில பித்தகபம் வீறுவாம் - விஞ்சு......................*
மிளைப்பகற்றுந் தாரகவி லங்கனத்திற் கேற்குந்..............*
திளைப்பவெழும் பூண்முலையே செப்பு.....................(௲௬௭)

(சுக்குமுடிச்சுப்போட்டுக்காய்ச்சிய நீர்க்கஞ்சியின்குணம்.)

வாயுசுர நீர்இரத்த மாறும் பசியெழும்பும்...................*
ஓயும் பலபிணிகள் உண்மையே - ஆயுங்கால்.................*
உண்டி பருத்திடுமெய் யுள்நோய் எகும்முடிச்சுச்..............*
சுண்டியினீர்க் கஞ்சியினாற் சொல் ....................(௲௬௮)

( வடிகஞ்சி-உறைகஞ்சி-கொதிகஞ்சி-இவைகளின்குணம். )

கஞ்சியெலா மந்தமவை கண்ணுக்குத் தான்குளிர்ச்சி..........*
விஞ்சிவரும் பித்தம்அரு விட்டகலும் - உஞ்சும்.............*
அதிகஞ்சி வாயு அதிசீதஞ் சேர்க்குங்......................*
கொதிகஞ்சி வெட்டையைப்போக் கும்..............(௲௬௯)

( பழஞ்சோற்றின்குணம். )

பழஞ்சோற்றை யந்தப் பழைய நீரா காரக்.................... *
கொழுஞ்சேர்க்கை யோடுதயங் கொள்ளில் - எழுந்தாறு.... *
பித்தவா தம்போம் பெரும்பசியா மெய்யெங்கும்.............. *
மெத்தவொளி யுண்டாகு மே........................(௲௱௯௰)

( மோர்சேர்ந்தபழையதின்குணம். )

மோரும் பழைய துமாய் மோரெடுக்க வுண்டார்க்குத் ........ *
தீரும் எரிச்சலெலாஞ் சேயிழையே - தீராத.................. *
பித்தப் பிணியும் பிரமைதோ யும்பறக்கும்.................. *
உற்றகபந் தூக்கமிகு முன்............................(௲௱௯௰௧)

( புளித்தசோற்றின்குணம். )

புளித்தபழங் காடியன்னம் பொங்கனலா நாளுந் .............. *
தளிர்த்தபித்த கோபத்தைச் சாடும் - வெளுத்தமல.............. *
மந்தத்தை நீக்கும் வாந்தி தனையொழிக்கும்................ *
அந்த முறுமணங்கே யாய் ..............................(௲௱௯௰௨)

( உஷ்ணசோற்றின்குணம். )

உஷ்ணவன்னம் உண்டால் உடனே வரும்உறக்கம்................ *
மேசுவதேன் வாதம் பிரபலமாம் - ஆசித்துச்.................. *
சீதளமும் பித்தமும்வி சேடிக்கும் வள்ளையொத்த.............. *
காதளவு நீள்விழியாய் காண்..........................(௲௱௯௰௩)

( கேழ்வரகின்-கூழ்-களி-இவைகளின்குணம். )

கேழ்வரகின் கூழாற் கிளர்வாத பித்தமொடு.................. *
* வீழ்வயிறுஞ் சாந்தமெனவிள்ளுவர்காண் - காழாங்........ *
களிக்குப் பலம்உண்டாங் காணில்அதி வாதந்.................. *
தளிர்க்கு முலகிலிதைச் சாற்று [*வீழ்வயிறு-பெருவயிறு].. ()

( கம்புச்சாதத்தின்குணம். )

கம்பினது சாதத்தாற் காசசுவா சஞ்சிரங்கும்.................. *
பம்பும் உடலமிகப் பாரிக்குஞ் - * செம்பாலோ.............. *
வற்றுவது மன்றிநிற மாறுமென்பார் வாமமெலா.............. *
முற்றுமுலை மாதே மொழி...[* செம்பால்-உதிரம்](௲௱௯௰௫)

( தினைமா-அதன்சாதம்-அதன்கஞ்சி-இவைகளின்குணம். )

தினைமா கபவாதந் தீர்க்கும்அதன் சாதம்.................. *
புனைபித்த மாயினுநற் போகந் - தனைக்கொடுத்து.......... *

வாதம்போக் குங்கஞ்சி மாசோளை தோஷமிதன்..............*
பேதமெலாம் போக்குமெனப் பேசு...............(௲௯௰௬)

( சாமைச்சாதம்-அதன்கஞ்சி-இவைகளின்குணம். )

சாமைச்சோ றுண்டால் தனிவாதங் கோழைகபந்..............*
தீமைக்கா தாரமாய்ச் சேர்சோளை - போமெத்தப்..........*
பித்தமொடு தாதுவுமாம் பேசும்அதன் கஞ்சிக்கு..........*
மூத்தோஷம் போகு மொழி.......................(௲௯௰௭)

( வரகுசாதத்தின்குணம். )

எறிகபத்தோ டேபலநோ யெய்தும் வறட்சி..................*
சொறிசிரங்கு பித்தந் தொடரும் - நிறையுங்...............*
கரகமெனப் பூரித்த கச்சுமுலை மாதே....................*
வரகரிசிச் சோற்றால் வழுத்து.........................(௲௯௰௮)

( சோளச்சாதங்களின்குணம். )

சோளமெனப் பேர்படைத்த சோறுகளி னால்உடலில்.........*
மீளச் சொறிசிரங்கு விர்த்தியதாம் - நாளுங்..................*
கரப்பனும்உண் டாகுங் கனமருந் தும் பாழாம்.............*
பரப்பனைய கண்மாதே பார்.........................(௲௯௰௯)

( காடைக்கண் ணிச்சாதத்தின்குணம். )

எரிவோடு பித்தம் எழும்பும்ஐய வாதங்.........................*
கருகிமுறிந் தோடிக் கரக்கும் - அரியசந்த....................*
வாடைப் பொடிமணக்கு மாமுலைமா தேயுலகிற்..............*
காடைக்கண் ணிச்சோற்றைக் கண்டு.......................(௲௱)

---

சித்திரான்னவகை.

( பாற்பொங்கலின்குணம்-வி-ம். )

ஒப்பிலாப் பாலில்வெந்த உயர்சுவை யன்னத்தாலே...........*
வெப்பிலா வாதம்உண்டாம் வெவ்வழற் பித்தந்தாழ்ந் ......*
தப்பிலா இதில்நெய்வெல்லஞ் சார்ந்திடுந் தன்மையாலே.....*
செப்பிலாக் கபமேல்ஆடுஞ் செம்பித்த மொடுங்குங்காணே...*

( பருப்புப்பொங்கலின்குணம்-வெ-பா. )

போகமிக உண்டாகும் பொங்கியபித் தந்தணியுந்.............*
தேகமதில் வாதமிகச் சேருங்காண் - வாகார்...................*
பொருப்புப்போல் விம்முமுலைப் பூங்கொடியே பச்சைப் ...*
பருப்புப்பொங் கற்சோற்றைப் பார்.....................(௲௱௨)

(சருக்கரைப்பொங்கலின்குணம்.)

வாயின் அரோசகத்தை மாற்றிவம னம்போக்கும்.............*
ஆயில்பித்த கோபத்தை யாற்றுங்காண் - நேயச்.............*
செருக்கரைச்செந் தாளாற் றிருத்துமட மாதே...............*
சருக்கரைப்பொங் கற்சாதந் தான்..........................(கூசா௱௩)

(மிளகோதனத்தின்குணம்.)

மிளகோ தனம்அருந்த விம்முகின்ற வாதம்.................*
இளகும் பசியும் எழும்பும் - களகளெனக்.................*
கூவும் வயிற்றின் குடல்இரைச்ச லுங்கபமுந்..............*
தாவுபித்த முந்தணியுஞ் சாற்று.[ * ஓதனம்-சோறு].(கூசா௱௪)

(புளியோதனத்தின்குணம்.)

வாந்தி யுரம்ஒழியும் வாய்நீர்ச் சுரப்பேகுஞ்...............*
சாந்தியுறும் பித்தமது சாந்தியாம் - வாய்ந்த................*
அளியோ வயிலோவென் றையுறச்செய் கண்ணாய்..........*
புளியோ தனத்தாற் புகல்...................................(கூசா௱௫)

(கடுகோதனத்தின்குணம்.)

உரியகடு கும்புளியு மொவ்வக் கலந்தே....................*
அரியமணத் தோடமைத்த அன்னம் - பருகினால்............*
வாதமொடு ஐயமும்பின் வாங்கி விழுந்தோடும்..............*
சீத மலர்த்திருவே தேர்......................................(கூசா௱௬)

(எள்ளோதனத்தின்குணம்.)

செப்பரிய வாதபித்தத் தீமையக லுங்கபம..................*
துப்பி வளரும் உடலிறுகு - மூப்பழத்தின்................*
கள்ளோதுஞ் செய்ய கனிமொழியே நீகேளாய்..............*
எள்ளோ தனத்தினு மேல......................................(கூசா௱௭)

(உழுந்தோதனத்தின்குணம்.)

எஞ்சுகப வாதமிக ஏறும்அதி மந்தம்உறும்..................*
விஞ்சுபித் தந்தாழு மெய்யுரக்கும் - அஞ்சம்..............*
எழுந்தோதம் புக்கு மினியநடை மாதே......................*
உழுந்தோ தனத்திற் குரை...................................(கூசா௱௮)

(தயிரோதனத்தின்குணம்.)

ஆறு வழலகற்றும் ஆர்ந்தபித்த நோய்போக்குந்..............*
தேறுத மெய்யைமிகத் தேற்றுங்காண் - மாறு...............*

மதியோகை கொள்ளும் வதன மயிலே.....................*
ததியோ தனமேலாஞ் சாற்று.........................(௬௩௭௩)

( கட்டமுதின்குணம். )

சூலைசுக்கி லாஸ்மரிசு வாசகா சங்கண்ட.....................*
மாலை முதலியநோய் வந்தணுகு - மாலுலகில்..................*
துட்டம் இரத்தமொடு தொன்மேக மும்பறக்குங்..............*
கட்டமுதை நீயுண் ணுங் கால்.........................(௬௩௭௰)

---

பலகாரவகை.

( உழுந்துவடையின்குணம். )

வெறும்உழுந்திற் செய்வடைக்கு மேன்மேலும் வாதம்.......*
உறும்பித்தஞ் சற்றே யொடுங்கும் - நறுந்தீ..................*
பனம்போம் புசிப்பிற் பருகநன்றும் வாவி....................*
யனம்போ னடையா யறி.......................................(௬௩௭௰௧)

தே---( தயிருழுந்தின்வடைக்குணம். )

உழுந்தின் பருப்பை யுயர்ததியூ றச்செய்.....................*
தழுந்தா தனாத்துவடை யாக்கிச் - செழுந்தேனிற்..........*
கூட்டியுண ஐயபித்த கோபமறும் ஊதையிலை...........*
தீட்டியவேற் கண்மாதே தேர்..............................(௬௩௭௰௨)

தே- ( பேயன்வாழைக்கனிசேர்ந்தவடைக்குணம். )

பேயன் கதலிபலப் பெய்த * மா ழுத்தின்வடை...................*
நேய முறஅமைத்து நித்தலுமே - * நேயமுடன்............*
தானருந்தில் வாதபித்தந் தத்தநிலை கொண்டமருந்...........*
தேனருந்தாத் தேனே தெளி[* உழுந்து. * நெய்](௬௩௭௰௩)

( தோசையின்குணம். )

மிகுத்தெழுந்த பித்தத்தை வீறு தடக்கும்....................*
அகத்துள் அனிலகபம் ஆற்றுஞ் - சகத்திலுறு ...............*
தேசைப் பெருமயிலே தேமொழியே மாழத்தின்..........*
தோசைக் குணமிதெனச் சொல்.............................(௬௩௭௰௪)

( சம்பாரத்தோசையின்குணம். )

காயமிள கிஞ்சி கருவேப் பிலைமுதலாந்......................*
தூயபல காரம்இட்ட தோசைக்கு - வாயுவிலை................*
பித்தகப வேகப் பெருக்கொழியுந் தாதுவுமாஞ்...............*
சுத்தவன சத்திருவே சொல்..................................(௬௩௭௰௫)

( சுத்தஇட்டலி-சம்பாரஇட்டலி-இவைகளின்குணம். )

வெறுமாவின் இட்டலிக்கு வேகம்அறுங் காரம்................*
பெறுமாவி னிட்டலியைப் பேசில் - அறும்அனிலம் ........*
ஐயபித் தங்கள் அதிகரிக்கு மோமாரன்..........................*
நய்யவெப்யுங் கண்ணுப் நவில்.................................(௬சாயசு)

( மூறுக்கின்குணம். )

ஐயமொடு பித்தம் அதிகரிக்குந் தாழாத ..........................*
செய்ப அனிலஞ் சிறிதடங்கும் - வையம்...........................*
நிறுக்குமிகு கற்பையுறு நேரிழையே நாளும்......................*
மூறுக்கின் குணமா மொழி..........................................(௬சாயஎ)

( தேன்குழலின்குணம். )

ஓங்குங்கபவாதம் உட்டினமூ பீறிவரும்..............................*
* வாங்குஞ் சலங்கொஞ்ச மந்தமுமாந் - தேங்குமிசை......*
ஆன்குழலு மியாழுமிக வஞ்சுமொழிக் கிஞ்சுகமே..........*
தேன்குழலுக் காங்குணத்தைத் தேர் [*தாகத்தையுண்டாக்கும்]

( அதிரசத்தின்குணம். )

ஐயமொடு பித்தம் அதிகரிக்கும் எக்காலுந்...........................*
துய்ய அனிலஞ் சுழிக்குங்காண் - சையத்...........................*
தெதிரசத்தை யூர்வோ னெனுங்கற்பு மாதே..........................*
அதிரசத்தை நன்மூ யறி..............................................(௬சாயகூ)

( பிட்டின்குணம். )

செம்புனலுங் கட்டுந் தெளியும் உரமாகும்..........................*
வெம்பனிலம் உட்புறத்தில் வீறுங்காண் - செம்பழத்தை...*
வட்டைப் பழிக்கும் வனமுலைமா தேயரிசிப்......................*
பிட்டைப் புசிப்பார்க்குப் பேசு......................................(௬சாஉய)

( மோதகத்தின்குணம். )

வாதம்உறு மந்தமிகு மாருத வெப்பமுமாஞ்.......................*
சீத கபவிருத்தி சேருங்காண் - தீதுறுகட்........................*
போதகமுஞ் செப்பும் பொருப்பு நிகர்முலையாய்...............*
மோதகமுண் பார்க்கு மொழி ..(இதுவே-கொழுக்கட்டை).()

தே - ( கோதுமை அடையினகுணம். )

தேகம் பலக்கும்அதி தீபனம்உண் டாகும்நிறை.....................*
மோகம் பெருகுமைய மூர்க்கமறுங் - கோகமிக......................*

வோதி யடையு முயர்கொங்கை மாதரசே.................*
*கோதி யடையைக் கொடு...[*கோதி-கோதுமை](ருசஉஉ)

(பொரியுருண்டையின்குணம்.)

சர்த்திபித்த வாதந் தணியும் வலுத்தெழுந்த.........*
சுத்த கபவாதந் தொலையுங்காண் - மெத்த.........*
வரியுண்ட வேல்விழியாய் வையகத்திற் சாலிப்.........*
பொரியுண்டை நன்றும் புசி.........(ருசஉங)

தே—(சேர்க்கைஅவலின்குணம்.)

பானெய்சேர்த் துண்ணிற் பலமாந் ததிகண்மந்தந்.........*
தானெய்து மோரயர்வு தாகமெரி - வேனிருக்கு.........*
மப்புளியு மஞ்சுங்கா லாகுமிளை யொழியு.........*
மெப்புளியும் பித்திலவ லில்.........*

(இ-ள்.) அவலில்- பாலும் - நெய்யும் - சேர்த்து உண்டால் சரீரத்துக்குப்பலம் உண்டாகும்) தயிர்களில் கலந்து உண்டால் மந்தம் உண்டாகும்) மோரில் கலந்து உண்டால்சோபமும் எரிவுநீங்கும்)சலத்தில்ஊறவைத்து உண்டால் உளியால்வெட்டினுல் அதுவும் வாய்மடங்கத்தக்க உறுதியான வாயுவு உண்டாகும்) ஆகாரமும் ஏற்றுக்கொள்ளாது)எவ்வகைப்புளியாவதுசேர்த்து உண்டால் பித்தரோகம் நீங்கும்)—எ-று. (ருசஉச)

(நெற்பொரியின்குணம்.)

நெற்பொரியைத் தின்றுல் நெடுந்தாகம் வாந்திமந்தம்......*
மற்பித்த வாத மதமூர்ச்சை - பற்பலவாம்.........*
பேதி யருசியிவை பேருலகை விட்டொழியுஞ்.........*
சாதி மடமயிலே சாற்று.........(ருசஉரு)

(அப்பளம்-சோற்றப்பளம்- இவைகளின்குணம்.)

வாதத்தை யுண்டாக்கு மாபலத்தை யுங்கொடுக்குஞ்.........*
சீதத்தை மேவுகபந் தீர்க்குங்காண் - ஓதும்உழுந்.........*
தப்பளஞ்சோற் றப்பளங்கா லாதிகள்விஞ் சாதுநிலை.........*
யொப்பவளஞ் செய்யும் உரை.........(ருசஉசா)

(பாயசத்தின்குணம்.)

பாயாசங் கொண்டாற் பழையமலம் வாந்திபித்தம்.........*
ஆயாசம் போங்கூறில் அற்பமந்தந் - தூயசரீ.........*
வேந்திரிய நன்மை யெழில்வலிம னத்தெளிவோ.........*
டார்த்தபசி மேதையுமுண் டாம்.........(ருசஉஎ)

தே-( அன்னபின்னத்தின்குணம். )

சோறுக்கெண் * கூறாக்கந் தூமா வவலிவைக்கெண்.........*
கூறாக்க முப்பழம்பால் கொள்ளிவைக்கெண் - கூறாக்க......*
மூன்பலமி வைக்கெண்கூ றாக்கஞ் சுகாசுகத்துந்...............*
தான்பலவ கைத்துப்புந் தான்[*கூறு-பங்கு.* ஊக்கம்-பலம்]

தே- ( உண்பதற்கு-முன்பின் உண்ணுங்கனிகளின்குணம். )

அருந்தற்கு முன்பருந்த லாமா மலக........................*
மருந்தற்குப் பின்பிலந்தை யாகும் - பொருந்தியவெக்.....*
காலுங் கபித்தக் கனியாகு மாகாவெக்..........................*
காலுங் கதலிக் கனி ......................................(௲௬௨௪)

தே-( உண்டபின் புகுறுநடைகொள்ளுதலின்குணம். )

உண்டபின்பு நூறடிவைத் தோங்காக் குறுநடையைக்.......[ஞ்
கொண்டவர்க்கு முன்புகுடன் கொண்டபருந் - திண்டியெலா
சேர்ந்தொன்றாய்ச் சீரணிக்குந் தீயமுத்தோ டங்களதி.......*
லீர்த்தொன்ற மாட்டா வறி.......................................(௲௬௨௫)

---

பரிமளப்பூச்சின்வகை.

தே- ( மணக்குழம்புபூசுதலின்குணம். )

பூசமணத் தாலின்பம் பூணு மணுக்கிருமி......................*
நாசமுறு *முட்டிக்கு நல்வலியாந் - தேசமரு.................*
நாதவிந்து வும்விளைத்தி நண்ண மிகவிளையுஞ்..............*
சீத*விந்து வின்குளிர்போந் தேர்[*உதராக்கினி. *சந்திரன்]

( கார்காலமணப்பூச்சின்குணம்-வி-ம். )

கார்காலந்தனிற்பூசக் கருப்பூரஞ்சந்தங்...........................*
கஸ்தூரியகிற்கூட்டு காந்தியும்உண்டென்பர்..............*
சீர்மேவுசிறப்புண்டாஞ் சீர்த்தியும்வந்தெய்துந்...................*
தேகத்தின்வியர்வகலும் இளைப்போடுச்சுரம்போங்.....*
கூர்மேவுகாசம்இழுப் பிருமலிவைவிலகும்.......................*
குட்சிவாய்வதுதொலையும் நேத்திரமுந்துலங்கும்.......*
ஆர்வமிகுந்தாகம்அறும் வீரியமுநண்ணும்........................*
அறிந்தென்றுநடந்திடுவர்க் கம்புவியின்மீதே (௲௬௨௬)

( பனிக்காலமணப்பூச்சின்குணம்-வி-ம். )

பனிக்காலந்தனைத்தேடிக் குங்குமங்கச்சோரம்..................*
பகரும்அகில்கஸ்தூரி சாந்துசவ்வாதுடனே.....................*

பணிப்பகலச்சமன்செய்து பனிநீரிற்குழைத்துப்... ... ...*
பண்புபெற்றப்பூசியிடில் உடக்கம்உடைமையதாஞ் ...*
செனிப்பானதாகமொடு பித்தம்அறுங்கபம்போந்......,.....*
தினவுகெடும்வீரியமாஞ் செயம்உபரும்அழகாந்... ...*
தனிப்பானசெய்யமலர்த் திருவுமருங்கணைவாள்... ... ... ...*
சவுரியமுஞ்சேருமுகச் சந்தோஷமுறுமே ... (௲௪௱௩)

தே-(சுகந்தமலர்மாலைகளணிதலின்குணம்-வெ-பா.)

முல்லைமுத லீடுமண மொய்த்தமலர்த் தொத்தணிவார்க் ...*
கில்லையெனுந் தாதுநட்ட மில்லைமா - ருலைமனத்... ...*
துக்க மொழியுஞ் * சுகமொழியும் பூரிப்பு... ... ... ... ... ...*
மிக்க மொழியவரு மேல்...[* நல்லவசனமும்].....(௲௪௱௪)

( பன்னீரின்குணம். )

பன்னீர் மிகக்குளிர்ச்சி பாராய் சுகசந்நிக்...................*
கிந்நீர்உண் எகும் இளைப்புமறுஞ் - சந்நிகளும் ... ... ......*
வாதபித்த ஐயமொடு மானே வியாகுலமும்.................*
பூதலம்விட் டேகும் புகல்.......................... ... ... ...(௲௪௱௫)

தாம்பூலவகை.

( தாம்பூலப்பொதுக்குணம்-வி-ம். )

தக்கோலந்துவருறைப்பு காரமாமச்...........................*
சாரங்கஷாயமதிற் சிலதோஷம்போம்.....................*
நிற்காதுகிருமியையந் தாகம்பன்னோய்.......................*
நிறைபசியாமாதர்குழா நெருங்குமேலும் ... ... ... ...*
மிக்கானசுவையுதரஞ் சுத்தியாகும்... ... ......................*
விடாய்நீங்கும்அறிவொளிருந் தாதும்உண்டாம்........*
எக்காலுந்தருமமெய்துங் களையுஞ்சேரும்.......... ............*
எக்கருமங்கட்குமிது எற்றதாமே.....................(௲௪௱௬)

( கொட்டைப்பாக்கின்குணம்-வெ-பா. )

கொட்டைப்பாக் கென்றுரைக்கிற் கோழைமலம் போமூலத் *
தட்டைப்பார்க் குங்கிருமி சாம்அந்தக் - கொட்டைப்பாக்..*
கொத்தசுரத் தோர்க்குமருந் துண்டவாய்க் கும்பொருந்து..*
மெத்தவுண்ணிற் சோபைவரும் விள்...................(௲௪௱௭)

தே—(இளங்கொட்டைப்பாக்கின்குணம்.)

வளங்கட் டிலங்கைநகர் வாசியென வந்த...................*
விளங்கொட்டைப் பாக்குண்டார்க் கென்றுங்- களங்கட்டும்...*
வாயுவே காமறவன் வல்லருசி யேகுமகத்...................*
தேயுவே காமறைவோ தேர்..................................*

(இ-ள்) வளப்பம்பொருந்திய இலங்கைநகராகியகுழம்புதே சத்திலுண்டாகும் இளங்கொட்டைப்பாக்கை உண்டால்தற்கால த்தில் தொண்டைக்குள் கோழைகட்டும்-வாதமும்-நீங்காதசிலே ஷ்மமும்- வலிய அருசியும் - நீங்கும் - சாடராக்கினி நீங்காது- மறைப்பானதல்ல—எ-று. (௬௪௯)

(இவ்விதப்பாக்குகளை நீக்கவேண்டுமெனல்.)

அதிபிஞ் சதிமூப் பதிபுதுமை மேனி.....................*
யதிமீரம் பூச்சிகள்உள் ளாடல் - அதிசொக்கல்...........*
உள்ளவிதப் பாக்குகளில் ஒன்றேனு நேரில்அதைத்........*
தள்ளவிதி முக்காலுந் தள்..........................(௬௫௧)

(சொற்றைப்பாக்கின்குணம்.)

சொத்தைப் பிளவிடித்துத் தோயமதில் ஊறவிட்டுச்......*
சத்துவர நாறுவிசை தான்கழுவி - வைத்துலர்த்தி........*
வாசம் அமைத் துத்தின்ன மந்தமொடு தோஷம்அறந்......*
தேசும் அழகும்உறுஞ் செப்பு..........................(௬௫௨)

(களிப்பாக்கின்குணம்.)

களிப்பாக்குத் தின்றக்காற் கண்டத்துட் கோழை..........*
யொளிப்பாகக் கட்டுமிஃ துண்மை - தளிர்ப்பான...........*
பித்த அரோசகம்போம் பேதிமிக உண்டாகுஞ்............*
சித்த மகிழ்ச்சியுறுஞ் செப்பு.........................(௬௫௩)

(வெற்றிலையின்குணம்.)

ஐயம் அறுங்காண் அதன்சாரங் கொண்டக்காற்..............*
பையச் சயித்தியம்போம் பைந்தொடியே - மெய்யின்.......*
கடியின் குணம்போகுங் காரவெற்றி லைக்குப்............*
படியுமுத் தோஷமிதைப் பார்..........................(௬௫௪)

தே—(கற்சுண்ணத்தின்குணம்-வி-ம்.)

உண்டவனஞ்சீரணமா நெய்ச்சிக்கேகு....................*
மூறில்விந்துவிற்கூக்க மூறுங்காண்வாயில்.............*

விண்டவெடிபிறிற்குமறற் பேதிவற்றும்......................*
வேந்தளித்தநீர்ச்சுருக்கும் விலகுமெய்யை..............*
யண்டுபலவிடமொழியுங் கறையோதிற்கு.................*
மழலுறுபுண்சிரங்குநமை யழுபுண்ணூறுங்..............*
கண்டவுருவன்மீகஞ் சிரமேநாய்சந்நி .....................*
களுங்காக்குங்கற்சுண்ணங் காணுங்காலே........(௩சசரு)

( முத்துச்சுண்ணத்தின்குணம்-வெ-பா. )

முத்துச்சுண் ணத்தால் முதிர்ந்தஅதி சாரம்ஜயங்...... .....*
பித்துக் கிருமியொடு குன்மநோய் - நத்தியதோர் ..........*
வாத அரோசகமு மாறி விடுமலர்ந்த........................*
போதிலுறை மாதே புகல்..............................(௩சசச)

தே {தாம்பூலத்தில்-காய்ச்சுக்கட்டி - சுக்கு லவுங்கம்-இவைகள்சேருதலின்குணம்}

காய்ச்சுக்கட் டிக்கிறுகுங் கட்டவிழ்ந்த தந்தமங்கார் .........*
பூச்சிக் குழாமிப் புனலிற்சா - மாச்சுக்.......... ..........*
கிலவங்க மாதிகளா லின்புண்டா மின்னுஞ்.........  ..........*
சொலவங்க நோயுமறுஞ் சொல் ....................(௩சசரு)

( தாம்பூலந்தின்னுங்காலபேதம் )

காலை பிளவதிகங் கட்டுச்சி நீறதிகம்..........................*
மாலை யிலையதிக மாயருந்தில் - வேல்விழியே.................*
காலை மலங்கழியுங் கட்டுச்சி தீபனமாம்.......................*
மாலை மணங்குலவும் வாய்......................(௩சசசா)

( இதிலின்னதை முதலிற்றின்ன வேண்டுமெனல். )

வெற்றிலைக்கு முன்னம் வெறும்பாக்கை வாயிலிட்டாற்........*
குற்றம் உறும்உறவோர் கூட்டம்போம் -வெற்றிலையை......*
முன்னிட்டுப் பாக்கருந்து மூதறிவோர் தம்மார்பின்..........*
மன்னிட்டு வாழும்பூ மாது ..............................(௩சசள)

( தாம்பூலத்தில்-இன்னவைவிலக்கவேண்டுமெனல். )

நீற்றிலையும் மூக்கு நெடிய நரம்புடனே.....................*
தீற்றும் புறவுரியுந் தின்றக்கால் - மாற்றலரை.......... ..*
வெல்லப்போர் செய்யும் விறனெடுமா லாயிடினுஞ்.............*
செல்லப்போய் நிற்குந் திரு.............. ..........(௩சசஅ)

( தாம்பூல ரசத்தின்குணம். )

வாயுமந்தம் பீநசஞ்சு வாசகா சம்மருசி... ... ... ...........*
யேயுதர தோஷ மிவைபோக்குந் - ஆயுடற்குக் ..............*

காந்திதரும் புத்திக்குங் கட்குநலஞ் செய்யுமணஞ்.........*
சார்ந்தநறுந் தம்பலரசம்..................................(கூசசக)

( தாம்பூலரசம் விழுங்கும்வகை-வி-ம். )

* அடைகாய்தின்பதில்ஊறு முதல்நீர்நஞ்சாம்.............*
அதிபித்தம்இரண்டாவ தூறுநீரே...............*
கடையமிர்தமூன்றாவ தூறுநீர்தான்..................*
கனமதுரநான்காவ தூறுமந்நீர்.....................*
மடையெனவேஐந்தாறிற் சுரர்துள்ஊறி.................*
வருநீர்களைச்சுகித்து மனங்கொண்டுண்டால்..............*
தடையுறுப்பித்தமொடு மந்தநோயுந்.....................*
தளர்பாண்டுநோயும்உண்டாந் தரஞ்சொன்னோமே[* அ

[டை-வெற்றிலை.

வாகனவகை.

( யானையேற்றத்தின்குணம்-வெ-பா. )

தாதுவிர்த்தி யும்பசியுந் தாழாது நற்பலமுந்..................*
தீதுபித்த மும்வளருந் திண்ணமே - வாதமையம்...........*
ஏழு கடற்புவியுள் எங்கு நிலையாவாம்..................*
வேழ நடத்துவர்க்கு மெய்.................................(கூசருக)

( குதிரையேற்றத்தின்குணம். )

உடல்இறுகுந் தீபனமும் உண்டாகு நாளுங்...................*
குடலிறங்கும் வெப்பாங் குளிரோ - குடிபோம்..............*
பொரியிருமல் போராடும் பூமாதுஞ் சார்வாள்..................*
பரிநடத்து வார்தமக்குப் பார்..............................(கூசருஉ)

( பல்லக்கேற்றத்தின்குணம். )

வாயுமிக உண்டாகு மாருத பித்தமறும்......................*
ஏய பசிகலங்கி யெய்துங்காண் - தீயமதன்....................*
வெல்லற் கரியகலை விள்ளுஞ் சுகவணங்கே ..................*
பல்லக் * கிவர்வையெனிற் பார்[* இவர்தல்-ஏறுதல்](கூசருங)

( தண்டிகையேற்றத்தின்குணம். )

கண்ணொளிவு தாதுபுஷ்டி காமம் எழிலுடனே..................*
எண்ஒளிருங் காந்தி யிவையுண்டாம் - விண்ணுலகுள்..........*
எண்டிசையு மெச்சு மிளமயிலே யெப்போதுந்..................*
தண்டிகையை யூர்வார் தமக்கு..............................(கூசருச)

(ஒயில்வண்டியேற்றத்தின்குணம்.)

சீரமுறு நோய்போந் தனிவாதமேகுங் ...................*
கீரமென வூறுபித்தங் காணு - தரிய ...................*
அயில்வண்டி னந்தானென் றண்டியஞ்சுங் கண்ணாய் .........*
ஒயில்வண்டி யேறுவர்க்கென் றோது .................. (தசருரு)

(பாதுகையிட்ட நடையின்குணம்.)

பலமண்டே தத்தாற் படருகின்ற ரோக ...................*
குலமேகும் விந்துகெடுங் கூறில் - நிலவரமே ...............*
வாதபித்த ஐயம்அறு மாதரசே நாடோறும் ..................*
பாதுகையை நீயணிந்து பார் .............................(தசருசு)

தே—(கால்கவசமிட்ட நடையின்குணம்.)

* தரணிவெப்பந் தோயுந் தனையாலா நோயு ...................*
* மரணிகன்முள் ளாலா * மருப்புந் - தரணியடர் ..............*
தேட்புழுக்க ளாதிகளாற் சேரும் பருவரலுங் ...................*
காற்கவசத் தார்க்கில்லைக் காண் ..............[* தரணி-சூரியன்.
* அரணி-கட்டை. * அருப்பம்-துன்பம்]

(சதாபாதநடையின்குணம்.)

சதாமிகுந்த பாதநடை தன்னு லொளிவுஞ் ....................*
சுதாவங்க புஷ்டியொடு * துப்பும் - நிதானமுறு ..............*
வீரிய விர்த்தியும்போம் மேனிகிழ மேனியதாஞ் ..............*
சீரியநற் கொங்கைமின்னே செப்பு [* துப்பு-பலம்] (தசருஅ)

{அதிகவோட்டம்-சதாஉட்கார்ந்திருக்குதல்- நொந்தசோறுண்ணல்-மிகுகாற்றுவிரும்புதல்- இவைகளின்குணம்.}

ஓட்ட மிகினும் உளுக்கார்ந் திருந்திடினுஞ் ..................*
சூட்டாவி நொந்தபதந் துய்த்திடினுந் - தாட்டிகமாய்க் ...*
காற்றுடலிற் பட்டிடினுங் காரிகையே நோயுடலாம் ...........*
சாற்றுகின்ற வாதமுறுந் தான் .............................(தசருகூ)

(ஊன்றுகோலின்குணம்.)

பலமிருகத் தாலாம் பயமனைத்து நீக்கும் ..................*
உலவுவிழி புத்தியிவைக் கொக்கும் - பலம்அருளும் ...........*
வீறு தயிரியமும் வீரியமும் உண்டாக்குந் ..................*
கூறிலயர் வோட்டுங்கைக் கோல் ............................(தசசூய)

சயனவகை.

தே—( புஷ்ப அணையின் குணம். )

தீபாக் கினிதழையுந் தின்றமருந் தாலெழுந்த...............*
தாபாக் கினியுந் தணியுங்காண் - யாபார...............*
நட்புவரும் விந்தூறு நாளுமுட லஞ்செழிக்கும் ...............*
புட்பவணைக் கென்றே புகல்...............(கூசுகூக)

(இலவம்பஞ்சு-பருத்திப்பஞ்சு- இவ்வணைகளின்குணம்.)

இலவின்பஞ் சுப்படுக்கைக் கேகும் அனலம் ...............*
அலர்பருத்திப் பஞ்சி னணையோ - உலவிரத்தம்...............*
விந்துகளைப்பெருக்கு மேல்விரக முண்டாக்குங்...............*
குந்துசுரத்தையகற் றும்...............(கூசுகூஉ)

( இரத்தினக்கம்பளத்தின்குணம்-வி-ம். )

பஞ்சவன் னஞ்சேர்நற்கம் பளத்தறுஞ் சலவைதோஷம்...............*
விஞ்சிடும் பித்தந்தாது விர்த்தியு முண்டாஞ்சீதம்...............*
அஞ்சிடுங் கோபஜய மலைந்திடும் பாண்டுவோடு...............*
நஞ்சுக ளெல்லாந்தீரு நலம்பெறு முஷ்ணமாமே...(கூசுகூகா)

( சகலாத்தின்குணம்-வெ-பா. )

குளிர்சுரத்திற் கேற்குங் குளிர்பனியைப் போக்கும்...............*
வளர்பெரும் பாடதனை மாற்றும் - அளிகள்...............*
அகலாத் தெரிய லணியளக மின்னே...............*
சகலாத் தெனவேநீ சாற்று...............(கூசுகூச)

( தாழம்பாயின்குணம். )

தாழம்பாய் வாந்தி தலைச்சுழற்றல் பாண்டுபித்தம்...............*
ஆழஞ்சேர் நீராமை யாம்பிணியும் - வீழுந்தண்...............*
ணீரிழிவும் போக்குமிக நேசித்த வர்க்குலகிற்...............*
காரிழியுங் கூந்தன்மின்னே காண்...............(கூசுகூரு)

( கோரைப்பாயின்குணம். )

கோரையின்பாய் நற்குணமாங் கூறரிய மந்தமறும்...............*
கூரிய தேகங் குளிர்ச்சியுறும் - வாருலகில்...............*
நன்னித் திரைகூடு நாடாது ரூட்சையிதை...............*
புன்னிப் புவியி லுரை ...............(கூசுகூசா)

( சாதிப்பாயின்குணம். )

*சாதிப்பாய் சீதளமாஞ் சாருமித முல்மூலம்...............*
பேதிக்குட் சீதம் பிசறுங்காண் -வாதிக்குஞ்...............*

சீதசுரங் காணுஞ் சிரசு மிகக்கனக்கும்................ ........*
ஏதமிகு நோயோர்க் கிசை... [* சாதி-என்பது-பிரம்பு.]...()
( பேரீச்சோலைப்பாயின்குணம். )
பேரீச்சுப் பாயினிதம் பேரா துறங்குவர்க்குப்...........*
பாரித்த குன்மம் பறக்குமென்பார் - பூரித்த..............*
வீக்கம்அறுந் தீபனமா மெய்யைவெளுப் போடுஷீணம்....*
ஆக்கிவிடு மென்றே யறி.................................(௲௬அ)
( சிற்றீச்சோலைப்பாயின்குணம். )
சிற்றீச்சுப் பாயில் தினமும் படுப்பவருக் ..................*
குற்றிடுமே காந்தல் உடம்புலருஞ் - சுற்றியதோர்...........*
வாயுவறும் பித்தம்அறு மற்றுங் கபந்தீருந்...................*
தாயகமா மிக்குணத்தைச் சாற்று.................. ..(௲௬௯)
( மூங்கிற்பாயின்குணம். )
நீர்க்கடுப்பு மெத்தவுறு நீடுபித்த மும்பெருகும்...............*
ஆர்க்கும் அனலம் அதிகரிக்கும் - பார்க்குளுறை............*
கோங்கி னறியமுகைக் கொங்கை மலர்த்திரும்வ...............*
மூங்கிலின் பாய்க்கு மொழி..............................(௲௭௰)
தே—( தலைக்கணையின்குணம். )
கழுத்திற்குந் தோளிற்குங் கண்ட வுயர்வாய்................*
வழுத்துநீ ளத்தில்வைத்த மட்டா - யிழைத்தநறும்...........*
பஞ்சின் றலைக்கணைக்கெப் பானரம்பு நன்குறும்போந்......*
துஞ்சின் றலைக்குமூச்சிச் சூர்.................................*

(இ-ள்.) கழுத்துக்கும் தோளுக்கும் மத்தியி லிருக்கும் அளவான வுயரமுள்ளதாகவும்- நீளம்- வேண்டியமட்டாகவும்- இலவம்பஞ்சினால் தைப்பித்த தலைக்கணையின்மேல் சிரசுவைத்துப் படுத்துக்கொண்டால் பாதாதி கேசம் வரைக்கும் உள்ள எந்தப் பக்கத்துநரம்புகளும் பிசகாமல் சமனாகவிருக்கும்- அதுவுமல்லாமல் சிரசைப்பற்றிய ஆவர்த்தநோய்களும் நீங்கிவிடும்- நாம் சொன்னது சந்தேகமாயிருந்தால் அவ்விதமாக இப்போதே நித்திரைசெய்துப் பார்ப்பாயாக—எ-று. (௲௭௧)

விசிறிவகை.
( மயில்விசிறியின்குணம். )
சந்நிவிஷங் குன்மந் தலைச்சுழலல் பித்தம்விக்கல்...............*
துன்னு * சுவே தம்வாத தோஷமும்போம் - பன்னவதில்...*

உட்டினமாம் புத்தி யொளிரும் பசுந்தோகை.................✻
யிட்ட மயில்விசிறிக் கே ..[✻ சுவேதம்-வியர்வை]...(கூசஎஉ)

( வெட்டிவேர்விசிறியின்குணம். )

வாசவெட்டி வேர்விசிறி வன்பித்த கோபமொடு...............✻
வீசும் எரிச்சலையும் வீழ்த்துங்காண் - பேசுங்கால்...........✻
தாக மகற்றுஞ் சகலம ரோக்கியமாம்.......................✻
மோகமருண் மாதே மொழி.......................(கூசஎங)

( பனையோலைவிசிறியின்குணம். )

பனைவிசிறி தன்னாற் பருத்ததொரு வாத.....................✻
வினையுமைய நோயும் விலகும் - கனைபித்த...................✻
நோயு மருசியென்ற நோயுங் குடியேகுந்....................✻
தேயுமிடை மாதே தெளி.........................(கூசஎச)

( வெண்சாமரையின்குணம். )

வெண்சா மரத்தால் வியர்வைஆ யாசமொடு.................✻
திண்சோஷ மூர்ச்சைத் திருக்குமறுந் - தண்சாராத்......✻
தாகமறும் வெப்பந் தணியுந் திருவமரும்...................✻
போகமுறு மாதே புகல்.........................(கூசஎரு)

புணர்ச்சிவகை.

தே-( இவ்விதமாதர்போகம்-கூடாதெனல்-கலித்துறை. )

துக்கம் பய ✻ மங்கமேசந் ✻ திரிமலந் துஞ்சலலி .........✻
வெட்கம் பசிகருப் பந்தாக மூப்பு ✻ வெறுப்பசுபஞ்.......✻
✻ சுட்க மலட்சியங் கோபம ரூபமெய்த் தூற்கந்தங்கொள்...✻
மிக்கதிதூல முடைமாதர் போகம் விலக்குவித்தே ..........✻
[✻ அங்கமேசம்-சரீரமுழுவதும்ரோமம். ✻ திரிமலம்-திரிதோஷம். ✻ வெறுப்பு-அசுபம். ✻ சுட்கம்-சூசிமுகயோனிரோகம்]

தே-( இருவுமது-வெ-பா. )

தேவ குருவரச தீனதா ரத்தையலர்........................✻
பாவவ மங்கலமாம் பாவையர்பான் - மேவி ✻ யின்பம்.........✻
கண்டாரைச் சாருமுறு கன்னனிடுக்க மின்றியே ............✻
விண்டாரைச் சாருமுன்னி வீர்[✻ இவ்வின்பங்கொள்ளுமுடன் களைச் சேர்தலன்றி-இடுக்கண் மற்ற யாரைச்சாரும்]

தே—( புணர்ச்சிசெய்யும்விதி. )

அங்கமுற்றும் பாகியமா யார்வமொன்று யன்பொன்று......*
யங்கமுற்றும் போகமொன்று யாருங்கா - லங்கத்.........*
துறையுஞ் சகசவிக லுற்றகரு விங்ங..................*
ஹறையும் பருவத் தவர்..................*

(இ-ள்) பதினாறு வயதுள்ள ஸ்திரீயும் - இருபது வயதுள்ள புருஷனும்- சரீரமுழுவதும் மறைப்பில்லாமை யாகவும்- இருவர்க்கும் ஆசை யொன்றாகியும்- அன்பொன்றாகியும்- போகம் ஒன்றாகியும்- கூடுங்காலத்தில் உண்டாகுங் கருவானது தாய்தந்தைகளுக்கு உள்ள பலத்தைத் தன்சரீரத்தில் பொருந்தும்— எ-று. ஆர்வம்-புணர்ச்சியைக்குறித்து உண்டாகும்-ஆசை. அன்பு-எப்போதும் உண்டாயிருக்கும்-ஆசை. (௯௭௮)

தே-(அரோகசந்தானப்புணர்ச்சியின்குணம்.)

பதினாறெனும்வயாயுட் பாவையுநா லைந்தென்.................*
றோதியாயுட் காளையுமெய் யொவ்வின் - மதியோர்.............*
தரமிரவி லுண்டாந் தனுசர்க்குந் தேகந்.....................*
திரமிரவி மஞ்சுறுகண் டேர்..................*

(இ-ள்.) பதினாறுவயதுள்ள ஸ்திரீயும்- இருபதுவயதுள்ளபுருஷனும்-மாதத்துக்கு ஒருநாள் இராத்திரி காலத்தில் சரீரசம்பந்தப்பட்டால் உற்பவிக்கும் குழந்தைகளுக்கும்- தேகம் திடமுள்ளதாயிருக்கும் - வியாதிவராது வந்தாலும் சூரியனைக்கண்டபனிபோல் நீங்கிவிடும்-எ-று. தனுசர்க்கும் என்ற எச்ச உம்மையால் தாய்க்குந் தந்தைக்கும் தேகம் உறுதியாயிருப்பதுமன்றி வியாதியு மணுகாதென்பது கருத்து - மேற்சொல்லிய ஸ்திரீக்குக்- கருப்பப்பையும் -சோணிதமுஞ்- சுத்தமாயிருக்க வேண்டும்- புருஷனுக்கோவென்றால் - சுக்கிலமும் -வாதமும்- இருதயமும்- சுத்தமாயிருக்கவேண்டும்-இவ்வாறுஇருந்தால்-நல்லகருத்தரிக்கும்- முன்சொன்ன முறைப்படி கூடுவதும் - ஸ்திரீக்கு மாதாந்த ருதுகாலமாகிய பனிரண்டுநாளுக்குள் கூடவேண்டும்-ஏனெனில்- அந்தநாளுகளில் சுக்கிலம்போய்த்தங்குகின்றகருப்பப் பையின் துவாரமானது -ராத்திரிகாலத் தாமரைப்பூவைப்போல் மூடிக்கொள்ளாமலிருப்பதினாலென்றுகொள்க. ருதுவானமுதல் மூன்றுநாளும்-அசுத்தநாளாகையால்-புருஷன்சேரக்கூடாது- அதன்விவரம்-கருப்பப்பையின்முகத்துவாரமாகிய யோனித்துவாரம் பிரமாணத்தைத்தப்பி அதிகமாகத்தி

நந்திருப்பதால் அவ்வழியாகச் சுக்கிலத்தின் பங்கு மிகுதியாக ச்செல்லப்படுகின்றது-அப்போது அவ்விடத்துச் சோணிதமு ம் இதுவும் ஏற்றக்குறைச்சலின்றிச் சமமாகத்திரண்டு ஆணும் பெண்ணும் அல்லாத அலிப்பிள்ளையாகப் பிறக்கும்-இந்தவமு வைப்பற்றியே முதன் மூன்றுநாளும் அசுத்த தாமென்றதும் சேரக்கூடாதென்றதுமாம்-மற்ற ஒன்பதுநாளுக்குள்-இரட்டி த்த நாட்களில் சேர்ந்தால் ஆண்குழந்தையும் - ஒற்றைப்பட்ட நாட்களில் சேர்ந்தால் பெண் குழந்தையும் உற்பவிக்கும்- இந் தவிவரத்தை யெல்லாம் சாரீரமென்னுஞ் சாத்திரத்தில் முதல் அத்தியாயத்தில்காண்க - இதுநிற்க- சிலமதாந்தரத்தில் வசந்த காலமுதலிய காலபேதத்தினுல் மேற்சொல்லிய முறைதப்பிப் புணராலாமென்று சொல்லப்படுகின்றது - ஆயினும் அவ்வித ப் புணர்ச்சியினுல் உண்டாகும்-சிசுவுக்கும்- தாய்-தந்தைகளுக் கும் வியாதிசம்பவிக்கு மென்பது நிச்சயமே. (கூசஎகூ)

தே—( தினப்புணர்ச்சியின்குணம். )

அனந்தவித பந்தத்தோ டல்லும் பகலு ............*
மனந்தலின்றிச் சேர்ந்தா ரகக்கண் - கனிந்தநோய்ச்...........*
சங்கைக்கு மூப்புமிலைச் சார்ந்த மருத்துவர்க .............*
டங்கைக்கு மூப்புமிலைத் தான்.........................*

(இ-ள்.) கொக்கோக சாஸ்திரத்திற்சொல்லும் பலவித லீலைக ளுடன் இரவும் பகலும் நித்திரையில்லாமற் புணர்ச்சிசெய்கின் றவர்களிடத்தில் மிகுதியா யுண்டாகும் வியாதிகளை அளவிடத் தொடங்கினுல் அதற்குமுடிவில்லை- அதற்குப் பரிகாரஞ்செய் யவந்த மருத்துவன் கைக்கும் ஓய்வில்லை—எ-று (கூசஅய)

தே— ( சுக்கிலநிரோதனத்தின்குணம். )

விந்துவைம றிக்குங்கால் வீக்கம் பிரமேக...............*
முந்துவளி கல்லடைப்பு மூடுசுரஞ் - சந்து கைகா...........*
லாசனநா பக்கமிடுப் பவ்வுழிநோய் மார்புவலி ..............*
வீசனவீர்க் கட்டிவையா மே..........................(கூசஅக)

தே—( நித்திரைசெய்வதின்குணம். )

ஐந்திந் திரிய வசவுக் கியமகலு........................*
நைந்தமனத் துச்சாக நண்ணுங்காண் - பைந்தொடியே....*
மேனீட்டு மாயுளுறு மெய்யி னயர்வொழியுங்..............*
கானீட்டிப் பள்ளிகொள்ளுங் கால்.....................(கூசஅஉ)

( மூக்காடிட்டுநித்திரைசெய்வதின்குணம். )

மூக்காடிட் டங்கமுற்று மூடித் துயிலின்இரண்……………*
டக்கிக்குந் தோட்கும் அதிபலமா - மிக்கான……………*
சீதம்வெயில் தூசிபனி சீறிவரு காற்றிவையா……………*
லேதவரு துன்புமிலை யுன்……………(௲சஅ௫)

( தொக்கணத்தின்குணம். )

தொக்கணத்தி னால்இரத்தந் தோல்ஊ னிவைகட்கு……………*
மிக்கு சவுக்கியஞ்ச மீரனும்போ - மெய்க்கதிக……………*
புட்டி புறக்கம் புணர்ச்சி யிவைகதிக்கும்……………*
பட்ட அலைச்சல்அறும் பார்……………(௲சஅச)

தே—( இரவில்நித்திரைப்பங்கத்தின்குணம். )

சித்த மயக்கஞ் செறியைம் புலத்தயக்க……………*
மெய்த்த வுறக்கமந்த மென்பவைக - ணித்தமுற……………*
வண்டுஞ் சிலரைநா யாய்ப்பன்னோய் கவ்வுமிராக்……………*
கண்டுஞ் சிலரைநம்பிக் காண்……………*

(இ-ள்.) இராத்திரியில் நித்திரை செய்யாதவர்க ளிடத்தில் நிலையாயிருப்பதற்குச்சித்தமயக்கமுதல்மந்தம்வரையிற்சொல் லியநோய்கள்வந் துபொருந்தும்- அன்றியும்வேடருடையநாய் கள்கவ்வுதல்போலப் பலவியாதிகளும் கவ்விக்கொள்ளும்-எ-று.

தே—( பகல்நித்திரையின்குணம்-வி-ம். ) (௲சஅ௫)

தண்டமேட்டரகூயீ மூருத்தம்பஞ்……………*
சருவாங்கமுக்கிராக் கிரகஞ்சுப்தி ……………*
துண்டமுறுவனுத்தம்பந் திருக்குத்தம்பஞ் ……………*
சோணிதமாட்டியம்புருவா டோபகந்தண்……………*
அண்டுகிருத்திரசியூர்த் துவஞ்சம்பூக ……………*
மவபேதமவதந்திர மவதானந்தாள்……………*
விண்டவிவுர்தாசியமிப் பதினெண்காற்கும் …. ……………*
வித்தாகும்பகலனந்தன் மேவின்மாதோ……………*

(இ-ள்.) பகல்நித்திரையானது-தண்டம்-மேட்டரகூயீயம்-ஊ ருத்தம்பம்-சருவாங்கம்- உக்கிராக்கிரகம்- சுப்தி-அனுத்தம்பம்- திருக்குத்தம்பம் - சோணிதம்- ஆட்டியம் - புருவாடோபகம்- கிருத்திரசி - ஊர்த்துவம் - சம்பூகம்-அவபேதம்- அவதந்திரம்-

அவதானம்-விவுர்தாசியம்-என்னும் பதினெட்டுவித வாதரோக ங்களை விளைப்பிப்பதற்கு ஒருவித்தாகும்—எ-று. இந்தவாத ரோகங்களின் விவரங்களையெல்லாம் -நயனாமிர்தம்- என்னுஞ் சாத்திரத்தில்- எட்டாவது- அத்தியாயத்தில் காண்க. ஆகையால் பகல்நித்திரைசெய்யக்கூடா தென்பதுகருத்து. (கூசஅகூ)

தே { பத்தியம்உண்டவர்கள்பகல்நித்திரை செய்தலின்குணம் - வெ-பா. }

அண்டவங்கி யுண்டவுறை யங்கியரும் பத்தியத்தா……………*
லண்டவங்கி மூன்றோ டனந்தலது - கொண்டவங்கி…… ..*
கூடுங்கா னேத்திரநோய் கூடுமி ரத்தபித்த………………*
நீடுங்காண் விந்துவு நீராம்……………………………*

(இ-ள்.) பத்தியங் கொண்டவர்களுக்கு- சூரியவெப்பம்-உண்ட அவுஷதவெப்பம்- அருமையான பத்தியத்தால் பொருந்து கிறவெப்பம்- என்னும் - மூன்று வெப்பத்துடன் பகல்நித்தி ரை செய்வதால் பிறக்கின்ற வெப்பமுங் கூடுமானல் நேத்திர நோய்கள் உண்டாகும்- ரத்தபித்தரோகம் அதிகரிக்கும்- விந்து நீர்போலாகிவிடும்—எ-று. (கூசஅஎ)

---

பதார்த்தசீரணகால்அளவைகூறல்.

{ ரசம்-கற்கம்-செயநீர்- குளிர்ந்தநீர் வெந்நீர்-இவைகளின் சீரணகாலம்-வி-ம். }

பாரினின் மாந்தருண் ணும் பற்பல பண்டமெல்லாஞ்……*
சீரண மாகுங்காலந் தெளியவே செப்பக்கேண்மோ………*
காரண ரசமோரேழு கடிகையாங் கற்கஞ்செய்நீர்………*
சீரணத் தண்ணீர்சாமம் வெந்நீரு மிரண்டேசாமம் (கூசஅஅ)

{ காய்ந்தாறியசலம்-கஷாயம்- பழச்சாறு-சோறு-பால் - தேன் - இவைகளின் சீரணகாலம். }

சாலவே காய்ச்சியாறுஞ் சலம்பத மூன்றேமுக்கால்……*
சீலமாங் கஷாயமூன்று சேர்பழச் சாறுமாறுந்…………*
தாலமாஞ் சோறிரண்டு சாமமா மிருபதாகும்…………*
பாலுதேன் பன்னிரண்டு நாழிகை பகருவாரே… …(கூசஅகூ)

{தயிர்ச்சோறு-மோர்ச்சோறு-நீர்ச்சோறு-வெண்
ணெய்-சோறு-சாராயம்-இவைகளின்சீரணகாலம்.}

வார்துவை தயிருஞ்சோறும் வகுத்திடிற் பதினொன்றாகும்....*
மோர்விடு பதம்பன்மூன்று மொழிபதம் பதினெட்டாகும். *
ஆருவச்சோ றிரண்டு சாமமாமரிய வெண்ணெய்..............*
சாருமா வன்னஞ்சாமஞ் சாராயங் கடிகையைந்தாம். (தூசகூய)

{சூரணம்-தைலம்-லேகியம்-கிருதம்-பஸ்மம்-
கறிகள்- பழங்கள்- இவைகளின்சீரணகாலம்.}

சூரணந் தைலமிலேகங் கிருதஞ்சொற் பனிரண்டென்னச்...*
சேருநா ழிகையாம்பஸ்மஞ் சீரணம் அரைச்சாமத்திற்... ..*
கூரிய கறிகளெல்லாங் கூறில்நா ழிகையேழாகுஞ் ..........*
சீரிய பழங்களெல்லாஞ் சீரணஞ் சாமந்தன்னில்.... (தூசகூக)

{கருணைமுதலியகிழங்குகள், வெந்துபாகமானவிதைகள்
பழச்சாறுகள் - பச்சையாய்-அல்லது-வெந்ததாயுள்ள
ஆறுவகைச்சுவை- இவைகளின்சீரணகாலம்.}

உரைகரு ணைக்கிழங்கோ டுட்கிழங்கெல்லாஞ் சாமம்.......*
விரைகளும் பழத்தின்சாறும் வெந்திடிற் சாமமேயாம்......*
பரிசுறுசுவைகள் பின்னும் பச்சையதாய்த் தின்றாலுங்.......*
கரையவெந் ததைத்தின்றாலுங் கடிகையைந் ததன்மேலில்லை*

{கழுநீர்-காடி - இவைகளைக்குடித்தல் - மா உண்டை
பொங்கல்-பசும்பால்-இந்நான்குங்கூட்டியுண்ணல்-
இவைகளின் சீரணகாலம்.}

காவிநேர் கண்ணுய்கேளாய் கழுநீர்கா டியும்ஐந்தாகும்.......*
மாவுடன் உண்டைபொங்கல் வகைகளோ டாவினற்பால்....*
மேவுமோர் தினத்திந்நான்கு விதமுஞ்சேர்த் தருந்தும்உண்டி
பூவினு லைந்துநாழி போயபின் சீரணிக்கும்........(தூசகூரு)

{கஞ்சிவகை-நல்லவெல்லம்- தேன்-காய்கள்-
பச்சரிசி-இவைகளின் சீரணகாலம்.}

வர்த்திக்கும் வடித்தகஞ்சி வகையேழிற் சீரணங்காண்........*
தித்திக்கு நல்லவெல்லந் தேனிரு பதுநாழிக்குள் ..........*
அற்றிடுங் காயினங்க ளற்றிடு மெண்பதத்துட்..............*
கத்தும் பச்சரிசிநாலைங் கடிகையுட் சீரணிக்கும்.......(தூசகூச)

{இளநீர்-சருக்கரை-பானக்கம்-இவையருந்தல்-தயிரின்மேல் மோருஞ்சலமும்பருகுதல்-வறுத்தமாவைத் தண்ணீரில் கரைத்துக் குடித்தல்-இவைகளின் சீரணகாலம்.}

இளநீர்சர்க் கரைபானக்க மெழுநாழி கையிற்செரிக்கும்.....*
வளமுள தயிரின்மேலும் வார்த்துணு மோரின்மேலுந்......*
தெளிவுறு தண்ணீருண்ணச் செரித்திடுங் கடிகையைந்தில் ..*
தெளியநல் வறுமாநீருஞ் செரித்திடுங் கடிகையேழில். ௩௪௧௫

{சுட்டநீர்-முக்காற்சுண்டியநீர்-திட்டமாக ஆறியநீர் - இவைகளின் சீரணகாலம்.}

சுட்டநீர் உண்ணுங்காலே சொல்லிய ஆறுமுக்கால்............*
மட்டிலே கொதித்தவெந்நீர் வருக்கி லேழரையேயாகுந்.....*
திட்டமாய்க் குளிர்ந்தநீர்தான் செரிக்கும் ஒன்பதின்மேலென்
வட்டமா மூலையிலுளே வழுத்துநா ழிகையைத்தானே......[ன

{மரம்- செடி - இவைகளின் - மகரந்தம்-பூ-கொழுந்து-இவைகளின் சீரணகாலம்.}

தருசெடி கவிலுண்டாங்கே சரங்கள்பூ கொழுந்தே யெல்லாம்
அரிவையே தின்றிடிற்சீ ரணஞ்சாமந் தனிலிவ்வாறே.... ....*
திரவிய வினங்கட்கெல்லாஞ் செப்பிடும் வேதமென்றே.....*
குருபர னடியைப்போற்றுங் குறுமுனி யுரைத்தவாறே.....()

தே—(நோயணுகாவிதி-வெ-பா.)

திண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமற்...................*
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காம - லுண்ணுங்கா...*
னீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்... ...*
பேருரைக்கிற் போமே பிணி..... .....................(௩௪௧௮)

தே—( இதுவுமது-வி-ம். )

பாலுண்போமெண்ணெய்பெறின் வெந்நீரிற்குளிப்போம்..*
பகற்புணரோம்பகற்றுயிலோம் பயோதரமுமூத்த....*
வேலஞ்சேர்குழலியரோ டிளவெயிலும்விரும்போ....[போ.
மிரண்டடக்கோமொன்றைவிடோ மிடதுகையிற்படுப்
மூலஞ்சேர்கறிநுகரோ மூத்ததயிருண்போ....... .......*
முதனாளிற்சமைத்தகறி யமுதெனினுமருந்தோம்......*
ஞாலந்தான்வந்திடினும் பசித்தொழியவுண்ணோ..........*
நமனார்க்கிங்கேதுகவை நாமிருக்குமிடத்தே...(௩௪௧௯)

தே—(இதுவுமது.)

உண்பதிருபொழுதொழிய மூன்றுபொழுதுண்ணோ........*
முறங்குவதிராவொழியப் பகலுறக்கஞ்செய்யோம்.....*
பெண்கடமைத்திங்களுக்கோர் காலன்றிமருவோம்.... ........*
பெருந்தாகமெடுத்திடினும் பெயர்த்துநீரருந்தோ...*
மண்பரவுகிழங்குகளிற் கருணையன்றிப்புசியோம்.......... ......*
வாழையிளம்பிஞ்சொழியக் கனியருந்தல்செய்யோ ...*
நண்புபெறவுண்டபின்பு குறுநடையுங்கொள்வோ............*
நமனார்க்கிங்கேதுகவை நாமிருக்குமிடத்தே.....(சூருஎ)

தே—(இதுவுமது.)

ஆறுதிங்கட்கொருதடவை வமனமருந்தயில்வோ...,..........*
மடர்நான்குமதிக்கொருக்கார் பேதியுறைநுகர்வோந்...*
தேறுமதியொன்றனைக்கோர் தரநசியம்பெறுவோந்.........*
திங்களரைக்கிரண்டுதரஞ் சவளவிருப்புறுவோம்........*
வீறுசதுர்நாட்கொருக்கா னெய்முழுக்கைத்தவிரோம்.......*
விழிகளுக்கஞ்சனமூன்று நாட்கொருக்காலிடுவோ......*
நாறுகந்தம்புட்பமிவை நடுநிசியின்முகரோ.......... ......*
நமனார்க்கிங்கேதுகவை நாமிருக்குமிடத்தே....(சூருஅ)

தே—(இதுவுமது.)

பகத்தொழுக்குமாத * ரசங் * கரந் * துடைப்பமிவைத்தூட்
படநெருங்கோந்.* தீபமைந்தர் மரநிழலில்வசியோஞ்*
* சுகப்புணர்ச்சியசனபச னத்தருணஞ்செய்யோந்..........*
துஞ்சலுணவிருமலஞ்சை யோகமழுக்காடை...,.......*
வகுப்பெடுக்கிற்சிந்துகச மிவைமாலைவிடுப்போம்.........*
வற்சலந்தெய்வம்பிதுர்சற் குருவைவிடமாட்டோ.......*
நகச்சலமுமுளச்சலமுந் தெறிக்குமிடமணுகோ ...........*
நமனார்க்கிங்கேதுகவை நாமிருக்குமிடத்தே....(சூருஉ)

[* ஆடு- * கழுதை- * துடைப்பம்- இவைகளின்தூள் மேலேபடும்படி நெருங்கோம். * தீபம்-மனிதர்- மரம்- இவைகளின் நிழலில் இருக்கோம். * உண்டது சீரணமாகுங் காலத்தில் புணர்ச்சிசெய்யோம்]

தே—(தீநெறியிழிவுகூறல்-வி-ம்.)

சொல்லாருந் தேயபேதங்களினா ணிற்கவிங்ஙன்............*
றுக்குணாத்தற்......................................*
கில்லாதுமுள்ளதுமா கியபதார்த்தங்களுமற்..............*
றியலுஞ் சொன்னேம்.................................*
நல்லாரிந்நெறிநடப்பர் சிலர்பிறழ்ந்துநடப்பரொனி.........*
ருமென்செய்கேம்...................................*
பொல்லாவல்லரவுடனே பழகுவர்தம்பயனடைவர்.............*
புகலுங்காலே..................................(தருராக)

தே—(நன்னெறிப்பெருமைகூறல்-வெ-பா.)

* திரவிய * ஆழ் * தில்லுணர்ந்தே தின்றனுப விப்பார்.....*
பரவியநோய் காணாராய்ப் பால - * ரிரவியைநேர்........*
மெய்யங் களித்திடுகோன் மிக்காயுள் பெற்றீரேழ்.........*
வையங் களித்திடவாழ் வார்..........................*

(இ-ள்.) பதார்த்தங்களின் குணங்களையும் - அவைகளைப்புசி க்கவேண்டிய காலபேதங்களையும்-பகுத்தறிந்து புசித்து அதனா ல்கிடைக்கிற சுகத்தை அனுபவிப்பவர்கள் - பலவாகச் சொல்ல ப்பட்ட வியாதிகளைக் காணாதவர்களாய்ப் புத்திரர்களையும்-மலை யைப்போல உறுதியுள்ள சரீரத்தையும்-இவ்வுலகத்தைச் சிருஷ் டிக்கும் பிரமதேவனைப்போல மிகுந்தஆயுளையும் பெற்றுப்ப தினாலு உலகத்தி லிருப்பவர்களுங்கண்டு களிக்கத்தக்கதாகவாழ் வார்கள்-எ-று. [* பதார்த்தம். * குணம். * காலம். * மலை] (தருராச)

இவ்வாறே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும்- மரு ந்து என்னும்-அதிகாரத்திற் கட்டளையிட்டனர்.

(திருக்குறள்.)

அற்றதறிந்துகடைப்பிடித்துமாறல்ல.........*
துய்க்கதுவரப்பசித்து......................*

(இ-ள்.) ஒருவன் முன்னுண்டது அற்றபடியையறிந்து-பின் மிகப்பசித்து உண்ணுமிடத்து மாறுகொள்ளாத உணவுகளைக் குறிக்கொண்டு உண்ணக்கடவன் - மாறுகொள்ளாமையாவது- உண்பவன் சரீரசுபாவத்தோடு மாறுகொள்ளாமையும்-காலஇய ல்போடு மாறு கொள்ளாமையும் - சுவைவீரியங்களால் தம்மு ளமாறு கொள்ளாமையுமாம் - மாறுபாடில்லாத வுணவுகளை யானாலும் - மனம்வேண்டியமட்டில் உண்ணாமல் - பிணிவாரா

அளவினால் உண்ணவேண்டும் - இவ்வாறுஉண்பவன் உயிர்ப்பிணிகளால் துன்பமுறாமல் சுகமுறும்.

☞ இந்த [ பதார்த்தகுணசிந்தாமணி. ] என்னுஞ் சாத்திரத்தில் சொல்லப்பட்ட பதார்த்தங்களின் குணங்களை யெல்லாம் நன்றாயறிந்து அவற்றுள் நித்திய போசனத்துக்கு உதவத்தக்க பதார்த்தங்களை -சித்தபாகம் - வீமபாகம் - நளபாகம்- என்னுஞ் சாத்திரங்களிற் சொல்லிய பிரகாரம் பாகஞ்செய்து புசிக்கவேண்டும்- அவுஷிதங்களுக்கு உதவத்தக்க பதார்த்தங்களை -சுத்திக்கிரமம்- என்னுஞ் சாத்திர விதிப்பிரகாரஞ் சுத்திசெய்து- சிகிச்சாசாரம்- என்னுஞ் சாத்திரக் கிரமப்படி முப்பத்திரண்டுவித அவுஷிதங்களாகக் கைபாகத்துடன் செய்து முடித்து-ஜீவரக்ஷாமிர்தம்- என்னுஞ்சாத்திரத்தில்- சுரரோகம் ஆதியாகக்கிடபேதரோகமீறாகவகுக்கப்பட்டிருக்கிற சகலரோகத்தையும் - சிகிச்சாக்கிரமம் - என்னுஞ் சாத்திரக் கிரமப்பிரகாரம்கொடுத்து நிவிர்த்திசெய்யவேண்டும் - இவ்வாறு மேற்சொல்லிய பதார்த்தங்களைஉண்டு அனுபவிப்பதுமன்றிச் சூரியோதயமுன் விழித்தல் முதலாகச்சொல்லப்பட்ட தினக்கிரமங்களும் - தவராமல் நடப்பவர்கள் -அறம்-பொருள்- இன்பம்- வீடு - என்னும் புருஷார்த்தங்களை - அடைவதற் கேதுவான அரோகதிடகாத்திரமும்- சந்தானசௌபாக்கியமும்- தீர்க்காயுளும்பெற்று இவ்வுலகத்தில்வாழ்வார்கள். *

பதார்த்தகுண சிந்தாமணி

முற்றும்.

இனிப்பதிப்பிக்கப்படும்- புத்தகங்களாவன.

சிகிச்சாசாரசங்கிரகம்- கருத்தரிப்பதுமுதல்- உடல்கூறுகளைச்சொல்லுகிற -சாரீரவினாவிடை- விஷப்பிரதிவிஷம்-வைத்தியசதுரகராதி- சித்தபாகம்- வீமபாகம் - நளபாகம்- சிகிச்சாக்கிரமம்- தேரையர்செய்த - சிகாமணிவெண்பா- பிரதான குணமூலித்தரு- நாடிக்கொத்து-என்னும் சாத்திரங்களாம். *

சிவசுப்பிரமணியர் துணை.

# தொகை அகராதி.


| பெயர். | பக்கம் | பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| அ. | | செ. | |
| அப்பியங்கஸ்நானவிதி. | ௨௱௰௭ | செடியின்வகை | ௪௫ |
| இ. | | செடியின்சமூலவகை | ௬௭ |
| இந்த்ரச்சிவகை | ௱௫௯ | செடியின்கிழங்குவகை | ௬௯ |
| உ. | | செடியின்வேர்வகை | ௭௯ |
| உலோகவகை | ௨௨௨ | செடியின்இலைவகை | ௮௯ |
| க. | | செடியின்பூவகை | ௱௬ |
| கஞ்சிவகை | ௨௨௯ | செடியின்காய்வகை | ௱௰௪ |
| கடல்மீன்வகை | ௱௫௧ | செடியின்பழவகை | ௱௨௪ |
| கடைச்சரக்குவகை | ௱௫௫ | செடியின்வித்துவகை | ௱௫௰ |
| கற்கண்டின்வகை | ௫௪ | சோ. | |
| கா. | | சோற்றின்வகை | ௨௨௪ |
| காய்த்தானியவகை | ௱௫௭ | த. | |
| கீ. | | தயிர்வகை | ௨௪ |
| கீரைவகை | ௯௮ | தா. | |
| கொ. | | தாம்பூலவகை | ௨௫௮ |
| கொடியின்வகை | ௫௬ | தி. | |
| கொடியின்சமூலவகை | ௬௮ | திணைவகை | ௪ |
